ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம்

ஸுந்தர காண்டம்

(பூர்வபாகம்)

சாஸ்த்ர ரத்னம் ப்ரம்மஸ்ரீ

தேதியூர் ஸுப்ரஹ்மண்ய சாஸ்த்ரியர்

பப்ளிஷர்ஸ் :

கிரி ப்ரஸ், திருவல்லிக்கேணி, சென்னை.

FIRST
EDITION
Oct. 1948

All Rights Reserved by Publisher.

Rs. 5

Printed & Published
by K. Kylasamier
at GIRI PRESS.
Triplicane + Madras.

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம்

ஸுந்தர காண்டம்

(பூர்வ பாகம்)

பொருளடக்கம்.

கை.	விஷயம்	பக்கங்கள்
1.	முதல் ச்லோகத்தின் தத்துவ விளக்கம் ...	1— 14
2.	ஆஞ்சநேயன் என்ற ஆசார்யனின் யோகசக்தி ...	15— 31
3.	மைநாகம் என்ற விக்னத்தைத் தவிர்த்தல்-அதன் தத்துவம்	32— 40
4.	ஸுரஸையின் கர்வபங்கம்-யோகசித்திப்ரகடனம்	41— 45
5.	ஸிம்ஹிகையின் வதம்	46— 49
6.	லங்காதர்சனம்	50— 54
7.	ஜய விஜயோபாக்யானம் தத்துவ விளக்கம் ...	55— 60
8.	ஆஞ்சநேயரின் வியாகுலம்	61— 65
9.	லங்கிணியுடன் போராட்டம்	66— 70
10.	லங்காநகர ப்ரவேசம் ரஹஸ்யார்த்த விவரணம் ...	71— 74
11.	ஆஞ்சநேயர் அந்தப்புரத்தை பார்வையிடல் ...	75— 77
12.	ஆஞ்சநேயருடைய அசட்டு யோசனையின் உண்மையான தாத்பர்யம் ...	78— 86
13.	'குரங்கின் சேஷ்டைகள்' என்று மேல்வாரியாக பொருள்தரும் ச்லோகத்தின் உண்மைப் பொருள்	87— 98
14.	ஆஞ்சநேயரின் யோசனை—அசோகவன கமனம்	99—108
15.	ஸீதா தர்சனம்	109—122
16.	ராவணன் வருகை	123—124
17.	ராவணன் சொல்லும் ச்லோகங்களின் தத்துவ விளக்கம்	124—154
18.	ஸீதையின் உத்தரம்—பரம சாஸ்த்ரார்த்த உபதேசம்	155—172
19.	ஸுந்தர காண்டத்தின் சாரம்—தத்துவ விளக்கம்	173—177
20.	ஸீதையின் ஸௌபாக்யத்தை சூசிக்கும் ச்லோகம்	178—196
21.	ஸீதையின் துக்கம்	197—205
22.	ஆஞ்சநேயர் ஆறுதல் கூறல்	206—218
23.	ஸ்வ வ்ருத்தாந்த கதனம்—ஸீதா ஹனுமத் ஸம்வாதம்	219—242
24.	அங்குலீய ப்ரதானம்—தத்துவார்த்தம் ...	243—253



वामे भूमिसुता पुरश्च हनुमान्पश्चात्सुमित्रासुतः
शत्रुघ्नो भरतश्च पार्श्वदलयोः वाय्वादिकोणेषु च ।
सुग्रीवश्च विभीषणश्च युवराट् तारासुतो जाम्बवान्
मध्ये नीलसरोजकोमलरुचिं रामं भजे श्यामलम् ॥

ஸ்ரீராமஜயம்.



ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம்

ஸுந்தர காண்டம்

सुन्दरे यस्य दासोऽथिं तीर्त्वा दृष्ट्वा च मैथिलीम् ।
दृष्ट्वा सीतेत्यभ्यवोचत् तं रामं नौमि चिद्घनम् ॥

ततो रावणनीतायाः सीतायाश्शत्रुकर्शनः ।
इयेष पदमन्वेष्टुं चारणाचरिते पथि ॥

ததோ ராவணநீதாயாஃ ஸீதாயாஶ்ஶத்ருகர்ஶநஃ ।
இயேஷ பதமந்வேஷ்டும் சாரணாசரிதே பதி ॥

ततः - ததஃ - ததஃ = ஜாம்பவான் உத்ஸாஹப்படுத்திய பிற்பாடு, शत्रुकर्शनः - ஶத்ரூகர்ஶநஃ - சத்ருகர்சந: = விரோதிகளை நாசம் செய்வதில் ஸமர்த்தனான ஆஞ்ஜனேயஸ்வாமி யானவர், चारणाचरिते - சாரணாசரிதே - சாரணைசரிதே = தேவகாயகர்கள் ஸஞ்சாரம் செய்கிற, पथि - பதி - பதி = மார்க்கமான ஆகாசத்தில், रावणनीतायाः - ராவணநீதாயாஃ - ராவணநீதாயா: = ராவணனால் அபஹரிக்கப்பட்ட, सीतायाः - ஸீதாயாஃ - ஸீதாயா: = ஸீதாதேவியினுடைய, पदं - பதம் - பதம் = ஸ்தானத்தை, अन्वेष्टुं - அந்வேஷ்டும் - அந்வேஷ்டும் = தேடிக்கண்டுபிடிக்க, इयेष - இயேஷ - இயேஷ = இச்சித்தார்.

ततः - தத: - தத: = ஸ்ரீராமனுலேயே முத்ராதானம் செய்யப்பட்டு, பகவானுடைய உத்திரவு கிடைத்த பிற்பாடு, शत्रुकर्शनः - ஸத்ரூகர்ஸந: - சத்ருகர்சந: = அக்ஞானம் என்ற சத்ருவை நாசம் செய்யும் ஸ்வபாவமுள்ள ஆஞ்ஜனேய ஸ்வாமி என்ற ஆசார்ய புருஷன், चारणाचरिते आरणाअरिते - சாரணாசரிதே = பூர்வாசார்யர்களால் அநுஷ்டிக்கப்பட்ட, पथि - வர்த்மி - பதி = மார்க்கமாகிய ஸன்மார்கத்தில், (இருந்து கொண்டு) रावणनीतायाः - ராவணநீதாயாஃ - ராவணநீதாயா: = அவிவேகத்தினுடைய வசத்தை அடைந்த, सीतायाः - ஸீதாயாஃ - ஸீதாயா: = அநுதிகாலமாக பகவானுடைய பாரதந்த்ரியத்தில் இருந்து வந்த உத்தம ஜீவனுடைய, पदं - வர்த்ம - பதம் = ஸ்தானமாகிற ஸப்ஸார மண்டலத்தை, अन्वेष्टुं - அந்வேஷ்டும் - அந்வேஷ்டும் = கண்டுபிடிக்க, (அதாவது எந்த ஜீவனுக்கு பகவானை அடைவதில் தீவ்ரமான ஆவல் இருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ள), इयेष - இயேஷ - இயேஷ = இச்சித்தார்.

கிஷ்கிந்தா காண்டத்தில் ஸ்ரீராமன் பரமாத்மா என்பதற்கு அடையாளமாக அளவிட முடியாத கல்யாண குணங்களால் அலங்கரிக்கப்பட்டவன் என்பது சொல்லப்பட்டது. இந்த ஸுந்தர காண்டத்திலோ, ஸ்ரீராமன் 'ஸர்வ ஜகத்தையும் ஸம்ஹாரம் செய்கிற பரம்பொருள்' என்பது சொல்லப்படும். இந்த விஷயத்தை ब्रह्मा स्वयंभूश्चतुराननो वा (ப்ரஹ்மா ஸ்வயம்பூஸ்சதுராநநோ வா) (ப்ரஹ்மா ஸ்வயம்பூச்சதுராநநோ வா) என்ற ச்லோகத்தால் வால்மீகி மஹர்ஷியானவர் விவரித்திருக்கிறார். இவ்விதம் கிஷ்கிந்தா காண்டத்திற்கும், ஸுந்தர காண்டத்திற்கும் ஸம்பந்தத்தை அறியவும்.

இது போலவே மற்றொரு ஸம்பந்தமும் உண்டு. அதாவது, முன் காண்டத்தில் 'எவ்விதத்திலும் தன்னுடைய மித்ரனை ரக்ஷித்தே தீரவேண்டும்' என்பது சொல்லப்பட்டது. இந்த ஸுந்தரகாண்டத்திலோ, 'ஒரு யஜமானனுடைய விஷ

யத்தில் தூதன் எவ்விதமாக நடந்து கொள்ளவேண்டும்? பதிவ்ரதா ஸ்த்ரீகளுடைய ஆசார மென்ன?' என்ற விஷயங்கள் சொல்லப்படுகின்றன.

தவிரவும், முன் காண்டத்தில் 'ஸஜ்ஜனங்களை ரக்ஷிப்பதற்காக அவதரித்த ஸ்ரீபகவானை ராமருக்கு ஆசார்யனுகிய பரம புருஷனுடைய லாபம் கிடைத்தது' என்பது சொல்லப்பட்டது. இந்த ஸுந்தர காண்டத்தில், 'சிஷ்ய ஜனங்களை கரையேற்றுவதற்கு ஆசார்யன் செய்யவேண்டிய கார்யம் என்ன' என்பது சொல்லப்படும். அதிலும், முதல் ஸர்க்கத்தில் சிக்ஷிக்கத்தகுந்த நல்ல சிஷ்யனுடைய லாபமானது கிடைக்கும் மார்க்கமானது சொல்லப்படுகிறது. ஆஞ்ஜநேய ஸ்வாமியையோ, ஆசார்ய புருஷனென்று ஆங்காங்கு சொல்லப்பட்டிருக்கின்றன. அந்த மஹாநுபாவனை, ஸீதையைத் தேடுவது என்ற வ்யாஜத்தால், பகவானை அடைவதில் ஆசை உள்ள ஜீவனைத் தேடுகிறார், என்ற தாத்பர்யத்தை அறிந்து கொள்ளவேண்டும். ஸ்ரீராமனுலேயே முத்ராதானம் செய்யப்பட்டு ஆசார்ய பதவியில் அமர்ந்திருக்க அர்ஹதை உள்ளவராக ப்ரக்ருதத்தில் ஆஞ்ஜனேய ஸ்வாமியானவர் பாக்யத்தை அடைந்தவர் என்பதையும் அறியவும்.

ततो रावणनीताया: (ததோ ராவண நீதாயாஃ) (ததோ ராவண நீதாயா:) என்ற ச்லோகத்தில் तत: (ததஃ) (தத:) என்கிற பதத்திற்கு முத்ராதானம் செய்யப்பட்டு, பகவானுடைய அனுக்ரஹம் கிடைத்த பிறகு என்ற அர்த்தத்தை வ்யாக்யாதாக்கள் வெளியிட்டிருக்கிறார்கள். இந்த ச்லோகத்திலேயே शत्रुकर्शन: (ஶத்ருகர்ஶந:) (சத்ருகர்சந:) என்ற பதத்தால்

गुशब्दस्त्वन्धकार:स्यात् रुशब्दस्तन्निरोधक: । अन्धकारनिरोधित्वात् गुरुरित्यभिधीयते ॥
(ஜ்ஞாநாஜ்ஞாநகார: வ்யாக் ஜ்ஞாநாஜ்ஞாநிரோதக: । அஜ்ஞாந நிரோதித்வாத் குரு ரித்யபிதீயதே ॥) (குசப்தஸ்த்வந்தகார: ஸ்யாத் ருசப்தஸ்தந்நிரோதக: । அந்தகாரநிரோதித்வாத் குரு ரித்யபிதீயதே ॥) என்ற சாஸ்த்ரத்தால் 'கு' ('ஜ்ஞா') ('கு') என்ற சப்தத்தால் சிஷ்யனுடைய அக்ஞானமும், ('ரு')('ஜ்ஞா')(ரு)

என்ற சப்தத்தால் அதை நிவ்ருத்தி செய்யும் ஸாமர்த்யம் உள்ள ஆசார்யனின் வைபவமும் வெளியாகிற படியால், அவ்விதம் அக்ஞானத்தை நிவ்ருத்தி செய்து வைக்கும் ஸ்வ பாவமுள்ள ஆசார்ய புருஷனே, ஆஞ்ஜனேயஸ்வாமி ரூபமாக அவதரிக்கிறார் என்ற தத்வமானது வெளியாகிறது.

चारणाचरिते पथि (சாரணாசரிதே பதி) என்றதிலுல் चारयन्ति आचारयन्ति धर्मान् इति चारणाः (சாரயந்தி ஆசாரயந்தி தர்மாந் இதி சாரணாः) என்ற ஸமாஸத்தால் பூர்வாசார்யர் கள் என்றதை க்ரஹித்துக் கொள்ளவேண்டும். "महाजनो येन गतस्सपन्थाः" ("மஹாஜநோ யேந கதஸ்ஸபந்தாः") என்ற வாக்யத்தை அனு ஸரித்து பூர்வாசார்யர்களான மஹான்களால் அனுஷ்டிக்கப் படும் ஸன்மார்க்கத்திலேயே இருந்து வருகிறவர். அதாவது ஸதாசாரத்தைக் கொஞ்சமேனும் கைவிட மாட்டார் என்ற தாத்பர்யம் வெளியாகிறபடியால், இதை அனுஸரித்து, ப்ரக்ரு தத்தில் ஆசார்ய புருஷனான ஆஞ்ஜனேய ஸ்வாமியும் பூர்வா சாரத்தை விடாமல் அனுஷ்டித்து வருகிறவர் என்பது தெரிகிறது.

ப்ரக்ருதத்தில் रावणः (ராவணாः) (ராவண:) என்ற பதத் தினால், 'रावयति असत्प्रलापान् कारयतीति रावणः' ('ராவயதி அஸத்ப்ரலாபாந் காரயதீதி ராவணாः') (ராவயதி அஸத்ப்ரலாபாந் காரயதீதி ராவண:) என்ற ஸமாஸத்தினால் அவிவேகம் என் பது வெளியாகிறது. ஆத்ம-அனாத்ம விவேகம் இல்லாத ப்ரா ணிகள் நான் என்ற ஆத்மாவினுடைய உண்மையான ஸ்வ பாவத்தை அறிந்து கொள்ளாமல் விபரீதமான தர்மங்களை யும் ஆத்மாவினிடத்தில் கல்பித்து, வித்வான்களுடைய அனு பவத்திற்கும், ச்ருதிகளுக்கும், விபரீதமாக ப்ரலாபிக்கின்றார் கள். அதற்குக் காரணமோ, அவிவேகந்தான். அந்த அவி வேகத்தைத்தான் ப்ரக்ருதத்தில் ராவணன் என்ற பதத்தால்

வாசகர்கள் க்ரஹித்துக் கொள்ளவேண்டும். அவிவேக மாகிய ராவணனுல் அபஹரிக்கப்பட்ட ஸீதை அரும் பெருந் தவத்தைச் செய்த 'ஜீவதத்வம்' என்பதையும் அறியவேண்டும்.

'सीतालङ्गलपद्धतिः' ('ஸீதாலாங்கலபத்ததிः') ('ஸீதாலாங்கல பத்ததிः') என்ற வாக்யத்தால், பூமியை உழுகிற கலப்பையி னுடைய மார்க்கத்திற்கு ஸீதை என்று பெயர். அந்த மார்க்கத்தினின்றும் ஜனக மஹாராஜனுக்கு ப்ரக்ருதத் தில் ஸீதை என்று சொல்லப்படும் ஜீவதத்வமானது அகப் பட்டபடியால், அதே பெயர் இந்த பரதேவதைக்கு விளங்கி வருகிறது. இதனல் கர்பவாஸ துக்கத்தை அனுபவித்துக் கொண்டு பிறந்த ஜீவனல்ல, என்பது வெளியாகிறது.

ஜீவனுக்கு ஆதியில்லை என்றுதான் வேதாந்த ஸித்தாந்த மாகும். அதில் जीवः ईशः विशुद्धचित् तथा जीवेशयोर्भिदा। अविद्या तच्छिदोर्योगः बद्धस्याकमनादयः॥ (ஜீவः ஈசः விசுத்தாசித் ததா ஜீவேசயோர்பிதா। அவித்யா தச்சி தோர்யோகः ஷடஸ்மாகமநாதயः॥) (ஜீவः ஈசः விசுத்தாசித் ததா ஜீவேசயோர்பிதா। அவித்யா தச்சி தோர்யோகः ஷடஸ்மாகமநாதயः॥) என்று ஜீவன், ஈச்வரன், ஜீவேச்வரபேதம், சுத்த ப்ரம்மம், அவித்யை, அவித்யைக்கும் ப்ரம்மத்திற்கு முள்ள ஸம்பந்தம், இந்த ஆறையும் அனுதி என்று நிரூபணம் செய்கிற சாஸ்த்ரமே ப்ரமாணமாகும். இதனல் ஸீதை என்ற பதத்தினல் அனுதியான ஜீவன் என்ற பொருள் வெளியாகிறது. அந்த பதத்திலுள்ள ஸ்த்ரீலிங் கத்தினல் பாரதந்த்ரியமானது ப்ரகாசிக்கின்றது. ஸ்த்ரீகளோ என்றுப் பாரதந்த்ரர்கள்தான். पिता रक्षति कौमारे भर्ता रक्षति यौवने। पुत्रस्तु स्थाविरे भावे न स्त्री स्वातन्त्र्यं अर्हति॥ (பிதா ரக்ஷதி கௌமாரே பர்தா ரக்ஷதி யௌவநே। புத்ரஸ்து ஸ்தாவிரே பாவே ந ஸ்த்ரீ ஸ்வாதந்த் ரயம் அர்ஹதி॥) என்ற வாக்யத்தால் ஸ்த்ரீகள், கௌமாராவஸ்

தையில் பிதாவினுடைய ஆதீனமாகவும், யௌவனுவஸ்த்தை யில் பர்த்தாவினுடைய ஆதீனமாகவும், வார்த்தக்யாவஸ்தையில் புத்ரனுடைய ஆதீனமாகவும் இருக்கவேண்டும் என்று தெரி கிறபடியால், என்றைக்கும் ஸ்த்ரீகளுக்கு 'பாரதந்த்ரியம்' தான் அழகாகும். அதனல் ப்ரக்ருதத்தில் ஸ்த்ரீலிங்கத்தால் பாரதந்த்ரியத்தை க்ரஹித்துக்கொள்ளவேண்டும். அநாதி காலமாக பகவானிடத்தில் பாரதந்த்ரியத்தை அடைந்த ஜீவன் என்ற தாத்பர்யத்தை 'सीता' ('ஸீதா') ('ஸீதா') என்ற பதத்தினல் அறியவேண்டும்.

இதனல், ப்ரக்ருதத்தில் ஸீதை என்ற ஜீவன் அநாதிகாலமாக ராமன் என்ற தாரக ப்ரம்மத்தினுடைய அரு கில் பரமானந்தத்தை அனுபவித்துக் கொண்டிருந்தாலும், விஷயாதிகளில் மனதைப் பறிகொடுத்த காரணத்தினல் பக வானை விட்டுப்பிரிந்து அவிவேகமாகிற ராவணன் என்ற மஹா மோஹத்தின் வசத்தில் அகப்பட்டுக்கொண்டு கஷ்டப் படுகிறது என்ற தாத்பர்யமானது, "ராவணனல் அபஹரிக் கப்பட்ட ஸீதை" என்ற பொருளைக்காட்டும் பதத்தால் வ்யங் க்ய மர்யாதையாக பாஸிக்கின்றது. கோவிந்த ராஜீய வ்யாக்யானமே இவ்விதமான தாத்பர்யத்தில் முக்யமான ப்ர மாண க்ரந்தமாக ஆகும்.

இவ்விதமான ஸீதை என்ற ஜீவனை துக்கத்திலிருந்தும் விடுதலை செய்து வைப்பதற்காகத்தான், ஆஞ்ஜனேயர் என்ற மஹா புருஷனுடைய ப்ரவ்ருத்தியானது பரம உபகாரமாக ஆகிறது. ஸீதையினுடைய ஸ்தானத்தை, (இருப் பிடத்தை) அதாவது ஸம்ஸார மண்டலத்தைத்தேடிப்பிடிக்க பரம குருவான ஆஞ்ஜனேய ஸ்வாமியானவர் யத்னம் பண் ணினர். அதாவது "எந்த ஜீவனுக்கு பகவானை அடைவதில் த்ருடமான நிச்சயம் இருக்கிறது?" என்பதை அறிந்து கொள்ள ஆவலுள்ளவராக ஆனர். विष्णोः कटाक्षश्चाद्वेष आभिमुख्यञ्च सात्विकैः। सम्भाषणं षडेतानि त्वाचार्यप्राप्तिहेतवः॥ (விஷ்ணோः கடாக்ஷஶ்ச த்வே ஷ ஆபிமுக்யஞ்ச ஸாத்விகைः। ஸம்பாஷணம் ஷடேதானி த்வாசார்யப்ராப்திஹேதவ:॥

சுவாதாயத்வாவிதிஹதவஃ ॥) (விஷ்ணோ: கடாக்ஷச்சாத்வேஷ ஆபிமுக்யஞ்ச ஸாத்விகை: । ஸம்பாஷணம் ஷடேதானி த்வா சார்யப்ராப்திஹேதவ: ॥) என்ற ஸூக்தியிலுல் பகவானை அடைவதில் ஆசை உள்ள ஜீவனைக்கண்டு பிடிக்க சில அடை யாளங்கள் சொல்லப்படுகின்றன. அதாவது, (1) பகவத் பக்தர்களோடு ஸ்நேஹம், (2) பகவத் பக்தர்களிடத்தில் த்வேஷ மில்லாதிருத்தல், (3) பகவத் பக்தர்களோடு ஸம்பாஷ ணைகள், (4) அப்படியே பகவானிடத்தில் பக்தி, (5) த்வேஷ மில்லாதிருத்தல், (6) எப்பொழுதும் பகவானுடைய ஸத்கதைகளையே சொல்லிக்கொண்டிருப்பது, இந்த ஆறு விதமான அடையாளங்களும், எந்த ஜீவனிடத்தில் காணப் படுகின்றதோ, அந்த ஜீவன் ஸம்ஸார ஸாகரத்தினின்றும் கரையேற எண்ணமுள்ளவன் என்றும், பகவானுடைய திரு வடியில் தான் போய்ச் சேரவேண்டு மென்ற தீவிரமான நிச் சயத்தோடு கூடினவன் என்றும் தெரிந்துகொள்ளலாம். இவ் விதமான ஜீவனைத்தான் ஸத்குருவானவர் தன்னுடைய உப தேசத்திற்கு யோக்யனென ஜீவனுகவும் கருதுவார். இவ் வித மஹிமையுள்ள சிஷ்யனைத் தேடிப்பிடிக்க ஆசார்ய புரு ஷனுகிற பரமகுரு யத்னம் செய்கிறார் என்ற தாத்பர்யமானது முதல் ச்லோகத்தால் வெளியாகிறது.

दुष्करं निष्प्रतिद्वन्द्वं चिकीर्षन्कर्मवानरः ॥
समुद्यतशिरोग्रीवः गवां पतिरिवाबभौ ॥

உஷ்கரம் நிஷ்ப்ரதித்வந்த்வம் சிகீர்ஷந் கர்மவானரஃ ।
ஸமுத்யதசிரோக்ரீவ: கவாம் பதிரிவாபபௌ ॥

துஷ்கரம் நிஷ்ப்ரதித்வந்த்வம் சிகீர்ஷந் கர்மவானர: ।
ஸமுதக்ரசிரோக்ரீவ: கவாம் பதிரிவாபபௌ ॥

निष्प्रतिद्वन्द्वं यथा भवति तथा - நிஷ்ப்ரதித்வந்த்வம் யதா ஹவதி ததா ।

நிஷ்ப்ரதித்வந்த்வம் யதா பவதி ததா = ஸமான மில்லாமல் இருக்கும்படி, அதாவது ப்ரதி பந்தகம் இல்லாமல் இருக்கும் படி, துஷ்கரம் - உஷ்கரம் - துஷ்கரம் = மற்றவர்களால் செய்ய

முடியாததான, कर्म - கூ2-ச் - கர்ம = கார்யத்தை, चिकीर्षन् - சிகீ ஷ்2ந - சிகீர்ஷந் = செய்ய இச்சை உள்ளவராய்க்கொண்டு, वानरः (வாநரஃ) (வாநர:) = ஆஞ்ஜனேயஸ்வாமியானவர், समुद्रशिरोग्रीवः - ஸமுத்ரஶிரோக்3ரீவஃ - ஸமுத்தக்ர சிரோக்ரீவ: = கழுத்தையும், சிரஸ்ஸையும் மேல் முகமாக வைத்துக்கொண்டு, गवां पतिरिव-கவாம் பதிரிவ = வ்ருஷப ராஜன்போல், आबभौ-ஆபபௌ2 - ஆபபௌ = விளங் கினார்.

முன் சொன்னபடி ஸீதையைத் தேடுவதற்காக யத்னம் செய்த ஆஞ்ஜனேய ஸ்வாமி, ஆகாச மார்க்கமாக ஸீதையைத் தேட ஆரம்பித்ததினால், அந்தக் கார்யமானது மற்றவர்களால் செய்ய முடியாததான அபூர்வ மான கார்யமாகும். அத்துடன் அவர் செய்ய ஆரம்பித்த கார்யத்திற்கு, யாதொரு விதமான ப்ரதி பந்தகமும் ஏற்பட ந்யாயமில்லை. பூமியில் நடந்து செல்லுகிறவர்களுக்குத்தான் மார்க்கத்தில் அநேக விதமான தடைகள் ஏற்பட ந்யாய முண்டு. ஆகாசத்தில் போகிறவர்களுக்கு யாதொரு தடை யும் ஏற்பட ந்யாயமில்லை என்பது லோக ப்ரஸித்தமானது. அவ்விதமான கார்யத்தைச் செய்யத் துணிந்த ஹநுமாரோ தன்னுடைய சிரஸ்ஸையும், கழுத்தையும், மேல் முகமாக வைத்துக்கொண்டு ஆகாசத்தைப் பார்க்கும்பொழுது, மார்க் கம் யாதொரு விதமான தடையினும் தடைபட்டதாக இல் லாமல் இருக்கிறதா என்பதைத்தான் கவனிக்கிறாரோ, என்று மற்றவர்களுக்குத் தோன்றும். ஹநுமாருடைய உத் ஸாஹமுள்ள ப்ரவ்ருத்தியையும், கம்பீரமான அவருடைய சரீரத்தையும் பார்க்கும் பொழுது, கோக்களுக்கு அதிபதி யான ஒரு பெரிய வ்ருஷபம் போல் அவருடைய ஸ்வரூப மானது விளங்கிற்று.

கோக்களுக்கு பதியாக வ்ருஷபத்தையும் சொல்லலாம்; பரமேச்வரனையும் சொல்லலாம். பசுபதி என்று பரமேச்வரனுக்கு திருநாமம் ஏற்பட்டதல்லவா. இதனால் பசுபதியான பர

மேச்வரன் பகீரத மஹா ராஜாவிற்காக கங்கா தேவியைத் தன்னுடைய சிரஸ்ஸில் தரிக்க யத்னம்செய்தகாலத்தில் ஆகாசத்திற்கு அபிமுகமாக எப்படி தன் ஜடாபாரத்தை விரித்துக் கொண்டு நின்று வந்தாரோ, அதுபோலவே ஆஞ்ஜநேய ஸ்வாமியினுடைய ஸங்கிவேசமானது காணப்பட்டது. அதனால், பரமேச்வரன் யத்னம்செய்த கார்யமானது விக்னம் இல்லாமல் நடை பெற்றதுபோல் ஆஞ்ஜநேயஸ்வாமியினுடைய ஆரம்பமும் ஒரு விதமான விக்ன மில்லாமல் நடை பெறும், என்பது த்ருஷ்டாந்தத்தினால் ஸூசிப்பிக்கப்படுகிறது.

அத்துடன், லோகத்தில் ஆசார்ய புருஷன் செய்கிற கார்யத்தை பற்ற எந்த டங்குக்களாலும் செய்ய முடியாது. இந்த ஆஞ்ஜநேயஸ்வாமியோ ஆசார்ய புருஷனுடைய ஸ்தானத்தில் இருந்து கொண்டு ஸீதை என்ற ஒரு உத்தம ஜீவனை ஸம்ஸார ஸாகரத்திலிருந்தும் கரையேற்ற யத்னம் செய்கிறபடியால் இவர் ஆரம்பித்த கார்யமானது மற்ற யாராலும் செய்ய முடியாததே என்பதையும் ஹநூ (ஹநூமான்) (துவ்கம்) என்கிற பதத்தினால் வால்மீகி மஹர்ஷியானவர் ஸூசிப்பிக்கின்றார்.

தவிர, ஒரு நல்ல சிஷ்யனை பற்றித்திலிருந்தும் முக்தனாகச் செய்கிற கார்யமானதாலும், அதைச் செய்வதிலும் தனக்கு ப்ரதி ப்ரயோஜனமாக தனத்தையோ, கீர்த்தியையோ. இந்த ஆசார்ய புருஷன் எதிர்பார்க்காததால் இந்த கர்மாவானது உயர்ந்த சுத்த கர்மாவாக ஆகிவிட்டது. ஆசார்ய புருஷர்கள் ப்ரவர்த்திக்கும் நல்ல உபதேசமாகிய கார்யமானது நிஷ்காம ப்ரவ்ருத்தியாக இருக்கவேண்டும். அவ்விதமாஅல் அதற்கு யாதொருவிதமான விக்னமும் ஏற்படாது. ப்ராரப்தவசமாக ஏற்பட்டாலும் அந்த விக்னங்களை நிவர்த்தி செய்துகொள்வதில் அந்த ஆசார்ய புருஷர்கள் ஸமர்த்யமுள்ளவர்களாகவே ஆவார்கள். அந்த ஆசார்ய புருஷர்களுடைய கார்யத்தில் ஸஹாயத்திலுடைய ஆஞ்ஜநேய

மும் பலமாக ஏற்படும். அந்த ஆசார்யனுக்கு பகவதனுக்ரஹ பலமும் பரிபூர்ணமாக இருக்கும். அப்படி இருக்கும் பொழுது அந்த ஆசார்ய புருஷனுடைய சிஷ்ய ஸந்தாரணம் என்ற காரியத்திற்கு ஏது விக்னம் ஏற்படும். நிர்விக்னமாக அது நடைபெற்றே தீரும். என்பதும் நிஸ்ரேயஸ் (நிஷ்ரேயஸம்) (நிஷ்ப்ரதித்வந்த்வம்) என்கிற பதத்தினால் ஸூசிப்பிக்கப் படுகிறது.

அத்துடன் ரவாம்பதி: (மவாம்வதிஃ) (கவாம்பதி:) என்கிற பதமானது பசுபதியான பரமேச்வரனையும் குறிக்கிறபடியி னால், ஞானோபதேசம் செய்கிற ஆசார்ய புருஷன் பரமேச் வரனுடைய ஸ்வரூபம் என்றும் தெரியவருகிறது. அதில்

आरोग्यं भास्करादिच्छेत् श्रियमिच्छेद्धुताशनात् ।
ज्ञानं महेश्वरादिच्छेत् मोक्षमिच्छेत् जनार्दनात् ॥

சூரொமஸ் ஹாவ்ரஸாதிஷெஷ் ஸ்ரேயஸிஷெஷ்ட ஹுதாஸநாத் ।
ஜ்ஞாநம் மஹேஶ்வராதிஷெஷ் மொக்ஷமிஷெஷ் ஜநார்தநாத் ॥


ஆரோக்யம் பாஸ்கராதிச்சேத் ச்ரியமிச்சேத்ஹுதாசநாத் ।
ஞாநம் மஹேச்வராதிச்சேத் மோக்ஷமிச்சேத் ஜநார்தநாத் ॥

என்ற ஸ்மிருதி வாக்யமே ப்ரமாணமாகும். ரோக நிவ்ருத்திக்கு ஆதித்ய பகவானையும், ஐச்வர்ய ப்ராப்திக்கு அக்னியை யும், ஆத்ம ஞானத்திற்கு மஹேச்வரனையும், மோக்ஷத்திற்கு மஹா விஷ்ணுவையும் உபாஸிக்க வேண்டுமென்பதுதான் மேற் சொன்ன ஸ்மிருதியின் தாத்பர்யமாகும்.

அவ்விதம் ஞானதாதாவான பரமேச்வரனை ரவாம் பதிஃ (மவாம் வதிஃ) (கவாம் பதி:) என்ற பதத்தினால் ஆஞ்ஜநேய ஸ்வாமிக்கு உதாரணமாக நிரூபணம் செய்திருப்பதிலிருந் தும், பரமேச்வரன் ஸகலாதிகளுக்கு உபதேசம் செய்தது எப் படி நிஷ்காம ப்ரவ்ருத்தியோ, அதுபோல்தான் இந்த ஆஞ்ஜ நேய ஸ்வாமியும் ஸீதையிடம்போலுற்ற உத்தம ஜீவனுக்கு

தாரக ப்ரம்மமாகிய ராமனுடைய ப்ராப்தியில் உபாயமான உபதேசமும் நிஷ்காம ப்ரவ்ருத்தி ஆகும். பரமேச்வரனல் தரிக்கப்பட்ட கங்காதேவியானவள் ஸர்வ ஜனங்களையும் ஸர்வ பாபத்தினின்றும் நிவ்ருத்தி செய்து வைப்பதில் எப்படி பரிசுத்தமான பதார்த்தமோ, அதுபோல் ஆஞ்ஜநேய ஸ்வாமியினுடைய உபதேச வாக்யங்களும் பரம பரிசுத்தமான பதார்த்தம் என்பதும், பரமேச்வரன் தரித்த கங்கையானவள், விஷ்ணுவை ஸம்பந்தித்தவள் போல் ஆஞ்ஜநேய ஸ்வாமியினல் உபதேசம் செய்யப்படுகிற தத்வமும் வைஷ்ணவ மந்த்ர ரஹஸ்யம் என்பது முதலான அநேக வ்யங்க்யங்கள் மேற்சொன்ன ச்லோகத்தில் அடங்கி உள்ளன.

अथ वैडूर्यवर्णेषु शाद्वलेषु महाबलः ।
धीरस्सलिलकल्पेषु विचचार यथासुखम् ॥
द्विजान् विलासयन् धीमान् उरसा पादपान्हरन् ।
मृगांश्च सुबहून्निघ्नन् प्रवृद्ध इव केसरी ॥
नीललोहित माञ्जिष्ट पत्रवर्णैः सितासितैः ।
स्वभावविहितैः चित्रैः जातुभिः समलंकृतम् ॥
कामरूपिभिराविष्टं अभीक्ष्णं सपरिच्छदैः ।
यक्षकिन्नरगन्धर्वैः देवकल्पैश्चपन्नगैः ॥
स तस्य गिरिवर्यस्य तले नागवरायुते ।
तिष्ठन् कपिवरस्तत्र ह्रदे नाग इवाबभौ ॥



காஶ்ரமபதம் ஸுரம்யம் ஸர்வதோ வை பரிஹரதி ।
பக்ஷிகிந்நரமருகவிவிதை: விதவகவிதைரபி வஸதி: ॥
வன தவஸ்ய ஸ்ரீபிவபதஸ்ய தவ நாமவராபாதே ।
தீக்ஷ்ண கவிவரஸ்ய ஹரதி நாம இவாபஸ: ॥

அத வைதேர்யவர்தேஷ சாத்வதேஷ மஹாபல: ।
தீர்ஸ்வலில கல்பேஷ விசசார யதாஸுகம் ॥
த்வீஜாந் வித்ராஸயந் தீமாந் உடஸா பாதபாந்ஹரந் ।
ம்ருகாம்ச ஸாபஹந்திக்நந் ப்ரவ்ருத்த இஷ கேஸரீ ॥
நீலமேஹித மாஞ்ஜிஷ்ட பத்ரவர்ண: ஸுதாஸிக: ।
ஸ்வபாவவிஹிதை: சித்ரை: ஜாதபி: ஸமலம்க்ருதம் ॥
காமரூபி மஹாவிஷ்டம் அபீக்ஷ்ணம் ஸபரிச்சதை: ।
யக்ஷகிந்நரகந்தர்வை: தேவகல்பை: ச பந்நகை: ॥
ஸ தஸ்ய கிரிவர்யஸ்ய தலே நாகவராயுதே ।
விஷ்டம் கபிவரஸ்தத்ர ஹ்ருஷ்ட நாக இவாபவத் ॥

முன் சொன்னபடி ஆகாச மார்க்கமாகச்சென்று ஸீதையைக் கண்டு பிடிக்க வேண்டுமென்று யத்னம் செய்த ஆஞ்ஜநேய ஸ்வாமியானவர் மஹேந்த்ர பர்வதத்தின் சிகரத்தில் ஏறிக்கொண்டு, அங்குள்ள வைடூர்யம் என்ற ரத்னத்தின் காந்தியைப்போல் விளங்கிவரும் காரணத்தினால் ஜல-ப்ரவாஹமோ! என்று தோன்றும்படியான புல் மார்க்கங்களில் கொஞ்ச தூரம் உலாத்திக்கொண்டு ஸந்தோஷமாக விளங்கி வந்தார். அந்த ஸந்தர்ப்பத்தில்தான் விச்வரூபத்தையும் தரித்துக்கொண்டதாகத் தெரியவருகிறது. அந்த மலையிலுள்ள அநேக பக்ஷிகளும் பயந்து நடுங்கி அங்கிருந்து பறந்து வெளியில் சென்றுவிட்டன. இந்த மஹாபராக்ரமத்தையுடைய ஸஞ்சாரகாலத்திலேற்பட்ட கால் வேகத்தினால் அந்த மலையிலுள்ள அனேக வ்ருக்ஷங்களும், ம்ருகங்களும் பயந்து ப்ராணனையும் விட்டுவிட்டன. இவருடைய நிலையை அப்பொழுது பார்க்கும்பொழுது மிகவும் உத்ஸாஹமுள்ள ஒரு பெரிய ஸிம்மம்போல் விளங்கி வந்தார். முன்பு ஞான தாதாவான பரமேச்வரனை இந்த ஆஞ்ஜநேயருக்கு உதாஹரணமாகச் சொல்லப்பட்டது. இப்பொழுது கேஸரி என்பதில்

ஸிம்மத்தை உதாஹரணமாகச் சொல்லுகிறார். இதனாலும் ஆசார்ய பதவியில் அமர்ந்தவன் 'எவ்விதமான வேத பாஹ்யர்களான துர்வாதிகளுடைய வாதங்களையும் பேதிக்கிற விஷயத்தில் மத்தகஜங்களுடைய மஸ்தகத்தை பேதிக்கும் ஸ்வபாவத்தை உடைய ஸிம்மத்தைப்போல் இருந்து வர வேண்டும்' என்பதும் வெளியாகிறது.

எந்த மலையினுடைய ப்ரதேசத்தில் இவர் நின்று வந்தாரோ அந்த ப்ரதேசமானது கருப்பு வர்ணமாயும், சிவப்பு வர்ணமாயும், பொன் நிறமாயும், வெளுப்பு கறுப்பு இரண்டும் சேர்ந்த வர்ணமுடையதாயுமுள்ள அநேக அபூர்வமான வ்ருக்ஷங்களின் இலைகளுடைய வர்ணங்களினால் மிகவும் ரமணீயமாக விளங்கி வந்தன. இயற்கையாகவே ஏற்பட்ட நானாவிதமான தாதுக்களாலும், நச்சங்கப் பொடிகளாலும் அலங்கரிக்கப்பட்டு வந்தன. நினைத்த மாத்ரத்தில் எவ்விதமான ரூபத்தை எடுத்துக்கொள்ள வேண்டுமானாலும் அவ்விதம் அந்த ரூபத்தை எடுத்துக்கொள்ளும் சக்தியுள்ள யக்ஷர்கள், கிந்நரர்கள், தேவர்கள், கந்தர்வர்கள், பன்னகர்கள் முதலிய தேவ ஜாதிகளில் சேர்ந்தவர்கள் திவ்யமான அலங்காரங்களால் அலங்கரித்துக்கொண்டு அந்த மலையினுடைய ப்ரதேசத்தில் வாஸம் செய்துகொண்டு வருகிறார்கள். இதனால் 'ஆசார்ய புருஷன் எந்த ஸ்தானத்தில் அமர்ந்துகொண்டு ஒரு ஜீவனுக்கு தத்வோபதேசத்தைச் செய்வதில் ஸித்தனாக இருந்து வருகிறானோ அவனுடைய ஸந்நிதியில் ஸகலமான உபநிஷத்துக்கள், வேதவாக்கள், இதிஹாஸ புராணங்கள், தாத்பர்ய லிங்கங்கள், ந்யாயங்கள் முதலானவைகள் ஸாந்நித்யத்தோடு விளங்கி வரும்' என்கிற கருத்துவும் மேற்சொன்ன ச்லோகங்களின் தாத்பர்யத்தை கவனிக்கும் பொழுது வ்யங்க்யமாக விளங்கி வருகின்றது.

அவ்விதமான ச்ரேஷ்டமான பர்வத ப்ரதேசத்தில் இருந்துகொண்டு வரும் ஆஞ்ஜநேய ஸ்வாமியை கவனிக்கும் பொழுது ஒரு பெரிய மடுவின் நடுவில் நின்றுகொண்டு வரும் மத்தகஜம்போல் விளங்கி வந்தார். முன் ச்லோகத்தில் ஸிம்

மத்தைப்போல் வர்ணித்தோம். இந்த ச்லோகத்தில் नागइवाबभौ (நாகஇவாபபௌ) (நாகஇவாபபௌ) என்ற வாக்யத்திலல் கஜத்தைப்போல் என்று வர்ணிக்கிறார். இதலல் ஒரு ஸந்தர்ப்பத்தில் வ்ருஷபம் போலும், மற்றொரு ஸந்தர்ப்பத்தில் ஸிம்மம் போலும், மற்றொரு ஸந்தர்ப்பத்தில் கஜத்தைப்போலும், வர்ணிக்கின்ற கவியினுடைய அபிப்ராயத்தைக் கவனித்தால், ஆசார்ய புருஷன் இருக்கவேண்டிய நிலையைச் சொன்னது போல் ஆகிறது. வ்ருஷப தர்ருஷ்டாந்தத்திலல் வ்ருஷபமானது எப்படித் தன்னுடைய எதிரில் வரும் ப்ராணிகளை மிகவும் துச்சமாக நினைத்து கர்வத்துடன் செல்லுமோ, அது போல், ஆசார்ய புருஷனும், ஒருவருக்கும் பயத்தை அடையக் கூடாதென்பது வெளியாகிறது. ஸிம்மத்தைக் கண்டால் மற்ற ம்ருகங்கள் நடுங்கி ஓடுவதுபோல் அந்த ஆசார்யனைக் கண்ட மாத்ரத்தில் துர்வாதிகள் ஓடிவிடவேண்டும். அவ்விதமான ஞான சக்தியோடு கூடினவராக ஆசார்யன் இருக்கவேண்டும். அதாவது துர்வாதிகளுக்கு பயத்தைக் கொடுக்கும் பாண்டித்யத்தோடு கூடினவராக இருக்கவேண்டுமென்பதும் வெளியாகிறது. மத்தகஜமானது ராஜ வீதியில் போகும்பொழுது அநேக பாலர்களும் கூச்சலிட்டுக் கொண்டு பின் தொடர்ந்து ஓடுகிறார்கள். அநேக நாய்களும் குரைக்கின்றன. அதற்காக மத்தகஜமானது திரும்பி அவர்களுக்கு ப்ரதியைச் செய்கிற ஸ்வபாவத்தை அடைகிறதில்லை. அதுபோல் இந்த ஆசார்ய புருஷனும் தன்னுடைய குணதோஷங்களைப் பிறர் எந்தவிதமாகச் சொன்னாலும் அவைகளுக்கு பதில் சொல்லுகிறது என்கிற ஸ்வபாவம் இல்லாமல், தான் உதாஸீனமாக இருந்துகொண்டு, தன்னுடைய ஸ்வரூபத்தை அனுஸந்தானம் செய்துகொண்டிருப்பதே ஆசார்ய புருஷனுடைய ஸ்வபாவமாகும் என்று அறிந்து கொள்ளவேண்டும். இவ்விதமே ஆங்காங்கு சொல்லியிருக்கும் உதாஹரணங்களைக்கொண்டு ஆசார்ய புருஷனுடைய மஹிமையை வ்யங்க்யமாக அறிந்து கொள்வதே விக்வான்களுடைய ஸ்வபாவமாகும்.

सर्वबन्धो महाकाव्यं (ஸமுவலெஸ்ரா உஹாகாவ்யம்) (ஸர்கபந்தோ மஹாகாவ்யம்) என்ற காவ்ய ப்ரகாசிகையிலுடைய ப்ரமாண வசனத்தை முன்னிட்டு பிரித்துப பிரித்து விஷயங்களை ஒன் றொன்றுக்கும் ஒவ்வொரு ஸர்க்கமாக செய்திருக்கும் கிரந் தத்தை மஹா காவ்யமென்று அறியவேண்டும் என்று தெரி கிறபடியால், இந்த ஸ்ரீமத் ராமாயணம் ஸர்கபந்தமானபடியி னல் இதை மஹா காவ்யம் என்று யாராலும் ஒப்புக்கொள்ள முடியாமல் இருக்கமுடியாது. மஹா காவ்யமென்றும், ஆதி காவ்யமென்றும், உத்தம காவ்யமென்றும் சொல்லப்படும் காவ் யங்களெல்லாம் அத்த ப்ரதானமான ஸ்ருங்கார ஸம்ஹிதை யென்றும், வ்யங்க்யப் பிரதானமான காந்தா ஸம்ஹிதை யென் றும், ஒப்புக்கொள்ள வேண்டியது அவச்யமானதால், ப்ரக் ருதத்தில் இந்த ராமாயணமோ காந்தா ஸம்ஹிதையானதாலும் வ்யங்க்யார்த்தத்தையே முக்யமாக க்ரஹித்துக்கொள்வது வித்வான்களுடைய ஸ்வபாவமானதால் ப்ரபந்தத்தையொட் டியோ பதத்தையொட்டியோ, வாக்யத்தையொட்டியோ ஏற்படும் வ்யங்க்யமும் ஸாகிப்பிக்கப்படுகிறதென்பதையும் அறியவும்.

स सूर्याय महेन्द्राय पवनाय स्वयंभुवे ।
भूतेभ्यश्चाञ्जलिं कृत्वा चकार गमने मतिम् ॥

ஸ ஸூர்யாய மஹேந்த்ராய பவநாய ஸ்வயம்புவே ।
பூதேப்யச்சாஞ்ஜலிம் க்ருத்வா சகார கமநே மதிம் ॥

ஸः - ஸஃ - ஸ: = அந்த ஆஞ்ஜநேயஸ்வாமியானவர், ஸூர்ய - ஸூர்யாய - ஸூர்யபகவானின் பொருட் டும், மஹேந்த்ர - மஹேந்த்ராய - மஹேந்த்ரனின் பொருட்டும், பவந - பவநாய = வாயுபகவானின் பொருட்டும், ஸ்வயம்பு - ஸ்வயம்புவே = தனக்கு பிதா வான ப்ரும்ம பகவானின் பொருட்டும், பூத - பூதேப்ய - ஸகல ப்ராணிகளுக்கும்,

ஸ்வயம்புவே = ப்ரம்மாவின் பொருட்டும், भूतेभ्यश्च - ஹிதை ஹ்யஸ்ச - பூதேப்யச்ச = மற்ற தேவயோனிகளில் பிறந்த ஸ்மஸ்த தேவதைகளின் பொருட்டும், अञ्जलिं - ஸஜலிம் - அஞ்ஜலிம் = அஞ்ஜலி பந்தத்தை, कृत्वा - க்ருத்வா - க்ருத்வா = செய்துவிட்டு, गमने - மனே - கமனே = லங்கா நகரம் செல்வதில் मतिं - மதிம் - மதிம் = புத்தியை(ச்), चकार - அகார - சகார = செய்தார்.

தாத்பர்யம்

ஒரு தேசத்தினின்றும் ஒரு கார்யத்தை முன்னிட்டு மற்றொரு தேசத்திற்குப் போகும் ஸமயத்திலோ மற்றொரு தேசத்தில் கார்யத்தை முடிக்கும் காலத்திலோ, திரும்பிவரும் காலத்திலோ யாதொருவிதமான விக்னமும் இல்லாமல் கார்யம் முடிவதற்கு இஷ்ட தேவதைகளை ப்ரார்த்தித்துக் கொள்ள வேண்டுமென்கிற சிஷ்டாசாரத்தை ப்ரக்ருதத்தில் ஆஞ்ஜநேயஸ்வாமியும் यद्यप्येते देवाः सर्वेऽपीष्टदेवताः । तथापीमां स्वामेव देवतां मे मनः । यद्यप्यसौ सर्वेषां जगतां प्रेरकः तथापि मम हृदयं जानाति । यद्यप्यसौ सर्वज्ञः सर्वेश्वरः सर्वान्तर्यामी । यद्यप्येतानि सर्वाणि ज्ञानानि तस्मिन्नेव सन्ति । यत्यतोऽसौ मत्प्रेष्टः तत्तदेव इतरो जनः । स यत्प्रमाणं कुरुते लोकस्तदनुवर्तते ॥ என்ற சாஸ்த்ரத்தை நம்பி, தானும் அனுஷ்டிக்கிறார். ஸௌம்ய பகவான் ஸர்வ ப்ராணிகளுக்கும் கர்ம ஸாக்ஷியானதினால் குல தெய்வத்தின் கோடியில் சேர்த்து ஆதரிக்கவேண்டிய கடமையை முன்னிட்டு முதன் முதலாக ஸௌம்யனுக்கு அஞ்ஜலி பந்தனம் செய்துகொண்டார். இந்திரனும் மழையை ஏற்படுத்தி ப்ராணிகளுக்கு அன்னதாதாவாக ஆகிறபடியால் அவனையும் இஷ்டதேவதை என்று நினைத்து நமஸ்கரித்தார். தனக்கு வாயு பகவான் பிதாவாக ஆனதினால் பூஜ்யத்வபுத்தியோடு வாயுவிற்கும் நமஸ்காரம் செய்தார். அப்படியே லோகத்திற்கே ஸ்ருஷ்டி கர்த்தாவான ப்ரம்மாவின் பொருட்டு நமஸ்காரம் செய்தார். மற்ற அந்தந்த இந்த்ரியங்களுக்கு

அதிஷ்டான தேவதைகளாகிற தேவயோனியில் பிறந்தவர் களுக்கும் அஞ்ஜலி பந்தத்தைச் செய்துவிட்டு லங்கா நகரத் திற்கு, தான் போவதில் புத்தியை நிச்சயம் செய்தார்.

இந்த ச்லோகத்தில் ஆஞ்ஜநேய ஸ்வாமியானவர் 'தனக்கு ஸ்வாமியான ஸ்ரீ ராமச்சந்த்ரமூர்த்திக்கு நமஸ்காரம் செய்ததாகத் தெரியவில்லையே? என்று சிலர் ஸந்தேஹப் படக்கூடும். पवनाय (வவநாய) (பவநாய) என்ற பதத் திலில் சொல்லப்பட்ட தெய்வமோ ரூடி வ்ருத்தியை ஆச்ர யித்து, ஆஞ்ஜநேய ஸ்வாமியினுடைய பிதாவான வாயுவாக ஆனாலும், யோக வ்ருத்தியை ஆச்ரயித்து தாரக ப்ரம்மமாகிய ஸ்ரீ ராமச்சந்த்ரமூர்த்தியே அந்த சப்தத்தின் பொருளாகும் என் பது ஸித்தமாகிறது. पूयते येन स्वज्ञानेन योगिवृन्दं सः पवनः भगवान् प्रत्यक्तत्त्वभूतो रामः (வூயதே யேந ஸ்வஜ்ஞாநேந யோகிவ்ருந்தம் ஸः வநநः ஹ்ருதயே வ்ருத்யுக்ரஹ்யதாரஃ) பூயதே யேந ஸ்வஜ்ஞாநேந யோகிப்ருந்தம் ஸः பவநः பகவாந் ப்ரத் யக்தத்வபூதோ ராமः) என்ற தீலக வ்யாக்கியான வாக்கியத்தை அனுஸரித்து, எந்த பகவான் யோகிகளுக்கு தன்னுடைய தத்வ ஞானத்தை உபதேசித்து அதனால் அந்த யோகிகளை ஸம்ஸார ஸாகரத்தினின்றும் தாணம் செய்து வைக்கிறாரோ அந்த பகவான் पवनः (வவநஃ) (பவநः) என்கிற சப்தத்தினால் யோக வ்ருத்தியின் பலத்தினால் சொல்லப்படுகிறவன் என்ற தாத்பர்யம் விளங்குகிறபடியினால் पवनाय (வவநாய) (பவநாய) என்பதினாலேயே தாரக ப்ரம்மமாகிய ராமனின் பொருட்டு அஞ்ஜலி பந்தத்தைச் செய்தார் என்பது ஸித்தமாக ஆகிறது. ஆகையால் ராமருக்கு நமஸ்காரம் செய்யாமல் இவர் புறப்பட்டதால், போகும் மார்க்கத் தில் அநேக விக்னங்கள் ஏற்பட்டதாகவும் லங்கா நகரம் சென்றும் ஸீதையைக் கண்டு பிடிப்பதில் மிகவும் கஷ்டப்பட்டாரென்றும் சொல்லுகிற விஷயமானது, சொல்லுகிறவர்களுடைய சமத்காரந்தான். அந்த கதா பாகங் களுக்கு, உத்தம ஸத்சிஷ்யர்களுக்குக் குருவைக் கண்டுபிடித்

கிற சிரமத்தைக் காட்டிலும் ஸத்குருக்களுக்கு ஸத்சிஷ்யனைக் கண்டு பிடிப்பதில் உள்ள கஷ்டம்தான் அதிகமானது என்று சொல்லுவதில்தான் தாத்பர்யம் ஆகும்; அன்றியில் ராமருக்கு நமஸ்காரம் செய்யாமல் கிளம்பினர் என்பதினால் கஷ்டப்பட்டார் என்று சொல்லுவது அழகல்ல.

अञ्जलिं प्राङ्मुखः कृत्वा पवनाय आत्मयोनये ।
ततोऽहि ववृधे गन्तुं दक्षिणो दक्षिणां दिशम् ॥

சுஜ்ஜலிம் பாஹூவஃ கூ கூவா வவநாய சூகயொநயெ ।
தகிதாஹி வவ்ருயெ மஹாம் உகூகிணொ உகூகிணாம் திஸம் ॥

அஞ்ஜலிம் ப்ராங்முகஃ க்ருத்வா பவநாய ஆத்மயோநயே ।
ததோஹி வவ்ருதே கந்தும் தகூகிணே தகூகிணாம் திசம் ॥

दक्षिणः - உகூகிணஃ - தகூகிண: = ஸாமர்த்தியமுள்ள ஆஞ்சநேய ஸ்வாமியானவர், प्राङ्मुखरून् - பாஹூவஸ்து - ப்ராங்முகள்ளம் = கிழக்கு முகமாக நின்றுகொண்டு, आत्मयोनये - சூகயொநயெ - ஆத்மயோநயே = தன் பிதாவான, पवनाय - வவநாய - பவநாய = வாயுபகவானின் பொருட்டு, अञ्जलिं - சுஜ்ஜலிம் - ஞ்ஜலிம் = நமஸ்காரத்னத, कृत्वा - கூகுவா - க்ருத்வா = செய்துவிட்டு, ततः - ததஃ - தத: = பிறகு, दक्षिणां दिशं - உகூகிணாம் திஸம் - தகூகிணாம் திசம் = தெற்கு திசையைக் குறித்து வந்து - மஹாம் - கந்தும் = செல்வதற்கு, ववृधे - வவ்ருயெ - வவ்ருதே = வ்ருத்தியடைந்தார்.

தாத்பர்யம்

தான் ஆகாச மார்க்கமாக லங்கா நகரம் செல்வதற்கு ஆஞ்ஜநேயஸ்வாமியானவர் யத்னம் செய்த காரணத்தினால் அது விஷயத்தில் வாயு பகவானை தன் பிதாவினுடைய உதவி முக்யமாக வேண்டுமென்று கருதி மற்ற தேவதைகளோடு வாயுவைச் சேர்க்காமல் விசேஷமாகத் தனியாகப் பிரித்து வாயுவை நமஸ்காரம் செய்துவிட்டு, தெற்கு திசையி

லுள்ள லங்காநகரம் செல்வதற்குத் தன்னுடைய சரீரத்தை வ்ருத்தி செய்துகொண்டார் என்ற தாத்பர்யத்தால் ப்ராணாயாமத்தினுடைய பெருமையானது வெளியாகிறது.

அதாவது பூரகம், ரேசகம், கும்பகம் என்று மூன்றுவித மாக ப்ராணாயாமத்தை சாஸ்த்ரமானது பிரித்து போதித் திருக்கிறது. வெளியிலுள்ள சுத்தமான வாயுவை இடது பாகத்திலுள்ள நாஸிகாரந்த்ரம் வழியாக சரீரத்திற்குள் பூர்த்தி செய்துகொள்ளுவது பூரகமென்றும், சரீரத்திற்குள் இருந்த அசுத்தமான வாயுவை வலது பாகத்திலுள்ள நாஸிகா த்வாரம் வழியாக வெளிபாகத்தில் த்யாகம்செய்து விடுவது ரேசகம் என்றும், சுத்தமான வாயுவை ஸுஷும்ணா நாடியில் நிரோதம் செய்வது (அதாவது அடக்குவது) கும்பகம் என்றும் சொல்லப்படும். அவ்விதம் கும்பக ப்ராணாயாம காலத்தில், ஆகாச மார்க்கத்தில்கூட ஸஞ்சரிக்கச் சக்தியுள்ளவனாக ஆகிவிடுவான். இந்த ப்ராணாயாம ஸித்தியை மூன்று மாத காலத்தில் அப்யாஸம் செய்து அடையலாம். ஒவ்வொரு தினத்திலும் இந்த ப்ராணாயாமத்தை அப்யாஸம் செய்வதற் காக ஏற்பட்ட காலங்கள், ப்ராதக்காலத்தில் அருணோதய ஸமயம், மாத்யான்ஹிக காலத்தில் உச்சிவேளை, ஸாயங் காலத்தில் அஸ்தமன ஸமயம், நடுநிசி இந்த நான்கு காலங் களிலும், ஒவ்வொரு காலத்திலும், இருபது ப்ராணாயாம ப்ரகாரம் ஆக எண்பது ப்ராணாயாமம் செய்துவந்தால், மூன்று மாத காலத்திற்குள் ஸித்திபெறலாம். முதன்முதல் சரீரத்தில் வியர்வைகள் அதிகமாக ஏற்பட்டு ஸ்நானம் செய் ததுபோல் ஆகிவிடும். இது அதம ஸித்தியாகும். இரண்டா வது, சரீரத்தில் சலனம் ஏற்படும் இது மத்யம ஸித்தியாகும். மூன்றுவது, பூமியை த்யாகம் செய்துவிட்டு ஆகாசத்தில் பஞ்சுபோல், இலேசாக ஸஞ்சரிப்பது—உத்தம ஸித்தியாகும். சரீரத்திலுள்ள நாடிகளுக்குள், இடை, பிங்கள, ஸுஷும்ணை என்ற மூன்று நாடிகள் ப்ரதானமாக உள்ளன. இடை யென்ற நாடியை ஸௌம்ய நாடியென்றும், பிங்கள என்ற

நாடியை சந்த்ர நாடியென்றும், ஸுஷும்ணையை அக்நி நாடி யென்றும் சொல்வார்கள். இந்த விஷயத்தைத் தெரிந்து கொண்டு ப்ராணயாமத்தை செய்து வாயுவை தன் ஸ்வாதீனம் செய்து கொள்ளுகிற உபாயத்தைத்தான் யோக மார்க்க மென்று சொல்வார்கள். அதற்கு முக்யமான தேவதையோ, ஸூர்ய பகவானும், திசையோ கிழக்கு திசையும் ஆகும். அதைத்தான் अञ्जलिं प्राङ्मुखः कृत्वा (கூஜலிம் ப்ராங்முக: க்ருத்வா) (அஞ்ஜலிம் ப்ராங்முக: க்ருத்வா) என்கிற வாக்யத்தி னால் வால்மீகி மஹர்ஷியானவர் ஸூசிப்பிக்கின்றார். அணிமை மஹிமை, லகிமை, கரிமை, ப்ராப்தி, ப்ராகாம்ய, ஈசித்வம், வசித்வம் என்ற எட்டுவிதமான ஸித்திகளும், கும்பக ப்ராணயாமத் தால், ப்ராண நிரோதம்செய்த ராஜயோகிகளுடைய வசத் தில் வந்துவிடுமாதலால் அவர்களுக்கு எந்த மார்க்கமாக ஜலத்திலோ, ஆகாசத்திலோ ஸஞ்சாரம் செய்யவேண்டு மென்று இச்சை ஏற்பட்டாலும், அந்த மார்க்கமாக ஸஞ் சரிக்கலாம். அவ்விதம் மஹிமையுள்ள ராஜயோகிகளுக்குள் ப்ரக்ருதத்தில் ஆசார்ய புருஷனை ஆஞ்ஜநேய ஸ்வாமியா னவர் ப்ரதானமான ராஜயோகியானதால் வாயுவை நிரோதம் செய்துகொண்டு ஆகாசமார்க்கமாக லங்கா நகரம் செல் வதற்கு யத்னம் செய்தார்.

இந்த ஆச்சர்யத்தை ஜாம்பவான் முதலிய ஸகலமான வானரர்களும் பார்த்து ஆஞ்ஜநேய ஸ்வாமியினுடைய பெரு மையை ப்ரசம்ஸை செய்தார்கள். இந்த ஆஞ்ஜநேய ஸ்வாமியினுடைய யத்ன விசேஷமும் தன் ப்ரயோஜனத்திற் காக ஏற்பட்டதல்ல. பகவானுன ஸ்ரீராமனுடைய கைங் கர்யமாக ஆகுமென்பதை அறியவும். ஈச்வரனுடைய கைங் கர்ய ரூபமாக எந்த கர்மாவைச் செய்தாலும் அந்த கர்மா வானது தடைபடாமல் ஸம்பூர்ணமாகப் பலிக்கும் என்பதி லும் ஸம்சயம் இல்லை. அதைத்தான் वधे रामवृत्यर्थं समुद्रङ्घनपर्वसु (வதே ராமவ்ருத்யர்த்தம் ஸமுத்ரலங்கனே) (வதே ராமவ்ருத்யர்த்தம் ஸமுத்ரலிவபர்வஸு) என்கிற வாக்யத்

திஸல் மஹர்ஷியானவர் வெளிப் படுத்துகிறார். ஆகாச மார்க்கத்தில் ஆஞ்ஜநேய ஸ்வாமியானவர் புறப்படு கிறகாலத்தில் தன்னுடைய இரண்டு கைகளாலும், கால்களாலும் பர்வதத்தை அழுத்திக்கொண்டு புறப் படும்பொழுது, அந்த மலை ஒரு முஹூர்த்தகாலம் மஹிமா ஸித்தியை அடைந்த ஆஞ்ஜநேயருடைய குருத்வத்தைத் தாங்கமுடியாமல் சலித்தது. அந்த மலையிலுள்ள ஸகல வ்ருக்ஷங்களும் புஷ்பங்களை ஆஞ்ஜநேய ஸ்வாமியினுடைய சிரஸில் புஷ்பாஞ்சலி செய்வதுபோல் உதிர்த்து, புஷ்பங் களால் அந்த மஹாநுபாவனை அலங்கரித்தன. ஆஞ்ஜநேய ஸ்வாமியோ வ்ருக்ஷங்களிலிருந்தும், தன் சரீரத்தில் உதிர்க்கப் பட்ட புஷ்பங்களால் நாலாபக்கத்திலும் சூழப்பட்டிருக்கும் காரணத்தைக்கொண்டு இது மற்றொரு புஷ்பமயமான மலையோ என்று தோன்றும்படியாக விளங்கினர். ஆஞ்ஜ நேய ஸ்வாமியினுடைய வீர்யத்தையோ மற்ற எவர்களா லும் அந்த ஸந்தர்ப்பத்தில் இவ்வளவுதான் என்று குறிப் பிட்டு அறிய முடியவில்லை. அபூர்வமான வீர்யத்தோடு கூடின ஆஞ்ஜநேய ஸ்வாமியினால் பீடிக்கப்பட்ட அந்த மலை யில், நான்கு பக்கங்களிலும் அருவிகள் ப்ரவாஹித்து பூமியில் விழுந்தன. மத்தகஜங்களுடைய இருபக்கத்திலும், பெருகி வரும் மத ஜலங்களைப்போல் அந்த அருவிகள் காணப்பட் டன. அத்துடன் ஆங்காங்கு மலைகளில் வெடிப்புகள் ஏற் பட்டு, ஸுவர்ணங்கள், வெள்ளிகள், தாமிரங்கள் முதலான அபூர்வமான தாதுக்களும், நவரத்ன விசேஷங்களும், பகிரங்க மாக வெளியில் காணப்பட்டன. அந்த மலையில் வாஸம் செய்துவந்த பூதங்களும், இனிமேல் இந்த மலையில் வாஸம் செய்யக்கூடாது என்று பயந்து கோரமான சப்தங்களை வெளியிட்டன. அந்த சப்தங்களால் அண்ட கடாஹமும் முழு வதும் பூர்த்தியாகிவிட்டது. அந்த மலைகளில் வாஸம்செய்து வந்த ஸர்ப்பங்களும் விஷத்தைக் கக்கிக்கொண்டு அக்னி ஜ்வாலையைப்போல் கோபத்தினால் ஜ்வலித்துக்கொண்டு வந்தன. அந்த மலையில் விஷத்தை சமனம்

செய்யக்கூடிய ஔஷதிகள் அநேகம் இருந்தாலும் அந்த விஷங்களை அந்த ஔஷதிகளாலும் சமனம் செய்ய முடியவில்லை.

அந்த மலையில் வெகுகாலமாக வாஸம் செய்துவந்த வித்யாதரர்கள் என்ற தேவர்கள் 'இனிமேல் இந்த மலையில் நாம் வாஸம் செய்யக்கூடாது, மலை இரண்டாகப் பிளந்து விட்டது' என்று பரபரப்புடன் தங்கள் தங்கள் ஸாமக்ரியைகளை அந்த மலையிலேயே இழந்துவிட்டு தன் தன் ஸ்த்ரீகளோடுகூட ஆகாச மார்க்கத்தை அடைந்தார்கள். ஆகாச மார்க்கத்தில் நின்றுகொண்டு அந்த மஹேந்த்ர பர்வதத்தில் வஸிக்கிற ஸித்த புருஷர்களுடைய வார்த்தைகளையும் காதுகொடுத்துக் கேட்டார்கள். அந்த மஹேந்த்ர பர்வதத்தில் மற்றொரு பர்வதம்போல் காணப்படும் இந்த ஆஞ்ஜநேய ஸ்வாமியானவர் "ராம கார்யத்திற்காக ஸமுத்ரத்தைத் தாண்டப்போகிறார், இவர் ஸங்கல்பம் செய்திருக்கப்பட்ட கர்மாவை வேறு எவராலும் செய்யமுடியாது. ஸமுத்ரத்தினுடைய பராக்ரமத்தை அடைய இச்சிக்கிறார்" என்று சொல்லிக்கொண்டிருக்கும் ஸித்த புருஷர்களுடைய வார்த்தைகளை ஆகாச மார்க்கத்தில் நின்றுகொண்டு வரும் வித்யாதரர்கள் கேட்டு ஆஞ்ஜநேய ஸ்வாமியை ஒரு மஹா புருஷனாகவே நிர்மானம் செய்தார்கள். ஆஞ்ஜநேய ஸ்வாமியும், கால விளம்பம் கூடாது என்று நினைத்து சத்ருக்களை பராபவப் படுத்தும்படியான ஸாமர்த்யத்தையும் ஆகாசத்தில் ஸஞ்சரிக்கும்படியான வேகத்வத்தையும் ஆச்ரயித்து தன்னுடைய சிரஸ், கைகள், கழுத்து இவைகளையும் குறுக்கிக்கொண்டு ஸுஷும்ணை நாடியினுடைய உள்பாகத்தில் ப்ராண வாயுவையும் அடக்கிக்கொண்டு, அதாவது கும்பகம் செய்து கொண்டு, ஆகாசமார்க்கத்தில் புறப்படும் ஸமயத்தில் ஜாம்பவான் முதலிய வாநர ச்ரேஷ்டர்களைப் பார்த்துச் சொல்கிறார்.

वानरान्वानरश्रेष्ठः इदं वचनमब्रवीत् ।
यदा राघवनिर्मुक्तः शरः श्वसनविक्रमः ॥
गच्छेत्तद्वद्गमिष्यामि लङ्कां रावणपालिताम् ।
न हि द्रक्ष्यामि यदि तां लङ्कायां जनकात्मजाम् ॥
अनेनैवहि वेगेन गमिष्यामि सुरालयम् ।
यदिवा त्रिदिवे सीतां न द्रक्ष्याम्यकृतश्रमः ॥
बद्धाराक्षसराजानं आनयिष्यामि रावणम् ।
सर्वथा कृतकार्योहं एष्यामि सह सीतया ॥
आनयिष्यामि वा लङ्कां समुत्पाट्य स रावणाम् ।
एवमुक्त्वा तु हनुमान् वानरान्वानरोत्तमः ॥
उत्पपाताथवेगेन वेगवानविचारयन् ।
सुपर्णमिवचात्मानं मेने स कपिकुञ्जरः ॥

வாநரா நரஶ்ரேஷ்ட: இதம் வசநமப்ரவீத் ।
யதா ராகவநிர்முக்த: சர: ச்வஸநவிக்ரம: ॥
கச்சேத்தத்வத்கமிஷ்யாமி லங்காம் ராவணபாலிதாம் ॥
ந ஹி த்ரக்ஷ்யாமி யதி தாம் லங்காயாம் ஜநகாத்மஜாம் ।
ஏநமேநவஹி வேகேந கமிஷ்யாமி ஸுராலயம் ।
யதிவா த்ரிதிவே ஸீதாம் ந த்ரக்ஷ்யாம்யகृதஶ்ரம: ।
பத்தராக்ஷஸராஜாநம் ஆநயிஷ்யாமி ராவணம் ।
ஸர்வதா கृதகார்யோஹம் வஸிஷ்யாமி ஸஹ ஸீதயா ॥
ஆநயிஷ்யாமி வா லங்காம் ஸமுத்பாட்ய ஸ ராவணாம் ।
ஏவமுக்த்வா து ஹநுமாந் வாநரான்வாநரோத்தம: ॥
உத்பபாதாதவேகேந வேகவாநவிசாரயந் ।
ஸுபர்ணமிவசாத்மாநம் மேநே ஸ கபிகுஞ்சர: ॥

வாநராந்வாநரச்ரேஷ்ட: இதம் வசநமப்ரவீத் ।
யதா ராகவநிர்முக்த: சர: ச்வஸநவிக்ரம: ॥
கச்சேத்தத்வத்கமிஷ்யாமி லங்காம் ராவணபாலிதாம் ॥
ந ஹி த்ரக்ஷ்யாமி யதி தாம் லங்காயாம் ஜநகாத்மஜாம் ।

அநேநைவஹி வேகேந கமிஷ்யாமி ஸுராலயம் ।
யதிவா த்ரிதிவே ஸீதாம் ந த்ரக்ஷ்யாம்யக்ருதச்ரமः ॥
பத்வாராக்ஷஸராஜாநம் ஆநயிஷ்யாமி ராவணம் ।
ஸர்வதா க்ருதகார்யோஹம் எஷ்யாமி ஸஹ ஸீதயா ॥
ஆநயிஷ்யாமி வா லங்காம் ஸமுத்பாட்ய ஸராவணாம் ।
ஏவமுக்த்வா து ஹநுமாந் வாநராந்வாநரோத்தமः ॥
உத்பபாதாதவேகேந வேகவாநவிசாரயந் ।
ஸுபர்ண மிவசாத்மாநம் மேநே ஸ கபிகுஞ்ஜரः ॥

தாத்பர்யம்

"ஹே வாநர ச்ரேஷ்டர்களே! ராமபாணம் எவ்வளவு வேகமாகப் போகுமோ அவ்வளவு வேகமாக நான் லங்கா நகரத்திற்குப் போகப்போகின்றேன். லங்கா நகரத்தில் ஸீதையைக் காணுமற் போனால் அதே வேகத்தோடு இந்த்ர லோகம் போவேன். அங்கும் ஸீதையைக் காணுமற்போனால் கொஞ்சமேனும் என்னுடைய ச்ரமத்தைப் பாராட்டாமல், ராவணனை ராமருடைய ஸபீபத்திற்குக் கொண்டுவருவதில் அல்லது லங்கா நகரத்தையே ராவணனுள்ளட்ட பூமியிலிருந்து பிடுங்கித் துக்கிக்கொண்டு வருவதோ, எவ்விதத்திலும் கார்யத்தை ஸபலமாகச் செய்துகொண்டுதான் திரும்பி வருவேன். நீங்கள் கொஞ்சமேனும் கவலையில்லாமல் இங்கு இருந்துகொண்டு வாருங்கள்" என்று சொல்லிவிட்டு வெகு வேகமாக ஆகாச மார்க்கத்தில் புறப்பட்டார்.

தன்னுடைய ஸ்வரூபத்தையும் கருட பகவானுக்கு ஸமானமாக பாவித்துக்கொண்டு தக்ஷிண திக்கை நோக்கிச் செல்லும்பொழுது அந்த மஹாநுபாவனுடைய ஊரு வேகத்தினால் அந்தப் பர்வதத்திலுள்ள அநேக வ்ருக்ஷங்கள் வேரோடு தானும் கிளம்பி கொஞ்சதூரம் வேகத்தினால் ஆகாச மார்க்கத்தில் சென்று ஸமுத்ரத்தில் விழுந்தன. வ்ருக்ஷங்களுடைய புஷ்பங்கள் ஆகாசமார்க்கத்தில் பறந்து கொண்டிருக்கும் பொழுது நக்ஷத்ரங்களால் சூழப்பட்ட ஆகாசம் போலவே, அந்த ஸந்தர்ப்பத்தில் ஸமுத்ரத்தின்

மேல் பாகத்திலுள்ள ஆகாசமானது காணப்பட்டது. ஆஞ்ஜநேய ஸ்வாமியினுடைய சரீரத்தின் சாயையோ ஸமுத்ரத்தில் நூறு மைல் விஸ்தாரமுள்ளதாயும் முந்நூறு மைல் நீளமுள்ளதாயும் ஜலத்தில் காணப்பட்டது. போகும் பொழுது சில ஸந்தர்ப்பங்களில், கருடபகவான் போல் மிகவும் ஊர்த்வபாகத்தில் போனகாரணத்தால், மறைந்தவ ராயும், கீழ்பாகத்தில் வரும்பொழுது ப்ரகாசமாயும் காணப் பட்டார். தேவகார்யத்தைக் குறித்து ராம அவதாரமே ஏற் பட்டதால் அந்த ராமகார்யமாக ஆஞ்ஜநேயஸ்வாமியினுடைய பராக்ரமம் ஏற்பட்டிருப்பதைப்பார்த்து தேவர்களும் பரம ஸந்தோஷத்துடன் புஷ்பவர்ஷங்களை வர்ஷித்து ஆஞ்ஜ நேயஸ்வாமியை ச்லாகித்தார்கள்.

இவ்விதம் கதாபாகம் நிற்க, ஆஞ்ஜநேயஸ்வாமியான வர் ஆசார்ய புருஷனைதால் ராமனால் ஆக்ஞாபிக்கப்பட்டு ஸீதையைப் போலுள்ள உத்தம ஜீவனை ஸம்ஸாரஸாகரத்தி னின்றும் கரையேற்ற ப்ரவ்ருத்தித்திருக்கிறார் என்ற வ்யங்க்ய பாகத்தை கவனிக்கும்பொழுது ஒரு ஜீவனுக்கு சரீரத்துடன் ப்ரம்மலோகாதிகள் போவதும் ஸுலபமாக ஆகலாம்; தனக்கு ஆத்மதத்வத்தை உபதேசம் செய்கிற ஆசார்யபுருஷனுடைய லாபம் ஏற்படுவது மிகவும் துர்லபமாகும்; ஜீவன் செய்த பாபங்களை, தன்னைத் தேடிவரும் ஆசார்யனைத் தன்னருகில் வரவிடாமலே தடுத்துத் திரும்பிப் போகும்படி செய்துவிடும். அந்த விக்னங்களையும் ஜயித்துக் கொண்டு அந்த ஆசார்ய புருஷன் தன்னருகில் வந்து தனக்கு உபதேசம் செய்யும்படி யான பாக்யத்தை அடைந்த ஜீவன் மிகவும் உத்தம ஜீவ னென்றே சொல்லவேண்டும். ப்ரக்ருதத்திலோ, ஸீதையைத் தேடிப் போகும் ஆஞ்ஜநேயருக்கு மார்க்கத்தில் மூன்று விதமான விக்னம் ஏற்பட்டது என்பது ப்ரஸித்தமானது.

अकुर्वन्विहितं कर्म निन्दितञ्च समाचरन् ।
प्रसज्जंश्च इन्द्रियार्थेषु नरः पतनमृच्छति ॥

ஸகுல்வஸ்ரிஹிதம் கர்ஸ நிந்திதஸ்ய ஸமாசரந் ।
ப்ராஸஜ்ஜம்ஸ்ச இந்த்ரியார்தேஷு நர: பதநம்ருச்சதி ॥

என்கிற மன்வாதி ஸ்மிருதி வசனத்தை அனுஸரித்து, (1) அவச்யம் செய்தே தீரவேண்டிய கர்மாக்களைச் செய்யாமல் இருந்ததால் ஏற்படும் பாபங்கள் ஒருவகையாகும், (2) செய்யக் கூடாததான நிஷித்தகர்மாக்களைச் செய்வதால் ஏற்படும் பாபங்கள் மற்றொரு வகையாகும், (3) நிஷித்தமான விஷயங்களில் இந்த்ரிய நிக்ரஹம் செய்யமுடியாமல் இந்த்ரியங்களைப் பறிகொடுப்பதால் ஏற்படும் பாபங்கள் மூன்றாவது வகையாகும். அதில், முன் ஜன்மங்களில் செய்த முதல்வகைப் பாபமானது இந்த ஜன்மாவில் வேதசாஸ்த்ரங்களில் நம்பிக்கை இல்லாதிருத்தல் என்ற ப்ரமாண அஸம்பாவனை என்ற தோஷத்தை உண்டுபண்ணும். அப்படியே, முன் ஜன்மங்களில் செய்யப்பட்ட இரண்டாவது வகைப் பாபமானது தெய்வத்தினிடத்தில் நம்பிக்கையில்லாததான ப்ரமேய அஸம்பாவனை என்ற தோஷத்தை இந்த ஜன்மாவில் ஜீவனுக்கு உண்டுபண்ணும். மூன்றாவது வகைப் பாபமானது, தேஹத்திற்கு வேறாக ஆத்ம ஸ்வரூபம் பாஸிக்கும்பொழுது தேஹமே ஆத்மா என்ற விபரீத பாவனை என்ற தோஷத்தை இந்த ஜன்மாவில் உண்டுபண்ணும்.

மைனாக பர்வதத்தினுடைய எதிர்ப்பால் ப்ரமாண அஸம்பாவனையையும், ஸுரஸையினுடைய எதிர்ப்பால் ப்ரமேய அஸம்பாவனையையும், ஸிம்ஹிகையினுடைய ப்ரதிபந்தகத்தால் விபரீதபாவனையையும் ப்ரபந்தகதமான வ்யங்க்யத்தால் ஸூசிப்பிக்கப்படுகிறது. ப்ரக்ருதத்திலுள்ள ஆஞ்ஜநேயஸ்வாமியோ, தன்னுடைய ப்ரவ்ருத்திக்கு ராம கைங்கர்யமே மஹா பலமாகக் கருதினவர்; தனத்தையோ, கீர்த்தியையோ எதிர் பார்க்காமல் பகவத் கைங்கர்யமே மஹாபலம் என்று கருதின

வர். பகவதாராதனரூபமாக ஒரு கர்மாவைச்செய்ய ஆரம்பித்தால் அந்த மனிதனுக்கு எவ்விதமான விக்னமும் ஏற்படாது. ப்ராரப்த வசத்தால் ஏற்பட்டாலும் அந்த விக்னங்களை நிவ்ருத்தி செய்து கொள்ளக்கூடிய ஸாமர்த்ய விசேஷமும் அந்த மனிதனுக்கு ஏற்படும் என்ற விஷயமும் ஆஞ்ஜநேய ஸ்வாமியினுடைய ப்ரவ்ருத்தியால் ஸூசிப்பிக்கப்படுகிறது.

दूरेणह्यवरं कर्म बुद्धियोगात् धनञ्जय (ஔரெணஹ்யவரம் கர்ம பு்த்தி யோகாத் தநஞ்ஜய) (தூரேணஹ்யவரம் கர்ம புத்தி யோகாத் தநஞ்ஜய) என்ற பகவத் கீதா வாக்யப்படி பலத்தைக் கருதிச்செய்யும் காம்ய கர்மாக்களில்தான் விக்னங்கள் ஏற்படக்கூடுமன்னியில் நிஷ்காம கர்மாவில் देवा अपि नाभूत्यै ईशते (தெவா அபி நாஹூதியை ஈஶதே) (தேவா அபி நாபூத்யை ஈசதே) என்கிற ச்ருதி ப்ரமாணத்தினால் தேவர்களால்கூட ஒரு விக்னமும் செய்ய முடியாது. நிஷ்காமமாக ப்ரவ்ருத்தித்தவனுடைய விஷயத்தில் தேவர்களும் அனுகூலம்தான் செய்வார்கள்.

அதிலும் தாரக ப்ரம்மமாகிய ஸ்ரீராமனுலேயே 'மேலான புருஷன்' என்று தேர்ந்தெடுக்கப்பட்டு ஆஞ்ஜநேயஸ்வாமியானவர் அனுப்பப்பட்டிருக்கிறார். பகவானே முத்ராதானம் செய்து ஆசார்ய புருஷனுடைய ஸ்தானத்தில் அபிஷேகமும் செய்து ஒரு ஜீவனை துக்கஸாகரத்தினின்றும் தரணம் செய்து வைக்க அனுப்பியிருக்கும்பொழுது, அந்த மஹாநுபாவனுக்கு ஸமுத்ரத்தைத் தரணம் செய்யும் காலத்தில் ஏற்படும் விக்னங்கள் விக்னங்களாக ஆகுமா? தேவர்களுடைய கார்யத்திற்காகவோ ராமாவதாரமானது ஏற்பட்டது. அந்த ராம கார்யத்தைச்செய்ய ஆஞ்ஜநேய ஸ்வாமியோ தரணம் செய்ய ஆரம்பித்திருக்கிறார். அவருக்கு தேவர்களே விக்னம் செய்தால் அவர்கள் கார்யம் எப்படி நிறைவேறும்? ஆகையால் அவர்கள் ஆஞ்ஜநேய ஸ்வாமியினுடைய கமனத்திற்கு அனுகூலமாகத்தான் இருந்தார்கள். "ராக்ஷஸர்களால் நிரம்பிய லங்கா நகரத்தில் இவரால் ஸீதையைக் கண்டுபிடிக்க முடி

யுமா? அப்படியே ஸீதையைக் கண்டு பிடித்தாலும் ராக்ஷஸர் களுடைய வசமாக இவர் ஆகாமல் மீண்டும் திரும்பிவர சக்தி யுள்ளவர்தானு?" என்ற விஷயத்தில் இவருடைய பராக்ர மத்தைப் பரீக்ஷிக்க மேற்சொன்ன மூன்றுவிதமான விக்னங் களால் தேவர்களே ஆஞ்ஜநேய ஸ்வாமியைச் சோதித் தார்கள். அதுதான் மேற்சொன்ன கதா பாகத்தினுடைய தாத்பர்யமாகும்.

அதில் மைநாக பர்வதத்தோடு ஆஞ்ஜநேய ஸ்வாமிக்கு ஏற்பட்ட ஒரு விக்னத்தை முதல் விக்னமாகப் பாவித்துக் கொள்ளவேண்டும். அதுதான் வ்யங்க்ய மர்யாதையை அனு ஸரித்து ப்ரமாண அஸம்பாவனை என்ற தோஷமாகும். மைநாக பர்வதமானது ஸமுத்ரத்தால் ஏவப்பட்டு ஆஞ்ஜநேய ஸ்வா மிக்கு ஆதித்யம் செய்வதற்காக ஆவிர்ப்பவித்ததாக கதா பாகம் இருக்க அதை ஒரு விக்னமாக எப்படி பாவிக்கமுடி யும் என்று நாம் நினைத்தாலும் ஆஞ்ஜநேயஸ்வாமியானவர் தன்னுடைய கார்யத்திற்கு அதை ஒரு பரம விக்னமாகவே தான் பாவித்தார் என்பதை மஹர்ஷியானவர் ஸ்பஷ்ட மாகவே சொல்கிறார். முன் ஜன்மாக்களில் செய்யப்பட்ட ஜீவனுடைய பாபகர்மங்கள் இந்த ஜன்மத்தில் சுபரூபமாயும் அசுபரூபமாயும் பரிணமித்து அந்த ஜீவன் எதிர்பார்க்கும் ச்ரேயஸ்ஸை விக்னம்செய்து தடுத்துவிடலாமென்பதுதான் श्रेयांसि बहु विघ्नानि (ஸ்ரேயாம்ஸி பஹு-ர் விக்நானி) என்ற சாஸ்த்ரத்தின் தாத்பர்யமாகும். ப்ரக்ருதத்தில் ஸமுத்ரமோ இக்ஷ்வாகு வம்சத்தில் பிறந்து அரசாண்டுவந்த ஸகர மஹாராஜனுடைய புத்ரர்களால் ஏற்படுத்தப்பட்டது. ராமனும் அந்த ஸகர மஹாராஜனுடைய வம்சத்தில் அவதரித்தவராக ஆகி விட்டார். தன் வம்சத்தில் அவதரித்த ராமனுடைய கார் யத்தை முன்னிட்டுச்செல்லும் ஆஞ்ஜநேயஸ்வாமிக்கு, தான் ஆதித்யம் செய்யவேண்டுமென்ற எண்ணமானது ஸமுத்ர ராஜனுக்கு ஏற்பட்டது அவச்யமானதே. அப்படியே முன்

காலத்தில் மலைகளெல்லாம் இறக்கையுள்ளவைகளாக இருந்துகொண்டு ஆங்காங்கு ஆகாசத்தில் பறந்து கொண்டிருந்தன. எங்கேயாவது ஒரு ஸ்தலத்தில் விச்ராந்திக்காக அந்த மலைகள் உட்காரும்பக்ஷத்தில் அங்குள்ள அநேக க்ராமங்கள் அழிந்து போய்விடும். அவ்விதம் மலைகள்மூலமாக அநேக க்ராமங்கள் அழிந்தவையுண்டு. தேவேந்த்ரன் கோபத்தையடைந்து தனது வஜ்ராயுதத்தால் மலைகளுடைய இறக்கைகளை வெட்டி ஆகாசமார்க்கத்தில் பறக்கசக்தியில்லாமல்செய்ய ஆரம்பித்தான். அவ்விதமே அநேக மலைகளையும் செய்துவிட்டான். இந்த மைனாக பர்வதத்தினுடைய ஸமீபத்தில் இந்த்ரன் வரும்பொழுதோ மைனாக பர்வதமானது மிகவும் பயந்துகொண்டு ஓடுவதற்கு ஆரம்பித்தது. அந்த ஸந்தர்ப்பத்தில் வாயு பகவானும் வெகுவேகமாக மைனாக பர்வதத்தை ஸமுத்ரத்தில் கொண்டுவந்து வீழ்த்தி ஸமுத்ராத்திற்குள் பர்வதத்தை மூழ்கடித்துவிட்டார். ஸமுத்ரத்திற்குள் முழுகின மைனாக பர்வதத்தை இந்த்ரன் கண்டுபிடிக்க முடியாமல் திரும்பிவிட்டான். அதுமுதல் மைனாக பர்வதமானது, இந்த்ரனிடமுள்ள பயத்தால் ஸமுத்ரத்திற்குள்ளேயே வாஸம்செய்துகொண்டு வருகிறதென்பது புராணாந்தரங்களில் சொல்லப்பட்ட கதையாகும்.

ப்ரக்ருதத்தில் ராம கார்யமாக லங்காநகரம் செல்லும் ஆஞ்ஜநேயஸ்வாமியோ வாயுபகவானுடைய புத்ரனானதால், இந்த்ரனுடைய பயத்திலிருந்தும் தன்னை விடுதலை செய்துவைத்த வாயுபகவானுடைய புத்ரனை ஆஞ்ஜநேயஸ்வாமிக்கு இந்தஸமயத்தில் நாம் ஏதாவது உதவியைச்செய்யவேண்டும் என்ற எண்ணமானது மைனாக பர்வதத்திற்கும் ஏற்பட்டது. இவ்விதம் ஸமுத்ரராஜன், மைனாகம் இருவர்களுக்கும் ஏற்பட்ட அபிப்ராயம் ஒன்றாக இருந்தபடியினால் ஸமுத்ர ராஜனானவன் மைனாக பர்வதத்தைப்பார்த்து "ஹே பர்வதராஜனே! ஆஞ்ஜநேயஸ்வாமியானவர் ராம கார்யார்த்தமாக ஆகாசமார்க்கத்தில் போகிறார். இந்த கார்ய

மானது மற்ற எவர்களாலும் செய்யமுடியாததான கார்ய மாகும். இக்ஷ்வாகு வம்சத்தில் உதித்த நான், அந்த ஆஞ்ஜநேய ஸ்வாமிக்கு ஸகாயம் செய்யவேண்டியது அவச்ய மாகும். இக்ஷ்வாகு வம்சத்தில் பிறந்தவர்களெல்லாம் எனக்கு பூஜ்யர்களாக ஆவார்கள். அவச்யம் செய்து தீரவேண்டிய கர்மங்களை செய்யாமலிருந்தால் ஸாதுக்களுக்கு அத்ருப்தி ஏற்பட்டுவிடும். சீக்ரம் நீ ஜலத்திற்குமேல் ஆவிர்ப்பவித்து ஆஞ்ஜநேயஸ்வாமிக்கு ஸகாயம் செய்யவேண்டும். உன் னுடைய சிகரத்தில் சற்றுநேரம் ஆஞ்ஜநேய ஸ்வாமியான வர் விச்ராந்தி செய்துகொண்டு பிறகு லங்காநகரம் செல்லட் டும். ஸ்ரீராமனுடைய आनृशं स्यम् (ஆநருசம்யம்) (ஆந்ருசம் ஸ்யம்) என்ற குணத்தையும், அதாவது உபகாரம் செய்வதை மறக்காமல், செய்தவனுக்கு மேலான ப்ரத்யுபகாரம் செய்யவேண்டியது கடமை யாகும் என்ற தர்மத்தையும் இவ்விதமான மஹிமையுள்ள ராமனுடைய ஸமீபத்திலேயே வஸித்துவந்த ஸீதாதேவிக்கும் ராமனைவிட்டுப் பிரிந்து லங்காநகரத்தில் வாஸம் செய்யும்படி யாக நேர்ந்த துக்கத்தையும் ஆஞ்ஜநேயஸ்வாமியினுடைய பரிச்ரமத்தையும் கொஞ்சம் கவனித்துப்பார்த்து நீ உட னேயே, மேல் பாகத்தில் கிளம்பி ஆஞ்ஜநேயஸ்வாமிக்குச் செய்யவேண்டிய உதவிகளை செய்துவரவேண்டும்," என்று ஸமுத்ரராஜன் மைனாக பர்வதத்தைப் பார்த்துச் சொல்ல மைனாக பர்வதமும் ஸமுத்ர ஜலத்தைப் பேதித்துக்கொண்டு மேல்பாகத்தில் வந்து தன்னுடைய சிகரங்களெல்லாம் நன் ராய் ப்ரகாசிக்கும்படி நின்று வந்தது.

பர்வதமானது தங்கமயமான மலையானபடியால் சிக ரங்களும் ஒரே தங்கமயமாக ஜ்வலித்துக்கொண்டு ஆகாச முழுவதும் ஒரே தங்கமயமாகவே விளங்கி வந்தது. ஸூர்ய பகவான் ஸமுத்ரஜலத்தை பேதித்துக்கொண்டு உதயமாவது போல் இந்த மைனாக பர்வதமும் ஸமுத்ரஜலத்தைப் பேதித் துக்கொண்டு உதித்ததால் ஸூர்யோதயமோ என்று கூறும்

படியாகத் தோன்றியது. ப்ராதக்காலத்தில் ஸூர்ய மண்டலமும் தங்கமயமாகத்தான் இருக்கும். மைனாக பர்வதமும் அதைப்போலவே தங்கமயமாக இருந்து வருகிறது.

तमुत्थितं असङ्गेन हनुमानग्रतस्थितम् ।
मध्ये लवणतोयस्य विघ्नोयमिति निश्चितः ॥

தமுத்திதம் அஸங்கேந ஹநுமாநக்ரதஸ்திதம் ।
மத்யே லவணதோயஸ்ய விக்நோயமிதி நிச்சிதः ॥

அப்படி பாஸிக்கிற தங்கமயமான மலையை ஆஞ்ஜநேய ஸ்வாமியானவர் தன்னுடைய ச்ரமத்தை பரிஹாரம்செய்து வைப்பதற்காக அனேக கனிவர்க்கங்களோடு ஆதித்யம் செய்ய வேண்டிய நிமித்தப் ஸமுத்ரஜலத்தைப் பேதித்துக்கொண்டு எதிரில் நின்று கொண்டிருந்தாலும். தன்னுடைய கார்யத்திற்கு அதை ஒரு பெரிய விக்னமாகவே பாவித்தார். என்பது மேற்சொன்ன ச்லோகத்தினுல் ஸ்பஷ்டமாகத் தெரியவருகிறது. ஒரு ஜீவனை உத்தாரணம் செய்வதற்காக பகவதாக்ஞையினுல் ஆசார்ய புருஷர்கள் ச்ரமத்தை எடுத்துக் கொண்டாலும் அந்த ஜீவனுடைய பூர்வஜன்மத்தில்செய்த கர்மாக்கள் விக்னரூபமாக வந்து ஆசார்யனுடைய ப்ரவ்ருத்திக்குத் தடையைச் செய்யும் என்று நாம் முன்சொன்ன விஷயத்தில் ஸந்தேஹத்திற்கு இடமில்லாமல் மைனாக பர்வதத்தை ஆஞ்ஜநேயஸ்வாமியானவர் விக்னமாகத் தீர்மானம் செய்தார் என்ற ச்லோகத்தை ப்ரமாண வாக்யமாக விவேகிகள் அறியவேண்டும்.

அத்துடன், முதல் விக்னமானது பூர்வஜன்மத்தில் செய்ய வேண்டிய விஹிதமான கார்யத்தைச் செய்யாமல் இருந்ததால் ஏற்பட்ட பாபத்தால் இந்த ஜன்மத்தில் வேதசாஸ்த்ரங்களில் நம்பிக்கையில்லாமலிருத்தல் என்ற ப்ரமாண அலம்

பாவனை என்ற தோஷமே முதல் விக்னமாக ஆகுமென்று சொல்லியதற்கு कर्तव्यमकृतं कार्यं सतां मन्युमुदीरयेत् (கர்த்தவ்யமகிருதம் கார்யம் ஸதாம் மன்யுமுதீரயேத்) (கர்த்தவ்யமக்ருதம் கார்யம் ஸதாம் மன்யுமுதீரயெத்) என்ற வாக்யத்தையே ப்ரமாணமாக விவேகிகள் அறியலாம். அவச்யம் செய்ய வேண்டியதை செய்யாமலிருந்தால் அது ஸாதுக்களுக்குக் கோபத்தை யுண்டு பண்ணும். 'ஸத்' என்ற சப்தத்தால் ள்வது: ப்ரமாண பூதமான வேதங்கள் என்ற அர்த்தம் த்வனிக் கிறபடியால் விஹிதமான கார்யத்தைச் செய்ததால் வேத சாஸ்திரங்களுடைய சாபத்திற்குள்ளாவான் என்ற அர்த்தத்தைப்ரகாசிக்கின்ற வாக்யமே ப்ரமாண வாக்ய மென்றுவிவேகிகள் அறிந்து கொள்ளலாம்.

ப்ராக்ருதமான மனிதர்களும், ப்ரக்ருதத்தில் மைனகபர் வதமானது ஸமுத்ரராஜனால் ஏவப்பட்டு ஆதித்யம் செய் வதற்கு ஸமுத்ரஜலத்தைப் பிளந்து கொண்டு ஆதித்ய பகவானைப்போல் தங்கமயமான சிகரங்களோடும் ஹனுமா னுடைய மார்க்கத்தில், எதிரில் நின்று வந்தது. ஹனுமா னும் சற்றுநேரம் அந்த ஆதித்யத்திற் கிணங்கி அந்த சிகரங் களில் உட்கார்ந்துவிட்டு அங்குள்ள கனிவர்க்கங்களையும் புஜித்து விட்டு பரமஸந்தோஷமாக போகலாமே! இது ஹனுமாருக்கு நன்மையைச் செய்யகூடிய தல்லவா இதை விக்ன மென்று எப்படி சொல்லக்கூடுமென்று நினைக்காலம். ப்ராக்ருத மனிதர்களுடைய ப்ராக்ருத புத்தியைத்தான் காட்டுகிறது. ஒரு மனிதன் ஒரு நகரத்தில் ராஜஸேவாநிரதனாக இருந்து வருகிறான். ஆனால் அந்த மனிதனுக்கு ராஜஸேவை செய்வதில் மனதிற்கு த்ருப்தியே இல்லை ஜன்ம ஸாபல்யத் திற்குக் காரணமான மஹான்களுடைய ஸங்கமும் அவர்களு டையமுகாரவிந்தத்திலிருந்து வேதசாஸ்த்ரங்களின் தத்வார்த் தங்களை ச்ரவணம் செய்யும்படியான பாக்யமும் அதிகமாக இருந்துவருகிறது. அந்த நகரத்திலுள்ள இந்த ஸாத்வீக முறையில், தான் ஈடு படுவதற்குக் காரணம் ஏற்பட்டிருப்

பதால் அந்த நகரத்திலேயே வாஸம் செய்து கொண்டு ராஜ ஸேவையையும் வ்யாஜமாக வைத்துக் கொண்டு மிகவும் அல்பமான வேதனத்தைக் கொண்டு தன் குடும்பத்தையும் பரிபாலனம் செய்துவருகிறான். அதே மனிதனுக்கு பூர்வகர்மாவின் நிமித்தமாக வேறு நகரத்தில் அதிகமான வேதனத்துடன் ஒரு பெரிய அதிகாரபதவியை ஏற்றுக்கொள்ளும்படியான ஸந்தர்ப்பம் நேர்ந்தது. ஆனால் அந்த வேறு நகரமானது ஸத்ஸங்கத்திற்கோ வேதசாஸ்த்ரங்களுடைய தத்வங்களை அறிவதற்கோ கொஞ்சமேனும் அவகாசமில்லாத பாஷண்ட நகரமாகும். அதை பரம ப்ராக்ருதர்களான அவனுடைய பந்துக்கள் புண்யபலமாகத்தான் கருதுவார்கள். அதிகமான வேதனம் வருவதுதானே அவர்களுடைய லக்ஷ்யம்? முமுக்ஷுக்கோ வேதனம் லக்ஷ்யமல்ல. ஸன்மார்க்கத்தில் தான் ஈடுபடுவதே லக்ஷ்யமாகும். வேறு நகரத்திலோ ஸன்மார்க்கத்திற்கு அவகாசம் ஏற்படுகிறதில்லை என்பது ப்ரஸித்தமாகிறது. வேறு நகரத்திற்குப் போனால் தனக்கு அதிகமாகக் கிடைக்கிற த்ரவ்யத்தை பூர்வ ஜன்மங்களில் செய்த தன்னுடைய பாபகர்மாக்களுடைய பலமாகத்தான் அவன் நினைப்பான். 'நாம் ஏதோ புண்யகர்மாவில் ப்ரவ்ருத்தித்துக் கொண்டிருந்தோம்; நம்முடைய ஜன்மத்தை ஸபலமாகச் செய்து கொள்ளுவதற்கு ஸத்ஸங்கமும் நமக்குக் கிடைத்து, பகவத் கதா ச்ரவணமும் ஏற்பட்டு ப்ரஸன்னமான மனதோடு இருந்த நமக்கு இவ்விதமான ஒரு விக்னம் வந்து சேர்ந்ததே. இது நம்முடைய பாபகர்மாதான்' என்று அந்த முமுக்ஷுவான புருஷன் தாபத்தையடைவான்.

இந்த லௌகீகக் கதையை, ஆஞ்ஜநேயஸ்வாமி மைநாக பர்வதத்தை விக்னமாக நினைத்தார் என்பதற்கு உதாரணமாக கவனித்தால், மைநாக பர்வதமானது தங்கமயமானமலை தன்னுடைய விச்ராந்திக்கு ஸ்தானங்கள் பலவாறாக இருந்து வருகின்றன; மதுரரஸபூரிதமான அநேக கனிவர்க்கங்களும் இருக்கின்றன; இந்த மலையை ஆஞ்ஜநேய ஸ்வாமியானவர்

தன்னுடைய மார்க்கத்திற்கு விக்னமாக நினைத்தார் என்று எப்படிச் சொல்லலாம் என்று ப்ராக்ருதர்களும் கேட்க அவகாசமே இருக்காது.

ஆஞ்ஜநேய ஸ்வாமியோ தன்னுடைய ஸித்தாந்த ப்ரகாரம், தான் ப்ரவ்ருத்தித்த கார்யத்திற்கு இதை ஒரு பெரிய விக்னமென்றே நினைத்தார். அநேக மஹர்ஷிகளுக்குள் சிலர் மோக்ஷம் என்ற பரமபுருஷார்த்தத்தை அடைய தபஸ்ஸில் அமர்ந்திருக்கிறார்கள்; சிலர் யோகாப்யாஸம் செய்கிறார்கள்; சிலர் ஸகுணப்ரம்மோபாஸனம் செய்கிறார்கள்; வேதாந்தச்ரவணாதிகளையும் சிலர் செய்கிறார்கள். அவர்களுக்கு நடுவில் அணிமாதி அஷ்டைச்வர்யஸித்தி பலமாக ஏற்படுகிறது. மோக்ஷம் என்ற பரமபுருஷார்த்தத்தைப் பலமாகக்கருதின அந்த மஹர்ஷிகள், இந்த அணிமாதிஸித்திகளை விக்னமாகத்தான் பாவிப்பார்களன்னியில் தங்களுக்கனுகூலமாக பாவிப்பார்களா? அணிமாதிஸித்தியையே மஹான்கள் தாங்கள் ப்ரவ்ருத்தித்த கார்யத்திற்கு விக்னமாக நினைப்பார்களேயானால் ப்ரக்ருதத்தில் ஆஞ்ஜநேய ஸ்வாமியானவர், தான் ப்ரவ்ருத்தித்த கார்யத்தில் மைலைகடப்பதத்தை விக்னமாக நினைத்தார் என்பது அழகுதான்.

இந்த ஸ்ரீமத் ராமாயணத்திலேயே சென்று ஆரண்யகாண்டத்தில் சரபங்க மஹர்ஷியானவர் தாரக ப்ரம்மமாகிய ராமனை தர்சனம் செய்து, ராகவனுடைய ஸன்னிதியிலேயே தன்னுடைய கர்மசரீரத்தை த்யாகம் செய்து வைகுண்டத்திற்குச் செல்லவேண்டுமென்ற எண்ணம் உள்ளவராக இருக்கும் பொழுது, அதற்கு விரோதமாக ப்ரம்ம பட்டத்தை இவருக்களிக்க தேவேந்த்ரன் ஸ்வயமாகவே ரதத்திலேறிக் கொண்டு இவருடைய ஆச்ரமத்திற்கு வந்து சரபங்கரைப் பார்த்து 'தாங்கள் ப்ரம்மபட்டத்தை அலங்கரிக்கவேண்டும். ஸ்திரமாக தாங்கள் ப்ரம்மலோகத்தில் கல்பம் முடிகிற வரையில் இருந்து கொண்டு எங்களை ரக்ஷிக்கவேண்டும்' என்று ப்ரார்த்தித்ததாகவும், இவ்விதம் சரபங்கமஹர்ஷி

போது இந்த்ரன் பேசிக் கொண்டிருப்பதை ராமரும் அறிந்து, சரபங்க மஹர்ஷியினுடைய ஆச்ரமத்திற்குள் ப்ரவேசிக்காமல், ஆச்ரமத்திற்கு வெளியேலேயே மறைந்து கொண்டிருந்து இந்த்ரன் போன பிறகு மஹர்ஷியினுடைய ஆச்ரமத்திற்குள் ராமன் ப்ரவேசித்ததாக கதை ஸ்பஷ்டமாக இருந்து வருகிறது. ப்ரம்ம பட்டமானது ஸாமான்யபதவியா? ராமருடைய தர்சனத்திற்காக ப்ரம்ம பட்டத்தையே வெறுத்த சரபங்க மஹர்ஷி புத்திமாணுக ஆவாரா? இல்லையா? மோக்ஷம் என்ற புருஷார்த்தத்தை லக்ஷ்யமாகக் கருதின அந்த மஹர்ஷிக்கு தாரகப்ரம்மமாகிய ராமனுடைய லாக்ஷாத்காரத்திற்கு விரோதமாக ப்ரம்மபட்டத்தையும் நினைத்து ब्रह्मलोकनिरोकारः वैराग्यस्यानिमित्तः। ब्रह्मलोकतृणीकारः विवरामृत्युरावर्तिः (ப்ரஹ்மலோகத்ருணீகார: வைராக்யஸ்யாவதிர்மத:) என்ற நீதியாக ப்ரம்மபட்டத்தையும் தன்னுடைய கோரிக்கைக்காக விக்னம் என்றே தீர்மானித்து வெறுத்தார். அதுபோலவே ஆஞ்ஜநேய ஸ்வாமியும் மைநாகபர்வதத்தை விக்னமாக நினைத்து उरसा पातयामास जीमूतमिव मारुतः। (உரஸா பாதயாமாஸ ஜீமூதமிவ மாருத:) என்ற வாக்யப்படி தன்னுடைய மார்பினால் முட்டி அந்த மலையை கீழேதள்ளி விட்டு வெகு வேகமாக ஆகாச மார்க்கத்திலேயே சென்றார். ஹனுமாருடைய வேகத்தினால் தள்ளப்பட்ட மைநாக பர்வதமும் ஆஞ்ஜநேய ஸ்வாமியினுடைய வேகத்தையும் ப்ராக்ரமத்தையும் பார்த்து பரம ஸந்தோஷத்தை அடைந்தது. வெகு வேகமாக ஆகாசமார்க்கத்தில் போகும் ஆஞ்ஜநேயருடைய வேகத்தினால் த்ருப்தி அடைந்த பர்வதமும், தன்னுடைய ஸ்வரூபத்தை எடுத்துக்கொண்டு மனித வடிவாக தன்னுடைய சிகரத்திலேயே நின்றுகொண்டு ஆஞ்ஜநேய ஸ்வாமியைப் பார்த்துச் சொல்கிறது,

दुष्करं कृतवान् कर्म त्वमिदं वानरोत्तम ।
निपत्य मम शृङ्गेषु विश्रमस्व यथासुखम् ॥

राघवस्य कुले जातैरुदधिः परिवर्धितः ।
स त्वां रामहिते युक्तं प्रत्यर्चयति सागरः ॥
कृते च प्रतिकर्तव्यं एष धर्मः सनातनः ।
सोऽयं तत्प्रतिकारार्थी त्वत्तस्सम्मानमर्हति ॥

துஷ்கரம் க்ருதவாந் கர்ம த்வமிதம் வாநரோத்தம ।
நிபத்ய மம ச்ருங்கேஷு விச்ரமஸ்வ யதாஸுகம் ॥
ராகவஸ்ய குலே ஜாதைருததிः பரிவர்தித: ।
ஸ த்வாம் ராமஹிதே யுக்தம் ப்ரத்யர்சயதி ஸாகர: ॥
க்ருதே ச ப்ரதிகர்தவ்யம் ஏஷ தர்ம: ஸநாதந: ।
ஸோயம் தத்ப்ரதிகாரார்த்தீ த்வத்தஸ்ஸம்மாநமர்ஹதி ॥

ஆஞ்ஜநேயஸ்வாமியின் வேகத்தினால் தள்ளப்பட்டதாலும் மைநாகபர்வதமானது ஆஞ்ஜநேயரைப் பார்த்து,

"ஸ்வாமீ தாங்கள் செய்கிற கார்யத்தை யாராலும் செய்யமுடியாது. என்னுடைய சிகரங்களில் கொஞ்சம் விச்ரமித்துக்கொண்டு போகலாம் என்ற எண்ணத்துடன்தான், ஸமுத்ரராஜனால் நான் ஏவப்பட்டு, ஸமுத்ரத்திற்கு மேல் பாகத்தில் தங்களுடைய மார்க்கத்தை தடைசெய்துகொண்டு வ்ருத்தி அடைந்தேன். தாங்கள் அதை ஒரு விக்னமாக நினைத்து விட்டீர்கள். அது என்னுடைய எண்ணத்திலில்லை.

ஸமுத்ர ராஜனுக்கும் தங்களைப் பூஜிக்கவேண்டுமென்ற கடமை உண்டு. ஸகர மஹாராஜனுடைய புத்ரர்களாலல்லவா இந்த ஸமுத்ரமானது வ்ருத்திசெய்யப்பட்டது. ஆகையினால் தன் வம்சத்தில் அவதரித்த ராமருடைய கார்யமாக,

தாங்கள் போகும்பொழுது ஸமுத்ரராஜன் தங்களை உபசரிக்கக் கடமைப்பட்டவன் அல்லவா. ஒருவன் உபகாரம் செய்தால் அதற்கு ப்ரதியுபகாரத்தைச் செய்து தன்னுடைய க்ருதக்ஞதையை ப்ரகாசப்படுத்திக்கொள்வது ப்ராணிகளுடைய கடமை. தாங்களோ எவ்வளவு தூரமானாலும் நடுவில் விச்ரமித்துக் கொள்ளாமலே ஆகாச மார்க்கமாகப் போகச் சக்தியுள்ளவர்கள்தான். ஆகிலும், எங்களுடைய கடமையை செலுத்துவதற்காக தங்களுக்கு நாங்கள் ஆதித்யம் செய்யத் துணிந்தோம். அதிதியைப் பூஜை செய்யாமல் ப்ராக்ருதமான மனிதன்கூட இருக்கமாட்டான். அதிலும் தங்களைப்போன்ற மஹாமேதாவியான அதிதியை, அந்த தர்மத்தை அறிந்த நாங்கள் எவ்விதம் பூஜை செய்யாமல் இருக்க முடியும்?

தங்களுடைய பிதாவான வாயுபகவானே தேவதைகளுக்குள் ப்ரதான தேவதையாக விளங்குகிறார். வாயுபகவானுக்கு ஸமானமான வேகமுள்ளவராயும் தாங்கள் இருந்துவருகிறீர்கள். தங்களைப் பூஜித்தால் வாயுபகவானையே நேரில் பூஜித்த புண்யவிசேஷத்தை அடையலாம். அக்காரணத்தைக் கொண்டுதான், நானும் ஸமுத்ரராஜனும், தங்களைப் பூஜிக்க யத்னம் செய்தோம். தங்களுடைய பிதாவான வாயுபகவானுக்கும் எனக்கும் பூஜ்ய பூஜக பாவஸம்பந்தம் ஏற்பட்டதில் க்ருதயுகத்தில் நடந்த ஒரு காரணத்தையும் சொல்கிறேன். தாங்கள் கவனித்துக் கேட்கவேண்டும். அதாவது, க்ருதயுகத்தில் மலைகளெல்லாம் பறவைகளைப் போல் ஆகாசமார்க்கத்தில் பறந்துகொண்டிருந்தன. கருடபகவானைப்போல் வேகமுள்ளவைகளாகவே காணப்பட்டது. அதனால் தேவர்களுக்கும், மனிதர்களுக்கும், மற்ற ப்ராணிகளுக்கும் இந்த மலைகள் எங்கேயாவது பறந்துகொண்டிருக்கும்பொழுது, ச்ரமத்தினால் பூமியில் உட்கார்ந்தால், அநேக க்ராமங்கள், க்ஷேத்ரங்கள், வ்ருக்ஷங்கள் முதலியன அழிந்துவிடும் என்ற பயம் ஏற்பட்டது. அந்த ஸமயத்தில் தேவேந்த்ர

னனவன் கோபத்தை அடைந்து தன்னுடைய வஜ்ராயுதத்தி னல் மலைகளின் இறக்கைகளை அறுத்துவிட்டான். என் இறக்கைகளையும் அறுக்க, தேவேந்திரன் வஜ்ராயுதத்துடன் வந்தான். அப்பொழுது உங்கள் பிதாவான வாயு பகவா னல், வெகுவேகமாக பின்னல் தள்ளப்பட்டவனைப் கொண்டுநான் இந்த ஸமுத்ரத்தில் வந்து விழுந்துவிட்டேன். அந்தக் காரணத்தினல் இந்திரனுக்கு என்னுடைய இறக்கை களை அறுக்கமுடியாமல் போய்விட்டது. நான் ஜீவித்திருப்ப தற்கு உங்கள் பிதாவன்றோ காரணமாக இருக்கிறார்! இவ்விதம் உமக்கும், எனக்கும் ஸம்பந்தம் இருக்கும்பொழுது, தாங்கள் ஒரு பெரிய காரியத்தை ஆரம்பித்திருக்கும் தருணத்தில் நான் ஏதோ ஒரு அல்பமான உபசாரத்தையாவது செய்யக்கடமை ப்பட்டவன் அல்லவா. ஆகையால் தாங்கள் கொஞ்சம் என் னிடத்தில் விச்ராந்தி செய்துகொண்டு ச்ரமத்தையும் பரிஹா ரம் செய்துகொண்டு, என் பூஜையையும் ஏற்றுக்கொண்டு தாங்கள் போகலாமென்று நான் ப்ரார்த்தித்துக் கேட்டுக் கொள்கிறேன்".

இவ்விதம் மைநாக பர்வதத்தினுடைய வார்த்தை யைக் கேட்டு ஆஞ்ஜநேய ஸ்வாமி "ஓ பர்வத ராஜனே! உன்னுடைய மிகவும் ப்ரியமான வார் த்தைகளால் நான் ஸந்தோஷத்தை அடைகிறேன். நீ சொன்ன வார்த்தைகளினின்றும் எனக்கு ஆதித்யம் செய்த தாக ஆகிவிட்டது. நான் உன்னை அலக்ஷ்யமாக வேகத்தினல் தள்ளின விஷயத்தில் நீ கோபத்தையும் அடையக்கூடாது. என்னுடைய கார்யத்தின் அவசரமானது என்னை துரிதப்படு த்துகிறது. பகலோ அதிகமாக முடிந்துவிட்டது. ஸூர்யா ஸ்தமனத்திற்குள் லங்காநகரம் போய்ச் சேரவேண்டும். நடுவில் ஒரு ஸ்தலத்திலும் தங்குவதில்லை என்று என்னுடைய ப்ரதிக்ஞை. ஆகையால் க்ஷமித்துக்கொள்ளவும்" என்று சொல்லிவிட்டு தன்னுடைய வலதுகையினல் அந்த பர்வத ராஜனையும் தொட்டு ஆசீர்வதித்துவிட்டு மறுபடியும் ஆகாச

மார்க்கத்தில் ப்ரவேசித்து வெகுவேகமாக லங்காநகரத்தை அபிமுகம் செய்துகொண்டு ஆஞ்ஜநேய ஸ்வாமியானவர் சென்றார்.

ஸகல தேவர்களும் ஸித்தர்களும் மைநாகபர்வதத்தினுல் தடைபடாமல் ஆஞ்ஜநேயஸ்வாமி ஜயத்தை அடைந்து மறு படியும் ஆகாசமார்க்கத்திலேயே ப்ரவேசித்து வெகு வேக மாகச் செல்வதைப் பார்த்து மிகவும் ஸந்தோஷத்தை அடை ந்தார்கள். மைநாக பர்வதத்திற்கும் இந்த்ரன் "ஹே பர்வதமே! தேவகார்யமாகிய ராமகார்யத்தில் மிகுந்த ச்ரமத் தை எடுத்துக்கொண்ட. ஆஞ்ஜநேயருடைய விஷயத்தில் ஆதித்யம் செய்வதற்காக, நீ எடுத்துக்கொண்ட முயற்சியி னுல் நாங்கள் மிகவும் ஸந்தோஷத்தை அடைந்தோம். என் மூலமாக இனி உனக்கு பயமே வேண்டாம் இரண்டு இறக் கைகளுடனும் ளெளக்யமாக ஸமுத்ரத்திலேயே நீ ஸ்தி ரமாக வாஸம் செய்துவரலாம்" என்று மைநாகபர்வதத்திற்கு அபயப்ரதானம் செய்தான்.

இவ்விதம், ஒரு உத்தமஜீவனை ஸம்ஸார ஸாகரத்திலிரு ந்து தரணம் செய்வதற்காகப் ப்ரவ்ருத்தித்த ஆசார்ய புருஷ னாகிய ஆஞ்ஜநேய ஸ்வாமிக்கு அந்த ஜீவனுடைய ஸஞ்சித ஜன்மங்களில், அவச்யம் செய்யவேண்டிய கர்மாக்களை செய் யாமலிருந்ததால் ஏற்பட்ட ப்ரமாண அஸம்பாவனை என்ற தூதன் விக்னமானது ஆசார்யபுருஷனுடைய ஸாமர்த்ய விசேஷத்தி னுல் நிவ்ருத்தி செய்யப்பட்டது என்பதை வ்யங்க்யமாக வாசகர்கள் அறியவேண்டும்.

श्येनः कश्चिदिति (प्रेयाऽसौ नाम वीर्यवान्) (श्रेयांसि बहुविघ्नानि) என்ற சாஸ்த்ரத்தை அனுஸரித்து, ஆஞ்ஜ நேய ஸ்வாமியைப்போல் ஆசார்ய புருஷர்கள் ப்ரவ்ருத்திக் கும் ஸதுபதேசமான கார்யங்களில் அநேகவிதமான விக் னங்கள் சுபரூபமாகவோ, அசுபரூபமாகவோ தேவர்களா லேயே செய்யப்படலும். ப்ரவ்ருத்தியுள்ள ஆஞ்ஜநேய

ஸ்வாமி என்ற ஆசார்யபுருஷரோ பகவானை ஸ்ரீராமரா லேயே தேர்ந்தெடுக்கப்பட்ட மஹாபுருஷனை தினலும், அர்த் தத்தையோ, கீர்த்தியையோ எதிர்பார்க்காமல் பகவத் ப்ராப் தியில் அத்யவஸாயம் உள்ள ஜீவனை உத்தரணம் செய்வதுமாத் ரம்தான் தன்னுடைய கடமை என்று நினைத்த ப்ராக்ஞ ரானதினலும் தன்னுடைய ஸாமர்த்யத்தினல் முதல் விக் னத்தை நிவ்ருத்தி செய்துகொண்டு தான் ஸங்கல்பித்த கார் யத்தை மறுபடியும் உத்ஸாஹத்தோடு செய்ய ப்ரவ்ருத் தித்தார்.

तस्य ह देवाऽपि नाभूत्यै ईशते। (தஸ்ய ஹ தெவாऽபி நாஹூத்யை ஈசதே) (தஸ்ய ஹ தேவாபி நாபூத்யை ஈசதே) என்ற ச்ருதியினல், தீர புருஷனுடைய விஷயத் தில் தேவர்களே விக்னம் செய்ய ஆரம்பித்தாலும் அதனல் பராபவத்தை அடையாத விவேகிகளுக்கு, பிறகு அதே தேவர்கள் அனுகூலர்களாகவே ஆகிவிடுகிறார்கள். அவனுடைய விஷயத்தில் விக்னம் செய்ய ஸாமர்த்ய மற்றவர்களாகவே ஆகிறார்கள் என்று வெளியாகிற மர்ய தைக்கு ப்ரக்ருதத்திலுள்ள மைனாக பர்வதத்திற்கும் ஆஞ் ஜநேய ஸ்வாமிக்கும் நடந்த வ்ருத்தாந்தத்தையே உதா ஹரணமாக அறிந்துகொள்ளலாம்.

மறுபடியும் ஆகாச மார்க்கத்தில் வெகு வேகமாகப் போகிற ஆஞ்ஜநேயருக்கு மற்றொரு விக்னமானது ஏற்பட் டது. ஆகிலும் இதை ஒரு விக்னமாகவும் சொல்லமுடியாது. லங்கா நகரத்தை அடைந்து ஸீதையைக் கண்டுபிடிக்க யத் னம் செய்த ஆஞ்ஜநேயஸ்வாமியினுடைய பராக்ரமத்தைப் பரீக்ஷிக்கவே, தேவர்கள் செய்த ஒரு தந்த்ரமாகும். அதா வது 'ஸுரஸை' என்ற ஒரு தேவஸ்த்ரீயை இந்த்ரன் முத லான தேவர்கள் ஹனுமாருடைய பராக்ரமத்தைப் பரீ க்ஷித்து வர ஏவினர்கள். அந்த ஸ்த்ரீயோ, 'நாகர்கள்' என்று சொல்லப்படுகிற ஸர்ப்பங்களுக்குத் தாயாரான கத்ரு என்ற வளே,

अब्रुवन् सूर्यसङ्काशां सुरसां नागमातरम् ।

ஸுரஸாவநு வ்ரூய꞉ஸுப⁴ஜாஸ்யாம் வ்ரஜாம꞉ நாமஸாதநீ ।

அப்ருவந் ஸூர்யஸங்காசாம் ஸுரஸாம் நாகமாதரம் ।

என்று வால்மீகி மஹர்ஷியோ நாக மாதா என்ற சப்தத்தினல் அவளைக் குறிப்பிட்டிருக்கிறார். காச்யப ப்ரஜாபதியினு டைய பத்னிகளுக்குள் இவளும் ஒருவளாக ஆவாள். காச்யப ப்ரஜாபதியினுடைய பத்னிகளெல்லோரும் தக்ஷப்ரஜாபதியினுடைய பெண்களானதினல், தாக்ஷாயணி என்றும் இவளுக்குப் பெயர் உண்டு. பின்பு

प्रविष्टोस्मि हि ते वक्त्रं दाक्षायणि नमोस्तु ते ।

ப்ரவிஷ்டோஸ்மி ஹி தே வக்த்ரம் தாக்ஷாயணி நமோஸ்து தே ।

என்ற வாக்யத்தினல், இந்த ஸுரஸையை தாக்ஷாயணி என்ற சப்தத்தினல் ஆஞ்ஜனேயர் குறிப்பிட்டிருக்கிறார். இந்த கத்ரு என்ற நாகமாதாவோ தேவர்கள் மூலமாக ஒரு வரனையும் அடைந்திருக்கிறாள். அதாவது தன்னுடைய வதனத்திற்கு நேரில் எந்த ப்ராணிகள் வருகிறார்களோ அவர்கள் தனக்கு ஆகாரமாக வேண்டும் என்பதே அந்த வரமாகும். அதனுல்தான் அவளுடைய புத்ரர்களான ஸர்ப்பங்களுக்கும் தன்னுடைய வதனத்திற்கு எதிரில் வரும் மண்டூகாதிகளெல்லாம் ஆகாரமாக ஆகிவிடுகின்றன. இந்த ஆஞ்ஜனேயஸ்வாமியினுடைய எதிரில் மார்க்கத்தை நிரோதம் செய்து கொண்டு தன் வாயைத்திறந்து கொண்டு நின்றுவந்தாளே யானுல் ஆஞ்ஜனேயஸ்வாமியோ மேற்சொன்ன வரபலத்தை அனுஸரித்து அவளுக்கு ஆகாரமாக ஆகிவிடவேண்டும் அப்படி ஆகிவிடுகிறாரா? அல்லது தன் பராக்ரமத்தினல் தேவர்களுடைய வரபலத்தையும் நிஷ்பலமாக அடித்து அவர் ஜெயிக்கிறாரா? ஜெயித்துவிட்டால் இந்த மஹானுபாவன் லங்காகமனம் செய்து காரியத்தை முடித்துக் கொண்டே வந்துவிடுவாரென்றதன் தேவர்களுடைய அபிப்ராயமாகும்

அவ்விதம் ஸுரஸை என்பவள் தேவர்களால் ஆக்ஞாபிக்கப்பட்டு தான் காடரூபியானதினால் ராக்ஷஸ உருவத்தை ஸ்வீகரித்துக்கொண்டு தன்னுடைய வாயை ஆகாசம்போல் விஸ்தாரமாகத் திறந்துவைத்துக்கொண்டு ஆஞ்ஜநேயஸ்வாமியினுடைய மார்க்கத்தை தடைசெய்துகொண்டு வேகமாகவரும் ஆஞ்ஜநேயஸ்வாமியைப் பார்த்து

मम भक्ष्यः प्रदिष्टस्त्वं ईश्वरैः वानर्षभ ।
अहं त्वां भक्षयिष्यामि प्रविशेदं ममाननम् ॥

ஸ மஹாத்மா வசஸ்தஸ்ய ராக்ஷஸ்யாஸ்தாத்³ருʼஸோ(அ)ப⁴வத் ।
ஸஹஸா ஸ்வாம் ஸமாபா⁴ஷ்ய ஸுரஸாமித³முத்தரம் ॥

मम भक्ष्यः प्रदिष्टस्त्वं ईश्वरैः वानरर्षभ ।
अहं त्वां भक्षयिष्यामि प्रविशेदं ममाननम् ॥

“வேறு வானரமானே எனக்கு ஆஹாரமாக உன்னை ஈச்வரனே ஸ்ருஷ்டித்து இந்த மார்க்கத்தில் வரச்சொல்லியிருக்கிறார். என்னுடைய முகத்திற்கு எதிரில் யார் வந்தாலும் அவர்களை நான் ஆஹாரமாக உட்கொண்டுவிடலாம். அவ்விதம் எனக்கு தேவர்களால் கொடுக்கப்பட்ட வரம் வெகுகாலமாக அனுஷ்டானத்தில் இருந்துவருகிறது. ஆகையினால், நீயும் எனனுடைய முகத்தில் ப்ரவேசிக்கவேண்டும். உன்னை நான் பக்ஷித்து த்ருப்தி அடைவேன்” என்று சொன்னாள். ஸுரஸையினுடைய வாக்யத்திற்குப் வானரருடைய பலத்தைப் ப்ரகாசப்படுத்தவேண்டும் என்பதில்தான் தாத்பர்யத்தை மஹான்கள் அறியவேண்டும். அதைக்கேட்ட ஆஞ்ஜநேயஸ்வாமியோ ஸுரஸையைப் பார்த்துச் சொல்கிறார்.

பரமதார்மிகனையும், சிவபக்த அக்ரேஸரனையும் உள்ள தக்ஷப்ரஜாபதியினுடைய பெண் அனலாவல்தான் ஸுரஸை (ஸுராயாம் அநலாயாஞ்ச) (ப்ரஸூதிவிராணாகரணம்) என்ற வாக்யத்தின் ப்ரகாரம் ஆஞ்ஜநேயஸ்வாமியும் இந்த ஸுரஸைக்கு அந்நாளிடத்தும் செய்துகொன்ற வணக்கமாய்ப் பேசுகிறார்.

"ஹே தேவி! பரமதார்மிகனை தசரத சக்ரவர்த்தியினுடைய புத்ரனை ராமனைப்பற்றி நீ கேள்விப்பட்டிருக்கலாம். அந்த பகவான் ப்ரதாவான லக்ஷ்மணனோடும், ஸீதையென்ற தர்மபத்னியோடும், பித்ருவாக்ய பரிபாலனம் என்ற தர்மத்தை அனுஷ்டிக்கிற வ்யாஜமாக தண்டகாரண்யத்தில் வாஸம் செய்துவந்தார். அந்தஸந்தர்பத்தில் சூர்ப்பணகை தன்னுடைய தௌஷ்ட்யத்தினால் ராமனால் பராபவப்படுத்தப்பட்டு துக்கத்தை அனுபவித்த காரணத்திலிருந்தும், ராக்ஷஸர்களுக்கும் ராமனுக்கும் வைரம் ஏற்பட்டது. ம்ருக வேஷதாரியான மாரீசனை ராமன் விரட்டிக்கொண்டு போயிருக்கும் காலத்தில் ராக்ஷஸ ராஜனான ராவணனால் ஸீதை அபஹரிக்கப்பட்டு லங்காநகரில் வஸித்துவருகிறாள். அவளுடைய ஸமீபத்திற்கு நான் ராமதூதனாகப் போகிறேன். நீயும் ராமகார்யத்தில் ஸஹாயம் செய்யவேண்டும். ஸமுத்ரத்திற்குட்பட்ட பூமண்டலம் முழுமையும் இக்ஷ்வாகு வம்சத்தில் பிறந்த அரசர்களுடைய தேசமானதினால் எல்லா லோகமும் ராமராஜ்யமே. ராமராஜ்யத்தில் வஸிக்கும் நீயும் ராம கார்யத்தில் ஆனுகூல்யத்தைச் செய்யக் கடமைப்பட்டவள். ஆகையினால் என்னுடைய மார்க்கத்தை தடைசெய்யாமல் என்னை விட்டுவிட வேண்டும். அப்படி நான் உனக்கு க்ஷேமமாகத்தான் ஆகவேண்டுமென்று உன் வர பலத்தைப் பொருட்படுத்த வேண்டுமானாலும், இந்த வேகத்துடன் நான் லங்காநகரம் சென்று ஸீதையைப் பார்த்துவிட்டு ராமனிடத்திலும் அந்த வ்ருத்தாந்தத்தை தெரியப்படுத்தின பிறகு, உன்னுடைய வதனத்தில் ப்ரவேசித்து உனக்கு நான் ஆஹாரமாக ஆகிறேன். என் வாக்கை நீ ஸத்யமாக நம்பலாம் என்று ஆஞ்ஜநேயஸ்வாமியானவர் வணக்கமாக எவ்வளவோ கெஞ்சிக் கேட்டுக்கொண்டார்.

ஆகிலும், ஸுரஸை தன் ஸாகஸத்தை விடாமல், "என்னுடைய வர பலத்தை உன்னால் அதிக்ரமிக்க முடியாது. என்னுடைய வதனத்திற்குள் நீ ப்ரவேசித்துத்

தான் வெளியே போகவேண்டு"மென்று நிர்ப்பந்தப்படுத்தி னள். பிறகு ஆஞ்ஜநேயஸ்வாமியானவர் ராக்ஷஸ ப்ரக்ருதி யோடு கூடினவர்களிடம் ஸாந்த்வ வசனமானது ப்ரயோ ஜனத்தை அளிக்காது என்று தீர்மானித்து, "ஹே ஸுரஸே! நீ வாயைத் திறந்துகொள். நானும் ப்ர வேசிக்கிறேன். நீ ஆகாரம் செய்துகொள்" என்று சொன் னர். ராக்ஷஸ ப்ரக்ருதி உள்ளவர்கள் செய்யும் காம ப்ரயுக்த மான ஸாமர்த்ய விசேஷங்களுக்கும், அகாமஹதர்களான ஞானிகள் செய்யும் யோக ப்ரயுக்தமான ஸாமர்த்ய விசேஷங் களுக்கும் வித்யாஸம் ஏற்படாதா. ஆகையினல் ஆஞ்ஜ நேயஸ்வாமியினிடமோ தான் மஹாத்மாவானதினல் ராஜ யோக க்ரமத்தை அவலம்பித்து அஷ்டஸித்திகளும் தன் னிடத்தில் குடியிருந்து வரும்பொழுது இந்த ஸுரஸையி னுடைய க்ருத்ரிமமான பராக்ரமம் எப்படி பலிக்கும் என் பதை ஸூக்ஷ்மதர்சிகள் அறியவேண்டும். ஸுரஸையான வள் தன்னுடைய வதனத்தை எவ்வளவு பரிமாணமுள்ள தாக விரித்துக்கொண்டாளோ அதற்குமேல் ஒரு மடங்கு அதிக பரிமாணமுள்ளதாக ஆஞ்ஜநேயஸ்வாமியானவர் தன்னுடைய உருவத்தை எடுத்துக்கொண்டார். இப்படி சில நேரம், ஸுரஸையும் ஆஞ்ஜநேயரும் பராக்ரமத்தில் விஜிகீஷு கதையை அவலம்பித்து மன்றாடினர்கள். ஸகல தேவர்களும் விமானங்களிலிருந்துகொண்டு இந்த அபூர்வமான வைபவத் தையும் பார்த்துக் களித்துக்கொண்டிருந்தார்கள். கடைசியில் மஹத்பரிமாணம் என்று சொல்லப்படும் பரிமாணத்தோடு ஸுரஸையானவள் வாயைத் திறந்துகொண்டாள் ஆஞ்ஜ நேயஸ்வாமியோ மஹாபுத்திமானனதினல் அணுபரிமாணம் என்று சொல்லப்படும் ஸூக்ஷ்மமாக தன்னுடைய ஸ்வரூபத் தை எடுத்துக்கொண்டு அவளுடைய வாயில் ப்ரவேசித்து அங்குஷ்டமாத்ர பரிமாணத்துடன் ப்ரவேசித்த காலத்தில் இருந்ததினல், பிரும்மாண்டமான ஒரு பாண்டத்தில் ஒரு சிறு கடுகைப்போட்டது போல், ஆஞ்ஜநேயஸ்வாமி தாக்ஷாயணி யாகிய ஸுரஸையினுடைய வாயில் ப்ரவேசித்து நடமாடும்

வழியாக அணிமா ஸித்தியினுடைய பலத்தினால் வெளியில் வந்துவிட்டார்.

வெளியில் வந்து நின்றுகொண்டு "ஹே தாக்ஷாயணி! இனி நீ என்னை என்ன செய்ய முடியும்? உன் வரமும் ஸத்ய மாகி விட்டது. நானும் ஜயித்துவிட்டேன். உன்னுடைய ரக்ஷகளெல்லாம் என்னைப்போலுள்ளவர்களிடத்தில் பலிக் காது. இனிமேலாவது ஜாக்ரதையாக இருக்கவேண்டும்." என்று சொல்லிவிட்டு ராகுவினால் விடப்பட்ட சந்த்ரனைப் போல் ஆஞ்ஜநேயஸ்வாமியானவர் திவ்ய தேஜஸ்ஸுடன் லங்காநகரத்திற்கு அபிமுகமாக மேவெகுவேகத்துடன் சென்றார்.

இந்த ஸுரஸை என்றவளும் ராக்ஷஸரூபத்தை விட்டு விட்டு தேவரூபத்துடனே "ஹே ஸ்வாமின்! நான் செய்த அபசாரத்தை மன்னித்துக்கொள்ள வேண்டும். தேவகார்யத்திற் காக லங்காநகரம் போகிற தங்களுடைய பராக்ரமத்தை பரீக்ஷிக்க வேண்டுமென்ற அபிப்ராயம் தேவர்களுக்கேற் பட்டு இந்தக் கார்யம் நடந்ததன்றியில், வேறு வித்யாஸமாகத் தாங்கள் நினைக்கக்கூடாது. உங்களை ஜயிக்கிறவன் இந்தப் ப்ரபஞ்சத்திலேயே ஒருவனுமில்லை. ராமகார்யமானது தங்கள் மூலமாக நிச்சயம் கைகூடிவரும். ஸௌக்யமாக லங்காநகரம் சென்று ஸீதையைப்பார்த்துத் தாங்கள் திரும்பிவர வேண்டும். ராகவனோடு ஸீதையைச் சேர்த்துவைத்து லோகத்திற்கு பரம மங்களத்தைச் செய்வது தங்கள் கடமை யாகும்" என்று சொல்லிவிட்டு அந்தர்த்யானத்தை அடைந்து விட்டாள்.

ஆஞ்ஜநேயஸ்வாமியும் அத்புதமான இந்த கார்யத்தை செய்ததினால் தேவர்களெல்லாரும் ஆஞ்ஜநேயருடைய பரா க்ரமத்தைச் ச்லாகித்துப் பேசினர்கள். மறுபடியும் கருடனு க்கு ஸமானமான வேகத்துடன் ஆகாச மார்க்கத்தில் லங்கா நகரத்தை நோக்கிக் கிளம்பினர் லங்கா நகரத்தினுடைய ஸமீபமும் சென்றுவிட்டார்.

प्लवमानं तु तं दृष्ट्वा सिंहिका नाम राक्षसी ।
मनसा चिन्तयामास प्रवृद्धा कामरूपिणी ॥
अद्य दीर्घस्य कालस्य भविष्याम्यहमाशिता ।
इदं हि मे महत्सत्त्वं चिरस्य वशमागतम् ॥
इति सञ्चिन्त्य मनसा छायामस्य समाक्षिपत् ॥

ப்லவமானம் து தம் த்ருஷ்ட்வா ஸிம்ஹிகா நாம ராக்ஷஸீ ।
மநஸா சிந்தயாமாஸ ப்ரவ்ருத்தா காமரூபிணீ ॥
அத்ய தீர்க்கஸ்ய காலஸ்ய பவிஷ்யாம்யஹமாசிதா ।
இதம் ஹி மே மஹத்ஸத்வம் சிரஸ்ய வசமாகதம் ॥
இதி ஸஞ்சிந்த்ய மநஸா சாயாமஸ்ய ஸமாக்ஷிபத் ।

ஆகாச மார்க்கத்தில் வெகுவேகமாகப்போகும் ஆஞ்ஜ நேயஸ்வாமியையோ, ஸிம்ஹிகை என்ற பெயரோடு கூடின ஒரு ராக்ஷஸ ஸ்த்ரீயானவள் பார்த்து தனக்கு ஒரு பெரிய ஆகாரவஸ்து என்று நினைத்தாள். அந்த ராக்ஷஸ ஸ்த்ரீயோ ஸமுத்ர ஜலத்திற்குள்ளேயே ஸஞ்சாரம் செய்யும் ஸ்வபாவ முள்ளவள். அவளுக்கும், தீர்க்கமான மஹா மாயிகளால் ப்ராணிகளுடைய சாயையைத் தான் க்ரஹித்த மாத்ர த்தில் அந்தப் ப்ராணிகளையே தன் வசமாக்கிக்கொள்ளக் கூடிய சக்தியுள்ளவளாக வரபலமானது ஏற்பட்டிருக்கிறது அந்த சக்தியினால் ஆஞ்ஜநேயஸ்வாமியினுடைய நிழலை, தான் ஸமுத்ரத்திற்குள் இருந்துகொண்டே ஆகர்ஷணம் செய்தாள். அந்த ராக்ஷஸ ஸ்த்ரீயானவள் தன் நிழலைப் பிடித்து இழுத்த மாத்ரத்திலேயே, ஆஞ்ஜநேயஸ்வாமியின் வேகமானது குறைந்து, அங்குமிங்கும் போகமுடியாமல் மிகவும் கஷ்ட

த்தை அடைந்தார். நான்கு பக்கங்களிலும் அதன் காரணத்தை கவனிக்கும் பொழுது ஸமுத்ரத்தில் ஒரு பெரிய சரீரத்தோடு கூடிய ப்ராணியைப் பார்த்தார். சாயாக்ராஹி (மாயாக்ராஹி) (சாயாக்ராஹி) என்றும் அந்த பூதத்தைப் பார்த்து தெரிந்துகொண்டு, தான் கோரமான விச்வரூபத்தை தரித்துக்கொண்டார். அந்த ராக்ஷஸஸ்த்ரீயும் வ்ருத்தி அடைகிற ஆஞ்ஜநேயஸ்வாமியைப் பார்த்துவிட்டுத் தானும் தன்னுடைய வாயைத்திறந்து கொண்டு ஆஞ்ஜநேயஸ்வாமியைப் பக்ஷிக்க ஆரம்பித்தாள். ஆஞ்ஜநேயஸ்வாமியும், தான் அணிமா ஸித்தியைக் கைக்கொண்ட மஹிமையினால், தன்னுடைய ஸ்வரூபத்தை மிகவும் ஸூக்ஷ்மமாகச் செய்துகொண்டு, அந்த 'ஸிம்ஹிகை' என்ற ராக்ஷஸ ஸ்த்ரீயினுடைய வாயில் புகுந்தார். ஸித்தர்கள், சாரணர்கள் முதலான தேவர்களும், அந்தவைபவத்தைப் பார்த்துக்கொண்டு ஆகாச மார்க்கத்தில் நின்றுவந்தார்கள். ஆஞ்ஜநேயஸ்வாமியும் அந்த ராக்ஷஸ ஸ்த்ரீயினுடைய சரீரத்தில் தான் ப்ரவேசம் செய்த மாத்ரத்தில், தன்னுடைய நகங்களால் அந்த ராக்ஷஸ ஸ்த்ரீயினுடைய மர்மஸ்தானங்களைப் பேதித்துவிட்டு வெளியில் வந்துவிட்டார். அவளும் ஜலத்தில் மரித்து விழுந்துவிட்டாள்.

तां तु दृष्ट्वा च धृत्या च दाक्षिण्येन निपात्य च ।
स कपिप्रवरो वेगात् ववृधे पुनरात्मवान् ॥

தாம் து த்ருஷ்ட்வா ச த்ருத்யா ச தாக்ஷிண்யேந நிபாத்ய ச ।
ஸ கபிப்ரவரோ வேகாத் வவ்ருதே புநராத்மவாந் ॥

ஆஞ்ஜநேயஸ்வாமியினிடத்திலோ தீக்கதர்சித்வமும் ஸஹஜமான தைர்யமும், ஸாமர்த்யமும் இருந்துவரும் காரணத்தினால், அந்த ராக்ஷஸ ஸ்த்ரீயை ஆஞ்ஜநேயஸ்வாமி ஜயித்தார் என்று ஸித்த சாரணர்கள் பேசிக்கொண்டு ஸந்தோஷித்தார்கள்.

இவ்விதம் மஹேந்த்ர பர்வதத்திலிருந்தும் லங்காநகரத்திற்குப்போக ஆகாசமார்க்கத்தில் கிளம்பினதோ, மைனாக பர்வதம், ஸுரஸை என்றஸ்த்ரீ, ஸிம்ஹிகையென்ற ராக்ஷஸி இவர்களைத்தன் பராக்ரமத்திலுல் ஜயித்துக்கொண்டு வெகு வேகமாக ஆகாசமார்க்கத்தில் போகும்படியான சக்தி விசேஷமோ, இவைகள் ஆஞ்ஜநேயஸ்வாமியினுடைய ஓர் அபூர்வமான அமானுஷத்தன்மை என்று தேவர்கள் வர்ணித்தார்கள். மைனாக பர்வதத்தினுடைய எதிர்ப்பால் ப்ரமாண அஸம்பாவனை என்பதையும் ஸுரஸையினுடைய விக்னத்திலுல் ப்ரமேய அஸம்பாவனை என்பதையும் ஸிம்ஹிகையினுடைய விக்னத்திலுல் விபரீதபாவனை என்பதையும் க்ரமமாக அறிந்து கொள்ள வேண்டும். ஜீவனை உத்தாரணம் செய்வதில் ஆசார்ய புருஷன் ப்ரவ்ருத்தித்தும் அந்த ப்ரவ்ருத்தியைத தடுக்கிற விக்னங்களோ, மேற்சொன்னபடி மூன்று வகைகளாகத்தான் ஆகும். அந்த விக்னங்களையும் இந்த ஜீவனுடைய புண்யகர்மாவின் அதிசயத்தாலும அந்த ஆசார்யன் தனக்குள்ள பகவத் ப்ரஸாத மஹிமையினுலும் பொருட்படுத்தாமல் அந்த விக்னங்களையும் மீறிக்கொண்டு ஜீவனை உத்தாரணம் செய்வது ஆசார்யனுடைய ஸ்வபாவமாக ஆகும் என்பது இதிலிருந்து வெளியாகிறது.

ஒரு கர்ஷகன் பூமியில் பீஜாவாபம் செய்து பயிரிட ஆரம்பித்தாலும், எதிர்பார்த்தப்ரகாரம், உடனேயே பலஸித்தி ஏற்படுகிறதில்லை. அதற்காக அவன் அந்த யத்னத்தையும் விடுகிறதில்லை. மேன் மேலும் தனது ப்ரயத்னத்தை அதிகமாகத்தான் செய்து வருவான். அதனுல் முன்பு ஏற்பட்ட நஷ்டங்களைக்கூட பின்பு ஒரு லாபத்திற்குள் அடங்குப்படி செய்து கொண்டு பரமஸந்தோஷத்தை அடைவான். அதுபோல் ஆசார்ய புருஷனும் ஒரு சிஷ்யனை ஸம்ஸார சாகரத்திலிருந்து கரையேற்ற முயற்சி செய்யும் பொழுது அந்த சிஷ்யனுடைய ஸமீபத்திற்கே தான் போய் சேராமல் இருக்கும்படி ஏற்

பட்ட விக்னங்களையோ, சிஷ்யனுடைய ஸமீபம் சென்ற பிறகும், தான் உபதேசிக்கிற தத்வமானது சிஷ்யனுடைய புத்தியில் ஆழமாகவில்லை என்பதிலேயோ தன்னுடைய ப்ரவ்ருத்தியை விடமாட்டார். எவ்வளவு யத்ன விசேஷங்கள் செய்தால் சிஷ்யனுடைய ஜ்ஞானம் ஸபலமாக ஆகுமோ அவ்வளவு யத்ன விசேஷங்களையும் செய்துதான் திருவார், என்பது தான் லோகோபகாரமாக ப்ரவ்ருத்திக்க ஆசார்ய புருஷனுடைய ஸ்வபாவமாகும், என்பதும் ப்ரக்ருதத்தில் வெளியாகிறது.

இவ்விதம் மஹாபலாஷ்டிகனை ஆஞ்ஜநேயஸ்வாமியானவர் லங்காநகரத்தினுடைய உபவனமாகிய அசோகவனத்தில் போய் கீழே இறங்கினர். தன்னுடைய விச்வரூபத்தை ராக்ஷஸர்கள் எவரும் அறியக்கூடாது என்ற எண்ணத்துடன் தன்னை மிகவும் ஸூக்ஷ்மமாகச் செய்துகொண்டு வானரஜாதியின் ஆகாரமாகவே ஆகிவிட்டார்.

तीन् क्रमानिव विक्रम्य बलिवीर्यहरो हरिः।

தீந் க்ரமாநிவ விக்ரம்ய பலிவீர்யஹரோ ஹரிः।

தீந் க்ரமாநிவ விக்ரம்ய பலிவீர்யஹரோ ஹரிः।

மஹாபலிசக்ரவர்த்தியினுடைய வீர்யத்தை அபஹரிக்க மஹாவிஷ்ணுவானவர் த்ரிவிக்ரமாவதாரம் செய்து கொண்டு மஹாபலியானவன் தன்னுடைய வசமான பிறகு நிஜமான ஸ்வரூபத்தை அடைந்துவிட்டதுபோல், ஆஞ்ஜநேயஸ்வாமியும் ஜீவனுடைய சரீரமாகிய லங்காநகரத்தின் ஸமீபத்திற்கு வரும் மார்க்கத்தில் ஏற்பட்ட விக்னங்களை நாசம் செய்கிற விஷயத்தில் விச்வரூப தாரியாக இருந்தாலும் ஜீவனுடைய ஸமீபம் வந்தவுடன் நிஜரூப தாரியாக ஆகிவிட்டார்.

कपिस्तु तस्मिन्निपपात पर्वते विधूय रूपं व्यथयन् मृगद्विजान्॥
स सागरं दानवपन्नगायुतं बलेन विक्रम्य महोर्मिमालिनम्।
निपत्य तीरे च महोदधेस्तदा ददर्श लङ्कामरावतीमिव॥

ணக ஆகலாம் என்பதே இந்த ஸர்க்கத்தின் தாத்பர்ய ஸார மாகும். இந்த முதல் ஸர்க்கத்தையாவது விடாமல் பாராயணம் செய்துகொண்டு, ஆஞ்ஜநேயஸ்வாமிக்கு நெல் பொரிணையை நிவேதனமாக செய்து வருகிறவர்களுக்கு ஆஞ்ஜநேயருடைய ப்ரஸாதத்தினல் சத்ரு க்ஷயமும் ஸர்வகார்ய ஸித்தியும் கைகண்டபலமாக ஏற்படுமென்பதும் ஸித்தமாகும். இதற்கு ப்ராமண வாக்யமோ ஸ்காந்த மஹா புராணத்தில் உமாமகேச்வர ஸம்வாதத்தில் உள்ள

सुन्दरे प्रथमं यो वै सर्गं पठति मानवः ।
स हन्ति शत्रून् सर्वार्थं लभते नात्र संशयः ॥

ஸுந்தரே ப்ரதமம் யோ வை ஸர்க்கம் படதி மாநவ: ।
ஸ ஹந்தி சத்ரூந் ஸர்வார்த்தம் லபதே நாத்ர ஸம்சய: ॥

என்பதேயாகும்.

இரண்டாவது ஸர்க்கம்.

स सागरमनाधृष्यमतिक्रम्य महाबलः ।
त्रिकूटशिखरे लङ्कां स्थितां स्वस्थो ददर्श ह ॥

ஸ ஸாகரமநாத்4ருஷ்யமதிக்ரம்ய மஹாப3ல: ।
த்ரிகூடஸிக2ரே லங்காம் ஸ்தி2தாம் ஸ்வஸ்தோ2 த3தர்ச ஹ ॥

ஹனுமானனவர் மற்ற எவர்களாலும் தாண்டமுடியாத தான ஸமுத்ரத்தை மகாபலிஷ்டனாக இருக்கும் காரணத்தினால் ஆயாஸமின்றித் தாண்டிவிட்டு த்ரிகூட சிகரம் என்ற பர்வதத்தினுடைய சிகரத்தில் விளங்கிவரும் லங்கா நகரத்தைப் பார்வையிட்டார். ஆஞ்ஜநேயஸ்வாமியானவர் லங்கா நகரத்தைப் பார்க்கும்பொழுது அங்குள்ள விருக்ஷங்களெல்லாம் யதிருச்சையாக வாயுவினால் அசைக்கப்பட்டு புஷ்பங்களை வர்ஷித்தன. அந்த புஷ்பங்கள் மஹாநுபாவனான ஆஞ்ஜநேயஸ்வாமியினுடைய சிரஸ்ஸில் விழுந்து புஷ்பமயமான பர்வதம்போல் ஹனுமான் விளங்கி வந்தார். அனேக யோஜனையுள்ள ஸமுத்ரத்தைத் தாண்டியும் ஆஞ்ஜநேயஸ்வாமிக்குக் கொஞ்சமேனும் ச்ரமம் ஏற்படவில்லை. லங்கா நகரத்தின் பார்ச்வங்களில் பலவிதமான வ்ருக்ஷ ஜாதிகளையும் பார்த்து மிகவும் ஆச்சர்யப்பட்டார். அபூர்வமான அகழிகளாலும் கோட்டைகளாலும் அலங்கரிக்கப்பட்டு வந்த லங்கா நகரத்தின் ஸன்னிவேசமானது யாருக்குத்தான் ஆச்சர்யத்தைக் கொடுக்காது?

सीतापहरणार्थेन रावणेन सुरक्षिताम् ।
समन्ताद्विचरद्भिश्च राक्षसैरुग्रधन्विभिः ॥

ஸீதாபஹரணார்தே2ந ராவணேந ஸுரக்ஷிதாம் ।
ஸமந்தாத்3விசரத்3பி4ஶ்ச ராக்ஷஸைருக்3ரத4ன்வபி4: ॥

ஸீதாபஹரணார்தேந ராவணேந ஸுராக்ஷிதாம் ॥
ஸமந்தாத்விசரத்பிச்ச ராக்ஷஸைருக்ரதந்விபி: ॥

ஆஞ்ஜநேயஸ்வாமியானவர் லங்கா நகரத்தைப் பார்வையிடும்பொழுது, லங்கா நகரமானது, ஸீதாதேவியை அபகரித்ததினால் தானெருு லாபத்தை அடையலாம் என்று எண்ணம் உள்ள ராவணனுடும், அந்த ராவணனை அனுஸரித்த அனேக சூரர்களாலும் அன்னியர்களால் ப்ரவேசிக்க முடியாமல் மிகவும் நன்ருக ரக்ஷிக்கப்பட்டு வந்தது. மிகவும் உக்ரமான வில்லாளிகளான படைகள் நான்கு பக்கத்திலும் ஸஞ்சரித்துக்கொண்டே லங்கையை ரக்ஷித்து வந்தார்கள். सीतापहरणार्थेन (ஸீதாவஹரணார்யேந) (ஸீதாபஹரணார்தேந) என்ற இடத்தில் सीतापहरणमेव अर्थः प्रयोजनं यस्य रावणस्य तेन (ஸீதாவஹரணமேவ அர்த: ப்ரயொஜநம் யஸ்ய ராவணஸ்ய தேந) (ஸீதாபஹரணமேவ அர்த: ப்ர யோஜனம் யஸ்ய ராவணஸ்ய தேந) என்ற ஸமாஸத்தினுல் ராவணன் ஸீதையை அபஹாரம் செய்ததுதான் ப்ரயோஜ னமே தவிர அபஹாரத்திற்கு வேருக மற்ற யாதொரு ப்ர யோஜனத்தையும் அந்த ராவணன் அடைய முடியாது என்ற அர்த்தத்தை மேற்சொன்ன ஸமாஸமானது ப்ரகாசப்படுத்து கிறபடியினுல் ஸீதையினுடைய பாதிவ்ரத்யமானது அப்ரதி ஹதம் என்பது விளங்கி வருகிறது. அதாவது எக்காரணத் தினுலும் அழிக்க முடியாததான பாதிவ்ரத்யமாகும்.

தவிரவும், सीतापहरणेन अर्थः प्रयोजनं राक्षसभावात् मुक्तिः यस्य सः तेन (ஸீதாவஹரணேந அர்த: ப்ரயொஜநம் ராக்ஷஸபாவாத் முக்தி: யஸ்ய ஸ: தேந) (ஸீதாபஹரணேந அர்த: ப்ரயோஜனம் ராக்ஷஸபாவாத் முக்தி: யஸ்ய ஸ: தேந) என்ற ஸமாஸத்தினுல் ஸீதாபஹரண மூலமாகத்தான் ராக்ஷஸ பாவத்தினின்றும் விமுக்தனுக ஆகி அபராஜிதமான வைகுண்டத்தை அடைந்து முன்போலவே நாம் பாரிஷதனுக இருக்கவேண்டும் என்ற கருத்தால் தான் ஸீதையை ராவணன் அபஹரித்தான்.

அதாவது வைகுண்டத்தில் ராவணனும் கும்பகர்ணனும் ஜயன், விஜயன் என்ற பெயருடன் த்வார பாலகர்களாக இருந்து வந்தார்கள். ஒரு ஸமயத்தில் ஸனகாதிகளான மஹர்ஷிகள் பகவானுடைய தர்சனத்திற்காக வரும்பொழுது இந்த பாரிஷதர்கள் இருவர்களும் தமக்கேற்பட்ட பகவானுடைய ஆக்ஞையை அனுஸரித்து, இந்த ஸந்தர்ப்பத்தில் பகவானுடைய ஸமீபத்தில் ப்ரவேசிக்கக்கூடாதென்று அவர்களைத் தடுத்தார்கள். ஸனகாதிகளோ "இதற்கு முன்பு நாங்கள் அடிக்கடி வருவதுண்டு. எங்களை யாரும் ஒரு ஸந்தர்ப்பத்திலும் பகவானுடைய ஸமீபத்தில் ப்ரவேசிக்கக்கூடாதென்று தடுத்ததில்லை. இப்பொழுது நீங்கள் தடுப்பது பகவானுக்கு ஸம்மதமாக ஆகாது; ஆகையினால் நாங்கள் போகத்தான் போவோம்" என்று த்வாரபாலகர்களை மீறிக்கொண்டு ஸனகாதிகள் உள்ளே நுழைந்தார்கள். த்வாரபாலகர்களும் கோபம் கொண்டு ஸனகாதிகளை போகக்கூடாது என்று சொல்லி தம் கையில் வைத்துக்கொண்டிருக்கும் பிரம்பினால் வெளியே தள்ளினார்கள். இவ்விதம் மூன்று தடவைகள் ஸனகாதிகளுக்கும் த்வார பாலகர்களுக்கும் விவாதம் நடந்தது. ஸனகாதிகளோ த்வார பாலகர்களைப் பார்த்து, "நீங்கள் பகவத் பக்தர்களல்ல; பகவானுக்குச் சத்ருக்களே. பாகவதோத்தமர்களான எங்களை பகவத் தர்சனத்திற்குப் போகக்கூடாது என்று தடுத்த நீங்கள், மூன்று தடவை தடுத்த காரணத்தினால் மூன்று ஜன்மங்களில் பகவானுக்கு சத்ருக்களாக ஆகக்கடவீர்கள்" என்று சபித்தார்கள். இந்த விருத்தாந்தத்தை அந்தப்புரத்திலுள்ள பகவானும் அறிந்து ஸனகாதிகளை வெகுப்ரகாரமாக க்ஷமாபணம் செய்துகொள்ளும்படி அவரே வேண்டிக்கொண்டார். "என்னுடைய பாரிஷதர்கள் செய்த அபசாரம், நான் செய்த அபசாரமாகத்தான் ஆகிறது. அதைத் தாங்கள் க்ஷமித்துக் கொள்ளவேண்டும்; தங்களைப்போன்ற ப்ரம்ம நிஷ்டர்களான ப்ராம்மணர்களை நான் தெய்வமாக பாவித்துப் பூஜிக்கிறவன்

दैवाधीनं जगत्सर्वं मन्त्राधीनं तु दैवतम् ।
तन्मन्त्रं ब्राह्मणाधीनं ब्राह्मणाः मम देवताः ॥

தைவாதீனம் ஜகத்ஸர்வம் மந்த்ராதீனம் து தைவதம் ।
தன்மந்த்ரம் ப்ராஹ்மணாதீனம் ப்ராஹ்மணாः மம தேவதாः ॥

சராசரமான ஸகலஜகத்தும் கர்மாதீனமாக ஏற்பட்டது; அந்த கர்மாவோ வேதத்தினுடைய அதீனமாக விளங்கி வருகிறது; வேதமோ ப்ராம்மணனுடைய மூலமாகத்தான் ப்ரகாசிக்க வேண்டும்; இவ்விதம் சராசரமான ஸகல ஜகத்திற்கும் பரம்பரையாக மூலகாரணமாக பர்யவஸிக்கும் ப்ராம்மண ஜாதியைத் தவிற வேறொரு உத்கிருஷ்டமான தெய்வம் இல்லையென்று என்னுடைய எண்ணமாகும். அதனால் ப்ராம்மணனே நமக்கு மேலான தெய்வம் என்ற எண்ணத்துடன் நான் இந்த வைகுண்டத்தில் வாஸம் செய்து வருகிறேன்.

यस्यामलामृतकथाश्रवणावगाहः
सद्यः पुनाति जगदाश्वपचाद्विकुण्ठः ।
सोऽहं भवद्भिरुपलब्धसुतीर्थकीर्तिः
जह्यां स्वबाहुमपि वः प्रतिकूलवृत्तिम् ॥

யஸ்யாமலாம்ருதகதாச்ரவணாவகாஹः
ஸத்யः புநாதி ஜகதாச்வபசாத்விகுண்ட: ।
ஸோஹம் பவத்பிருபலப்த ஸுதீர்த்த கீர்த்திः
ஜஹ்யாம் ஸ்வபாஹுமபி வः ப்ரதிகூலவ்ருத்திம் ॥

மகான்களே! என்னுடைய நிர்மலமான கதாம்ருத ஸாகரத்தில் எந்த மனிதன் தன்னுடைய ச்ரோத்ரேந்த்ரியத்தைச் செலுத்தி கதாச்ரவணம் செய்கிறது என்ற வ்யாஜத்திலல், ஸக்ருதாவ்ருத்தி (ஒரு தடவை) ஸ்ரவணம் செய்தவனாகிறானே, அந்த மனிதன் யாராக இருந்தாலும், என்னுடைய கதாம்ருத ஸமுத்ர ஸ்ரவணமானது அவனையும் மற்ற ஜகத்தையும் சண்டாள பர்யந்தம்—ஜாதி பேதத்தைக் கவனிக்காமல்—தனம், வித்யை, வ்ருத்தம், ஆசாரம் முதலிய குணங்களையும் கவனிக்காமல் ஸம்ஸார ஸாகரத்தினின்றும் விமுக்தனாக ஆகும்படி செய்கிறதோ அந்த அப்ரச்யுதமான ஸ்வபாவத்தோடு கூடின நான் தங்களைப்போன்ற ப்ராம்மணர்கள் மூலமாகத்தான், கதாப்ரஸங்கமூலமாக மகா ப்ரஸித்தமான ஒரு கீர்த்தியை ஆங்காங்கு அமைத்தவனாக ஆகிறேன். என்னுடைய ஸத்கதைகளை ஆங்காங்கு ப்ரவசன மூலமாக ஸித்தப்படுத்தி என்னைப் ப்ரகாசப்படுத்தினவர்களல்லவா தங்களைப்போன்ற ப்ராம்மணர்கள்! அவர்களிடத்தில் நான் எப்படி விரோதமாக நடந்துகொள்ளமுடியும்? என்னுடைய கைகளே அந்த ப்ராம்மணோத்தமர்களுக்கு விரோதமான கார்யத்தைச் செய்து வந்தால் அவைகளைக் கூட நான் வெட்டி எறியத் தயாராக இருக்கிறேன். இந்த ஜய விஜயர்கள் என்ற பாரிஷதர்களை நான் விட்டிருக்கமாட்டேனா? தங்களுக்கு விரோதத்தைச் செய்யும் யாரும் எனக்கு பந்துவே இல்லை; சத்ருக்களேதான். ஆகையால் தாங்கள் இந்தப் பாரிஷதர்களுக்குக் கொடுத்த சாபத்தை நானும் ஆமோதித்தேன்" என்று சொல்லி ஸனகாதிகளிடம் பகவான் க்ஷமாபணம் செய்து கொண்டார்.

அந்த ஸந்தர்ப்பத்தில் இந்தப் பாரிஷதர்கள் இருவர்களும், லோக மாதாவான மகாலக்ஷ்மீயினுடைய ஸமீபம் சென்று தம்முடைய துக்கத்தைத் தெரிவித்துக்கொண்டு விமோசன காலத்தைப் பிரார்த்தித்துக் கேட்டார்கள். பரதேவதையும், பரம இருபையுடன் பாரிஷதர்களைப் பார்த்து

"ஸனகாதிகளுடைய சாபத்திற்கு நீங்கள் உட்பட்டேதான் ஆகவேண்டும்; ஆகையினல் பகவானுடைய சத்ருக்களாகவே நீங்கள் பூலோகத்திற்குச்சென்று ஜன்மத்தை அடைந்து த்வேஷ மூலமாக பகவானுடைய நினைவாகவே இருந்து வாருங்கள். கூடியசீக்கிரத்தில் விமோசனகாலம் ஏற்பட்டுவிடும்; பகவானும்

यदा यदा हि धर्मस्य ग्लानिर्भवति भारत ।
अभ्युत्थानमधर्मस्य तदात्मानं सृजाम्यहम् ॥

யதா யதா ஹி தர்மஸ்ய க்லானிர்பவதி பாரத ।
அப்யுத்தாநமதர்மஸ்ய ததாத்மாநம் ஸ்ருஜாம்யஹம் ॥

என்ற தன்னுடைய ப்ரதிக்ஞையை அனுஸரித்து தர்ம ஸ்தாபனம் செய்வதற்காக இக்ஷ்வாகு வம்சத்தில் தசரத சக்ரவர்த்தியினுடைய புத்ரனாக அவதரிக்கப் போகிறார்; நானும் "राघवत्वे भवेत्सीता" (ராகவத்வே பவேத்ஸீதா) என்ற நியாயத்தை அனுஸரித்து மிதிலாதிபதியான ஜனகமகாராஜாவினுடைய வம்சத்தில் அயோனிஜையாக அவதாரம்செய்து ஸீதை யென்ற பெயருடன் ராமனை பர்த்தாவாக அடைவேன். திவ்ய தம்பதிகளான நாங்கள் பித்ருவாக்ய பரிபாலனம் என்ற தர்மத்தை வ்யாஜமாக வைத்துக்கொண்டு தண்டகாரண்யத்தில் வஸிக்கப்போகிறோம். அந்த ஸந்தர்ப்பத்தில் நீ மறுபடியும் என்னிடம் வந்து இந்த விஷயத்தைத் தெரிவித்துக்கொண்டால் அந்த ராமன் மூலமாக ராக்ஷஸ பாவத்தினின்றும் உனக்கு விமுக்தி ஏற்பட்டு வைகுண்டத்திலேயே முன்போலவே பாரிஷத ஸ்தானத்தை அடையலாம்" என்றாள்.

இவ்வாறு லோகமாதாவான ஜகதீச்வரி தனக்கு அனுக்ரகம் செய்த விஷயத்தை நாரத மஹர்ஷி மூலமாக அறிந்த

கொண்டுதான் ராவணன் ஸீதையை மாத்ருத்வ புத்தியோடு பூஜார்த்தமாக அபஹரித்தான். இந்த விஷயமானது சென்ற ஆரண்ய காண்டத்தில், விஸ்தரிக்கப்பட்டிருக்கின்றது. இதனால் सीतापहरणेन (ஸீதாவஹரணேந) (ஸீதாபஹரணேந) ஸீதையை அபகரிப்பது என்பதின் மூலமாக अर्थः (அர்த:) (அர்த:) ப்ரயோஜனமானது, மோக்ஷமானது எந்த ராவணனுக்கு ஏற்படுமோ அந்த ராவணனால் ரக்ஷிக்கப்பட்ட லங்கையை ஆஞ்ஜனேயஸ்வாமியானவர் பார்த்து ஆனந்தித்தார் என்ற தாத்பர்யமும் सीतापहरणार्थेन रावणेन सुरक्षितां (ஸீதாவஹரணார்தேந ராவணேந ஸுரக்ஷிதாம்) (ஸீதாபஹரணார்தேந ராவணேந ஸுரக்ஷிதாம்) என்ற வாக்யத்தினால் வெளியாகிறது.

தவிரவும், सीतापहरणेन रावणकर्तृक सीताहरणेन (ஸீதாவஹரணேந ராவணகர்த்ருக ஸீதாஹரணேந) (ஸீதாபஹரணேந ராவணகர்த்ருக ஸீதாஹரணேந)—அதாவது ராவணன் ஸீதையை அபகரித்ததினால் अर्थः प्रयोजनं देवानां (அர்த: ப்ரயொஜநம் தெவாநாம்) (அர்த: ப்ரயோஜநம் தேவாநாம்) தேவகார்ய ஸித்தியானது எவன் மூலமாக ஏற்படுகிறதோ सः सीतापहरणार्थः (ஸः ஸீதாவஹரணார்த:) (ஸ: ஸீதாபஹரணார்த:) என்ற ஸமாஸத்தினால்

स हि देवैरुदीर्णस्य रावणस्य वधार्थिभिः ।
अर्थितो मानुषे लोके जज्ञे विष्णुः सनातनः ॥

ஸ ஹி தெவைருதீர்ணஸ்ய ராவணஸ்ய வதார்திபி: ।
அர்திதோ மாநுஷே லோகே ஜஜ்ஞே விஷ்ணு: ஸநாதந: ॥

ஸ ஹி தேவைருதீர்ணஸ்ய ராவணஸ்ய வதார்திபி: ।
அர்திதோ மானுஷே லோகே ஜக்ஞே விஷ்ணு: ஸநாதந: ॥

என்ற சாஸ்த்ரப்படி தேவர்கள் எந்த ராவணவதத்தை முன்னிட்டு மஹாவிஷ்ணுவைப் பூலோகத்தில் மனுஷ்யனாக அவதரிக்க வேண்டுமென்று ப்ரார்த்தித்துக்கொண்டார்களோ அந்த தேவர்களுடைய ப்ரயோஜனமும் ஸித்தித்து விடும்

என்ற தாத்பர்யமும் வெளியாகிறது. இல்லாவிடில்

सीतापहरणेन अर्थः अवतारप्रयोजनं रामस्य विष्णोः येन सः सीतापहरणार्थः (ஸீதாவஹரணேந அர்தஃ அவதார ப்ரயொஜநம் ராமஸ்ய விஷ்ணோ: யேந ஸ: ஸீதாபஹரணார்த:) என்ற ஸமாஸத்தினல் விஷ்ணு வானவர் பூலோகத்தில் மனுஷ்யனாக அவதாரம் செய்வ தற்கு ஸீதையை அபகரிப்பதன் மூலமாக ராவணன் காரணபூதனாக ஆகிறபடியினல் அந்த ராவணனைக் கவியானவர் ஸீதையைத்தான் அபகரித்து அதன்மூலம் மஹா விஷ்ணுவினுடைய அவதாரத்தைத் ராவணன் ஸபலமாகச் செய்தான் என்று ராவணனைக் குறிப்பிட்டு ஸ்துதிக்கிறார்.

இவ்விதம் सीतापहरणार्थेन (ஸீதாவஹரணார்தேந) (ஸீதாப ஹரணார்தேந) என்ற பதத்திற்கு வெகுப்ரகாரமாக அர்த்தமானது ஸ்புரிக்கின்றது. இதில் வ்யாக்யாதாக்களு டைய அபிப்ராயமே ப்ரமாணமாகும். அதனல் ஸ்புரிக்கின்ற தத்வங்களோ ஸீதையினுடைய பாதிவ்ரத்யம் மகாத்ருட மானது என்பது ஒன்று; இரண்டாவது ராவணனுக்கு ஸன காதிகள் சாபத்தினின்றும் விமோசனம் ஏற்பட்டு முன் போலவே வைகுண்டவாஸம் என்ற மோக்ஷம் ஸித்திப்பது; மூன்றுவதோ தேவகார்ய ஸித்தி; நான்காவது மஹாவிஷ்ணு வினுடைய மனுஷ்யாவதார ப்ரயோஜனம். இதை வித் வான்கள் ஸூக்ஷ்ம த்ருஷ்டியோடு பாாத்து ஸந்தோஷிக்க வேண்டும்.

ஒருவராலும் ப்ரவேசிக்க முடியாததான லங்கா நகரத்தை ஆஞ்ஜநேயஸ்வாமியானவர் பார்வையிட்டு, இந்த நகரத்தில் ஸ்ரீராமன்தான் ப்ரவேசித்து, எவ்விதம் ராவ ணனை ஜயிக்க முடியும் என்று மிகவும் கவலையை அடைந் தார்.

आगत्यापीह हरयः भविष्यन्ति निरर्थकाः ।
न हि युद्धेन वै लङ्कां शक्या जेतुं सुरैरपि ॥
इमां तु विषमां दुर्गां लङ्कां रावणपालिताम् ।
प्राप्यापि स महाबाहुः किं करिष्यति राघवः ॥

ஆகத்யாபீஹ ஹரயः பவிஷ்யந்தி நிரர்த்தகாः ।
ந ஹி யுத்தேந வை லங்காம் சக்யா ஜேதும் ஸுரைரபி ॥
இமாம் து விஷமாம் துர்காம் லங்காம் ராவணபாலிதாம் ।
ப்ராப்யாபி ஸ மஹாபாஹுः கிம் கரிஷ்யதி ராகவः ॥

ஸுக்ரீவன் முதலான வானர ச்ரேஷ்டர்கள்தான் இந்த லங்கா நகரத்தில் எப்படி ப்ரவேசிக்க முடியும்? அப்படி ப்ரவேசித்தாலும் லங்கா நகரத்தை ஜயிப்பது மிகவும் கஷ்டமானது. ராவணனால் பரிபாலிக்கப்பட்டு வரும் லங்கையை பாஹுபலத்தோடு கூடின ஸ்ரீராமனும் ஜயிப்பாரோ என்பது ஸந்தேகத்திற்குத்தான் இடமாக ஆகிறது. ஸர்வக்ஞனையும், பராக்ரமசாலியாயுமுள்ள ஆஞ்ஜநேயஸ்வாமிக்கே இவ்வித மான கவலையை லங்கா நகரமானது கொடுக்கும் காரணத் தினால், அந்த நகரமானது மிகவும் துர்கமம் என்பதை அறிந்து கொள்ள வேண்டும்.

மேலும் ராமன் தான் விஷ்ணு என்பதை ப்ரகாசப்படுத் தினால், லங்கையை ஜயிப்பது ஸுலபமாக ஆகிவிடலாம். ஆகிலும் ராவணன் சரணாகதி அடைந்துவிடுவான்; ராவண வதம் என்ற அவதார ப்ரயோஜனம் நிறைவேறாது. அப்படி யானால் தேவகார்யம் எப்படி ஸித்திக்கும்? தன்னுடைய விஷ்ணுத்வத்தை ப்ரகடனம் செய்யாமல், மனுஷ்ய பாவத்தை மாத்திரம் ப்ரகடனம் செய்துகொண்டிருக்கும் வரையில் லங்காநகரத்தை ராமன் ஜயித்துவிடுவார் என்று சொல்ல

முடியாது. தேவாதிதேவர்களுக்கும் கூட அசக்யமான காரியத்தை மனிதன் எவ்விதம் செய்ய முடியும்?" அநேக ப்ரகாரமாகத்தான் ஆஞ்ஜநேய ஸ்வாமிக்கு பெரிய கவலையை, லங்காநகரம் கொடுத்துவந்தது.

"ராக்ஷஸர்களோடு ஸாந்த்வ வசனமானது பயனற்றதாகவே ஆகிவிடும்; தானத்தினல் அவர்களை வசப்படுத்திக் கொள்வதும் ஸாத்தியமில்லாத கார்யமாகும். அர்த்தத்தினல் த்ருப்தர்களாக உள்ள ராக்ஷஸர்களை, தானத்தினல் த்ருப்தி செய்துவைக்க முடியுமா? புத்தியை பேதிப்பது என்பது ச்ரமஸாத்யமாகும். ஸத்புத்தியோடு கூடினவர்களுக்கு ஹிதத்தை உபதேசிக்கலாம். துர்புத்தியுள்ளவர்களை, ஹிதோபதேசத்தினல் மாற்றமுடியாது. தண்டப்ரயோகத்திற்கும் பலிஷ்டர்களாக இருக்கும் காரணத்தினல் அவகாசமில்லை. இவ்வாறு, ஸாம, தான, பேத தண்டம் என்ற நான்குவித உபாயங்களையும் உபயோகப்படுத்த அவகாசமில்லாத லங்காநகரத்தில், எவ்விதம்தான் ராமன் யுத்தம் செய்து ஜயிப்பாரோ? ஸமுத்ரத்தைத் தாண்டி இந்த லங்காநகரம் வருவதற்கோ, அங்கதன், நீலன், ஸுக்ரீவன், நாலுருவன் இந்த நான்கு பேர்களுக்குத்தான் சக்தி ஏற்படக்கூடும். முன்பாக ஸீதையானவள் ஜீவனுடன் இருக்கிறாளா இல்லையா என்பதைத் தெரிந்துகொள்ளவேண்டும். அத்துடன் நான் இப்பொழுது ஸ்வீகரித்துக் கொண்டிருக்கும் ரூபத்தோடு லங்காநகரத்திற்குள் ப்ரவேசம் செய்வதும், நீதியாக ஆகாது. வஞ்சகஸ்வபாவமுள்ள ராக்ஷஸர்களை வஞ்சித்து நகரத்திற்குள் ப்ரவேசம் செய்யவேண்டும். ராக்ஷஸர்கள் கண்டுபிடிக்கக்கூடிய சரீரத்துடன் லங்காநகரத்தில் ப்ரவேசித்தால், ராக்ஷஸர்கள் என்னைப் பிடித்துத் தம்வசம் கொண்டுபோய் விடுவார்கள். ராக்ஷஸர்களால் கண்டுபிடிக்க முடியாததான மிகவும் ஸூக்ஷ்மமான சரீரத்தோடு நான் ப்ரவேசித்தால், ஸமஸ்தமான லங்கையையும் பார்த்து ஸீதையை சீக்ரத்தில் கண்டுபிடிப்பது ச்ரம ஸாத்யமாகும். எவ்விதம் தான்

இந்த நகரத்திற்குள் ப்ரவேசிப்பது என்பது எனக்குப் புலப்படவில்லை; ராக்ஷஸர்களுக்குத் தெரியாமலும் இருக்க வேண்டும். சீக்கிரமான ஸஞ்சாரம் செய்வதற்கு அர்ஹமான ஸ்தூல ரூபத்தையும் ஸ்வீகரித்துக்கொள்ள வேண்டும். அப்படியானால்தான் லங்கா நகரத்தில் ப்ரவேசித்து ஸீதையை நான் தேடி அந்த பரதேவதையைக் கண்டுபிடிக்கலாம். ஸீதையைக் கண்டுபிடிப்பதும் ராக்ஷஸர்களுக்கு நான் புலப்படாமலும் ராவணனுக்குத் தெரியாமலும் எந்த உபாயத்தை அவலம்பித்து அவளைப் பார்ப்பது என்ற விஷயமும் எனக்குப் புலப்படவில்லை. தீர்க்காலோசனை செய்யாமல் அவஸரப்படக்கூடாது. ராமனுடைய கார்யத்திற்கு ஹானி வரக்கூடாது. ஏகாந்தமாக ஒருவருக்கும் தெரியாமல், ஸீதையை நாம் கண்டுபிடிக்க வேண்டும். அது எப்படித்தான் ஸாத்யமாகுமோ?

भूताश्चार्था विपद्यन्ते देशकालविरोधिताः ।
विक्लवं दूतमासाद्य तमस्सूर्योदये यथा ॥
अर्थानर्थान्तरे बुद्धिर्निश्चिताऽपि न शोभते ।
घातयन्ति हि कार्याणि दूताः पण्डितमानिनः ॥
न विनश्येत्कथं कार्यं वैक्लव्यं न कथं भवेत् ।
लङ्घनं च समुद्रस्य कथं नु न भवेत् वृथा ॥

ஹூதாஶ்சார்தா விபத்யந்தே தேசகாலவிரோதிதா: ।
விக்லவம் தூதமாஸாத்ய தமஸ் ஸூர்யோதயே யதா ॥
அர்த்தாநர்தாந்தரே புத்திர்நிஶ்சிதாபி ந ஶோபதே ।
காதயந்தி ஹி கார்யாணி தூதா: பண்டிதமானிந: ॥

ந விநச்யேத்கதம் கார்யம் வைக்லவ்யம் ந கதம் பவேத் ।
லங்காயாம் ச ஸமுத்ரஸ்ய கதம்ன்னு ந பவேத் வ்ருதா॥

த்ருடமான உபாயத்தை அனுஷ்டானம் செய்து அபூர்வமான ஒரு கார்யத்தை பல பர்யவஸாயியாக ஆகும்படி ப்ரயத்னம் செய்தாலும் அவிவேகியான தூதன் மூலமாக தேசத்திற்கும் காலத்திற்கும் விருத்தமாக ஆகி அந்த கார்யமானது, பலனளிக்கும் காலத்தில் வீணாக ஆகிவிடும். ஸூர்யன் உதித்ததும் இருட்டானது நஷ்டமாகப் போவதுபோல், கார்ய நாசம் ஏற்பட்டுவிடும்; தூதனுடைய புத்தி சாதுர்யத்தைக்கொண்டுதான் ஸகல கார்யமும் பலவத்தாக ஆக வேண்டும். தூதன் புத்தி சக்தி இல்லாதவனாக இருந்தால் அவச்யம் செய்யவேண்டிய கார்யம் இன்னதுதான், செய்யக்கூடாத கார்யம் இன்னதுதான், என்ற விஷயத்தில் மந்த்ரிகள் மூலமாக நிர்ணயிக்கப்பட்ட ராஜனுடைய புத்திகூட சோபிக்காமல் ஆகிவிடும்; ஞானமில்லாத தூதர்கள்தான் புத்திமான்போல் நடித்து வந்து கார்யத்தைக் கெடுத்துவிடுவார்கள்; ப்ரக்ருதமான கார்யம் எவ்விதம் நஷ்டத்தை அடையாமலிருக்குமோ, நான் ஸமுத்ரத்தைத் தாண்டினதும், பயனுள்ளதாக எப்படி ஆகுமோ, அப்படிச் செய்யவேண்டும்," என்று பலவாறாக ஆஞ்ஜநேய ஸ்வாமியானவர் லங்கா நகரத்தைப் பார்த்துக்கொண்டே சிந்தா ஸாகரத்தில் மூழ்கினர்.

"தவிரவும் நான் இந்த சரீரத்தோடு இந்த ஸ்தலத்திலேயே நின்று வந்தேனானால் நிச்சயமாக ராக்ஷஸர்களுடைய வசமாகி நாசத்தை அடைந்துவிடுவேன்; என்னுடைய ஜன்மத்திற்கு குறைவு ஏற்படுவது என்னுடைய கவலையில்லை; ஆனால் ராமகார்யம் கெடாமலிருக்கவேண்டும். ஆகையினால் ராத்ரியில் மிகவும் ஸூக்ஷ்மமான உருவத்தை எடுத்துக் கொண்டு லங்காநகரத்தில் ப்ரவேசித்து ஸீதையைத் தேட ஆரம்பிக்கவேண்டும்" என்று ஆலோசித்து சூர்யனுடைய

அஸ்தமன காலத்தை எதிர்பார்த்து வந்தார். சற்று நேரத்திற்கெல்லாம் சூரியபகவானும் அஸ்தமித்து விட்டார். ஹனுமானும் ஒரு சிறிய பூனைக்குட்டி போல் தன்னுடைய உருவத்தை எடுத்துக்கொண்டு ப்ரதோஷ காலத்தில் ப்ராகாரத்தைத் தாண்டிக் குதித்து லங்காநகரத்திற்குள் ப்ரவேசம் செய்தார். மிகவும் அத்புதமான ஸுவர்ணம் வெள்ளி மரகதம் முதலிய ரத்னவிசேஷங்களால் அலங்கரிக்கப்பட்ட கோபுரப்ராஸாத விசேஷங்களையும் பார்த்து ஆச்சரியத்தை அடைந்தார். சந்த்ரனும் பரிபூர்ண கலையோடு ராம காரியத்தில் ஆஞ்ஜநேய ஸ்வாமிக்கு ஸகாயம் செய்வது போல் நிர்மலமான காந்தியுடன் ப்ரகாசித்து வந்தான்.

शङ्खप्रभं क्षीरमृणाळवर्णमुद्गच्छमानं व्यवभासमानम् ।
ददर्श चन्द्रं स हरिप्रवीरः पोप्लूयमानं सरसीव हंसम् ॥

ஶஂகப்ரப4ம் க்ஷீரம்ருணாளவர்ணமுத்3கச்ச2மாநம் வ்யப4வபா4ஸமாநம் ।
த3த3ர்ச2 சந்த்3ரம் ஸ ஹரிப்ரவீர: போப்லூயமாநம் ஸரஸீவ ஹம்ஸம் ॥

சங்கம் போலும், க்ஷீரம் போலும், தாமரைத் தண்டின் நூல் போலும் சுத்தமான காந்தியோடு ப்ரகாசித்து வரும் சந்த்ரனைப் பார்த்து ஆஞ்ஜநேய ஸ்வாமியானவர் மானஸஸரஸில் ஹம்ஸபக்ஷியைப் பார்த்தது போல் நினைத்து ஸந்தோஷமடைந்தார்.

பிறகு, ஆங்காங்கு லங்காநகரத்திற்குள் முக்யமான க்ருஹங்களையும், ப்ராஸாத விசேஷங்களையும், பார்த்துக் கொண்டு ஸீதையைத்தேடுவதற்காக ஸஞ்சாரம் செய்து கொண்டிருக்கும் காலத்தில் லங்காநகரத்திற்கு அதிதேவதையான லங்கிணி என்ற பெயரோடு கூடின ஒரு ராக்ஷஸ ஸ்த்ரீயானவள் ஆஞ்ஜநேயஸ்வாமியைப் பார்த்து மிகவும்

கோபத்தை அடைந்து அவருக்கு முன்பாக நின்றுகொண்டு அட்டஹாஸத்துடன், ஸிம்மநாதத்தைச் செய்துகொண்டு, அவரைப் பார்த்துச் சொல்கிறாள்.

कस्त्वं केन च कार्येण इह प्राप्तो वनालय ।
कथयस्वेह यत्तत्वं यावत्प्राणाः धरन्ति ते ॥
न शक्यं खल्वियं लङ्का प्रवेष्टुं वानर त्वया ।
रक्षिता रावणबलैरभिगुप्ता समन्ततः ॥

கஸ்த்வம் கேந ச கார்யேண இஹ ப்ராப்தோ வநாலய ।
கதயஸ்வேஹ யத்தத்வம் யாவத்ப்ராணா: தரந்திதே ॥
ந சக்யம் கல்வியம் லங்கா ப்ரவேஷ்டும் வாநரத்வயா ।
ரக்ஷிதா ராவணபலைரபிகுப்தா ஸமந்தத: ॥

"யாரப்பா நீ, காட்டில் வஸிக்கக்கூடிய வானரமாகத் தோன்றுகிறதே, நகரத்தில் உனக்கு என்ன காரியம் இருக்கிறது? உன்னுடைய ப்ராணனுக்கு ஆபத்து வருவதற்குள் உண்மையைச் சீக்கிரம் சொல்லு. ராவணனுடைய படைகளால் நான்கு பக்கங்களிலும் ரக்ஷிக்கப்பட்டு வரும் இந்த நகரத்தில் ப்ரவேசிப்பதற்கு உனக்கு யோக்யதையே இல்லை" யென்று பரம அட்டஹாஸத்துடன் கர்ஜித்துக் கொண்டு ஆஞ்ஜநேயஸ்வாமியைப் பார்த்துக் கேட்டாள். ஆஞ்ஜநேயஸ்வாமியும், "நீ யார்? என்னை எதற்காக இவ்விதம் ப்ரச்னம் செய்கிறாய், மிகவும் அட்டஹாஸம் செய்கிறாயே?" என்று பதிலுக்குக் கேட்டார். அதைக்கேட்ட லங்கிணியும் மிகவும் கோபத்தை அடைந்து "நான் ராக்ஷஸ ராஜனை ராவணனுடைய ஆக்ஞையை ரக்ஷிப்பவள், இந்த நக

ரத்திற்கு அதிதேவதையென்று என்னைச் சொல்வார்கள் என்னுடைய தயவில்லாமல் யாரும் இந்த நகரத்திற்குள் ப்ரவேசிக்க முடியாது. இப்பொழுதே உன்னை ப்ராணனை இழக்குமாறு செய்துவிட்டு நான் கர்ஜிக்கப் போகிறேன்" என்று உத்கோஷித்தாள். ஆஞ்ஜநேயஸ்வாமியோ லங்கிணியைப் பார்த்து "நான் லங்காநகரத்தைப் பார்க்க வேண்டும் என்ற ஆசையுடன் வந்தவன். ஆகையால் என்னை நகரத்திற்குள் ப்ரவேசிக்கும்படி அனுமதிக்க வேண்டும்; நகரம் முழுவதும் சுற்றிப் பார்த்துவிட்டு வந்த வழியோடு நான் திரும்பிப் போய்விடுகிறேன்" என்று பணிவாகக் கேட்டுக் கொண்டார். லங்கிணியோ ஹனுமாருடைய வார்த்தையை லக்ஷியம் செய்யாமலே, தன்னுடைய கையினால் ஆஞ்ஜநேயஸ்வாமியை ஓங்கி அடித்தாள். லங்கிணியினால் அடிக்கப்பட்ட ஆஞ்ஜநேயஸ்வாமியோ அந்த அடியினால், கொஞ்சம் கோதத்தை அடைந்தவராக ஆகி தன்னுடைய இடது கை விரலை முஷ்டியாகச் செய்துகொண்டு பரம கோபத்துடன் லங்கிணியை ஓங்கிக் குத்தித்தள்ளினார். ஸ்த்ரீ ஜாதியைக் கொல்லக்கூடாது என்ற சாஸ்த்ரத்தை கருதி அவளுடைய ப்ராணனை அபகரிக்க ஆஞ்ஜநேயஸ்வாமிக்கு இஷ்டமில்லை. ஆகிலும் ஆஞ்ஜநேயஸ்வாமியினுடைய இடது கைக் குத்துத் தாங்காமலே, வெகு தூரத்திற்கப்பால் போய்விழுந்து மூர்ச்சையை அடைந்து விட்டாள். ஆஞ்ஜநேயஸ்வாமிக்கும் அவளுடைய அவஸ்த்தையைப் பார்த்து கருணை ஏற்பட்டு விட்டது. கொஞ்சகாலமான பிறகு, லங்கிணியும் மெதுவாக மூர்ச்சை தெளிந்து மிகவும் தாழ்மையுடன், ஆஞ்ஜநேய ஸ்வாமியைப் பார்த்துச் சொன்னாள். "ஹே வானரச்ரேஷ்ட, பலிஷ்டர்களான மகான்களெல்லோர்களும் ஸ்த்ரீயைக் கொல்லக்கூடாது என்ற சாஸ்த்ர மர்யாதையைத் தாண்டாமல் நடந்து கொள்வார்கள் என்பதை உன்மூலமாக நான் தெரிந்துகொண்டேன். நான் லங்கா நகரத்திற்கு அதிதேவதை; இதுவரையில் ஒருவராலும் நான் ஜயிக்கப்பட்டவள் அல்ல; உன்னாலோ இப்பொழுது நான்

ஜயிக்கப்பட்டுவிட்டேன். உன்னுடைய அனுக்ரக வசத்தி னால், எனக்கு அல்ப ஞானமும் ஏற்பட்டுவிட்டது. நான் பூர்வத்தில் மதாலஸை என்று பெயர்கொண்ட ஒரு அப்ஸர ஸாக இருந்துவந்தேன். ப்ரம்ம ஸபையில் பரத சாஸ்த் ரத்தை அனுஸரித்து நான் ஒரு ஸந்தர்ப்பத்தில் நாட்டிய மாடி வரும்பொழுது ப்ரம்மாவானவர், என்னுடைய சில அபிநயங்களெல்லாம் சாஸ்த்ர விருத்தமாக இருக்கிற தென்று ஸபையில் அவமதித்தார். நான் பொறுமையை இழந்து, பரதசாஸ்த்ரத்தினுடைய ஞானமே, வாஸ னையே உமக்கில்லையென்று ப்ரம்மாவைப் பார்த்து திக்காரம் செய்தேன். உடனே ப்ரம்மாவானவர் கோபத்தை அடைந்து என்னை ராக்ஷஸ யோனியில் பிறக்கும்படி சபித்து விட்டார். அதனால் நான் ராக்ஷஸியாகப் பிறந்து ராவண னுடைய வசத்திலகப்பட்டுக் கொண்டு இந்த நகரத்தை, அதிதேவதையாக இருந்துகொண்டு ரக்ஷித்து வருகிறேன்; சாபத்திற்கு விமோசன காலத்தையும் ப்ரம்மாவிடம் நான் ப்ரார்த்தித்துக் கொண்டு கேட்கும் காலத்தில், 'எப் பொழுது ஒரு வானரமானது உன்னை ஜயித்துத் தன் வச மாக்கிக்கொள்ளுமோ, அப்பொழுது லங்காநகரத்தில் ராக்ஷ ஸர்களுக்கு மகத்தான பயம் ஏற்பட்டுவிட்டது என்பதை நீ அறியவும். அதுவும் ஸீதாதேவியினுடைய நிமித்தமாக ராக்ஷஸ ராஜனை ராவணனுக்கு விநாசகாலமும் ஏற்பட்டு விடும், அப்பொழுது நீயும் ராக்ஷஸ பாவத்தினின்றும் விமோ சனத்தை அடையலாம்' என்று எனக்கு பிரம்மாவானவர் அனுக்ரஹம் செய்தார். ப்ரம்மா சொன்னது பொய்யாக ஆகுமா? ராக்ஷஸர்களுக்கு விநாச காலம் வந்துவிட்டது. லங்காநகரத்திற்குள், நீ ப்ரவேசித்து உன் இஷ்டம்போல் ஸர்வ கார்யங்களையும் செய்துகொள்ளலாம்.

प्रविश्य शापोपहतां हरीश्वर शुभां पुरीं राक्षसमुख्यपालिताम् ।
दिदृक्षया त्वं जनकात्मजां सतीं विमार्ग सर्वत्र गतो यथासुखम् ॥

வ்ரவிஷ்ய ஸாவொவஹதாம் ஹரீஷ்வர
ஸுஹாம் வாஸீம் ராக்ஷஸேவ்யவாஹிதாம் ।
நிஹத்ய ரக்ஷோ கணம் ஜநகாத்மஜாம் ஸதீம்
விமார்க்ஷ ஸர்வத்ர கதோ யதாஸுகம் ॥

ப்ரவிச்ய சாபோபஹதாம் ஹரீச்வர
சுபாம் புரீம் ராக்ஷஸமுக்ய பாலிதாம் ।
நிஹத்ய ரக்ஷோ கணம் ஜநகாத்மஜாம் ஸதீம்
விமார்க்ஷ ஸர்வத்ர கதோ யதாஸுகம் ॥

வானரச்ரேஷ்டனுக உள்ள நீ லங்காநகரத்தில் ப்ரவேசிக்கக் கொஞ்சமேனும் பீதியை அடையவேண்டாம். அதியுக்ரமான தபஸைச் செய்து வரபலத்தால் த்ருப்தனான ராவணனுக்கும் நாசகாலம் வந்துவிட்டது. நந்திகேச்வரருடைய சாபமானது பலித்துவிட்டது. ப்ரம்மாவினுடைய அனுக்ரஹத்தினல் இந்த நகரத்திற்கு ஒரு வானரபாதை ஏற்படுகிற காலம் வரையிலும் நந்திகேச்வரருடைய சாபம் பலிக்காமல் போகட்டும் என்று ப்ரம்மா சொன்னதினல். இவ்வளவு காலம் லங்காநகரம் விளங்கி வந்தது; இப்பாழுது வானரச்ரேஷ்டனான உன்னுடைய பாதை ஏற்பட ஸந்தர்ப்பம் வந்ததினல் லங்காநகரத்தினுடைய வாழ்வு போய்விட்டதென்றே தீர்மானிக்கவேண்டும். ஆகையினல் சாபத்தினல் நாசத்தை அடையக்கூடிய லங்காநகரத்தில் சென்று அந்தப்புர பர்யந்தம் பயமில்லாமல் நீ ஸஞ்சாரம் செய்து பதிவ்ரதாசிரோமணியான ஸீதையை நீ தேடிப்பார்த்துவிட்டு ஸௌக்யமாகத் திரும்பிப் போகவேண்டும். ஸீதாதேவியும் கொஞ்சமேனும் கல்மஷமில்லாமல் இந்த நகரத்தில் விளங்கி வருகிறாள் அதில் ஸந்தேஹமே வேண்டாம்" என்று ஆஞ்ஜநேயருக்கு லங்கிணியானவள் உபதேசம் செய்து நகரத்திற்குள் ப்ரவேசிக்கச் செய்தாள்.

ஆஞ்ஜநேயஸ்வாமியானவர் லங்கா நகரத்திற்கதிதேவதையான ராக்ஷஸ ஸ்த்ரீயை ஜயித்துவிட்டு லங்கா நகரத்திற்குள் ப்ரவேசம் செய்தார்.

अद्वारेण महाबाहुः प्राकारं अभिपुप्लुवे ।
प्रविश्य नगरीं लङ्कां कपिराजहितङ्करः ॥
चक्रेऽथ पादं सव्यञ्च शत्रूणां स तु मूर्धनि ।
प्रविष्टः सत्वसंपन्नः निशायां मारुतात्मजः ॥

ꣽ꣇ꣁ꣈ꣀꣁ꣈ꣀ ꣇ꣁꣁ꣈ꣀꣁ꣈ꣀꣁ꣈ꣀ

"ஒரு நகரத்தைவிட்டு மற்றொரு நகரத்திற்கு ப்ரயாணம் செய்கிற காலத்திலேயோ, நூதனமான க்ருகத்தில் ப்ரவேசிக்கும் பொழுதோ, விவாக காலத்திலோ, வலது காலை முதலில், முன்பாக எடுத்துவைத்துச் செல்லவேண்டும். சத்ருவினுடைய க்ருஹத்திற்குச் செல்லும் காலத்திலோ இடது காலை முன்பாக வைத்து ப்ரவேசிக்கவேண்டும். அப்படியானால் சத்ரு நாசமானது ஸ்வதஸ்ஸித்தமாக ஏற்பட்டு விடும்" என்று சொல்கிற இந்த சாஸ்த்ரத்தை அனுஸரித்து ப்ராகாரத்தைத் தாண்டி நகரத்திற்குள் குதிக்கும்பொழுது தன்னுடைய இடது காலை முன்புவைத்து குதித்தார். இவை களெல்லாம் ராவணனை ஸுலபமாக ராமன் ஜயிக்க ஹேதுவாக ஆகின்றன.

अद्धारेण महाबाहुः (ஆத்தாரேண மஹாபாஹுः) (அத்வாரேண மஹாபாஹுः) என்ற இடத்தில் அகாரத்தை முதல் அக்ஷரமாக உடைய "அஷ்டாக்ஷரீ" மஹா மந்த்ரத்தினுடைய அர்த்தத்தைத் தியானம் செய்த மஹிமையினால் ஆஞ்ஜநேயஸ்வாமியானவர் லங்கா நகரத்திற்குள் சென்றார் என்ற அர்த்தமும் ஸூசிப்பிக்கப்படுகிறது. லங்கா நகரமோ இதரர்களால் ப்ரவேசிக்க முடியாத துர்க்கங்களால் சூழப்பட்டிருக்கும் காரணத்தை முன்னிட்டு மந்த்ரயோக சக்தியுள்ள மகான்களால்தான் ப்ரவேசிக்க முடியும். அதை அனுஸரித்துத்தான் ஹனுமானும் அஷ்டாக்ஷரீ மந்த்ர ப்ரபாவத்தால் ப்ரவேசித்தார். ओम् नमो नारायणाय (ஓம் நமோ நாராயணாய) (ஓம் நமோ நாராயணாய) என்பதே அந்த மந்த்ரமாகும்; அதில் ओम् (ஓம்) (ஓம்) என்ற அக்ஷரம் அகாரம் உகாரம் மகாரம் என்ற மூன்று அவயவங்களுள்ளதால், அவற்றுள் அகாரம் முதல் அவயவமான காரணத்தைக் கொண்டு, அகாரமானது த்வாரத்தில், முன்பாக எந்த மந்த்ரத்தில் இருந்து வருகிறதோ அந்த மந்த்ரத்திற்கு अद्वार (ஆத்வாரம்) (அத்வாரம்) என்று பெயர். அதனுடைய மஹிமையினால் தான் மிகவும் துர்க்கமமான லங்காநகரத்திற்குள் ஆஞ்ஜநேயஸ்வாமிக்கு ப்ரவேசிக்க முடிந்தது.

தவீரவும், அகாரத்தின் பொருளோ, மகாவிஷ்ணு என்று சொல்லப்படும். ப்ரக்ருதத்திலோ, அந்த மகாவிஷ்ணு ஸ்ரீராமமூர்த்தியாக விளங்கி வருகிறார். த்வார் (द्वार) (த்வாரம்) என்ற பதத்தினுலோ உபாயம் என்ற அர்த்தம் வெளியாகிறது. ஒருவராலும் ப்ரவேசிக்க முடியாத லங்கா நகரத்திற்குள் ஆஞ்ஜநேயஸ்வாமியானவர், எந்த உபாயத்தை வைத்துக் கொண்டு ப்ரவேசித்தார் என்ற சந்தேகத்திற்கு, அகாரம் தான் த்வாரம், அதாவது மகாவிஷ்ணுவாகிய ஸ்ரீராமனைத்தான் உபாயமாக அவலம்பித்து நகரத்திற்குள் ப்ரவேசித்தார். நகரத்திற்குள் ப்ரவேசிப்பது மிகவும் ஸாத்தியப்படாதது என்று ஆஞ்ஜநேயஸ்வாமிக்கு முதலில் தோன்றியது. பிறகு நகரத்திற்கு வெளியிலேயே நின்று கொண்டு ஸ்ரீராமதாரக மகாமந்த்ரத்தை ஜபம் செய்து ராமனைத்தியானம் செய்தார். இரண்டு கண்களையும் மூடிக் கொண்டு ராமத்யானம் செய்தபடியினுல் கண்களைத்திறக்கும் பொழுது நகரத்திற்கு வெளிபாகத்தில் நின்று வந்த ஆஞ்ஜ நேயஸ்வாமியானவர், உள்பாகத்தில், நின்றவராகக்காணப் பட்டார். இதனுல் "ஸ்ரீராம ஷடக்ஷரீ" என்ற மஹா மந்த்ரத்தின் வைபவமும் வெளியாகிறது.

அத்துடன் ओम् (ஓ3ம்) (ஓம்) என்ற ப்ரணவத்தில் அகாரமானது முதல் மாத்திரையாக ஆகும். एतेनैव आयतनेन परं वा अपरं वा ब्रह्म अन्वेति (ஏதேதைநவ ஆயதநேந பரம் வா அபரம் வா ப்3ரஹ்ம அந்வேதி) ஏதேனைவ ஆயதநேந பரம் வா அபரம் வா ப்ரஹ்ம அந்வேதி) என்ற ச்ருதிப்ரகாரம் ப்ரணவோபாஸனமானது பரப்ரும்ம ப்ராப்திக்கும் அபர ப்ரும்ம ப்ராப்திக்கும் அந்தரங்கமான ஸாதனம் என்பது வெளியாகிறது. அதில் அ, உ, ம என்ற மூன்று அக்ஷரங்களையும், மூன்று மாத்திரைகளாக, உபநிஷத்துக்களில் குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

मीयते साक्षात्क्रियते अनया ब्रह्मेति

மீயதே ஸாக்ஷாத்க்ரியதே அநயா ப்3ரஹ்மேதி

மீயதே வாகூத்க்ரியதே அஸயா ப்ரஹ்மேதி

என்ற ஸமாஸத்திலை ப்ரும்ம ஸ்வரூப ஸாகூத்காரத்திற்கு ஒவ்வொரு அகூஷரமும் ஸாதனமாக ஆகிறபடியிலை மாத்ரா (ஆத்ரா) (மாத்ரா) என்ற சப்தத்திலை அகூஷரங்கள் குறிப்பிடப்படுகின்றன. அதில் அகாரத்திற்கு அதிதேவதை, சப்த ப்ரும்மமாகிய ருக்வேதமும், உகாரத்திற்கதிதேவதை யஜுர்வேதமும், மகாரத்திற் கதிதேவதை ஸாமவேதமாகவும் பிரிக்கப்பட்டிருக்கின்றன. அகாரம் என்ற முதல் மாத்திரையை உபாஸிக்கிறவர்களுக்கு, ருக்வேதம் ப்ரத்யகூஷமாக ஆகி, உகாரமாகிற இரண்டாவது மாத்திரையை உபாஸிக்கிறவர்களுக்கு யஜுர்வேதமானது ப்ரத்யகூஷமாக ஆகி, மகாரம் என்ற மூன்றாவது மாத்திரையை உபாஸிக்கிறவர்களுக்கு ஸாமவேதமானது ப்ரத்யகூஷமாக ஆகி, அவரவர்களுடைய மநோரதத்தைப் பூர்த்தி செய்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆஞ்ஜநேய ஸ்வாமி, ப்ரக்ருதத்தில் லங்கா நகரத்திற்கு வந்தோ லங்கா நகரத்திலுடைய ஸந்நிவேச விசேஷங்களைப் பார்க்க வந்தவரல்ல; ஸீதா தேவியிலுடைய தர்சனத்திற்காகத்தான் வந்தவர். ஸீதாதேவியோ, தாரக ப்ரும்மமாகிய ஸ்ரீ ராமலுடைய தர்ம பத்னி என்பது ப்ரஸித்தமானதே; அதாவது பரப்ரம்ம மஹிஷியாக தேவியானவள் ஆகிறாள், "ஸௌந்தர்ய லஹரீ" என்ற க்ரந்தத்திலும் தேவியை வர்ணிக்கும் ஸந்தர்ப்பத்தில்,

गिरामाहुर्देवीं द्रुहिणगृहिणीं आगमविदः
हरेः पत्नीं पद्मां हरसहचरीं अद्रितनयाम् ।
तुरीया कापि त्वं दुरधिगमनिस्सीममहिमा
महामाया विश्वं भ्रमयसि परब्रह्ममहिषी ॥

மிராஹுர்தேவீம் த்ருஹிணக்ருஹிணீம் ஆகமவிதஃ
ஹரேஃ பத்னீம் பத்மாம் ஹரஸஹசரீம் அத்ரிதநயாம் ।
துரீயா காபி த்வம் துரதிகமநிஸ்ஸீமமஹிமா
மஹாமாயா விஶ்வம் ப்ரமயஸி பரப்ரஹ்மமஹிஷீ ॥

ராமாஹ்ருர்தேவீம் த்ருஹிணக்ருஹிணீம் ஆகமவித:
ஹரே: பத்நீம் பத்மாம் ஹரஸஹசரீம் அத்ரிதநயாம்।
துரீயா காபி த்வம் துரதிகமநிஸ்ஸீமமஹிமா
மஹாமாயா விச்வம் ப்ரமயஸி பரப்ரஹ்மமஹிஷீ॥

என்று பகவத் பாதர்கள், தேவியை பரப்ரும்ம மஹிஷியாக வர்ணித்திருக்கிறார்கள். அது ப்ரக்ருதத்தில் ஸீதைக்கே பொருந்தினதாக ஆகும். ப்ரும்ம ப்ராப்திக்கு ஸாதனமான ஓங்காரமே, ப்ரும்மரூபிணியான, பரதேவதையினுடைய ஸாக்ஷாத்காரத்திற்கு காரணமானபடியினால் ஸீதாதேவியினுடைய தர்சனத்திற்கு ஓங்காரோபாஸனமே முக்யமான ஸாதனமாகு மென்று ஆஞ்ஜநேய ஸ்வாமியானவர் தீர்மானித்துத் தான் ருக்வேதியானதினால், ஓங்காரத்திற்குள் முதலக்ஷரமான அகார மென்ற முதல் மாத்திரையை அர்த்தாநு ஸந்தானத்தோடு கூட ஜபம் செய்த மகிமையிலிருந்தும் 'நூற்றொருரு' (101) சாகைகளாகப் பிரிந்த ருக்வேத மென்ற சப்தப்ரும்ம புருஷனே ஆஞ்ஜநேய ஸ்வாமிக்குப் பிரத்யக்ஷமாக ஆகி, லங்கா நகரத்திற்குள் ப்ரவேசிக்கிற விஷயத்தில் உபாய பூதனாக ஆனதைக்கொண்டு, ஆஞ்ஜநேய ஸ்வாமி ஸுலபமாகப் ப்ரவேசித்து விட்டார் என்பது வெளியாகிறது. அதைத்தான் अद्वारेण महाबाहु: प्राकारं अभिपुप्लुवे (அத்வாரேண மஹாபாஹு: ப்ராகாரம் அபிபுப்லுவே) (அத்வாரேண மஹா பாஹு: ப்ராகாரம் அபிபுப்லுவே) என்ற வாக்யத்தினால் வால்மீகி மஹர்ஷியானவர் ஸூசிப்பிக்கின்றார்.

இந்த விஷயமானது மிகவும் கோப்யமானதினால் லோகப்ரஸித்தியை எதிர்பார்க்கிறவர்களால் அறிவது மிகவும் கஷ்டம் இதுதான் வால்மீகி மஹர்ஷியினுடைய பரமதாத்பர்ய விஷயீபூதமான அர்த்தமாகும் என்பதில் கொஞ்சமேனும் ஸந்தேகமேயில்லை. எவ்விதமானாலும் ஆஞ்ஜநேயஸ்வாமியானவர் லங்காநகரத்திற்குள் ப்ரவேசம் செய்தது अद्वारं (அத்வாரம்) (அத்வாரம்) வழியாகத்தான். शत्रो: पुरं ग्रामं गृहं वा अद्वारेण प्रविशेत् शत्रुविनाशाय (ஸத்ரோ: புரம் க்ராமம் க்ருஹம் வா அத்வாரேண

வ்ருக்ஷைஸ்ச பஹுபி: புண்யை: ஸமந்தாத் பரிவாரிதம்) (சத்ரோ: புரம் க்ராமம் க்ருஹம் வா அத்வாரேண ப்ரவிசேத் சத்ருவிநாசாய) என்ற ஸ்ம்ருதிவசனத்தைக்கொண்டு ப்ரஸித்தமான த்வாரம் வழியாக சத்ருக்ருகத்திற்குள் ப்ரவேசிக்கக்கூடாது என்பதை முக்கியமாக அறியவும்.

இவ்விதம் லங்காநகரத்திற்குள் அனுப்ரவேசம் செய்து ஆஞ்ஜநேயஸ்வாமியானவர் அபூர்வமான ப்ராஸாத விசேஷங்களையும் கானவித்தையில் குசலர்களாக உள்ளவர்களின் ஸங்கீத மாதுர்யத்தையும், வேத வித்யையில் சிறந்த பாண்டித்யத்தோடு கூடிய ராக்ஷஸர்களுடைய வேத கோஷங்களையும், ஆங்காங்கு ராக்ஷஸர்களால் செய்யப்படும் ராக்ஷஸ ராஜனை ராவணனுடைய ஸ்துதி விசேஷங்களையும் கவனித்துப் பார்த்து மிகவும் ஸந்தோஷத்தை அடைந்தார். ராஜதானியினுடைய மத்யஸ்தானத்தில், ராவணனால் அமைக்கப்பட்டிருக்கும் ஸைன்ய விசேஷங்களைப் பார்க்கும் பொழுது அந்த ஸைன்யகளுக்குள், விசித்ரமான வேஷங்களோடு கூடின படைகளைப்பார்த்து, மிகவும் மேலான பராக்ரமத்தோடு கூடினவன் ராவணன்; அவனோடு யுத்தம் செய்து ஜயத்தை அடைவது துர்லபம்தான் என்றும் ஆலோசித்தார். ஆகிலும், மனோதைர்யத்தையடைந்து ராவணனுடைய அந்தப்புரத்திற்குள் ப்ரவேசம் செய்தார். அந்தப்புரத்தில் ப்ரவேசம் செய்த மாத்ரத்தில் அந்த அந்தப்புரத்தில் வெகு ப்ரகாரமான ஸ்த்ரீகளையும் பார்த்து, ராவணனுடைய மஹிமையை ச்லாகித்துக்கொண்டார்.

सनातने वर्त्मनि सन्निविष्टां
रामेक्षणां तां मदनाभिविष्टाम् ।
भर्तुर्मनः श्रीमदनुप्रविष्टां
स्त्रीभ्यो वराभ्यश्च सदा विशिष्टाम् ॥

उष्णार्दितां सानुसृतास्रकण्ठीं
पुरावराहोत्तमनिष्ककण्ठीम् ।
सुजातपक्ष्मां अभिरक्तकण्ठीं
वने प्रनृत्तामिव नीलकण्ठीम्
अव्यक्तरेखामिव चन्द्ररेखां
पांसुप्रदिग्धामिव हेमरेखाम् ।
क्षतप्ररूढामिव बाणरेखां
वायुप्रभिन्नामिव मेघरेखाम् ॥

सीतामपश्यन् मनुजेश्वरस्य
रामस्य पत्नीं वदतां वरस्य ।
बभूव दुःखाभिहतश्चिरस्य
प्लवङ्गमो मन्द इवाऽचिरस्य ।

ஸுநாதநந வத்ஸுநி ஸாஹ்விஷ்டாம்
ஸாலிசூர்ணாம் தாம் உத்நாஹ்விஷ்டாம் ;
ஸுதாஸுநஃ ஸ்ரீஉத்நாவ்விஷ்டாம்
ஸ்ரீஹ்யா வராஹ்யஸ்ய ஸுதா விபவிஷ்டாம் ॥

உஷாஜிதாம் வாநராஸ்ய தாஸ்ரகண்ணீம்
வாராவராம்ஹிஸுதாம் நிக்ருகண்ணீம் ।

ஸுஜாதவக்ஷாம் ஸுஹிரக்தகண்ணீம்
வநே ப்ரநர்த்தாமிவ நீலகண்ணீம் ॥

ஸவ்யக்தரேவாமிவ சந்த்ரரேகாம்
பாம்ஸுப்ரதிக்தாமிவ ஹேமரேகாம் ;
க்ஷதப்ரரூடாமிவ பாணரேகாம்
வாயுப்ரபிந்நாமிவ மேகரேகாம் ॥

ஸீதாமபஸ்யந் மநுஜேச்வரஸ்ய
ராமஸ்ய பத்நீம் வததாம் வரஸ்ய ।
பபூவ துஃகாபிஹதஸ்சிரஸ்ய
ப்லவங்கமோ மந்த இவாऽசிரஸ்ய ।

வீதாஅவஸ்யது உநுஜிஜ்ஞாஅவ்ய
ராஅவ்ய வத்நீம் வதுதாம் வராவ்ய ।
பஹுவ உஃவாஹிஅ ஹதஸ்சிராவ்ய
வவஜுஹொ உந ஜவாஅஸிராவ்ய ॥

ஸநாதநே வர்த்மநி ஸந்நிவிஷ்டாம்
ராமேக்ஷணம் தாம் மதநாபிவிஷ்டாம் !
பர்துர்மன: ஸ்ரீமதநுப்ரவிஷ்டாம்
ஸ்த்ரீப்யோ வராப்யச்ச ஸதா விசிஷ்டாம் ॥

உத்ஸ்ருஜ்திதாம் ஸாநுஸ்ருதாஸ்ரகண்டம்
புராவரார்ஹோத்தமநிஷ்ககண்டம் ।
ஸுஜாத பக்ஷ்மாம் அபிரக்த கண்டம்
வதே ப்ரந்ருத்தாமிவ நீலகண்டம் ॥

அவ்யக்தரோகாமிவ சந்த்ரரேகாம்
பாம்ஸுப்ரதிக்தாமிவ ஹேமரேகாம் ।
கூதப்ரஸூடாமிவ பாணரேகாம்
வாயுப்ரபிந்நாமிவ மேகரேகாம் ॥

ஸீதாமபச்யந் மநுஜேச்வரஸ்ய
ராமஸ்ய பத்நீம் வதுதாம் வரஸ்ய ।
பஹுவ துக்காபி ஹதச்சிரஸ்ய
ப்லவங்கமோ மந்த இவாசிரஸ்ய ॥

அந்தப்புரத்தில் ஆஞ்ஜநேய ஸ்வாமியானவர் ராவணனுடைய ஸ்த்ரீகளை கவனித்துப் பார்த்து அவர்களுடைய மத்தியில் ஸீதை இருப்பாளோ என்ற விசாரத்துடன் தேடியும் ஸீதை தன் த்ருஷ்டிக்கு அகப்படாததினால் மிகவும் கஷ்டத்தை அடைந்தார். ஸீதாதேவியோ, ஆபத்காலத்திலும் ஸநாதனமான மார்க்கத்திலேயே ஈடுபட்டவள். ராமனைப் பார்ப்பது என்ற லக்ஷ்யத்தைத் தவிர வேறு மற்றொரு ஸங்கல்பமே இல்லாதவள். லோகத்திலுள்ள உத்தம ஸ்த்ரீகளில் முதன்மையாக ஸீதாதேவியைச் சொல்லவேண்டும். அவ்விதமான ஜகதீச்வரியைப் பார்க்கவந்தவர் ஆஞ்ஜநேய

ஸ்வாமி; அவளைப் பார்க்காதிருக்கும்பொழுது அவருடைய மனக்கஷ்டத்தை வர்ணித்து முடியுமா? அந்த ஸ்த்ரீகளைப் பார்த்து ஆஞ்ஜநேய ஸ்வாமிக்கு புத்தியில் ஒருவிதமான சித்தம் ஏற்பட்டது. அதாவது

बभूव बुद्धिस्तु हरीश्वरस्य
यदीदृशी राघवधर्मपत्नी ।
इमा यथा राक्षसराजभार्या
सुजातमस्येति हि साधुबुद्धेः ॥

பபூவ புத்திஸ்து ஹரீச்வரஸ்ய
யதீத்ருசீ ராகவ தர்மபத்னீ ।
இமா யதா ராக்ஷஸ ராஜபார்யா
ஸுஜாதமஸ்யேதி ஹி ஸாதுபுத்தேஃ ॥

முதலாவதாக ஆஞ்ஜநேயருக்குத் தோன்றியது, ராமனுடைய தர்மபத்னியாகிய ஸீதாதேவியும் ராமனை விவாஹம் செய்துகொள்வதற்கு முன்பாக, ராவணனுடைய பார்யையாக ஏற்பட்டிருந்தாள். ராவணன் ஸுக்ருதம் செய்தவன் என்று சொல்லலாம். இந்த புத்தியானது ஆஞ்ஜநேயஸ்வாமிக்கும் ஏற்பட்டது. இது நல்ல புத்தியாக ஆகாது. வாநர ஜாதியினுடைய ஸ்வபாவத்தினால் ஏற்பட்டது என்று தான் சொல்லவேண்டும். ஆகையினால் இந்த அர்த்தமானது சரியாகத் தோன்றினாலும் அதை க்ரஹிக்கக்கூடாது. மேற்சொன்ன ச்லோகத்தில் ஸாதுவான அர்த்தத்தையே அறியவும்:

இந்த ராக்ஷஸ ராஜ பார்யைகள் தன் பர்த்தாவான ராவணனுடைய ஸமீபத்தில் இருந்துகொண்டு ஸகல போகங்களையும் அனுபவித்துக்கொண்டு எப்படி ஸௌக்யமாக

இருக்கிறார்களோ அதுபோல ராமருடைய தர்மபத்னியான ஸீதாதேவியும், ராமனோடு கூட இருந்துகொண்டு ஸகல போகோபகரணங்களோடு கூடினவளாக இருக்கும்படி நேர்ந்தால்தான் இந்த ராவணனுடைய ஜன்மா நல்ல ஜன்மாவாக ஆகும் என்று பொருள் கூறவேண்டும். அன்னியனுக்கு க்ஷேமத்தைக் கருதுகிற ஸ்வபாவமுள்ள ஆஞ்ஜநேயஸ்வாமிக்கு அப்படிப்பட்ட ப்ரகாரம்தான் புத்தி ஏற்பட்டிருக்கும். அதாவது இந்த ராவணன், ராகவனுடைய தர்மபத்னியை அபஹாரம் செய்தே இருக்கக்கூடாது. ஏதோ காலவசத்தினால் அவ்விதம் ப்ரவ்ருத்தித்தாலும் இனிமேலாவது நல்லபுத்தி வந்து, ராமனிடம் ஸீதையை ஸமார்ப்பணம் செய்தானேயானால் ஜன்மா ஸபலமாக ஆகும். இல்லாவிடில் அவனுடைய ஜன்மா வீண்தான். என்ற புத்தியானது மஹா புத்திமானான ஆஞ்ஜநேயஸ்வாமிக்கு உதித்தது.

அத்துடன், மற்றொரு விதமாகவும்

बभूव बुद्धिस्तु हरीश्वरस्य यदीदृशी राघवधर्मपत्नी ।
इमा यथा राक्षसराजभार्याः सुजातमस्येति हि साधुबुद्धेः ॥

ப⁻ஹ்வ ப⁻ஹ்வீஸ்து ஹரீஸ்வரஸ்ய யதீத்ருஸீ ராகவ தர்மபத்னீ ।
இமா யதா ராக்ஷஸராஜபார்யாஃ ஸு⁻ஜாதமஸ்யேதி ஹி ஸாதுபுத்தேஃ ॥

ராமனுடைய தர்மபத்னியாகிற ஸீதாதேவியை ராவணன் அபகரித்து வந்ததுபோல் இந்த ராக்ஷஸ ராஜனுடைய பார்யைகளையும் வாநர ராஜனை ஸுக்ரீவன் பலாத்காரமாக அபகரித்துக்கொண்டு போய்விட்டானேயானால் அப்பொழுதுதான் வாநர ராஜனை ஸுக்ரீவனுடைய ஜன்மமானது ஸபலமாக ஆகும். என்றும் அழகான புத்தியோடு கூடிய ஆஞ்ஜநேயருக்கு மனதில் தோன்றியது. தவிரவும்

இந்த ஸ்த்ரீகளை ராவணன் அபகரித்தது போலவே, ஸீதா தேவியையும் அபகரிக்கலாம் என்று எண்ணி ராவணன் ஸீதையை அபகரித்தானே; அப்படியானால் அந்த ராவணனுக்கு ஜன்ம ஸாபல்யம் ஏற்படுமா? ஏற்படவே ஏற்படாது அவன் அழிந்துதான் போய்விடுவான் என்று வானர ச்ரேஷ்டனை ஆஞ்ஜநேயஸ்வாமிக்கு புத்தி ஏற்பட்டது. பகவானை ஸ்ரீ ராமரை

मम दयिततरा हृता वनान्तात्
रजनिचरेण विमथ्य येन सा ।
कथय मम रिपुं त्वमद्य वै
प्लवगपते यमसन्निधिं नयामि ॥

மம தயிததரா ஹ்ருதா வனாந்தாத்
ரஜநிசரேண விமத்ய யேன ஸா ।
கதய மம ரிபும் த்வமத்ய வை
ப்லவகபதே யமஸந்நிதிம் நயாமி ॥

"ஹே ஸுக்ரீவா! என்னுடைய ப்ரிய தமையான ஸீதா தேவியை லங்கேச்வரனை ராவணன் பலாத்காரமாக அபகரித்துக்கொண்டு போய்விட்டான் அவனுடைய இருப்பிடத்தை நீ எனக்குத் தெரிவித்தால் மாத்திரம் போதும் உடனேயே அவனை நான் யமலோகத்திற்கனுப்பிவிட்டு என் ப்ரியதமையான ஸீதையை நான் அடைய ஸமர்த்தனாக ஆகி விடுவேன். அந்த விஷயத்தில் நீ எனக்கு ஸகாயம் செய்ய வேண்டும்" என்று ஸக்யம் செய்துகொண்ட காலத்தில் நமது ராஜனை ஸுக்ரீவனிடம் பரமதாபத்துடன் தெரிவித்துக் கொண்ட ராமன், இந்த ராவணனைப் பார்த்தால் விட்டு

விடுவாரா? கட்டாயம் வதம் செய்தே விடுவார். இந்த மூட னான ராவணனே மற்ற ஸ்த்ரீகளைப்போல் ஸீதாதேவியையும் நினைத்துவிட்டான்; அது மிகவும் பிசகானது. இவன் அதனால் ஒரு விதத்திலும் ச்ரேயஸ்ஸை அடையப்போவதில்லை; மாண்டுதான் போகப்போகிறான் என்று ஆஞ்ஜநேயர் மனதில் தீர்மானித்தார்.

தவிரவும் இந்த அந்தப்புரத்தில் இந்த ராக்ஷஸ ராஜ னுடைய மனைவிகளை நான் எப்படிக் கண்டேனோ அதுபோல் ராகவனுடைய தர்மபத்னியான ஸீதாதேவியையும் நான் கண்டுவிட்டேனேயானால், என்னுடைய ஜன்மம் ஸபலமாக ஆகும் என்று கபிராஜனை ஆஞ்ஜநேயஸ்வாமிக்கு புத்தி ஏற்பட்டது.

यस्तु मासान्निवृत्तोऽग्रे दृष्ट्वा सीतेति वक्ष्यति ।
मत्तुल्यविभवो भोगैः सुखं स विहरिष्यति ॥
ततः प्रियतरो नास्ति मम प्राणाद्विशेषतः ।

யஸ்து மாஸான்நிவ்ருத்தோऽக்ரே த்ருஷ்ட்வா ஸீதேதி வக்ஷ்யதி ।
மத்துல்யவிபவோ போகைः ஸுகம் ஸ விஹரிஷ்யதி ॥
ததः ப்ரியதரோ நாஸ்தி மம ப்ராணாத்விஸேஷதः ।

யஸ்து மாஸாந்நிவ்ருத்தோऽக்ரே த்ருஷ்ட்வா ஸீதேதி வக்ஷ்யதி ।
மத்துல்யவிபவோ போகைः ஸுகம் ஸ விஹரிஷ்யதி ॥
ததः ப்ரியதரோ நாஸ்தி மம ப்ராணாத்விஸேஷதः ।

என்று ஸுக்ரீவன் ஒரு மாதத்திற்குள் ஸீதையைக் கண்டேனென்று என் ஸமீபத்தில் யார் வந்து சொல்லுகிறார் களோ அந்த மஹானுபாவன், போக ஸம்பத்தியில் எனக்கு ஸமானமான வைபவமுள்ளவனாக ஆகிறான். அவனிடம் போல் கிஷ்கிந்தா ராஜ்யத்தில் அதிகாரத்தை அவன் செலுத்தலாம், என்னுடைய ப்ராணனைக்காட்டிலும் அவன் எனக்கு மேலாக ப்ரிய புருஷனாக ஆகிறான் என்று சொல்லி யிருக்கிறபடியினால் நான் ஸீதையைக் கண்டு விட்டு சுக்ரீவ

னிடம் சென்று கண்டேன் ஸீதையை என்று சொன்னால், ராஜனை சுக்ரீவனுக்கு ப்ரியத்தைச் செய்த என்னுடைய ஜன்மமானது ஸபலமாக ஆகும்.

மேலும், இந்த ராக்ஷஸ ராஜனுடைய பத்னிகள் என்னால் காணப் பட்டதுபோல் ராகவனுடைய தர்மபத்னியும் என்னால் கண்டுபிடிக்கப் பட்டால், ஸீதையைக்காணாததினால் ராமனுக்கும் சுக்ரீவனுக்கும் பயந்து கொண்டு ப்ராயோபவேசனம் செய்து ப்ராணனை விடத்தயாராயிருக்கும் அங்கதன் முதலிய வானர ஸமூகத்திற்கு ஜன்ம ஸாபல்யம் ஏற்படும், அதாவது அவர்கள் மரணத்திலுள்ள ஸங்கல்பத்தை விட்டுவிட்டு ஜீவித்து விடுவார்கள் என்று ஆஞ்சநேயஸ்வாமிக்கு யோசனை தோன்றியது.

अप्रवृत्तौ च सीतायाः पापमेव करिष्यति ।
तस्मात्क्षममिहाद्यैव गन्तुं प्रायोपवेशनम् ॥
त्यक्त्वा पुत्रांश्च दारांश्च धनानि च गृहाणि च ।

அப்ரவ்ருத்தௌ ச ஸீதாயாः பாபமேவ கரிஷ்யதி ।
தஸ்மாத்க்ஷமமிஹாத்யைவ கந்தும் ப்ராயோபவேசனம் ॥
த்யக்த்வா புத்ராம்ச தாராம்ச தனானி ச க்ருஹாணி ச ।

என்று ஸீதையை நாம் காணுமல் சுக்ரீவனுடைய சமீபம் சென்றால், அவன் நம்மை அவச்யம் கொன்றுவிடுவான்; ஆகையால் சுக்ரீவனிடம் திரும்பிப்போவதைக் காட்டிலும் பார்யை தனம், கிரகம் முதலியவைகளை விட்டு விட்டு இந்த தேசத்திலேயே ப்ராயோபவேசனம் செய்வதுதான் நமக்கு அழகு என்று கஷ்டத்துடன் சொல்லிக் கொண்டிருக்கும் அங்கதன் முதலானவர்களிடம் நான் ஸீதையைக் கண்டேன் என்ற வார்த்தையைப் போய்ச் சொன்னால், போனதுபோல் உள்ள அவர்

களுடைய ஜீவன்கள் மறுபடி திரும்பி வந்து பிழைப்பார்க்களல்லவா. ஆகையினால் இந்த ராக்ஷஸ ஸ்த்ரீகளைப் பார்ப்பதுபோல் ஸீதையையும் பார்க்கும் படியான பாக்யம் நமக்கு நேரிடுமோ என்ற துக்கத்துடன் ஆஞ்சநேயஸ்வாமியானவர் தயித்துவந்தார் என்ற தாத்பர்யம் வெளியாகிறது.

அத்துடன் நானே ராமானுக்ரகத்தைப்பெற்றுக்கொண்டு புறப்பட்டு வந்திருக்கிறேன். ஆகையினால் கொஞ்சம் முன்பின் நாள் கூடுதல் ஆனாலும், ஸீதையை எப்படியும் கண்டுபிடித்து விடுவேன். ஆனால் இந்த ராக்ஷஸஸ்த்ரீகள் உயிரோடு இருப்பதுபோல் ஸீதையும் உயிரை வைத்துக் கொண்டு இருக்க வேண்டும். அப்படி ஜீவித்துக் கொண்டிருக்கிறாளோ இல்லையோ. உயிரோடு இருந்தாளேயானால் அவளைப் பார்த்து விட்டுதான் நான் திரும்பிப் போகப் போகிறேன். அப்பொழுது ஸீதையினுடைய ஜீவிதத்தில் நிச்சயம் ஏற்படுமாதலால் ராமனுடைய ஜன்மமும் ஸபலமான ஜன்மமாக ஆகிவிடுமென்று ஆஞ்சநேயஸ்வாமிக்கு புத்தி ஏற்பட்டது.

ஸ்ரீராமனும் ஸீதையினுடைய ஜீவிதாசையைத்தான் எதிர்பார்த்துக்கொண்டு இருக்கிறார்.

ज्ञायतां सौम्य वैदेही यदि जीवति वा न वा ।
न ह्यहं जीवितुं शक्तः तामृते जनकात्मजाम् ॥

ஜ்ஞாயதாம் ஸௌம்ய வைதேஹீ யதி ஜீவதி வா நவா ।
ந ஹ்யஹம் ஜீவிதும் சக்தः தாமृதே ஜனகாத்மஜாம் ॥

க்ஞாயதாம் ஸௌம்ய வைதேஹீ யதி ஜீவதி வா ந வா ।
ந ஹ்யஹம் ஜீவிதும் சக்தः தாம்ருதே ஜனகாத்மஜாம் ॥

என்று ஸீதையினுடைய ஜீவிதத்தை ராமன் எதிர்பார்த்து இருக்கிறபடியினால் ஸீதை ஜீவிக்கிறாள் என்ற நிச்சயம் ஏற்படுமேயானால் ராமனுடைய ஜன்மம் ஸபலமாகும் என்பதில் ஆக்ஷேபணையேயில்லையென்று ஆஞ்ஜநேயஸ்வாமி எண்ணினார்.

மேலும் ராவணனை நான் பார்ப்பேன். "ஹே ராக்ஷஸ ராஜனே, இந்த ஸ்த்ரீகள் எப்படி உன்னுடைய திருஷ்டிக்கு விஷயமாக இருந்து கொண்டு ஸௌபாக்யத்தை அனுபவிக்கிறார்களோ, அதுபோல் ஸ்ரீராமனுடைய தர்மபத்னியும் ராமருடைய திருஷ்டிக்கு விஷயமாக இருந்து கொண்டு ஸௌபாக்யத்தை அனுபவித்து வருவாளேயானால் உனக்கு ஸர்வஸம்பத்தும் ஸகலவிதமான ஸம்ருத்தியும் புத்ரபௌத்ராதிகளுடைய அபிவ்ருத்தியும் ஏற்பட்டு நீடித்தகாலம் நீ பரம க்ஷேமமாக இருக்கலாம். உன் ஜன்மமும் ஸபலமாக ஆகும்" என்று நான் ராவணனைத்தட்டி எழுப்பி என் உபதேசிக்கக் கூடாது என்றும் ஆஞ்ஜநேய ஸ்வாமிக்கு புத்தியானது ஏற்பட்டது.

அப்படியே

तद्भवान् दृष्टधर्मार्थिः तपःकृतपरिग्रहः ।
परदारान्महाप्राज्ञ नोपरोद्धुं त्वमर्हसि ॥

தத்³ப⁴வாந் த்³ருஷ்டத⁴ர்மார்தி²: தப: க்ருதபரிக்³ரஹ: ।
பரதா³ராந்மஹாப்ராஜ்ஞ நோபரோத்³தும் த்வமர்ஹஸி ॥

என்று ஹிதோபதேசத்தை ஆஞ்ஜநேயர் ராவணனுக்கெதிரில் செய்யப்போகிறார். "நீயோ மகாதபஸ்வீ, அக்னிஹோத்ரம் முதலான ஸகல புண்ய கர்மாக்களையும் செய்து வருகிறாய், அவ்விதம் ஸதாசார ஸம்பத்தியுள்ள உன்னை புருஷனை உனக்கு பரதார அபமர்சனமானது மிகவும் தீங்கையே உண்டுபண்ணக் கூடியது, அந்த தோஷம் உனக்கேற்படக் கூடாது" என்றே மேற்சொன்ன உபதேச ச்லோகத்தின் தாத்பர்யமாகும்.

இல்லாவிடில்

इमाः - ஈமாஃ - இமா: == இந்த, राक्षस राज भार्याः - ராக்ஷஸ ராஜ பா⁴ர்யா: - ராக்ஷஸ ராஜ பார்யா: = ராவணனுடைய ஸ்த்ரீகள், यथा - யதா² - யதா = எப்படி, यादृक् - யாத்³ருக்

- யாத்ருக் = எவ்விதமான, रूपवयः - ரூபவயஃ - ரூபவத்ய: = அழகோடு கூடினவர்களோ, राघव धर्मपत्नी - ராகவ தர்மபத்னீ - ராகவ தர்மபத்னியான ஸீதை யானவள், ईदृशी किम् - ஈத்ருஶீ கிம் - ஈத்ருஶீ கிம் = ராக்ஷஸ ராஜனுடைய பார்யைகளுடைய ரூபம் போன்ற ரூபத்தோடு கூடியவளா என்ன ? (இல்லவே இல்லை.)

ராக்ஷஸராஜனுடைய பார்யைகளையோ குறுபிணிகளென்றே சொல்லவேண்டும். ஸீதாப்ராட்டியோ த்ரிலோகசுந்தரி அல்லவா. அவளுடைய ஸௌந்தர்யத்தையோ, லாவண்யத்தையோ, ஸௌகுமார்யத்தையோ அவள் அயோனிஜையாக இருக்கும் காரணத்தினால் ஆதிசேஷனாலும் இவ்வளவுதான் என்று வர்ணிக்கமுடியாத அபரிச்சின்னமான ஸௌந்தர்ய ஸௌகுமார்ய லாவண்யத்தோடு கூடின ஜகதீச்வரியை இந்த ராக்ஷஸ ஸ்த்ரீகளுடைய மத்தியில் வந்து நாம் தேடவந்தோமே, அது நம்முடைய புத்திக் குறைவைத்தான் காட்டுகிறது என்று ஆஞ்ஜநேயஸ்வாமிக்கு த்ருடமான நிச்சயம் ஏற்பட்டது. பரமாசார்யாளான பகவத்பாதர்களும் ஈச்வரியினுடைய ஸௌந்தர்யாதிசயத்தைப் பற்றி ப்ரும்மாதி தேவர்களுக்கும் கையாள முடியாததான பெருமை அதற்கு என்று வர்ணித்திருக்கிறார்கள் ; அதிலே

त्वदीयं सौन्दर्यं तुहिनगिरिकन्ये तुलयितुं
कवीन्द्राः कल्पन्ते कथमपि विरिञ्चिप्रभृतयः ।
यदालोकौत्सुक्यात् अमरललना यान्ति मनसा
तपोभिः दुष्प्रापां अपि गिरिशसायुज्यपदवीम् ॥

ꣳ꣱ꣳ꣱ꣳ꣱

த்வதீயம் ஸௌந்தர்யம் தவஹிநகிரிகந்யே தலயிதும் ।
கவீந்த்ராः கல்பந்தே கதமபி விரிஞ்சி ப்ரப்ருதயः ॥
யதாலோகௌத்ஸுக்யாத் அமரலலநா யாந்தி மநஸா ।
தபோபிः துஷ்ப்ராபாம் அபி கிரிஸுதாயுஜ்யபதவீம் ॥

என்று ஸௌந்தர்யலஹரியில் வர்ணித்திருக்கும் ச்லோகமே ப்ரமாணமாகும், பரதேவதையானவள் மாத்ருகா மந்த்ரஸ்வரூபியானபடியினால், அவளுடைய திருமேனியை வர்ணித்து ஒரு காவ்யமாகச்செய்ய ப்ரும்மாதிதேவர்கள் யத்னம் செய்தும் அசக்தர்களாகவே ஆகிவிட்டார்கள். பட்டாரிகையானதினால் தேவியினுடைய ஸமீபமும் ப்ரும்மாதி தேவர்களுக்குச் சென்று உபதேசம் பெறறுக்கொள்ள அதிகாரமில்லை; வெகுதூரத்திற்கப்பாலேயே நின்று ப்ரார்த்தித்துக் கொண்டிருக்கிறார்கள். ப்ரும்மாதி தேவர்களுடைய தர்மபத்னிகளான ஸரஸ்வதி முதலியவர்களோ மஹாபட்டாரிகையான பராசக்தியினுடைய ஸமீபம் சென்று அவளுடைய ஸௌந்தர்யத்தை அறிந்து ப்ரும்மா முதலான பர்த்தாக்களிடம் வந்து சொல்லி தன்தன் பர்த்தாக்களுடைய மநோரதத்தைப் பூர்த்திசெய்து வைக்கலாமோ என்ற எண்ணத்துடன் தேவியின் ஸமீபம் சென்றார்கள். அவர்களுக்கும் தேவியினுடைய ஸௌந்தர்யம் நன்றாய் அறியமுடியாததாகவே ஆகிவிட்டது. பிறகு அந்த ஸரஸ்வதி முதலிய தேவஸ்த்ரீகளோ காமேச்வரன் என்று சொல்லப்படும் தாரகப்ரும்மத்திற்கு அந்த தேவியினுடைய ஸௌந்தர்யாதிசயம் புலப்படக் கூடுமல்லவா. ஆகையால் அவர்களெல்லோரும் அத்யுக்ரமான தபஸைச் செய்து காமேச்வரன் என்ற தாரக ப்ரும்மத்தினுடைய ஸாயுஜ்யத்தை மனதினால் அடைந்தார்கள், என்றே மேற் சொன்ன ஸௌந்தர்யலஹரி ஸ்தோத்ரத்தின் தாத்பர்யமாகும்.

இவ்விதம், த்ரிலோக ஸுந்தரியான நமது மாதாவான ஸீதையானவள் இந்த ராக்ஷஸ ராஜனுடைய மனைவிகளில் ஒருவளாகவா இருக்கப்போகிறாள்? இல்லவே இல்லை. என்று

தீர்மானித்து விட்டார். மறுபடியும் கவலையுடன் ஸீதையைப் பார்க்காமல் நாம் எப்படி ராகவனுடைய ஸன்னிதிக்குப் போவது என்ற பீதியையடைந்து மறுபடியும் தேடுவோம் என்ற தைர்யத்துடன் அங்காங்கு தேடிக்கொண்டுவரும் பொழுது, அந்த அந்தப்புரத்திலேயே நவரத்ன கசிதமான ஒரு கட்டிலையும், அபூர்வமான 'சமரீ' மானின் தோல்களால் அலங்கரிக்கப்பட்ட படுக்கைகளையும் பார்த்து ஆஞ்ஜநேய ஸ்வாமியானவர் ஆச்சர்யத்துடன் மெள்ள மெள்ள ஸமீபம் செல்ல அந்த படுக்கையில் நித்ரை செய்துகொண்டிருக்கும் ராக்ஷஸ ராஜனை ராவணனையும் ஆஞ்ஜநேயஸ்வாமியானவர் பார்த்தார். அவனுடைய போக போக்ய உபகரணங்களையும் சயனத்தின் பெருமையையும் அவனுடைய ஸமீபத்தில் நித்ரை செய்துகொண்டிருக்கும் சில உயர்ந்த ஸ்த்ரீரத்னங் களையும் பார்த்து மிகுந்த ஆச்சர்யத்தை அடைந்தார்; அந்த ஸ்த்ரீகளுடைய ஸமீபத்தில் ஒரு அழகான தங்கத்தினால் இழைக்கப்பட்ட அங்கண விசேஷத்தையும் பார்த்தார். அங்கு ஒரு அபூர்வமான பர்யங்கம் விசேஷமாக அலங்கரிக் கப்பட்டு காணப்பட்டது; அதில் ராவணனுடைய பட்ட மகிஷியான மண்டோதரி சயனம் செய்துகொண்டிருந்தாள்; அவளைப் பார்த்ததும் ஆஞ்ஜநேயஸ்வாமிக்கு ஒரு ஸமயம் இவள்தான் ஸீதையோ என்ற ஸந்தேகம் ஏற்பட்டது.

तासां एकान्तविन्यस्ते शयानां शयने शुभे ।
ददर्श रूपसंपन्नां अपरां स कपिः स्त्रियम् ॥
मुक्तामणिसमायुक्तैः भूषणैः सुविभूषिताम् ।
विभूषयन्तीमिव तत् स्वाश्रया भवनोत्तमम् ॥
गौरीं कनकवर्णाङ्गीं इष्टां अन्तःपुरेश्वरीम् ।
कपिः मन्दोदरीं तत्र शयानां चारुरूपिणीम् ॥
स तां दृष्ट्वा महाबाहुः भूषितां मारुतात्मजः ।
तर्कयामास सीतेति रूपयौवनसंपदा ॥
हर्षेण महता युक्तः ननन्द हरियूथपः ॥

தாஸாம் வக்காத்ரவிந்யஸ்தை சயாநாம் சயநே சுபே ।
உத்பபாத மஹாவக்ஷாம் சுபாரம் வ கபிः ஸ்த்ரியம் ॥
உத்தமாங்கருஹாயதாக்ஷிம் ஹ்ரிஷ்மிணீம் வராஹர்ஷிதாம் ॥
விஹ்ரிஷ்யஜீவிதே தக்ஷ வஸ்ரியா ஹவதிநாதயா ॥
களாம் கநகவர்ணாங்கீம் இஷ்டாம் அந்தः புரேஸ்வரீம் ।
கபிः மந்தோதரீம் தத்ர சயாநாம் சாருரூபிணீம் ॥
ஸ தாம் த்ருஷ்ட்வா மஹாபாஹுः பூஷிதாம் மாருதாத்மஜः ।
தர்கயாமாஸ ஸீதேதி ரூபயௌவநஸம்பதா ॥
ஹர்ஷேண மஹதா யுக்தः நநந்த ஹரிபூதபः ॥

தாஸாம் ஏகாந்தவிந்யஸ்தே சயாநாம் சயநே சுபே ।
ததர்ச ரூபஸம்பந்நாம் அபாராம் ஸ கபிः ஸ்த்ரியம் ॥
முக்தாமணி ஸமாயுக்தை: பூஷணை: ஸுவிபூஷிதாம் ।
விபூஷயந்தீமிவ தத் ஸ்வஸ்ரீயா பவநோத்தமம் ॥
கௌரீம் பிங்கவர்ணாங்கீம் இஷ்டாம் அந்த: புரேஸ்வரீம் ।
கபிः மந்தோதரீம் தத்ர சயாநாம் சாருரூபிணீம் ॥
ஸ தாம் த்ருஷ்ட்வா மஹாபாஹு: பூஷிதாம் மாருதாத்மஜ: ।
தர்கயாமாஸ ஸீதேதி ரூபயௌவநஸம்பதா ॥
ஹர்ஷேண மஹதா யுக்த: நநந்த ஹரிபூதப: ॥

ஸ்ரீராமன் ஆஞ்ஜநேயஸ்வாமியை அனுப்பும் காலத்தில் ஸீதையினுடைய ஸௌந்தர்யத்தையும், ஆபரண விசேஷங்களையும் எப்படி வர்ணித்துச் சொன்னாரோ அவைகளெல்லாம் இந்த மண்டோதரியினிடத்தில் காணப்படுகிறபடியினால் அந்த அடையாளத்தைக் கொண்டு இவள்தான் ஸீதையோ என்று ஊகித்தார். ஊகித்து பரம ஸந்தோஷத்தையும் அடைந்தார்.

आस्फोटयामास चुचुम्ब पुच्छं
ननन्द चिक्रीड जगौ जगाम ।
स्तम्भानरोहन्निपपात भूमौ
निदर्शयन् स्वां प्रकृतिं कपीनाम् ॥

கூஷ்ஷோடயாஸாஷ துூஷ்ஷு ஷ்ஷு வூஷ்ஷு

நநந விக்ஷீப ஜமள ஜமாஸ ।

வ்ஷ்ஷு ஸாநஸொஷ ஹிவவாத ஹ்ஷிஸள

தல்ல

நிஷபாஷ்யஷ வ்ஷ்ஷாம் வ்ரகூ்ஷ்தீம் கவீநாழ ॥

ஆஸ்போடயாமாஸ சுசும்ப புச்சம்

நநந்த சிக்ரீட ஜகௌள ஜகாம ।

ஸ்தம்பாகரோஹந் நிபபாத பூமௌள

நிதர்சயந் ஸ்வாம் ப்ரக்ருதிம் கபீநாம் ॥

ஆஞ்ஜநேயஸ்வாமியினுடைய ஆனந்த அதிசயத்தை செய்கையைக்கொண்டு மகரிஷியானவர் வெளிப்படுத்துகிறார். ஹனுமான் தனது வாலை முத்தமிட்டுக் கொண்டார். இது வானரஜாதியின் தர்மமாகும். ஸ்தம்பத்திலிருந்தும்கீழே இறங்கினர். இறங்கி நர்த்தனம்செய்தார். தன்னுடைய ஜாதிஸ்வபாவத்தை ப்ரகாசப் படுத்தினர். தூணில் ஏறினறி கீழே குதித்தார் என்று மேல்கண்ட ச்லோகத்தின் மேல்வாரியான பொருள் வெளியாகிறது. அதனுடைய உண்மையான பொருளோ அடியிற்கண்டவாறு அறியவும்.

இந்த ராமாயணத்தை காந்தாஸம்ஹிதை யென்றும் ஸுஷ்ருத்ஸம்ஹிதையென்றும் ஆங்காங்கு வர்ணிக்கப்பட்டிருக்கிறது. அநேக அபூர்வமான அர்த்தத்தை ப்ரதானமாக வெளிப்படுத்தும் ஸம்ஹிதையே ஸுஷ்ருத் ஸம்ஹிதை ஆகும். வ்யங்க்யமான அர்த்தத்தை ப்ரதானமாக வெளிப்படுத்தும் ஸம்ஹிதையே காந்தாஸம்ஹிதையாக ஆகும். அதை அனுஸரித்து மேல்காட்டிய ச்லோகத்திற்கு வ்யங்க்ய மரியாதையை அனுஸரித்து ஏற்படும் தாத்பர்யமோ ஸ்ரீ ராமனை பரப்ரும்மம் என்று ப்ரகாசப் படுத்துவதே ஆகும். சாஸ்திரமானது ப்ரும்மதத்வத்தை மிகவும் லகுவான வழியில் போதிக்கின்றது.

லோகத்தில் ப்ராணிகளோ விவேகிகளாக இருந்தாலும்கூட அன்னரஸ மயமான ஸ்தூலசரீரத்தையே ஆத்ம ஸ்வரூபமாக அனுபவித்து வருகிறார்கள். ஸ்தூலசரீரமோ

இரண்டு பார்ச்வத்திலுள்ள கைகளோடும் சிரஸோடும் கீழ் பாகத்தில் உள்ள புச்சத்தோடும் கூடி பக்ஷிகளின் சரீரத்தைப் போல் விளங்கி வருகிறது. அதையே ஆத்மாவாக அனுபவித்து வருகிற அவித்வான்களுடைய விஷயத்தில் வேதமும் அனுமோதிப்பதுபோல் அன்னமயமான தேகத்தையே ப்ரும்மமாக உபதேசிக்கின்றது. அன்னமயமான தேகத்தில் இரண்டு பார்ச்வங்களிலுங் காணப்படுகிற கைகளை அந்த ப்ரும்மத்திற்கு இரண்டு பக்ஷங்களாகவும் ப்ரஸித்தமான சிரஸையே தலையாகவும், ப்ரஸித்தமாக கீழ்பாகத்தில் இருக்கும் ஆண்குறியை புச்சமாகவும் வர்ணித்து அதை ப்ரும்மம் போல் மூடர்களுக்கு ச்ருதியும் போதித்து வருகிறது. அவரவர்களுடைய புத்திக்கே கொஞ்சகாலம் கழித்து இவ்வாறு தோன்றுகிறது. ஸ்தூலதேகம் எப்படி ஆத்மாவாக ஆகமுடியும்? இந்த தேகமோ உண்டாவதற்கு முன்பும், மரணத்திற்கு பின்பும் இல்லாமலிருக்கும் வஸ்துவாக ஆகிறது. ஸ்திதிகாலத்தில் மாத்திரம் இருப்பது போல் தோன்றுகிறது. உத்பத்தியோடும், விநாசத்தோடும் கூடியிருக்கும் காரணத்தினல் இதை கார்ய ஜாதியில்தான் சேர்க்கவேண்டும். ஆகையினல் "देहः आत्मा न भवति। कार्यत्वात् घटवत्।" (தேஹ: ஆத்மா ந பவதி। கார்யத்வாத் கடவத்) என்ற அனுமான ப்ரமாணத்தினல் தேகத்தில் ஆத்மத்வ புத்தியை த்யாகம் செய்து விட்டு ஆத்மஸ்வரூபத்தை தேகத்திற்கு வேறுகத் தெரிந்துகொள்ள விருப்பமுள்ள ஜிக்ஞாஸுக்களை முன்னிட்டு ச்ருதியானது கருணையுடன் ப்ராணனை ஆத்மாவாகப்போதித்தது. அதாவது ப்ராண, அபான, வ்யான, உதான, ஸமானன் என்ற ஐந்துவிதமான பிரிவுகள் உள்ள முக்யப்ராணன், வாக், பாணி, பாத, பாயூ, உபஸ்தம் என்ற ஐந்துவிதமான கர்மேந்திரியங்களோடு சேர்ந்துகொண்டிருக்கும் ஸமயத்தில் ப்ராணமயகோசம் என்று சொல்லப்படும். ஸ்தூல தேகம் ஆத்மாவாக ஆகாது போனலும், ப்ராணமய கோசமானது லிங்கசரீரத்தில் சேர்ந்த காரணத்தைக்

கொண்டு ஸ்திதிகாலத்தில் உத்பத்தி வினாசம் அவைகளுக்கு இல்லையென்பது சாஸ்திரஸித்தமானது. அக்காரணத்தினால் அந்த ப்ராணமயகோசத்தையே ஏன் ஆத்மாவாக ஒப்புக் கொள்ளக்கூடாது? ப்ராணமயகோசமும் பக்ஷி, புச்சம், சிரஸ் இவைகளோடு கூடியதுதான். ப்ராணமயகோசத்திற்கு, ப்ராணனையே சிரஸாகவும், வ்யானனை வலதுபக்ஷமாகவும், அபானனை இடதுபக்ஷமாகவும் ஆகாசத்தை உடலாகவும் பூலோகத்தைப்புச்சமாகவும் வர்ணித்து ப்ராணமயகோசத்தையே தேகவிலக்ஷணமாக இருக்கும் காரணத்தினால் ஆத்மா என்று மந்த புத்திகளுக்கு ச்ருதியானது போதித்தது. விவேகமுள்ள புருஷர்களோ, கொஞ்சநாட்கள் ப்ராணனையே ஆத்மாவாக பாவித்துக்கொண்டு வந்த ஸம்ஸ்காரபலத்தினால் அதிலும் அவர்களுக்கு அருசியேற்பட்டுவிட்டது. தேகத்தைப்போல் இந்த ப்ராணமய கோசமானது அடிக்கடி பிறப்பது, மரிப்பது என்ற தோஷத்திற்கு பாத்திரம் ஆகாதுபோனாலும்கூட ஜடம்தானே; எப்படி ஆத்மாவாக ஆகமுடியும்? ஆத்மாவுக்கு சைதன்யமல்லவா ஸ்வரூபமாகும்; ஆகையினால் "प्राणः आत्मा न भवति, जडत्वात् घटवत्।" (ப்ராணஃ ஆத்மா ந பவதி ஜடத்வாத் கடவத்) (ப்ராண: ஆத்மா ந பவதி ஜடத்வாத் கடவத்) என்ற அனுமானத்தினால் ப்ராணமய கோசத்திலும் ஆத்மத்வபுத்தியை விட்டுவிட்டு ப்ராணனுக்கும் விலக்ஷணமாக ஆத்ம ஸ்வரூபம் இருக்க வேண்டுமென்ற எண்ணத்துடன் இருக்கும் ஜிக்ஞாஸுக்களை முன்னிட்டு ச்ருதியானது மனோமய கோசத்தை ஆத்மா என்று போதித்தது.

மனோமயகோசத்தையும் சிரஸ், புச்சம், முதலிய அவயவங்களோடு சேர்த்து அலங்கரித்து அதை ஆத்மா என்று மூடர்கள் நம்பும்படியாகவே ச்ருதியானது போதித்தது.

யஜுர்வேதத்தை சிரஸாகவும், ருக்வேதத்தை வலது பக்ஷமாகவும், ஸாமவேதத்தை இடது பக்ஷமாகவும் உபதேச வாக்யத்தை உடலாகவும் அதர்வணவேதத்தைப் புச்சமாகவும் வைத்து மூடர்கள் விஷயத்தில் ச்ருதியும் ஆத்மாவைப்

போல் நடித்துக்காட்டிற்று. சக்ஷுரிந்த்ரியம், க்ராணேந்த்ரியம், ச்ரோத்ரேந்த்ரியம், ரஸனேந்த்ரியம், த்வகிந்த்ரியம், என்ற ஐந்து ஞானேந்த்ரியங்களோடு கூடின ஸங்கல்ப விகல்பாத்மகமாயும் வாக் என்ற சப்தத்தினல் சொல்லப் பட்ட வேதத்தை அத்யயனம் செய்த காரணத்தினல் ஸப்ஸ்க்ருதமாயும் உள்ள மனதையே மநோமயகோசமென்று அறி யவும். அந்த மநோமயகோசமானது ஸ்தூலதேகத்தைக் காட்டிலும் ப்ராணமய கோசத்தைக்காட்டிலும், சித்ரூபமான ஆத்மதத்வத்திற்கு மிகவும் ஸன்னிஹிதமாக இருக்கும் கார ணத்தைக்கொண்டு, ஆத்மஸ்வரூபபூதமான சைதன்யம் மனதிலும் ப்ரதிபிம்பித்து சேதனம்போல் தோன்றுகிற படியால், அது ஜடம்தான் என்று நிர்மானிப்பது கஷ்ட மென்ற காரணத்தைக் கொண்டு, மனதை ஆத்மா இல்லை யென்று சொல்லமுடியாது. ஆகையினல் மனதே ஆத்மா வாக ஆகலாம் என்று நினைத்து வெகுகாலமாக மன தையே ஆத்மஸ்வரூபமென்று உபாஸித்து வந்தார்கள். பழகப்பழக மனதுதான் எப்படி ஆத்மாவாக ஆகமுடியும்? ஒரு கூணத்தில் இருந்ததுபோல் மற்றொரு கூணத்தில் இருப் பதில்லை; இது அந்தந்த ப்ராணிகளுடைய அனுபவத்தில் ப்ர ஸித்தமாகத் தெரிந்துவிடுகிறது பாலானது, தயிராகப் பரி ணமிப்பதுபோல் மனதும் ஒருஸமயத்தில் காமமென்ற ஆசை யாகவும், மற்றொரு ஸமயத்தில் க்ரோதமென்ற த்வேஷமாக வும் பரிணமிக்கின்றது; ஆகையால் மனது "விகாரியாக" ஆகி விடுகிறது. ஆத்மதத்வமென்ற ப்ரும்மமோ அவிகாரியான வஸ்து; விகாரியான மனத அவிகாரியான ப்ரும்மம் என்று எப்படித்தான் சொல்லமுடியும்? ஆகையினல் மனதும் ஆத்மா வாக ஆகமுடியாததுதான்;

"मनोमयः आत्मा न भवति; विकारित्वात्; देहवत्।" (மநோ மயः ஆத்மா ந ஹவதி விகாரித்வாத் தேஹவத்) (மநோமயः ஆத்மா ந பவதி விகாரித்வாத் தேஹவத்) என்ற அனுமான ப்ரமாணத்தினல் மநோமய கோசத்திலும்

ஆத்மத்வபுத்தியை பரித்யாகம் செய்துவிட்டு மனோமய கோசத்திற்கும் விலக்ஷணமாக ஆத்மஸ்வரூபம் இருக்கவேண்டும். அதை நாம் எப்படி அறியமுடியும் என்று கவலைப் பட்ட ஸூக்ஷ்மபுத்தியை உடையவர்கள் விஷயத்தில் ச்ருதியானது மிகுந்த கருணையுடன் ப்ராணிகளைப்பார்த்து "ஹே! நண்பர்களே, நீங்கள் நினைப்பது நியாயம்தான். காய்யமானதினால் தெரியும் ஆத்மா இல்லை, ஜடமானதினால் ப்ராணனும் ஆத்மா இல்லை, விகாரியானதால் மனதும் ஆத்மா இல்லை; நிச்சய ஸ்வரூபமான விக்ஞானம் என்ற புத்திதத்வத்தை ஆத்மாவாகத் தெரிந்துகொள்வதில் ஒருவிதமான முன்சொன்ன தோஷங்களுக்கும் அவகாசம் இல்லையே; ஆகையினால் அதையே ஆத்மஸ்வரூபமாக அறியவேண்டும்" என்று ப்ராணிகளுடைய புத்தியை அனுஸரித்து மறுபடியும் ச்ருதி நடித்துக் காட்டியது.

அந்த புத்திதத்வத்தையும், பக்ஷம், சிரஸ், புச்சம் முதலிய அலங்காரங்களால் அலங்கரித்தது. புத்தி தத்வம் என்ற ஆத்மாவிற்கோ ச்ரத்தையை சிரஸாகவும், ருதம் என்ற ஸத்தியத்தினுடைய பெருமையை வலது பக்ஷமாகவும், ஸத்யம் என்ற ஸத்யவசனத்தை (அதாவது நிஜத்தைப்பேசுவதை) இடது பக்ஷமாகவும், யோகமென்ற சாஸ்த்ரத்தின் அர்த்தத்தை மறக்காமல் தரித்துக்கொண்டிருப்பது என்ற ஸமாதியை உடலாகவும் महः (மஹः) (மஹ:) என்ற "மஹத்" தத்வத்தைப் புச்சமாகவும் வர்ணித்து விக்ஞானத்தை ப்ரும்மமாக வர்ணித்தது. விக்ஞானம் என்றால் நிச்சய ஸ்வரூபமான புத்தி. முன்சொன்ன ஐந்து விதமான ஞானேந்த்ரியத்தோடும் கூடின வேதத்தினுடைய அர்த்தமாகிய தர்மதத்வ ஞானமாகிய, விக்ஞானத்தையே விக்ஞானமயகோசமாக அறியவேண்டும். அந்த கோசமானது மனதைக் காட்டிலும் ஆத்மாவிற்கு ஸன்னிஹிதமானதினால் ஜடமோ என்ற சங்கைக்கு அவகாசம், மந்தாதிகாரிகளுடைய விஷயத்தில் ஏற்படாது. ஆகையினால் எக்காரணத்தைக் கொண்டும்

அதை ஆத்மா இல்லையென்று தள்ளுவது ச்ரமஸாத்திய மானதினால் அதையே ஆத்மஸ்வரூபமாக வெகுகாலமாகப் பாவித்து வந்த புருஷர்களுக்கும் காலக்ரமமாக ஆத்ம பாவனையென்ற ஸம்ஸ்காரத்தினல் ஸம்சுத்தி ஏற்பட்டு புத்தியையும் ஆத்மாவாக ஓப்புக்கொள்ள முடியாது என்ற எண்ணமேற்பட்டுவிடுகிறது.

"विज्ञानमपि आत्मा न भवति ;
विलयाद्यवस्थावत्वात् घटवत् ।"

"விஜ்ஞாநமபி ஆத்மா ந பவதி
விலயாத்யவஸ்தாவத்வாத் கடவத் ।"

என்ற அனுமானத்தினல் ஸுஷுப்தி அவஸ்தையில் கடம் முதலிய ப்ரபஞ்சத்தைப்போல் புத்தியும் லயித்துப்போகும் வஸ்துவானபடியினல், ஸர்வலயத்திற்கும் ஆதாரமாயும், தனக்கு லயமில்லாததாயும் உள்ள ஆத்ம ஸ்வரூபமாக விக்ஞானமும் ஆகாது என்று நிர்மானித்து, புத்தியென்ற விக் ஞானமய கோசத்திலும் ஆத்மத்வபுத்தியை பரித்யாகம் செய்துவிட்டு, விக்ஞானமயகோசத்திற்கும் ஆத்மா வேறுக இருக்கவேண்டும்; அதை நாம் எப்படி அறிவது என்று கவ லையுள்ள ஸூக்ஷ்மதர்சிகளை முன்னிட்டு மறுபடியும் ச்ருதி யானது கருணையுடன் "அதுவும் நியாயம்தான்; விக்ஞானமய கோசமும் ஆத்மாவாக ஆகாது; ஆனந்தமயகோசத்தை ஆத்ம ஸ்வரூபமாக அறியவேண்டு"மென்ற எண்ணத்துடன் ஆனந்த மயனை ஆத்மாவாக போதித்து அந்த ஆனந்தமயனுக்கு புச் சம், பக்ஷம், சிரஸ் இவைகளையும் போதித்தது. ஸுகத்தில் ப்ரியம், மோதம், ப்ரமோதம், ஆனந்தம் என்று நான்கு வகை களுண்டு. இஷ்டமான பதார்த்தத்தின்லாபத்தை காதினல் கேட்டதால் ஏற்படும் ஸுகத்தைப் ப்ரியம் என்றும்,

இஷ்டமான பதார்த்தத்தின் லாபத்தை நேரில் கண்ணினுல் பார்த்ததினுல் ஏற்படும் சுகத்தை மோதம் என்றும், இஷ்டமான பதார்த்தத்தை லாலனை செய்வதினுல் ஏற்படும் சுகத்தை ப்ரமோதம் என்றும், இஷ்டமான பதார்த்தத்தின் லாபத்திற்குப் பிறகு தான் பரமஸுகமாக வாழ்வது என்ற காலத்தில் தனக்கு ஏற்படும் சுகத்தை ஆனந்தமென்றும், நான்கு வகையாக சாஸ்திரத்தில் சுகமானது பிரிக்கப்பட்டுள்ளது. அவைகளில், ஆனந்தமய கோசத்திற்கு ப்ரியத்தை சிரஸாகவும், மோதத்தை வலதுபக்ஷமாகவும், ப்ரமோதத்தை இடதுபக்ஷமாகவும், ஆனந்தத்தை உடலாகவும் பரப்ரும்மம் என்ற ஆத்மதத்வத்தை அந்தஆனந்தமயகோசத்திற்குப் புச்சமாகவும் கல்பித்து வேதமானது போதிக்கின்றது. 'आनन्दमयः' (ஆநந்தமயः) (ஆநந்தமய:) என்றதினுல், 'मयट्' (மயட்) (மயட்) என்ற ப்ரத்யயத்திற்கு 'प्राचुर्यं' (ப்ராசுர்யம்) (ப்ராசுர்யம்) என்ற அர்த்தத்தை வைத்துக் கொண்டு சுகத்தை அனுபவிக்கிறவன் என்ற அர்த்தமானது வெளியாகிறது. சுகத்தை அனுபவிக்கிறவனே அவித்யையில் ஏற்பட்ட ப்ரும்மத்தினுடைய பரதிபிம்பமாகிற ஜீவனுகவே ஆவான். அந்த ஜீவனே "சிதாபாஸன்" என்றும் சொல்லப்படுவான். அந்த ஜீவனைத்தான் கர்த்தாவென்றும் போக்தாவென்றும், ஸம்ஸாரியென்றும் வேதாந்திகள் சொல்வார்கள். முன்பாக அன்னமயகோசத்தினுல் ஸ்தூலசரீரமென்ற போக உபகரணங்களையும் அடைந்து, முன்ஜன்மங்களில் தான் செய்த புண்யபாபத்தின் பலத்தை அனுபவிக்கின்ற போக்தாவான ஜீவனைத்தான் ஆனந்தமயகோசமென்று அறியவேண்டும். அந்த ஆனந்தமயகோசமும் பரமாத்மாவாக ஆகமுயாயமில்லை; அவனே சுகத்தை அனுபவிக்கிறவனுக ஆகிவிட்டான்; அவனுடைய ஆனந்தமோ ஆனந்தஸ்வரூபியான ப்ரும்மத்தினுடைய பிரதிபிம்பஸ்வரூபமான ஆனந்தமாகும். ப்ரதிபிம்ப ஆனந்தமோ எப்பொழுதும் நித்யமாக இல்லாததினுல், நித்யமான ஆனந்தத்தை ஸ்வரூபமாக உடைய ப்ரும்மமாக ஆனந்தமய கோசனும் ஆகமுடியாது. ஆகையினுல்

"आनन्दमयोपि आत्मा भवितुं नार्हति ।
कादाचित्कत्वात् अन्नादिपदार्थवत् ॥"

ஆநந்தமயொவி ஆத்மா ஹவிதும் நார்ஹதி ।
காதாசித்கத்வாத் அன்னாதிபதார்தவத் ॥

"ஆநந்தமயோபி ஆத்மா பவிதும் நார்ஹதி
காதாசித்கத்வாத் அன்னாதிபதார்தவத்"

என்ற அனுமானத்தினால், ஆனந்தமயன் என்று சொல்லப்படுகிற சிதாபாஸனை ஜீவனும் ஆனந்த ப்ரதி பிம்பத்தை அனுபவிக்கிறவன் ஆனதினால், கர்த்தா, போக்தாவாக இருந்துகொண்டு ஸம்ஸாரியாக இருப்பதினாலும் "நிர்விசேஷ ப்ரும்ம" தத்வரூபமான ஆத்மாவாக ஆகமுடியாது என்று தீர்மானித்து ஆனந்தமயகோசத்திலும் ஆத்மத்வ புத்தியை த்யாகம் செய்துவிட்டு, ஆனந்தமய கோசத்திற்கும் விலக்ஷணமாக ஆத்ம ஸ்வரூபம் இருக்கவேண்டும், அதை நாம் எப்படி அறிவோம் என்று தீவ்ரமான ஜிக்ஞாஸையோடு கூடின உத்தமாதிகாரிகளை முன்னிட்டு ச்ருதியும் மிகுந்த பரம கருணையுடன் "ஹே மஹானீயர்களே நீங்கள் தீர்மானம் செய்தது நியாயமானதே: காரியமானதினால் தேகமும் ஆத்மா இல்லை, ஜடமானதினால் ப்ராணனும் இல்லை, விகாரியானதினால் மனதும் ஆகாது; லயிக்கும் ஸ்வபாவமுடைய புத்தியும் ஆத்மாவாக ஆகாது; அநித்யமானதினாலும் ஆனந்தமயனும்கூட ஆத்மா இல்லை. அன்னமய கோச மென்ற போக ஆயதனம் என்ன, ப்ராணமயகோசம் மனோமய கோசம், விக்ஞானமய கோசம் என்று மூன்றுவித போக உபகரணங்கள் என்ன, ஆனந்தமய கோசமென்ற போக்தா என்ன, இந்த ஐந்திற்கும் விலக்ஷணமாகவும் இந்த ஐந்தோடு கூடின ஸர்வ ஜகத்திற்கும் அதிஷ்டானமாகவும் விளங்கி வரும் ப்ரும்மதத்வமோ இந்த ஆனந்தமய கோசத்திற்கும் புச்சம் போல் வர்ணிக்கப் பட்டிருக்கிறது. "ब्रह्म पुच्छं प्रतिष्ठा ।" (ப்ரஹ்ம வா ஏதம் ப்ரதிஷ்டா) (ப்ரஹ்ம புச்சம் ப்ரதிஷ்டா) என்று புச்சவாக்ய நிர்திஷ்ட

மான ப்ரும்மம் தான் ஆத்ம ஸ்வரூபமாக ஆகு மென்ற உண்மையை மந்த மத்ய மாதிகாரிகளைப் பரீக்ஷித்து, அவர்கள் உத்தமாதிகாரிகளாக ஆன பிறகு ப்ரும்ம தத்வத்தை வேத மானது போதித்தது. "புச்சம்" என்றதின் தாத்பர்யத்தை அறியவேண்டும் வால் என்ற அர்த்தத்தை நினைக்கக்கூடாது. 'परायण' (வராயணம்) (பராயணம்) பரம அதிஷ்டானம், போக் யம், போகாயதனம், போகோபகரணம் போக்தா என்ற ஸகல த்வைதமும் எந்த இடத்தில் கல்பிதமோ, எதனுடைய ஸத் தையினால், ஸத்தையோடு கூடினதுபோல் தோன்றுகிறதோ, எந்த வஸ்துவினுடைய ஜ்யோதிஸ்ஸால் ப்ரகாசிக்கிறதோ, எந்த வஸ்துவிற்கும் ஸ்வரூப பூதமான ஆனந்தத்தின் ப்ரதிபிம் பத்தினால் ஸுகத்தோடு கூடியவைபோலத் தோன்றுகிறதோ, அந்த பிம்பபூதமாயும் ஸர்வ ப்ரபஞ்சாதிஷ்டானமாயும், நிர் விசேஷமாயும், ஸ்வப்ரதானமாயும், புச்ச வாக்யத்தில் போதிக்கப்படுகிறதாயும் உள்ள ப்ரும்மம் தான் ஆத்மஸ்வரூ பம் என்ற தத்வத்தை ச்ருதியானது பரம கருணையுடன் உத் தமாதிகாரிகளுக்கு கடைசியாகப் போதிக்கின்றது.

அப்படி புச்சமென்று போதிக்கப்பட்ட பரப்ரும்மம் தான் ப்ரக்ருதத்தில் ஸ்ரீமத் ராமாயண கதாநாயகனை ஸ்ரீராம னென்று அறியவேண்டும்.

"रमन्ते योगिनोऽनन्ते सत्यानन्दे चिदात्मनि ।
इति रामपदेनासौ परं ब्रह्माभिधीयते ॥"

ரமந்தே யோகினோஅநந்தே ஸத்யாநந்தே சிதாத்மநி ।
இதி ராமபதேநாஸௌ பரம் ப்ரஹ்மாபிதீயதே ॥

"ரமந்தே யோகிநோநந்தே ஸத்யாநந்தே சிதாத்மநி
இதி ராமபதேநாஸௌ பரம் ப்ரஹ்மாபிதீயதே"

என்ற ச்ருதிவாக்யமே ராமன் பரப்ரும்மம் தான் என்பதில் முக்யமான ப்ரமாணமாக ஆகும் அந்த பரப்ரும்ம மாகிய ராமனுடைய பட்டாபிஷேகமானது ஸீதா பிராட்டியும் "பர

ப்ரும்ம மஹர்ஷி" என்பதில் ஸந்தேஹமே இல்லை. அந்த ஸீதை யாகிற பரப்ரும்மத்தின் மஹர்ஷியை ஆஞ்ஜனேயஸ்வாமி கண்டவுடன் தன்னுடைய ஆனந்தம் தாங்கமுடியாமல் புச்சமென்று சாஸ்திரத்தில் குறிப்பிடப்பட் டிருக்கும் ராமனுகிற தாரகப்ரும்மத்தை மனதினுல் பாவிக்க, அந்த திவ்யவிக்ரகமும் ப்ரத்யக்ஷமாக பரமயோகியான ஆஞ்ஜனேய ஸ்வாமிக்கு ஸ்புரிக்க உடனேயே ஆலிங்கனஞ்செய்து அந்த மங்கள விக்ரகத்தை உச்சி முகர்ந்து முத்தமிட்டுக் கொண்டார். தன் பாக்யமே பாக்ய மென்றும் ச்லாகித்தார். சண்டேன் ஸீதையை யென்று நர்த்தனம் செய்தார். இந்த பிராட்டியைக் காணு வதற்கு வேதமாகிற ஸ்தம்பத்தில் ஏறி உச்சியில் பார்க்க வேண்டும் என்பதை ஸூசிப்பிக்க ஸ்தம்பத்தில் ஏறுவதும், இறங்குவதுமாக நடித்தார் ப்ரும்மத்தை ஸாக்ஷாத் கரித்துக்கொண்ட ஆசார்ய புருஷர்களுடைய ப்ருக்ருதி இது தான் என்றும் ப்ரகடனம் செய்தார.

இந்த தத்வங்கள் எல்லாம் காந்த ஸம்ஹிதையான ஸ்ரீமத் ராமாயணத்தில்

'आस्फोटयामास चुचुम्ब पुच्छं'

ஆஸ்ஃபோடயாமாஸ சுசும்ப புச்சம்

என்ற ச்லோகத்தில் அடங்கியுள்ளது என்பதை வித்வான்கள் ஊகித்து அறியவேண்டும்.

இவ்விதமான ஆனந்தத்தை அனுபவிக்கிறவராக இருந் தாலும் "ராவணனுடைய அந்தப்புரத்தில் ஸீதையை நாம் பார்த்தோம் என்று நினைத்தது மிகவும் நியாய விரோத மானது. மகா பதிவ்ரதா சிரோமணியான ஸீதாதேவி யானவள் இவ்விதம் ராவணனுடைய அந்தப்புரத்தில் திவ்ய மான பர்யங்கத்தில் தூங்கிக் கொண்டிருக்க நியாயம்

உண்டா? ராமனைக் காட்டிலும் வேறு புருஷனுடைய ஸமீபத்திலேயே ஸீதா தேவியானவள் இவ்விதமான ஆபரணங்களால் அலங்கரித்துக் கொண்டிருக்க நியாயம் ஏற்படுமா? ஆகையினால் நாம் பார்த்தவள் ஸீதை யல்ல; ஸீதையைப் போல் சற்றேறக்குறைய ஸௌந்தர்ய முள்ள ஒரு ராக்ஷஸ ஸ்த்ரீதான்.

न रामेण वियुक्ता सा स्वप्तुमर्हति भामिनी ।
न भोक्तुं नाप्यलंकर्तुं न पानमुपसेवितुम् ॥
नान्यं नरं उपस्थातुं सुराणामपि चेश्वरम् ।
न हि रामसमः कश्चित् विद्यते त्रिदशेष्वपि ॥
अन्येयं इति निश्चित्य पानभूमौ चचार सः ।

ந ராமேண வியுக்தா ஸா ஸ்வப்துமர்ஹதி பாமினீ ।
ந போக்தும் நாப்யலம்கர்தும் ந பாநமுபஸேவிதும் ॥
நான்யம் நரம் உபஸ்தாதும் ஸுராணமபி சேஸ்வரம் ।
ந ஹி ராமஸமः கச்சித் வித்யதே த்ரிதசேஷ்வபி ॥
அந்யேயம் இதி நிச்சித்ய பாநபூமௌ சசார ஸः ।

ராமனைவிட்டுப்பிரிந்த ஸீதையோ இவ்விதம் தூங்க நியாயமில்லை. போஜனாதிகளையும் செய்யமாட்டாள். ஆகையினால் இவள் யாரோ வேறு ஸ்த்ரீதான் என்று தீர்மானித்து விட்டு மறுபடியும் அந்த அந்தப்புரத்திலேயே ஸீதையை தேடினர். ஆஞ்சநேயருடைய திருஷ்டிக்கு யோக்யமாக அதிசுந்தரிகளான அநேகம் ஸ்த்ரீகள் தென்பட்டாலும் ஸீதையைமாத்திரம் தேடித்தேடிப் பார்த்தும் ஆஞ்சநேயரால் கண்டுபிடிக்கமுடியவில்லை. அத்துடன் வேறுவிதமான

சிந்தையும் ஆஞ்சநேயருக்கு ஏற்பட்டுவிட்டது. இந்த ஸ்த்ரீகளெல்லோர்களும் ராவணனால் போகம் செய்யப்பட்டு சிரமத்துடன் தன்தன் வஸ்திராபரணதிகளைக்கூட கவனிக்காமல் அயர்ந்து தூங்குகிறார்களே, அவர்களை நாம் பார்த்ததினால் நைஷ்டிக ப்ரம்மசர்யம் என்ற நமது பரம தர்மத்திற்கு லோபம் வந்துவிடாதா? ஒரு அந்தப்புரத்தில் சென்று பரதாரங்களைப் பார்ப்பது என்பது அதர்மம்தானே! அவ்விதம் ஒருவர் இருவர் அல்ல வெகு ஸ்த்ரீகளைட பார்த்தோம். தர்மலோபத்தை அடையாமல் நாம் எப்படி இருக்கமுடியும். ஸீதையைத் தேடவந்த நமக்கு இவ்விதம் தர்மலோபம் வந்துசேர்ந்து விட்டதே என்று மிகவும் கவலையை அடைந்தார். பிறகு தானேவே ஸமாதானமும் செய்துகொண்டார்.

न हि मे मनसः किञ्चित् वैकृत्यं उपपद्यते ।
मनो हि हेतुः सर्वेषां इन्द्रियाणां प्रवर्तने ॥
शुभाशुभास्ववस्थासु तच्च मे सुव्यवस्थितम् ।
नान्यत्र हि मया शक्या वैदेही परिमार्गितुम् ।
स्त्रियो हि स्त्रीषु दृश्यन्ते सर्वथा परिमार्गणे ।
यस्य सत्त्वस्य या योनिः तस्यां तत्परिमृग्यते ॥

ந ஹி மே மநஸ: கிஞ்சித் வைக்ருத்யம் உபபத்யதே ।
மநோ ஹி ஹேது: ஸர்வேஷாம் இந்த்ரியாணாம் ப்ரவர்தநே ॥
சுபாசுபாஸ்வவஸ்தாஸு தச்ச மே ஸுவ்யவஸ்திதம் ।
நாந்யத்ர ஹி மயா சக்யா வைதேஹீ பரிமார்கிதும் ॥
ஸ்த்ரியோ ஹி ஸ்த்ரீஷு த்ருஸ்யந்தே ஸர்வதா பரிமார்கணே ।
யஸ்ய ஸத்வஸ்ய யா யோநி: தஸ்யாம் தத்பரிம்ருக்யதே ॥

என்று தன்மனதைத்தான் ஸமாதானம் செய்து கொண்டார். அதாவது இந்த அந்தப்புரத்தில் அநேக ஸ்த்ரீகளை நாம்பார்த்ததுமாத்திரம்தானே தவிர இவர்களைப் பார்த்த மாத்திரத்திலை நமது மனதிற்கு ஒருவிகாரமும் ஏற்படவில்லை, மனோபாவத்தில் கெடுதல் ஏற்பட்டால்தானே தர்மலோபம் ஏற்படும் இந்திரியங்கள் விஷயாதிகளில் ப்ரவ்ருத்திப்பதற்கும் மனது தான் மூலகாரணமாகும். அந்த மனதோ இவ்வளவு ஸ்த்ரீகளை நாம் பார்த்தும் கொஞ்சமேனும் கலக்கத்தை அடையாமல் நமக்கு உபாஸ்யமான தாரகப்ரும்மத்தினிடத்தில் ஸ்திரமாக இருந்துவருகிறது; நாமோ ஸீதையைத்தேட வந்தோம். எந்த ப்ராணி எந்த ஜாதியில் சேர்ந்ததோ அந்த ப்ராணியை அந்த ஜாதியில்தானே தேடதேண்டும். ஆகையினால் ஸீதை ஸ்த்ரீயானபடியினால் ஸத்ரீயினுடைய கூட்டத்தில்தான் அவளைத் தேடவேண்டும் என்று இந்த அந்தப்புரத்தில் வந்து ஸீதையை நாம் தேடினோம். ஆனால் நமது மனதோ ஸம்சுத்தமாகத்தான் இருந்துவருகிறது; கொஞ்சமேனும் விகாரத்தை அடையவில்லை, அதனால் தர்மலோபமும் கொஞ்சமேனும் கிடையாது என்று தீர்மானித்துக் கொண்டு மறுபடியும் ஸீதையை ராவணனுடைய அந்தப்புரத்திலேயே தேடினார். தேவஸ்த்ரீகள் கந்தர்வஸ்த்ரீகள் நாகஸ்த்ரீகள் பலவாறுக அதிரூபவதிகளான அநேகஸ்த்ரீகள் ஆஞ்சநேய ஸ்வாமியினுடைய கண்ணில் தென்பட்டாலும் ஸீதையைமாத்திரம்தான் கண்டுபிடிக்கமுடியாமல் மிகவும் கஷ்டத்தை அடைந்தார். ‘இவ்விதம் ஸீதையை நாம் காணுமல் வானரஸைன்யத்தின் மத்தியில் திரும்பிப்போய் என்ன சொல்லுகிறது? ஆகிலும் நான் கவலையை அடையக்கூடாது. மனதில் தைர்யக்குறைவு ஏற்பட்டால் ப்ரக்ருதமான கார்யத்திற்கு ஹானி வந்துவிடும்.

अनिर्वेदः श्रियो मूलं अनिर्वेदः परं सुखम् ।
अनिर्वेदो हि सततं सर्वार्थेषु प्रवर्तकः ॥
करोति सफलं जन्तोः कर्म यत्तत्करोति सः ।
तस्मादनिर्वेदकरं यत्नं चेष्टेऽहमुत्तमम् ॥

சுநிவெழுஃ ஸ்ரீயொ உமுறும் சுநிவெழுஃ வரம் லுவழு ।
சுநிவெழுதொ ஹி லுதகம் லுவழுாயுழுஷு வ்ருவதழுகஃ ॥
கரொதி லுஹறும் ஜந்தோஃ கழு யத்தத்தரொதி லுஃ ।
தஷ்மாதுநிவெழுகரம் யத்நம் சேஷ்டேஹமுத்தமம் ॥

அநிர்வேதஃ ச்ரியோ மூலம் அநிர்வேதஃ பரம் ஸுகம் ।
அநிர்வேதோ ஹி ஸததம் ஸர்வார்தேஷு ப்ரவர்தகஃ ॥
கரோதி ஸபலம் ஜந்தோஃ கர்ம யத்தத்கரோதி ஸஃ ।
தஸ்மாதநிர்வேதகரம் யத்நம் சேஷ்டேஹமுத்தமம் ॥

என்று தீர்மானித்துக்கொண்டு ஒரு காரியத்தை ஒரு மனிதன் ஆரம்பித்தால் நடுவில் அதில் ஏற்படுகிற கஷ்டத்திற்காக தனது உத்ஸாகத்தை விடக்கூடாது. உத்ஸாகத்தினால் அளவற்ற ஸம்பத்தையும் அடையலாம். உத்ஸாகம்தான் பரம ஸௌக்கியத்திற்குக் காரணமாகும். உத்ஸாகம்தான் அந்தந் தக்கர்மாவிலும் மனிதனை ப்ரவ்ருத்திக்கச் செய்கிறது. ஆகையினால் உத்ஸாகத்துடன் நான் மறுபடியும் ஸீதையைத் தேடத்தான் போகிறேன்" என்ற தைர்யத்தை அவலம்பித்து லங்காநகரத்தில் ஒரு இடமும், ஒருப்ரதேசமும் கூட பாக்கி இல்லாமல் தேடினர். ஆஞ்சநேயஸ்வாமியினால் ஸீதையைத் தேடுவதான நிமித்தம், ஸஞ்சரிக்கப் படாததான தேசம், நாலு அங்குலம்கூட இல்லாமல் ஆகிவிட்டது; அநேக ஸ்த்ரீகளை நாம் கண்டோமே ஸீதையை மாத்திரம் நாம் காணவில்லையே; ஆகையினால் நாம் மிகவும் தெளர்பாக்யத்தைச் செய்தவர்களாகிவிட்டோம். ஸம்பாதியோ ஸீதை இந்த லங்கா நகரத்திலிருப்பதாக தெரிவித்தாரே; பார்த்தும் காணமுடியவில்லையே என்று கவலையை அடைந்து மிகவும் துக்கஸாகரத்தில் முழுகித்தவித்தார்.

ஸீதையைக்காணமல் நாம் திரும்பிப் போனோமேயானால் அநேக குலங்களை அழித்தபாபமும் நமக்கு ஏற்படும். ராம லக்ஷ்மணர்கள் ஸீதையைக் காணவில்லை என்ற என் வார்த்தையைக் கேட்டமாத்திரத்தில் உடனேயே ஜீவனை இழந்து விடுவார்கள். இந்த வ்ருத்தாந்தம் பரதனுக்குத் தெரிந்தால்

பரதசத்ருக்னர்களும் ஜீவனை இழந்து விடுவார்கள். புத்ரர்கள் இவ்விதமான கதியை அடைந்தார்கள் என்பதைக்கேட்டு கௌஸல்யா முதலிய மாத்ரு வர்க்கங்களும் உயிரை விட்டு விடுவார்கள். இவ்விதமான அவஸ்தையில் சுக்ரீவன்தான் எவ்விதம் ப்ராணனை வைத்துக்கொள்வான்? அங்கதன்தான் ஜீவிப்பானு? இந்த தசையில் ஸகல வானரர்களும் மரித்துவிடுவார்கள். ஆகையினால் நாம் திரும்பிப்போய் ஸீதையைக் காணவில்லை என்று சொல்கிற வார்த்தையானது இவ்வளவு துக்கத்திற்கு காரணமாகிற படியினால் இங்கிருந்து நான் திரும்பிப்போவது உசிதமில்லை. இந்த லங்காநகரத்திலேயே ஸமுத்திரத்தில் விழுந்தாவது உயிரை விடுகிறேன் அல்லது தபஸ்வியாக ஆகி, ஆகாரம் செய்யாமலிருந்து உண்ணாவிரதத்தினால் ப்ராணனை விடுகிறேன். அல்லது ராவணனோடாவது யுத்தம் செய்து, அவனை வதித்து அவனுடைய ம்ருத சரீரத்தை ராமனுக்கு எதிரில் கொண்டு போட்டு ஸீதையைத் தூக்கி வந்ததற்கு பதில் செய்து விட்டதாகவாவது சொல்கிறேன். இவ்விதமான செய்கையைத்தவிர நான் செய்ய வேண்டியது வேறொன்றுமே ப்ரக்ருதத்தில் இல்லை என்று வேறுவிதமாக கவலையை அடைந்தார். மறுபடியும் உத்ஸாக சக்தியைக் கைவிடாமல் பின்வருமாறு யோசித்தார்:—

நாம் லங்காநகரத்திற்குப் புறப்பட்டுவரும்பொழுது ஒரு பிசகு செய்துவிட்டோம். அக்காரணத்தினால்தான் இவ்வளவு கஷ்டம் நமக்கு இங்கு நேர்ந்தது. எவ்வளவோ ஸ்த்ரீகளை நாம் பார்த்தும் ராம பத்னியைக் காணுமல் நமது மனம் தவிப்பதற்கு அந்த அபராதம்தான் மூலகாரணமாகும். கண்டதேவதைகளுக் கெல்லாம் நமஸ்காரம் செய்துவிட்டு ஸமுத்ரத்தைத் தாண்ட ஆரம்பித்தோமே; அந்த ஸந்தர்ப்பத்தில் நமக்கு இந்த ராமனும் ஸீதையும் ஒரு ப்ரதான தேவதையென்று புத்தியில் தோன்றுமல் போனதே ஒரு பெரிய அபராதமல்லவா, அதனுடைய பலத்தைத்தான் இப்பொழுது நாம் அனுபவிக்கிறோம், லங்காநகரத்தில் ஸீதை

இருக்கிறாள் என்று சொன்ன ஸம்பாதியினுடைய வசனமும் பொய்யாக ஆகியாய மில்லை. ராக்ஷஸர்களாலோ, ராவணனாலேயோ ஒரு ஸமயம் ஸீதையானவள் பக்ஷிக்கப்பட்டு விட்டாளோ, அல்லது ராவணனுடைய பலாத்காரமான செய்கைக்குப் பயந்து கொண்டு ராவணனுடைய வசமாகத்தான் ஆகிவிட்டாளோ என்றும நிஷ்சயக்க இடமில்லை. ஸீதாபிராட்டியினுடைய பாதிவ்ரத்தியத்தின் பெருமையை யாரால்தான் வர்ணிக்கமுடியும்? அப்படி ஏதாவது விபரீத ஸம்பவம் நேர்ந்திருந்தால் அந்த பாதிவ்ரத்தியத்தினால் லங்காநகரமே பஸ்மமாக ஆகியிருக்க வேண்டும். ஆகையினால் ஸீதை இந்த லங்காநகரத்தில்தான் இருக்க வேண்டும். மேற்சொன்ன ப்ரகாரம் நாம் செய்த பாபத்தினால் நமது திருஷ்டிக்கு யோக்யமாக ஆகவில்லை. பரதேவதையினுடைய தர்சனம் நமக்குக் கிடைக்க வேண்டுமானால் சென்ற வெகு ஜன்மங்களில் நாம் பெருந்தவத்தைச் செய்திருக்க வேண்டாமா! தேவிக்கோ, ராமனுக்கோ நாம் நமஸ்கரிக்காமல் புறப்பட்டு வந்த நமது பாகஸத்தை மன்னிக்குமாறு வேண்டிக்கொண்டு இப்பொழுதாவது நாம் மறுபடியும் ராமனுக்கும் ஸீதாபிராட்டிக்கும் நமஸ்கார பூர்வமாக த்யானம் செய்துகொண்டு நமது பக்தியைத் தெரிவித்துக் கொள்வோம் என்று எண்ணி மகானுபாவனான ஆஞ்ஜநேய ஸ்வாமியானவர் கதாநாயகனான ப்ரதான தேவதையான ராமருக்கு நமஸ்காரம் செய்கிறார்.

नमोस्तु रामाय लक्ष्मणाय देव्यै च तस्यै जनकात्मजायै ।
नमोऽस्तु रुद्रेन्द्र यमानि लेभ्यः नमोऽस्तु चन्द्रार्क मरुद्गणेभ्यः ॥

நமோஸ்து ராமாய லக்ஷ்மணாய
தேவ்யை ச தஸ்யை ஜனகாத்மஜாயை ।
நமோஸ்து ருத்ரேந்த்ர யமாநிலேப்ய:
நமோஸ்து சந்த்ரார்க மருத்கணேப்ய: ॥

நமோஸ்து ராமாய ஸலக்ஷ்மணாய
தேவ்யை ச தஸ்யை ஜனகாத்மஜாயை!
நமோஸ்து ருத்ரேந்த்ர யமாநிலேப்ய:
நமோஸ்து சந்த்ரார்க்க மருத்கணேப்ய: ॥

என்ற ச்லோகத்தினால் தாரகப்ரும்மமான ராமனின் பொருட்டும் ஆதிசேஷ பகவானான லக்ஷ்மண ஸ்வாமியின் பொருட்டும் சித்ரூபிணியான பரதேவதையான ஸீதையின் பொருட்டும் அங்கதேவதைகளான ருத்ரன், இந்திரன், யமன் அக்னி, சந்திரன், ஸூர்யன், ஸப்தமருத்துக்கள் இவர் களின் பொருட்டும் நமஸ்கரித்து விட்டு த்யானயோகத் தால் ஒரு முகூர்த்தம் பரிநிஷ்டிதனாக விளங்கி வந்தார்.

உடனேயே புத்தியில் ஒரு ஸ்பூர்த்தி ஏற்பட்டது. அதாவது லங்கா நகரம் முழுவதும் தேடிவிட்டோம் என்ற அஹங்காரத்தை அடைந்தோமே, அசோகவனத்திலல்லவா ஸீதை இருப்பதாக ஸம்பாதி சொன்னார். அந்த இடத் திற்கு நாம் போகவே இல்லையே; அங்கு போய் நாம் தேடினால் நிச்சயமாக ஸீதையைப் பார்த்து விடலாம் என்று நிச்சயத்துடன்

ब्रह्मा स्वयम्भूर्भगवान् देवाश्चैव दिशन्तु मे ।
सिद्धिमग्निश्च वायुश्च पुरुहूतश्च वज्रभृत् ॥
वरुणः पाशहस्तश्च सोमादित्यौ तथैव च ।
अश्विनौ च महात्मानौ मरुतः शर्व एव च ॥
सिद्धिं सर्वाणि भूतानि भूतानां चैव यः प्रभुः ।

ப்ரும்மா ஸ்வயம்பூ: பகவான் தேவாச்சைவ திசந்து மே।
ஸித்திமக்னிச்ச வாயுச்ச புருஹூதச்ச வஜ்ராப்ருத் ॥
வருண: பாசஹஸ்தச்ச ஸோமாதித்யௌ தனதவ ச।
அச்விநௌ ச மஹாத்மாநௌ மருத: சர்வ ஏவ ச ॥
ஸித்திம் ஸர்வாணி பூதானி பூதாநாம் சைவ ய: ப்ரபு:।

என்ற வாக்யங்களால் ப்ரும்மா முப்பத்திமூன்று கோடி தேவதைகள், ரிஷிகள், மற்ற பூதங்கள் எல்லா அனுக்ரக சக்தியுள்ள பெரியோர்களும் ஸீதா தர்சன நிமித்தமான ஒரு பெரிய ஸித்தியை எனக்கு அளிக்கட்டும் என்று ப்ரார்த்தித்துக் கொண்டு மிகு வேகமாக ப்ராகாரத்தைத் தாண்டி அசோகவனத்திற்கு வந்து சேர்ந்தார்.

அசோகவனத்திலோ நாநாவிதமான வ்ருக்ஷ விசேஷங் களும், அழகிய க்ரீடா பர்வதங்களும் க்ரித்ரிமமான நதி களும் ஆஞ்ஜநேய ஸ்வாமியினுடைய த்ருஷ்டிக்கு விஷய மாகப் புலப்பட்டன. அவைகளின் நடுவில் தங்கமயமான வர்ணமுள்ள சிம்சுபா வ்ருக்ஷமும் காணப்பட்டது. அந்த வ்ரு க்ஷத்தினுடைய அடிபாகத்தில் ஸீதாதேவியை ஆஞ்ஜநேய ஸ்வாமியானவர் மிகவும் கவனமாக தேடினார். அந்த சிம்சுபா வ்ருக்ஷத்தினுடைய ஸமீபத்தில் அழகான ஒரு நதியைப் பார்த்து விட்டு

सन्ध्याकालमना: श्यामा ध्रुवमेष्यति जानकी।
नदीञ्चेमां शिवजलां सन्ध्यार्थे वरवर्णिनी ॥

ஸந்த்யாகாலமநா: ச்யாமா த்ருவமேஷ்யதி ஜாநகீ।
நதீஞ்சேமாம் சிவஜலாம் ஸந்த்யார்த்தே வரவர்ணினீ ॥

என்று ஸீதாபிராட்டியானவள காம பரதந்த்ரனான ஜனக வம்சத்திலுதித்தபடியினால் ஸந்த்யா காலத்தில் ஸந்த்யா தேவதையை த்யானம் செய்யும் விஷயதத்பரையாகத்தான்

இருக்கவேண்டும். ஸீதைக்கு உசிதமான புண்ய ஜலமும் இந்த நதியில் ஓடுகிறது. ஆகையினால் ஸீதாதேவியானவள் அவச்யம் ஸந்த்யா காலத்தில் இந்த நதிக்கு வரக்கூடும். அப்பொழுது நாம் தரிசனம் செய்து விடலாம் என்று ஹனுமாரானவர் தீர்மானித்தார்.

ப்ரக்ருதத்தில் "ஸந்த்யா" சப்தத்தினால் ப்ராதக் காலத்தையே க்ரஹித்துக் கொள்ள வேண்டும். ஆஞ்ஜநேய ஸ்வாமியோ இரவு முழுமையும் ராவணனுடைய அந்தப் புரத்தில் ஸீதையைத்தேடி விட்டு இரவு முடியும் ஸமயத் தில் அதாவது அன்றிரவு சுமார் நான்கு மணிக்கு அசோக வனம் சென்றார். அசோக வனத்திலுள்ள காக்ஷிகளையும் பார்த்து மகிழ்ந்தார். மறு நாள் காலையில் ஸ்நானம் முதலிய ஸத்கர்மாக்களைச் செய்ய ஸீதையானவள் அவச்யம் வரக்கூடு மென்றும் தீர்மானித்தார். सन्ध्याकाल (ஸந்த்யாகாலம்) (ஸந்த்யா காலம்)என்ற பதத்தினால் ப்ராதக்காலமென்ற அர்த்தத்தை க்ரஹித்துக் கொள்ளும் பொழுது ப்ராதக்காலத்தில் செய்ய வேண்டிய ஸ்நானதிகளில் ஸ்த்ரீகளுக்கும் அதிகாரத்தை சாஸ்திரம் அனுமதிக்கின்றபடியால் ப்ராதக்காலத்தில் செய்ய வேண்டிய ஸ்நானத்திற்கு ஸீதை வருவாள் என்ற தாத் பர்யத்தை க்ரஹித்தால் ஒருவிதமான தோஷத்திற்கு மவகாசமில்லை. ஸந்த்யாவந்தனம் என்ற கர்மாவில் ஸ்த்ரீ களுக்கதிகாரம் உண்டு என்ற ப்ரமமும் ஏற்படாது. தவிரவும் 'सन्धीयते अनया अयं जीवः' (ஸந்தீயதே அநயா அயம் ஜீவஃ) (ஸந்தீயதே அனயா அயம் ஜீவ:) என்கிற ஸாஸ்த்ரத்தினால் ஜீவனை பரப்ரும்மத்தினிடத்தில் கொண்டு சேர்த்து வைக் கிற தேவதா விசேஷத்தை ஸந்த்யா என்ற சப்தத்தினால் க்ரஹித்துக் கொள்ளவேண்டியது அவச்யமானதினாலும், सम्यक् = நன்றாக செய்யப்படும் பகவத் த்யானத்தையே "ஸந்த்யை" என்ற சப்தத்தின் அர்த்தமாக க்ரஹித்துக் கொள்ள வேண்டியபடியினாலும், ஸந்த்யை என்ற காயத்ரீ தேவதையை த்யானம் செய்கிற விஷயத்தில் ஸ்த்ரீகளுக்கும்

அதிகாரம் உண்டு என்றும் க்ரஹித்துக் கொள்ளலாம். இந்த விஷயத்தில் "सन्ध्यार्थे वरवर्णिनी" (ஸந்த்யார்தே வரவர்ணிநீ) என்ற வசனமே ப்ரமாணமாக ஆகும். அர்த்த ஞானபூர்வகமாக மந்த்ரோச்சாரணம் செய்து கொண்டு தேவதையை த்யானம் செய்வதில் த்விஜனுக்குத்தான் அதிகாரம் என்று ஸந்த்யா வந்தனத்தில் ஸ்த்ரீகளுக்கு அதிகாரத்தைத் தடுக்கிற சாஸ்த்ரத்திற்கு ஸங்கோசம் செய்து கொள்ள வேண்டும்.

एवं तु मत्वा हनुमान् महात्मा
प्रतीक्षमाणो मनुजेन्द्रपत्नीम् ।
अवेक्षमाणश्च ददर्श सर्वं
सुपुष्पिते पर्णघने निलीनः ॥

ஏவம் து மத்வா ஹனுமான் மஹாத்மா
ப்ரதீக்ஷமாணோ மனுஜேந்த்ரபத்னீம் ।
அவேக்ஷமாணஸ்ச ததர்ச ஸர்வம்
ஸுபுஷ்பிதே பர்ணகனே நிலீன: ॥

முற்சொன்ன ப்ரகாரம் ஆஞ்ஜநேய ஸ்வாமியானவர் தீர்மானித்து ராஜச்ரேஷ்டனான ராமருடைய தர்மபத்னியை நான்கு பக்கங்களிலும் தேடினர். தானும் மற்றவர்களுடைய த்ருஷ்டிக்கு யோக்யமாகாமலிருக்கும்படி சிம்சுபா விருக்ஷத்திலுடைய இலைகளில் மறைந்துகொண்டு ஸூக்ஷ்ம மான சரீரத்துடனிருந்து வந்தார்.

அங்காங்கு த்ருஷ்டியைச் செலுத்தி ஸீதையைத்தேடும் பொழுது சிம்சுபா விருக்ஷத்திற்கு ஸமீபத்தில் ப்ரும்மாண்ட மான கோபுரத்தோடு கூடின ஒரு ஆலய விசேஷத்தைப்

பார்த்தார். அதைப் பார்க்கும் பொழுது ஜனருடைய கோவிலைப்போல் புலப்பட்டது. அந்த ஆலயத்தினுடைய முன்மண்டபத்தில் ஸீதையைப் பார்த்தார். அழுக்கடைந்த வஸ்த்ரத்தோடு கூடினவளாயும், தன்னை ராவணனுடைய வசமாக்குவதில் உத்யுக்தர்களான ராக்ஷஸஸ்த்ரீகளால் சூழப் பட்டவளாயும், ஆகாரமில்லாத காரணத்தினால் மிகவும் க்ருச மான சரீரத்தோடு கூடியவளாயும், பெருமூச்சு விட்டுக் கொண்டு, ராமத்யானத்தில் ஈடுபட்டவளாயுமுள்ள ஸீதையை ஆஞ்சநேயஸ்வாமியானவர் கண்டார். அவர் ஸீதையைப்பார்க் கும்பொழுது புகையினால் சூழப்பட்ட அக்னி ஜ்வாலைபோல் அவள் விளங்கி வந்தாள். தாமரை புஷ்பமே இல்லாததான தாமரை ஓடைபோலும் விளங்கினாள். ஆஞ்ஜநேயஸ்வாமிக்கே அந்த அவஸ்தையில் ஸீதையைப் பார்க்கும்பொழுது மனது மிகவும் கஷ்டத்தை அடைந்தது. ஆகிலும் அனேக ஹேதுக் களைக்கொண்டு இவள்தான் ராமபத்னியான ஸீதையாக இருக்கவேண்டுமென்று ஊஹித்தார்.

इयं कनकवर्णाङ्गी रामस्य महिषी प्रिया ।
प्रनष्टाऽपि सती यास्य मनसो न प्रणश्यति ॥
इयं सा यत्कृते रामः चतुर्भिः परितप्यते ।
कारुण्येनानृशंस्येन शोकेन मदनेन च ॥
स्त्री प्रनष्टेति कारुण्यात् आश्रितेत्यानृशंस्यत ।
पत्नी नष्टेति शोकेन प्रियेति मदनेन च ॥

இயம் கநகவணாங்ஜீ ராமஸ்ய மஹிஷீ ப்ரியா ।
ப்ரநஷ்டாபி ஸதீ யாஸ்ய மநஸோ ந ப்ரணஶ்யதி ॥
இயம் ஸா யத்க்ருதே ராமஃ சதுர்பிஃ பரிதப்யதே ।
காருண்யேநாநृஶம்யேந ஶோகேந மதநேந ச ॥
ஸ்த்ரீ ப்ரநஷ்டேதி காருண்யாத் ஆஶ்ரிதேத்யாநृஶம்யத ।
பத்நீ நஷ்டேதி ஶோகேந ப்ரியேதி மதநேந ச ॥

இயம் கனகவர்ணாங்கீ ராமஸ்ய மஹிஷீ ப்ரியா ।
ப்ரனஷ்டாபி ஸதீ யாஸ்ய மனஸோ ன ப்ரணச்யதி ॥
இயம் ஸா யத்க்ருதே ராமः சதுர்பிः பரிதப்யதே ।
காருண்யேநாந்ருசம்ஸ்யேன சோகேன மதனேந ச ॥
ஸ்த்ரீ ப்ரனஷ்டேதி காருண்யாத் ஆச்ரிதேத்யாந்ருசம்ஸ்யதः ।
பத்னீ நஷ்டேதி சோகேன ப்ரியேதி மதனேந ச ॥

இவள்தான் ராமனுடைய பட்டமஹிஷியான ஸீதாதேவி யாக இருக்கவேண்டும். வெளிக்கு ராமனை விட்டு இவள் பிரிந்தவள்போல் தோன்றினாலும் ராமனுடைய மனதை விட்டு இவள் பிரியவேயில்லை. எப்பொழுதும் ராமனுடைய மனதினுல் த்யானம் செய்யப் பட்டவளாகித்தான் இருந்து வருகிறாள். ஸ்ரீராமனவர் யாருடைய விஷயத்தில் காருண்யம், ஆந்ருசம்ஸ்யம், சோகம், மதனம் என்ற நான்கினுல் தாபத்தை அடைந்து கொண்டு வருகிறாரோ அந்த ஸ்த்ரீயானவள் இவள்தான். ஆபத்காலத்தில் ஸ்த்ரீகள் ஸ்வயமாக அபலைகளானதினுல் அவர்களை புருஷன்தான் ரக்ஷிக்கவேண்டும். அப்படித் தான் ஸீதையை ரக்ஷிக்கவில்லையே என்ற கருணையினுல் தாபத்தை அடைகிறார். தன்னை ஆச்ரயித்தவர்களை ரக்ஷிக்கவேண்டிய கடமை தன்னைச்சேர்ந்தது. அதுதான் "ஆந்ருசம்ஸ்யம்" என்ற சப்தத்தின் பொருளாகும். ஸீதையானவள் தன்னை ஆச்ரயித்தபடியினுல் ஆச்ரயித்த ஜனத்தை நாம் ரக்ஷிக்கவில்லையே என்றும் தாபத்தை அடைகிறார்:

अर्धो वा एषः आत्मनः यत्पत्नी
ஸயை ஷா வா வஷः ஸூ தநः யதத்தீ
வை நா

"அர்த்தோவா ஏஷः ஆத்மனः யத்பத்னீ"

என்ற ரீதியாக புருஷனுடைய பாதிசரீரமாக ஸ்த்ரீயைச் சொல்லியிருப்பதனுல் நமது பாதி உடலான ஸீதையை நாம் ரக்ஷிக்காமல் ஆகிவிட்டோமே. இனி அக்நிஹோத்ரம் முதலிய கர்மாக்களை நாம் எவ்விதம் செய்கிறதென்றும்

தாபத்தை அடைகிறார். அதிசுந்தரியான தினால், அந்த ஸீதையை நினைத்து நினைத்து, மன்மததாபம் அதிகமாக ஆகிறபடியினால் அதனாலும் பகவானான ஸ்ரீராமனும் தாபத்தை அடைகிறார். முன்சொன்னபடி இவ்விதம் நான்கு விதமான காரணங்களைக் கொண்டு ராமன் எந்த ஸீதையினுடைய விஷயத்தில் தாபத்தை அடைகிறாரோ அந்த ஸீதை இவள்தான் என்பதில் ஸந்தேகமே இல்லை. ராமனுடைய ஸௌந்தர்யமோ அவயவ விசேஷங்களோ எவ்விதமோ அவ்விதமே ஸீதையினுடைய ஸௌந்தர்யமும் அவயவ விசேஷங்களும் காணப்படுகின்றன. இந்த ஸீதையினுடைய அவயவ ஸௌந்தர்ய விஷயம் எப்படியோ அப்படியேதான் ராமனுடைய ஸௌந்தர்யாதிகளும். ரூபம் அவயவஸந்நிவேசங்கள் இவைகளில் ராமனுக்கு ஸமானமாகவே இந்த ஸ்த்ரீ காணப் படுகிறபடியினால் இவள் ராமனுடைய தர்மபத்னியான ஸீதைதான் என்றும் தீர்மானித்தார்.

தவிரவும்

अस्याः देव्याः मनस्तस्मिन् तस्य चास्यां प्रतिष्ठितम् ।
तेनेयं स च धर्मात्मा मुहूर्तमपि जीवति ॥

அஸ்யாஃ தெவ்யாஃ மநஸ்தஸ்மிந் தஸ்ய சாஸ்யாம் ப்ரதிஷ்டிதம் ।
தேநேயம் ஸ ச தர்மாத்மா முஹூர்த்தமபி ஜீவதி ॥

அஸ்யா: தேவ்யா: மன: தஸ்மின் தஸ்ய சாஸ்யாம் ப்ரதிஷ்டிதம் ।
தேனேயம் ஸ ச தர்மாத்மா முஹூர்த்தமபி ஜீவதி ॥

ராமனுககும் ஸீதைக்கும் அனுராகம் நிகரற்றது. ராமனுடைய ஸமீபத்தில்தான் இந்த ஸீதையினுடைய மனதானது இருந்து வருகிறது. அவ்விதமே ராமனுடைய மனதும் ஸீதையினுடைய ஸமீபத்தில்தான் இருந்து வருகிறது. அதனால் சரீரத்தினால் இருவர்களுக்கும் பிரிவு ஏற்பட்டதுபோல் மூடர்களுக்குத் தோன்றினாலும், மனதினால் இருவர்

களுக்கும் கொஞ்சமேனும் பிரிவேயில்லை. அக்காரணத்தைக் கொண்டுதான் ஸீதையை விட்டுப் பிரிந்து ராமனும் ஜீவிக்கிறார். ராமனை விட்டுப்பிரிந்து ஸீதையும் ஜீவிக்கிறாள்.

दुष्करं कृतवान् रामः हीनो यदनया प्रभुः ।
धारयति आत्मनो देहं न शोकेनावसीदति ॥

துஷ்கரம் க்ருதவான் ராமः ஹீநோ யதனயா ப்ரபுः ।
தாரயதி ஆத்மநோ தேஹம் ந சோகேனவஸீததி ॥

ஆஞ்ஜநேய ஸ்வாமியானவர், ராம கோஷ்டியில் தான் சேர்ந்த பிறகு ஸீதையை விட்டுப் பிரிந்த ராமன் ஸீதையை நினைத்து ப்ரலாபிக்கும் ஸமயங்களில் ராமனும் இவ்விதம் ஸ்த்ரீ நிமித்தமாக ப்ரலாபிக்கின்றாரே. பரம தீரனை ராமனுக்கு அது உசிதமாகுமா என்று நினைத்ததுண்டு. இப்பொழுதோ ஸீதையைப் பார்த்தவுடன் ஸீதையை விட்டுப் பிரிந்த ராமன் ஸீதை நிமித்தமாக ப்ரலபித்தது மாத்திரம் போதாது, தன் சரீரத்தைக்கூட த்யாகம் செய்திருக்கவேண்டும் என்றும் எண்ணுகிறார். ஸீதையினுடைய ஸௌந்தர்யாதிசயத்தைப் பார்த்தால் ராமன் இவளை விட்டுப்பிரிந்த அடுத்த க்ஷணத்திலேயே சரீரத்தை த்யாகம் செய்திருக்க வேண்டும். அந்த த்யாகம் ஸீதைக்கும் வராதா என்று கேட்கக்கூடாது. ஸீதையினுடைய சரீரமோ ஸீதையினுடையதல்ல; ராமனுடையதே. ராமனுக்கல்லவா ஸீதையினுடைய சரீரம் உபபோக்யமாக ஆகும். ராமனை விட்டுப்பிரிந்தும் ஸீதைக்கு தன்னுடையது போல் தோன்றுகிற சரீரத்தில் ஸ்வதந்த்ரியம் இல்லாததினால்தான் சரீரத்தை த்யாகம் செய்யாமல் துக்கத்தை ஸஹித்துக் கொண்டிருந்தாள் என்பது நியாயமாகும். ராமனுக்கோ தன் சரீரத்தில் தனக்கு ஸ்வாதந்த்ரியம் இருப்பதினால் ஸீதையை

விட்டுப்பிரிந்தவுடன் தன் சரீரத்தை த்யாகம் செய்யாமல் ஜீவித்துக் கொண்டிருக்கிறார் என்பதுண்டே அது மற்றவர்களால் செய்யமுடியாததான காரியமாகும். ஸீதையை விட்டுப் பிரிந்த ராமன் தேகத்தை தரித்துக்கொண்டிருப்பது என்பது மிகவும் அசக்யமானது. ராமன் ப்ரபுதான். யானைகளோ குதிரைகளோ இவைகளை சிக்ஷிப்பதில் ஸமர்த்தர்தான். ப்ரணயதாரையின் முதலாவதான அட்சம்கூட ராமனுக்குத் தெரியாதோ என்று ஊகிக்க வேண்டியதாயிருக்கிறது. அளவுக்கடங்காத அழகு பொருந்திய ஸீதையை விட்டுப் பிரிந்தும் அவர் சரீரத்தை தரித்துக் கொண்டிருக்கிறார் என்பதேதான் அதின் காரணமாகும். இதனால் ஸீதையினுடைய ஸௌந்தர்யாதிசயமானது ப்ரும்மாதி தேவர்களாலும் இவ்வளவுதான் என்று நிர்ணயிக்கமுடியாதது என்றது தீர்மானமாகிறது. இவ்விதம் ஸீதையைக் கண்டுவிட்டு ஆஞ்ஜநேய ஸ்வாமியானவர் மனதினால் ராமனை ஸ்மரணம் செய்தார். தன் புத்தியில் ஸன்னிஹிதமான ராமனை ச்லாகித்துப்பேசினார். "ஸ்ரீராமா உன்னுடன் மறுபடியும் சேருவதற்கு உபயுக்தமாக பாதிவ்ரத்யத்திலிருந்தும் கொஞ்சங்கூட நழுவாமல், ஸீதை இருப்பதினால், நீ மகா பாக்யம் செய்தவன்" என்று ஸ்தோத்ரம் செய்தார். இவ்விதமான சுந்தரியை விட்டுப் பிரிந்த ராமனுக்கு மஹத்தான சோகம் ஏற்பட்டதே, அது மிகவும் யுக்தந்தான் என்றும் ச்லாகித்தார்.

இவ்விதம் ஸீதையைப்பார்த்து பரம ஆச்சரியத்தை அடைந்த ஆஞ்சநேய ஸ்வாமியானவர் கொஞ்சகாலம் த்யானம் செய்து

मान्या गुरुविनीतस्य लक्ष्मणस्य गुरुप्रिया ।
यदि सीतापि दुःखार्ता कालो हि दुरतिक्रमः ॥

மான்யா குருவினீதஸ்ய லக்ஷ்மணஸ்ய குருப்ரியா ।
யதி ஸீதாபி துஃகார்தா காலோ ஹி துரதிக்ரமஃ ॥

மான்யா குரு வினீதஸ்ய லக்ஷ்மணஸ்ய குருப்ரியா ।
யதி ஸீதாபி துக்கார்த்தா காலோ ஹி துரதிக்ரமः ॥

ஆசார்ய புருஷர்களுடைய ஸமீபத்தில் அநேககாலம் சிக்ஷையெற்ற லக்ஷ்மண ஸ்வாமிக்கும் பூஜ்யையாகவும் ஸர்வதேவதைகளுக்கும் முன்நிற்கும் தெய்வமான ஸ்ரீராமனுக்கு ப்ரியையாகவும் உள்ள ஸீதாதேவியே இவ்விதம் துக்கப்படுவாளேயானால் காலமானது யாரையும் விடாது என்பது ஸித்தமாக ஆகிறது. ராமனுடைய பராக்ரமத்தையும், லக்ஷ்மணனுடைய பராக்ரமத்தையும் அறிந்தவளான நிஜமான ஸீதையானவள் என்றும் தனக்கு ராவணனிடமிருந்து கட்டாயம் விமோசனம் ஏற்படுமென்ற தைரியத்தினால் ஜீவித்துக் கொண்டிருக்கிறாள். வர்ஷருதுவில், அதாவது மழைகாலத்தில் மேகங்கள் அபரிமிதமாக வர்ஷித்தாலும் க்ஷுத்ரமான நதிகள் கலக்கத்தை அடையுமன்றியில் கங்கா நதியானது க்ஷோபத்தை அடையாது. அதுபோல் ஸீதா தேவியானவள் பதிவ்ரதா சிரோமணியான தினால் கொஞ்சமேனும் இவ்விதமான ராமனை விட்டுப் பிரிந்திருக்கும் துக்க காலத்திலும் க்ஷோபத்தை அடையவில்லை. இந்த ஸீதையினுடைய நிமித்தம்தான் மகாபராக்ரமசாலியான வாலியும் ராமனால் கொல்லப்பட்டு பரலோகத்தை அடைந்தான். ராவணனுக்கு ஸமானமான பராக்ரமத்தோடு கூடின கபந்தனும் இந்த ஸீதையினுடைய நிமித்தமாகத் தான் ஸ்ரீராமனால் வதிக்கப்பட்டான். அதுபோலவே பயங்கரமான பராக்ரமத்தோடு கூடின விராதனை பதினான் காயிரம் ராக்ஷஸர்களோடு கூடின கரன், தூஷணன் த்ரிசிரஸ் முதலிய ராக்ஷஸர்களை, ராமனால் கொல்லப் பட்டு நாசத்தை அடைந்ததற்கு இந்த ஸீதை தான் மூலகாரணமாக ஆவாள். சுக்ரீவன் கிஷ்கிந்தா ராஜ்யத்தை அடைந்ததிற்கும் இந்தப் பரதேவதையே காரணம். நான் இந்த அபாரமான ஸமுத்ரத்தைத் தாண்டி வந்ததிற்கும் இந்த தேவியினுடைய அனுக்ரகம்தான் மூலகாரணமாக ஆகும். ஸ்ரீராமன் ஸமுத்ரத்தினால் சூழப்பட்ட இந்த பூமியை தலைகீழாகக்

கவிழ்த்து வைத்தாலும் இந்த தேவியினுடைய விஷயத்தில் அது உசிதமாகத்தான் ஆகும். மூன்று லோகங்களில் உள்ள ஸ்வாராஜ்யமும் இந்த ஸீதையின் விஷயத்தில் உள்ள லாபத்தில் பதினன்கிலோர் அம்சத்திற்குக்கூட ஈடாகாது. இந்த தேவியோ மிதிலாபுரியில் ஜனக மகாராஜன் யாகம் செய்வதற்காக தங்கக் கலப்பையினால் பசுக்களாக்கட்டி யக்ஞபூமியை உழுது சுத்தம் செய்யும்பொழுது கலப்பையி னுடைய முகத்தினின்றும் உண்டானவள். அதனால்தான் ஸீதையென்ற பெயரும் ஏற்பட்டது. இவள் அயோனிஜை ஆகிறாள். பரம தர்ம சீலனான தசரதசக்ரவர்த்தி யினுடைய நாட்டுப்பெண்ணாகவும் இந்த ஜகதீச்வரியானவள் ஆகும்படியான பாக்யத்தைச் செய்தாள். தர்மஸ்வரூ பியான ராமனுடைய தர்மபத்னியாகவும் ஏற்பட்டாள். ஆகிலும் ஸமஸ்தமான போகங்களையும் இழந்துவிட்டு நிர்ஜனமான அரண்யத்திற்கும் ராமனிடத்திலுள்ள ப்ரீதி வசத்தினால் வந்து சேர்ந்தாள். அரண்யத்திலும் பர்த்தா விற்கு சிச்ரூஷைகள் செய்துகொண்டு பலமூலங்களைக் கொண்டே திருப்தியையும் தான் அடைந்து ராஜ்யத்தில் தான் இருந்தால் எவ்வளவு ஸந்தோஷம் உள்ளவளாக இருப்பாளோ, அவ்வளவு ஸந்தோஷமுள்ளவளாகவே அரண்யத்திலும் ஸ்ரீராமனுடைய ஸந்நிதியில் இருந்து வந்தாள்.

அவ்விதம் மகிமையுள்ள இந்த ஸீதையோ 'ஆபத்து' என்ற சப்தத்தைக் கூட காதினால் கேட்டிருக்க முடியாது. அவள் இப்பொழுது கஷ்டத்தை அனுபவிக்கிறாள். இந்த நிமிஷமே ஸ்ரீ ராமன் வந்து இந்த ஸீதையைப் பார்க்கவேண் டும். மறுபடியும் இந்த ஸீதையை ராமன் அடைந்து ஸந் தோஷத்தை அடையத்தான் போகிறார். ராமனுடைய ஸமாகமத்தை எதிர்பார்த்துக் கொண்டு தான் இந்த ஸீதை யும் தன் சரீரத்தை வைத்துக் கொண்டிருக்கிறாள். ஸீதைக்கோ, இந்த அசோகவனத்திலுள்ள விருக்ஷங்

களிலோ, புஷ்பபலங்களிலோ, ராக்ஷஸிகளிடமோ, த்ருஷ்டி செல்லவேயில்லை. ராமனிடத்திலேயே ஏகாக்ரமான சித்தத்தோடு தன்னுடைய ஸகலமான பாவங்களையும் அர்ப்பணம் செய்து த்யானம் செய்து வருகிறாள்.

भर्ता नाम परं नार्याः भूषणं भूषणादपि ।
एषा तु रहिता तेन भूषणार्हा न शोभते ॥

ஹர்தா நாம பரம் நார்யா: பூஷணம் பூஷணாதபி ।
ஏஷா து ரஹிதா தேந பூஷணார்ஹா ந சோபதே ॥

பர்த்தா நாம பரம் நார்யா: பூஷணம் பூஷணாத் அபி ।
ஏஷா து ரஹிதா தேந பூஷணார்ஹா ந சோபதே ॥

உலகில் உத்தம ஸ்த்ரீகளுக்கு எவ்விதமான அலங்காரங்கள் ஏற்பட்டிருந்தாலும்கூட எல்லாவற்றையும் காட்டிலும் தனது பர்த்தாதான் தனக்கு பெரிய ஆபரணமாக அவர்களுக்குத் தோன்றும். இந்த ஸீதையும் உத்தம ஸ்த்ரீ ஆனதினால் ராமனுகிற பர்த்தாவை விட்டுப் பிரிந்திருக்கும் பொழுது கொஞ்சமேனும் சோபை இல்லாதவளாக விளங்கி வருகிறாள்.

दुष्करं कुरुते रामः हीनो यदनया प्रभुः ।
धारयत्यात्मनो देहं न दुःखेनावसीदति ॥

துஷ்கரம் குருதே ராம: ஹீநோ யதனயா ப்ரபு: ।
தாரயத்யாத்மநோ தேஹம் ந துக்கேநாவஸீததி ॥

துஷ்கரம் குருதே ராம: ஹீனோ யதனயா ப்ரபு: ।
தாரயத்யாத்மனோ தேஹம் ன துக்கேநாவஸீததி ॥

ஸ்ரீராமனோ இந்த ஸீதையை விட்டுப்பிரிந்த ஐந்தர்ப்பத்திலும் அதாவது பரம துக்கத்தை அனுபவித்துக் கொண்டிருக்கும் காலத்திலும் அந்த துக்கத்தினால் தனது சரீரத்தை தியாகம் செய்யாமலிருக்கிறார் என்பது யாதொன்று

உண்டோ அது அன்னியர்களால் அனுஷ்டிக்க முடியாததான க்ருத்யமாகத்தான் ஆகும். அளவுகடந்த ஸௌந்தர்யத் தோடு கூடின இந்த ஸீதையை விட்டுப்பிரிந்தும் ராமன் ஜீவித்துக்கொண்டிருக்கிறார் என்பது ராமனுக்குத்தான் ஸாத்தியமாகுமன்றியில் மற்ற புருஷர்களுக்கு ஸாத்தியமாக ஆகாது. கேவல ஜீவனுக்கு தன்னுடைய தேகத்தில் ஸ்வாதந்த்ரியம் இல்லாதது போலவே ஸர்வேச்வரனை ஸ்ரீ ராமனுக்கும் தன் தேகத்தினுடைய ஸ்வீகார பரித்யாகத் தில் ஸ்வாதந்த்ரியம் கிடையாது. அதற்குக்காரணமோ हीनो यदनया प्रभुः (ஹீநோ யதநயா ப்ரபுः) (ஹீநே யதனயா ப்ரபுः) என்ற வாக்கியத்தினால் ப்ரகாசிப்பிக்கப்படுகிறது. अनया = பரா சக்தி ஸ்வரூபமான இந்த ஸீதையினால் यत् = யாதொரு காரணத்தினால் रामः = ராமனவர் हीनः = பிரிந்துவிட்டாரோ, அதாவது சக்தி ரஹிதனாக ஆகிவிட்டாரோ, அக்காரணத்தினால்— अप्रभुः (அப்ரபுः) (அப்ரபுः) என்று பதச்சேதம் செய்துகொள்ள வேண்டும்—தனக்கு தன் சரீரத்தினுடைய ஸ்வீகார பரித்யாகத்தில் கூட ஸாமர்த்யம் இல்லாதவராக ஆகிவிட்டார். கர்ம பரதந்த்ரனை ஜீவனைப்போல் சொல்லக்கூடிய நிலைமைக்கு ராமனும் ஆகிவிட்டாரோ என்று தோன்றக்கூடிய தாக இருக்கிறது. தன் சரீரத்தில் ராமனுக்கு ஸ்வாதந்த்ரியம் இருந்தால், இந்த ஸீதையை விட்டுப் பிரிந்தும், தன் தேகத்தை அவர் தரித்துக் கொண்டிருக்க மாட்டார். தேகத்தை தரிக்கிற படியினால், தன் தேகத்திலும் அவருக்கு ஸ்வாமித்வம் இல்லை யென்றுதான் தோன்றுகிறது. சக்தியை விட்டுப் பிரிந்தால் சிவனும் அசிவனாக ஆவான் என்ற நியாயமும் ப்ரக்ருதத்தில் அனுகூலமாகவே ஏற்படுகிறது. ஸீதையை விட்டு ராமன் பிரிந்ததற்கு காரணத்தையும் दुष्करम् कुरुते (துஷ்கரம் குருதே) (துஷ்கரம் குருதே) என்ற வாக்கியமானது வெளிப்படுத்துகிறது. दुष्क என்ற பதத்தினால் துஷ்டனென்ற அர்த்தத்தையும், रङ्कु என்ற சப்தத்தினால் மான் என்ற அர்த்தத்தையும் க்ரஹித்துக் கொண்டால் மான் வேஷத்தை க்ரஹித்துக்

கொண்டு வந்த துஷ்டராக்ஷஸனை மாரீசன் என்ற தாத்பர்ய மானது வெளியாகிறது. 'रुत' (ரு தழ) (ருதம்) என்றதினல் சப்தம் என்ற அர்த்தத்தை க்ரஹித்துக் கொள்ள வேண்டும். மாயா ம்ருகவேஷதாரியான மாரீசனை ஸ்ரீராமசந்த்ரமூர்த்தி யானவர் வதம்செய்யும் காலத்தில் ராமநாமாவினல் அலங்கரிக் கப்பட்ட பாணத்தினல் அடிபட்ட காரணத்தைக்கொண்டு மாரீசனுடைய ஸ்வரமும் ராமனுடைய குரலைப் போல் ஸாரூப்யத்தை அடைந்த காரணத்தினல் ஏற்பட்டு விட்டது. அந்த மாரீசன் ராக்ஷஸ சரீரத்தை விடும் காலத்தில் "ஹா ஸீதே, ஹா லக்ஷ்மண" என்று கதறினன். அந்த சப்த மானது ஸீதையின் காதில் பட்டவுடன் ராமனைத்தான் யாரோ ராக்ஷஸர்கள் ஹிம்ஸை செய்து விட்டார்களோ என்ற பயத்தினல் லக்ஷ்மணனை ராமனுடைய மார்க்கத்தை அனுஸரித்து போகும்படி செய்து விட்டாள். ஆச்ரமத்தில் ஸீதை தனியாக இருக்கும்படி நேர்ந்து விட்டது. அக்கார ணத்தைக்கொண்டு ராவணனும் அபஹரித்து விட்டான். அதிலிருந்துதான் ஸீதைக்கு ராமனை விட்டுப் பிரிதலும் ராமனுக்கு ஸீதையை விட்டுப் பிரிதலும் ஏற்பட்டது என்ற கதையும் ப்ரஸித்தமானது. இதனல் ஸீதையை விட்டு ராமன் பிரிந்ததற்கு மாயையினல் மான் வேஷம் தரித்துக் கொண்ட. மாரீசனுடைய சப்தம்தான் காரணம் என்பது வெளியாகிறதல்லவா? ஸீதையை விட்டுப் பிரிந்ததும் சக்தியை விட்டுப்பிரிந்த புருஷனாக ஆகிவிட்டார். கர்ம பர தந்த்ரனை ஜீவனுடைய ஸாம்யமும் ஏற்பட்டு விட்டதோ என்று நினைக்கக்கூடியதாக ஆகிவிட்டது. அதனல்தான் அளவுக்குட்படாத ஸௌந்தர்யத்தை அடைந்த இந்த ஸீதையை விட்டுப்பிரிந்தும்

न जीवेयम् क्षणमपि विना तां असितेक्षणां।

ந ஜீவெயழ க்ஷணமபி விநா தாழ ஸவிதேக்ஷணாழ।

ந ஜீவேயம் க்ஷணமபி விநா தாம் அவிதேக்ஷணம்।

என்று ஒரு க்ஷணகாலம் கூட ஸீதையை விட்டு நான் பிரிந்திருந்தால் ஜீவிக்கமாட்டேன் என்றுதான் ப்ரதிக்ஞை செய்தும் தான் ப்ரக்ருதத்தில் தேஹத்தை தரித்துக்கொண் டிருக்கிறார் என்பது ஏற்படுகிறதோ என்று கவியானவர் ஆஞ்ஜநேயருடைய வாக்யமூலமாக दुष्करम् कृते (தூஷ்கரம் க்ருதே) என்ற ச்லோகத்திலும் உத் ப்ரக்ஷை செய்கிறார்.

தவிரவும் न दुःखेनावसीदति, (ந துःகேநாவஸீததி.) என்ற வாக்யத்தில் इति न = கஷ்டப் படவில்லை என்பது இல்லை, கஷ்டத்தைத்தான் ஸ்ரீ ராமனும் அனுப விக்கிறார் என்ற தாத்பர்யத்தை வைத்துக்கொண்டு முன் அர்த்தத்தை அன்வயித்துக் கொள்ள வேண்டும். இப்போ ழுதோ दुःखेन என்று த்ருதீயாந்தமாகப் பிரித்துக் கொள்ள வேண்டும். இந்த ரீதியாக இந்த ச்லோகத்திற்கு ஏற்படும் தாத்பர்யத்தையோ அடியிற் கண்டபடி அறியவும்.

அதாவது ஸீதையை விட்டுப் பிரிந்த கஷ்டத்திலும் ராமன் ஒன்றும் துக்கப்படவே இல்லை. நிரியமாகத்தான் ராமன் இருந்து வருகிறார். அதன் காரணத்தை धारयत्यात्मनो देहम् (தாரயத்யாத்மநோ தேஹம்) (தாரயத்யாத்மநோ தேஹம்) என்ற வாக்யமானது வெளிப் படுத்துகிறது, ராமனே வைகுண்டத்திற்கதிபதியான மஹா விஷ்ணுவென்றே ஆங் காங்கு ஸித்தாந்தம் செய்யப் பட்டிருக்கிறது. விஷ்ணு ஸித்தோ, புருஷ ஸூக்தத்தில் சொல்லியபடி சேதன, அசேதனாத்மகமான ஸகல ஜகத்துமே சரீரமாக ஏற்படு கிறது. விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்திலும், சித், அசித் இரண்டையும் சரீரமாக உடையவனே பரமாத்மா என்று ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. ப்ரக்ருதத்தில் ராமனே விஷ்ணு என்ற பாவனையோடு, இந்த ச்லோகத் திற்கு அர்த்தம் செய்கின்ற வித்வான்களுக்கு. "आत्मनो देहम् (ஆத்மநோ தேஹம்)(ஆத்மநோ தேஹம்)என்ற பதத்திலும், தன் னுடைய விராட்தேஹம் என்றுதான் அர்த்தம் த்வனிக்கும்.

அதனல் தன்னுடைய விராட்சரீரத்தில். அந்தர்ப்பூதமாக ஸம்பந்தப்படாத வஸ்துவே வேறொன்றுமில்லை. தன்சரீரத் திற்குள்ளேயே சேதனசேதன ப்ரபஞ்சமே அடங்கிவிட்டது. அப்படி யிருக்கும்பொழுது, இந்த ஸீதையை அபகரித்த ராவ ணனே, ராவணனல் அபகரிக்கப்பட்ட ஸீதையோ, லங்கா நகரமோ, அசோகவனமோ, ஸமுத்ரமோ, இவைகளெல்லாம், தன்னுடைய தேகத்திறகுள் அடங்கிவிட்ட படியினல் ராவணன் ஸீதையை அபஹரித்தாலும், தன்தேஹத்திற்கு வெளியில், தன்னைவிட்டு ஸீதை பிரிந்துவிட்டாள் என்று சொல்ல அவகாசமுண்டா; ஆகையினல் மஹா விஷ்ணுவான ராமன் சேதனசேதனாத்மகமான ப்ரபஞ்சத்தை சரீரமாக உடைத்தாயிருக்கும் காரணத்தினல் ஸீதையும் தனது சரீரத் திற்குள் அந்தர்கதையாக இருந்துகொண்டு நேரில் தரிசனம் முதலிய ஸம்பந்தங்களும் ஏற்பட்டுக்கொண்டிருக்கும் காரணத்தினல், ப்ராக்ருத புருஷர்களுடைய த்ருஷ்டியை அனுஸரித்து ஸீதையைவிட்டுத் தான் பிரிந்தவன் போல் தோன்றினலும் அதற்காக தன் த்ருஷ்டியை அனுஸரித்தும், தன்னுடைய தத்வத்தை அறிந்த வித்வத் த்ருஷ்டியை அனு ஸரித்தும் ராமன் கொஞ்சமேனும் கஷ்டப்படவில்லை என்பதும் நியாயம்தான்.

"रामो हीनः यदनया प्रभुः (ராமோ ஹீநः யதநயா ப்ரபுः) (ராமோ ஹீநः யதநயா ப்ரபுः) என்ற இடத்திலும் முன் சொன்ன காரணத்தையே கொண்டு अहीनः (அஹீநः) (அஹீநः) என்று பதச்சேதம் செய்துகொண்டு சக்தியோடு எப்போதும் சேர்ந்தே இருக்கும் காரணத்தினல் ராமன் எப்பொழுதும் ப்ரபுதான்; சர்வகார்யத்தையும் நிர்வாகம் செய்வதில் ஸமர்த்தன்தான் என்பது வெளியாகிறது.

ஸர்வப்ரகாரத்தினலும் புருஷாகர ரூபமான, ஸீதை யென்ற சக்தியினுடைய ஸம்பந்தம் ராமனுக்கில்லாமலிருந் தால் ஸீதையில்லாமலிருக்கும் ஸமயத்தில் வாலியைக் கொல்லும்படியான ஸாமர்த்யத்தை எப்படி அடைந்தார்?

ராவணனைத்தான் எவ்விதம் கொன்றார் ? என்ற கேள்வி களுக்கு அவகாசம் ஏற்படக்கூடும். மேற்சொன்ன தாத்பர் யத்தைக் கொண்டுதான் இதற்கு ஸமாதானம் செய்து கொள்ளவேண்டும்; அதனால்தான் ராமனுடைய மகிமையைப் பற்றி ஆச்சர்யப்பட்டுக் கொண்டு दुष्करं कृतं रामः (दुष्करं कृतं रामः) (துஷ்கரம் குருதே ராம:) என்று ஆஞ்ஜநேய ஸ்வாமியானவர் சொல்லுகிறார். ராமன் தன்னுடைய அவ தாரத்தில் செய்கிற கார்யங்களே அமாநுஷமான க்ருத்யங் களாகும். அன்னியர்களால் ஒரு ஸமயத்திலும் செய்ய முடியாது. அதற்கு உதாஹரணம் ப்ரக்ருதத்திலேயே க்ரஹித்துக்கொள்ளலாம். கரவதம், ராவண வதம் முதலிய வைகளெல்லாம் அமாநுஷமான க்ருத்யம் என்பது கூடப் பிறகே சொல்லவேண்டும். பாஹ்ய த்ருஷ்டிக்கு ஸீதையை விட்டுத் தான் பிரிந்தது போலவும், அந்தர் த்ருஷ்டிக்குத் தான் எப்போதும் ஸீதையை விட்டுப் பிரியாமல் ஸீதாஸமேதனா கவே இருப்பதாகவும், யோக மாயையைத் தன் வசத்தில் வைத்துக்கொண்டு நடித்துக்காட்டுவது ஒன்றே ராமனுடைய க்ருத்யம் அமாநுஷக்ருத்யம் என்பதற்கு உதாஹரணமாகப் போதாதா ? என்ற தாத்பர்யமும் மேற்சொன்ன ச்லோகத் தில் த்வனிப்பதை கவிகள் அறிந்துகொள்ள வேண்டும். இந்த தாத்பர்யத்தை ஆஞ்ஜநேய ஸ்வாமியானவர் மனதில் வைத்துக் கொண்டுதான்

अस्याः देव्याः मनस्तस्मिन् तस्य चास्यां प्रतिष्ठितम्
तेनेयं स च धर्मात्मा मुहूर्तमपि जीवति ॥

ஸஹ்யாः தெவ்யாः உரஸ்வ்ரிது
தஸ்ய தாவஸ்யாம் வ்ருத்தி தத்
தெதெநயம் வை அ யதா-ஸ்தா
உ-ஹைவ தத்-ஸதவி ஜீவதி ॥

அஸ்யாஃ தேவ்யாஃ மநஸ்தஸ்மின்
தஸ்ய சாஸ்யாம் ப்ரதிஷ்டிதம் ।
தேநேயம் ஸ ச தர்மாத்மா
முஹூர்த்தமபி ஜீவதி ॥

என்று ஸீதையைக் கண்டமாத்திரத்தில் சொல்லியிருக்கிறார்.

ஸீதையையும் பார்த்துவிட்டு ஸீதையினுடைய ஸமீபத்தில், ஸீதையை ரக்ஷிப்பதற்காக ராவணனால் ஆக்ஞாபிக்கப்பட்ட அநேக விதமான ராக்ஷஸ ஸ்த்ரீகளையும் ஆஞ்ஜநேய ஸ்வாமியானவர் பார்வையிட்டார். அந்த ராக்ஷஸஸ்த்ரீகளோ விகாரமான ரூபங்களோடும் பார்க்கிறவர்களுக்கு பயத்தை உண்டுபண்ணக் கூடிய ஸ்வபாவத்தோடு கூடினவர்களாகவும் இருந்தார்கள். அவர்களுடைய நடுவில் ஸீதாதேவியானவள் ஸ்ரீராமனை விட்டுப் பிரிந்த காரணத்தினால் மிகவும் துக்க ஸாகரத்தில் மூழ்கியவளாயும், மிகவும் கிருசமான சரீரத்தோடு கூடியவளாயும், உபவாஸ பரயாகவும், அழுக்கடைந்த வஸ்த்ரத்தோடு கூடியவளாயும், எப்போதும் ஸ்ரீராமனுடைய த்யானத்திலேயே ஈடுபட்டவளாயும், தனது பாதிவ்ரத்யத்திற்கு கொஞ்சமேனும் லோபமிராமல் நடந்து கொண்டு கவலையுடன் இருந்துவந்தாள். அவளைப் பார்த்ததும் ஆஞ்ஜநேயஸ்வாமிக்கு இவ்விதம் தோன்றியது: தான் ஸமுத்ரத்தைத் தாண்டி வந்த சிரமமானது பயனற்றதாக ஆகிவிடுமோ என்று நினைத்தோமே, அது அப்படியாகாமல் ஸபலமாக ஆகிவிட்டது; அதற்குக் காரணம் இந்த தேவியினுடைய பரிபூரணமான அநுக்ரஹம் தான். அக்ஷதையாகவும் தேவியை நாம் கண்டுவிட்டோம். அதுவும் ஸ்ரீராமனுடைய பரம பாக்யோதயமே என்று; இவ்வாறு மனதில் பரம ஸந்தோஷத்தை அடைந்து வ்ருக்ஷத்தில் இலைகளின் மறைவில் ஸூக்ஷ்மமான ரூபத்தோடு மறைந்துகொண்டு நாம் ஸீதையினுடைய ஸமீபம் சென்று எவ்விதம் ராமனுடைய வ்ருத்தாந்தத்தைச் சொல்லுகிறது என்ற கவலையுள்ளவராக இருந்துவந்தார்.

அன்றைய இரவோ அநேகமாக முடிந்து, ப்ரபாத நேரம் வந்துவிட்டது. லங்காநகரத்தில் ஒவ்வொரு ராக்ஷஸர் களுடைய க்ருஹத்திலும் ஏற்பட்ட வேத கோஷங்களைக் கேட்டு அவர் பரம ஆனந்தத்தை அனுபவித்தார். ராக்ஷஸ ராஜனான ராவணன் ஸுத மாகததேசத்து வந்திகளால் ப்ரபாத காலத்தில் ஸ்துதி மூலமாக எழுப்பப்பட்டு விழித்துக்கொண்டான். விழித்துக்கொண்டதும் ஸீதையி னுடைய நினைவாகவே இருந்த காரணத்தினால் ஸீதையைப் பார்ப்பதற்கு அசோக வனத்திற்குப் புறப்பட் டான். அந்த ராவணனைத் தொடர்ந்து அநேக விதமான அந்தப்புர ஸ்த்ரீகளும் தேவ கந்தர்வ ஸ்த்ரீகளும் தங்கமய மான தீவர்த்திகளில் தீப ஜ்வாலையை வ்ருத்தி செய்து கொண்டு வந்தார்கள். சில ஸ்த்ரீகள் 'சமரீ' ம்ருகத்தின் வால் மயிரினால் செய்யப்பட்டு தங்கமயமான பிடிகளால் அலங்கரிக்கப்பட்ட சாமரங்களை, ராவணனுக்கு வீசிக கொண்டு வந்தார்கள். சிலர் தங்கமயமான வெற்றிலைப் பெட்டிகளையும் கையில் க்ரஹித்துக்கொண்டு, ஸுரையினால் பூர்ணமான தங்கமயமான கும்பங்களையும் கையில் ஸ்வீகரித் துக்கொண்டு ராவணனை அனுஸரித்து வந்தார்கள். தூக்கத்தி லிருந்து விழித்துக்கொண்ட காரணத்தினாலும் மத்யபானம் செய்த காரணத்தினாலும், சுழல்கின்ற நேத்ரத்தோடு கூடி யிருக்கும் காரணத்தினாலும், ஆடி ஆடி விழுந்து கொண்டு மெதுவாக ஸீதையினுடைய ஸமீபத்திற்கு ராவணன் வந்து சேர்ந்தான். அவ்விதமான அவஸ்தையில் ராவணனைப் பார்த்த ஆஞ்ஜநேயஸ்வாமியானவர் இவன்தான் ராவணனாக இருக்கவேண்டு மென்று தீர்மானம் செய்து அவனுடைய கண்ணில் தான் தென்படாமல் இருப்பதில் மிகவும் ஜாகருகராக இலைகளின் நடுவில் மறைந்துகொண்டு இருந்தார். ராவணன் பலமான ஆடம்பரத்துடன் ஸீதையினுடைய ஸமீபத்திற்கு வந்தவுடன், ஸீதை அவனைப் பார்த்துவிட்டு டெருங் காற்றில் வாழைமரம் ஆடுவதுபோல் நடுங்கி, மிகவும் பயந்து கொண்டு கஷ்டப்பட்டாள். ராமனுடைய ஸ்வரூபத்தையே பார்த்த ஆஞ்ஜநேயஸ்வாமியானவர் இவன்தான் ராவணனாக இருக்கவேண்டு மென்று தீர்மானம் செய்து அவனுடைய கண்ணில் தான் தென்படாமல் இருப்பதில் மிகவும் ஜாகருகராக இலைகளின் நடுவில் மறைந்துகொண்டு இருந்தார். ராவணன் பலமான ஆடம்பரத்துடன் ஸீதையினுடைய ஸமீபத்திற்கு வந்தவுடன், ஸீதை அவனைப் பார்த்துவிட்டு டெருங் காற்றில் வாழைமரம் ஆடுவதுபோல் நடுங்கி, மிகவும் பயந்து கொண்டு கஷ்டப்பட்டாள். ராமனுடைய ஸ்வரூபத்தையே

த்யானம் செய்துகொண்டு தன்னுடைய மனோரதமாகிற ரதத்தில் ராமனையே தான் அடையவேண்டுமென்கிற ஸங்கல்பமாகிற குதிரைகளைக் கட்டிக்கொண்டு, அந்த ரதத்திலேறி ராமனுடைய ஸமீபம் போகிறவள் போல், ராவணனுக்கு ஸீதையைப் பார்க்கும் காலத்தில் மனதில் புலப்பட்டது.

தவிரவும், ராவணன் ஸீதையைப் பார்க்கும்போது அவனுடைய த்ருஷ்டிக்கு, அவள் ஸர்ப்பகன்னிகையைப் போலவும், தூமகேதுவினால் ஆக்ரமிக்கப்பட்ட ரோஹிணியைப் போலவும், ஸம்பவிக்கக்கூடாத அபவாதத்தினால் குறைந்து போன கீர்த்தியைப் போலவும், அப்யாஸமில்லாத காரணத்தினால் மறக்க ஆரம்பித்த வேத வித்யை போலவும், சிரத்தையாகச் செய்யாத பூஜையைப் போலவும், யாசனையினால் கலக்கப்பட்ட தாமரை ஓடையைப் போலவும், ஸைன்யபதியை இழந்த ஸேனையைப் போலவும், புகையினால் மூடப்பட்ட அக்னி சிகையைப் போலவும், ராகுவினால் பக்ஷிக்கப்பட்ட சந்த்ரிகை போலவும், மிகவும் கவலையுள்ளவளாக, க்ஷீணித்துப் போனவளாகப் புலப்பட்டாள்.

அவ்விதமான மஹா பதிவ்ரதையான ஸீதையை ராவணன் பார்த்து தன்னுடைய அபிப்ராயத்தை ஸீதையினிடம் தெரிவிக்க வேண்டுமென்ற எண்ணத்துடன், சில வார்த்தைகளைச் சொல்லுகிறான். அதாவது

मां दृष्ट्वा नागनासोरू गूहमाना स्तनोदरम् ।
अदर्शनमिवात्मानं भयान्नेतुं त्वमिच्छसि ॥
कामये त्वां विशालाक्षि बहु मन्यस्व मां प्रिये ॥

ஸாம் த்ருஷ்ட்வா நாகநாஸோரூ கூஹமாநா ஸ்தநோதரம் ।
அதர்சனமிவாத்மாநம் பயாந்நேதும் த்வமிச்சஸி ॥
காமயே த்வாம் விசாலாக்ஷி பஹு மன்யஸ்வ மாம் ப்ரியே ॥

இந்த ச்லோகங்களால் ராவணன் சொல்லுவதாவது "ஹே நாகநாஸோரு! அடிபெருத்து வரவர சிறுத்து அழகாக விளங்கும் யானையினுடைய தும்பிக்கையைப் போன்ற துண்டையோடு கூடினவளே! என்னைப்பார்த்த மாத்திரத்தில் உன்னுடைய ஸ்தனங்களையும், நாபீதேசங் களையும் மறைத்துக்கொண்டு மிகவும் பயத்துடன் உன்னு டைய சரீரத்தின் அழகை நான் பார்க்காமலிருக்கும்படி நீ செய்ய விரும்புகிறாயே. எனக்கோ உன்னிடத்தில் அபி லாஷை அதிகமாக இருந்து வருகிறது. உன்னையே நான் ஆசைப்படுகிறேன். ஹே விசாலாக்ஷி! தாமரையின் தளம் போல் விசாலமான நேத்ரத்தோடு கூடினவளே, என்னை நீ விரும்பாக மதிக்கவேண்டும். உன்னை நான் ப்ரியையாக வரித்துவிட்டேன்". இதுதான் மேற்சொன்ன ச்லோகங்களின் ப்ராதீதிகமான பொருளாகும். அதாவது பஹிர்முகர்களாக உள்ளவர்களுக்கு மேலெழுந்த வாரியாகத் தோன்றும் தாத் பர்யமாகும்.

அந்தர்முகர்களான வித்வான்களுக்கு மேற்சொன்னபடி தாத்பர்யமானது ஸ்புரிக்காது. ப்ரக்ருதமான ஸ்ரீமத் ராமாயணத்தை ஆதிகாவ்யமென்றும் அக்காரணத்தைக் கொண்டு, காந்தாஸம்ஹிதையென்றும் முன்பு பல தடவை சொல்லியிருக்கிறோம். உத்தம காவ்யத்திற்கோ ப்ராதீதிக மான அர்த்தத்தை அதாவது வாச்யார்த்தத்தை உல்லங் கனம் செய்து, ப்ரகாசிக்கும் வ்யங்க்யார்த்தமே ப்ரதான மாகும். அந்த வ்யங்க்யார்த்தமோ, பதகதம், வாக்ய கதம், ப்ரபந்தகதம் என்று பல வகைகளுண்டு. மேற்சொன்ன ச்லோகங்களால் ஏற்படும் வ்யங்கியத்தை, வித்வான்கள், மாத்ஸர்யத்தைக் கொஞ்சமேனும் அடையாமல் நன்றாக அறிந்து சந்தோஷிக்க வேண்டும். இதற்கு மூலப்ரமா ணம், "மஹேச்வரதீர்த்தீயம்" என்ற வ்யாக்யானம். கோவிந்த ராஜீய வ்யாக்யானத்தை விரும்பாது, ஆக்ரஹம் உள்ளவர்களும் இந்த சுந்தரகாண்டத்தில்,

'க்ரிஜடாஸ்வப்ன' ஸர்க்கத்தில் 'पक्षी च शाखानिलय: प्रहृष्ट: (பக்ஷீ அ ஸாவாநிலயः ப்ரஹ்ருஷ்ட:) (பக்ஷீ ச சாகாநிலய: ப்ரஹ்ருஷ்ட:) என்ற ச்லோக வ்யாக்யான ஸந்தர்ப்பத்தில், இந்த ஸ்ரீமத் ராமாயணத்தை ஸ்ரீ கோவிந்தராஜாசார்யர்கள் எவ்விதமாக உபயோகப்படுத்திக் கொள்ளவேண்டும் என் பதைக் குறிப்பிட்டிருப்பதைப் பார்த்து அறிந்து கொள்ளவும். வ்யங்க்யார்த்தம்தான் ராமாயணத்திற்குச் சொல்லவேண்டு மென்று வ்யாக்யானங்களுடைய பரமஸித்தாந்தமாகும். வ்யாக்யானத்தை அபேக்ஷிக்காமல் வால்மீகியினுடைய ச்லோகங்களுக்கு அர்த்தம் சொல்லும்படியான சக்தி உள்ள ஸ்வதந்த்ரப்ரக்ஞர்களாக மனிதர்களில் ஒருகாலும் சொல்லவே முடியாது. வ்யாக்யாதாக்களுடைய ரீதியை அனுஸரித்து ஸ்ரீமத்ராமாயணத்திற்கு அர்த்தம் சொல்லும்படியான புத்தி ஏற்படுவதே ராமானுக்ரஹத்தால்தான் என்று தீர்மானிக்க வேண்டும். ஆகையினால், வ்யாக்யாதாக்களுடைய அபிப் பிராயத்தை அனுஸரித்தும், ஸ்ரீமத்ராமாயணம் உத்தம காவ்யம் என்பதை முன்னிட்டும், மேற்சொன்ன ச்லோ கங்களுக்கு வ்யங்க்ய மரியாதையை அனுஸரித்துப் பொருள் வர்ணிக்கப்படுகிறது. மேற்சொன்ன ச்லோகங் களில் नागनासोरू (நாகநாஸோரூ) (நாகநாஸோரு) என்று ராவணன் ஸீதையைப் பார்த்து ஸம்போதனம் செய்கிறான். அதனுடைய தாத்பர்யத்தை அடியிற்கண்டபடி அறியவும்.

नाग் என்ற ல் யானை என்றும், नास: என்ற ல் துதிக்கை என்றும், नागस्य नास इव नास: என்ற ஸமாஸத்தினால் யானையினுடைய தும்பிக்கையைப் போன்ற தும்பிக்கை யோடு கூடினவன் என்ற பொருள் விளங்குகிறபடியினால் மஹாகணபதி என்ற தத்வத்தை नागनास: என்ற சப்தத்தினால் அறிந்துகொள்ள வேண்டும். नागनास: ऊर्वी यस्या: सा नागनासोरू: तस्या: सम्बुद्धि: नागनासोरू (நாகநாஸ: ஊர்வீ யஸ்யா: ஸா நாகநாஸோரூ: தஸ்யா: ஸம்புத்தி: நாகநாஸோரூ) (நாகநாஸ: ஊர்வாம் யஸ்யா: ஸா நாகநாஸோரு: தஸ்யா: ஸம்புத்தி:

நாகநாஸொரூ) என்று பிரித்துக்கொண்டால் தன் துடையில் மஹாகணபதியை வைத்துக் கொண்டிருக்கும் தேவதை யென்ற பொருள் வெளியாகிறது.

பரமசிவனுக்கு மஹாகணபதி யென்றும், ஷண்முக னென்றும் இரு குமாரர்களென்று யாவரும் அறிந்த விஷயம். இந்த இரு குமாரர்களும் மஹா கைலாஸத்தில் தாயாரான பார்வதியினுடைய ஸமீபத்தில் விளையாடிக் கொண்டிருக்கும் பொழுது, துர்வாஸ மஹரிஷியானவர், பார்வதியினுடைய தரிசனத்திற்காக வந்து சேர்ந்தார். வரும்பொழுது, "रिक्तहस्तेन नोपेयात्, राजानं दैवतं गुरुम्। (ரிக்தஹஸ்தேந நோபேயாத் ராஜாநம் தைவதம் குரும்।) என்ற சாஸ்திரத்தை அனுஸரித்து அந்த துர்வாஸ மஹரிஷியானவர், அழகான ஒரு பெரிய மாதுளம் பழத் தைக் கொண்டுவந்து, பார்வதியினுடைய சரணரவிந் தத்தில், அதை ஸமர்ப்பித்துவிட்டு நமஸ்கரித்தார். அதைப் பார்த்த மேற்சொன்ன இரு குமாரர்களும், தனக் குத்தான் அந்தப் பழத்தைத் தரவேண்டுமென்று தாயை வற்புறுத்தினர்கள். பழத்தை இரண்டு பாகமாகச்செய்து கொடுப்பதில் ஒருவருக்கும் ஸம்மதமில்லை. அந்த ஸந்தர்ப் பத்தில், தாயான பார்வதியானவள் உங்களிருவர்களில் யார் பூமியைப் பிரதக்ஷிணம் செய்து, முதலில் வருகிறார் களோ அவர்களுக்குத் தருகிறேனென்று சொல்லிவிட்டாள். ஷண்முகனே உடனேயே பரம உத்ஸாகத்துடன் தனது மயில்வாகனத்தின் மீதேறி பூமியை ப்ரதக்ஷிணம் செய்யக் கிளம்பிவிட்டார். அவர் போயிருக்கும் பொழுது மஹா கணபதியானவர், கைலாஸத்தின் வாயிலில் நிற்கும் பசுவை ப்ரதக்ஷிணம் செய்துவிட்டு பூமிப்ரதக்ஷிணம் முடிந்துவிட்டது, தாயே, மாதுளம்பழத்தை எனக்குக் கொடுத்துவிடு என்று கேட்டார். அது நியாயமாகத் தோன்றியதினால், பார்வதிதேவி யும் மாதுளம்பழத்தை மஹாகணபதிக்குக் கொடுத்துவிட்

டாள். பிறகு சுப்ரமண்யர் வெகுகாலம் கழித்து பசிதாகத்துடன் பூமியை ப்ரதக்ஷிணம் செய்துவிட்டு வந்து பழத்தைக் கேட்டார். பார்வதியோ "கோவினிடத்தில் பஞ்சாசத்கோடி விஸ்தீர்ணமான பூமியும் அடங்கியிருக்கிறது. அந்த கோவை கணபதியானவர் ப்ரதக்ஷிணம் செய்துவிட்ட படியினால் அவரிடம் பழத்தைக் கொடுத்துவிட்டேன். அது என்னுடைய எதினில் நடந்த காரியமானதினால் ஸங்தேகத்திற்கு அவகாசமில்லை. நீ எங்கேயோ போய்ச் சுற்றிவிட்டு வந்திருக்கிறாய். ப்ரதக்ஷிணம் முடிந்து விட்டதென்பதற்கு யார் ஸாக்ஷி? ஓரிடமும் விடாமல் நீ ப்ரதக்ஷிணம் செய்துவிட்டாயென்பதை நான் எப்படி நம்புவேன், பழமும் என்னிடத்திலில்லை. கணபதியினால் புசிக்கப்பட்டு விட்டது" என்று சொன்னாள். குமாரகுருவும், அதைக் கேட்டமாத்திரத்தில் தன்னுடைய பாலபாவத்தை சேஷ்டையினால் காட்ட, வெளியில் சுற்றிவந்த ச்ரமத்தினால் பசி தாகம் அதிகமாக ஏற்பட்டு கீழே விழுந்து புரண்டு அழுதார். அந்த ஸந்தர்ப்பத்தில் பார்வதி தேவியும், குமாரனை கையினாலெடுத்து அணைத்துக் கொண்டு ஸ்தன்யபானம் செய்துவைத்தாள். மஹாகணபதியும் அதே ஸந்தர்ப்பத்தில் தாயினிடம் ஸ்தன்யபானத்திற்கு விரும்பிப்போக, குமாரகுருவானவர், தன்னுடைய மற்றொரு முகத்தினால், மற்றொரு ஸ்தன்யத்தையும் பானம் செய்துகொண்டு, மஹாகணபதிக்கு ஸ்தன்யபானத்திற்கவகாசம் கொடுக்காமலே செய்து விட்டார். அதிலிருந்து இருவர்களுக்கும் பெரிய கலகம் ஏற்பட்டுவிட்டது. பார்வதியோ, மஹாகணபதியைப் பார்த்து "நீதான் இப்பொழுது, மிகப் பெரிய மாதுளம்பழத்தைச் சாப்பிட்டிருக்கிறாயே, உனக்கு ஸ்தன்யாபேக்ஷை எப்படி ஏற்படும், உன் தம்பி குமாரன் பூமி முழுவதும் அலைந்து விட்டு பசி தாகத்துடன் கஷ்டத்தோடு வந்திருக்கிறான். அவனுக்குத்தான் ஸ்தன்யத்தைக் கொடுக்க வேண்டும். உனக்கு நான் கொடுக்க மாட்டே" னென்று மறுத்து விட்டாள். தாய் மறுத்ததைப் பார்த்து மஹாகணபதிக்கு

அடக்கமுடியாத கோபம் வந்துவிட்டது. நீ தாயாராக இருந்தால் உன்னுடைய குழந்தைக்கு ஸ்தன்யத்தை மறுப்பாயா? ஆகையினல் நீ எனக்குத் தாயாரே இல்லை என்று மஹாகணபதியானவர், கூறி விட்டு, நான் எங்கேயாவது வெளியில் போகிறேன் என்று தன்னுடைய மாதுலக்ரஹ மாகிற வைகுண்டத்திற்கு ஓடிவந்துவிட்டார். லக்ஷ்மி தேவிக்கோ, விஷ்ணுவினிடத்தில் புத்ரனில்லாததனல், மஹா கணபதியை புத்ர வாத்ஸல்யத்தோடேயே, வளர்த்து வந்தாள்.

पुत्रवात्सल्यतो नार्याः स्तन्यं त्वत्र प्रवर्धते

வாத்ரவாத்ஸல்யதோ நார்யாஃ ஸ்தன்யம் த்வத்ர ப்ரவர்ததே।

புத்ர வாத்ஸல்யதோ நார்யாः ஸ்தன்யம் த்வத்ர ப்ரவர்ததே।

ஸ்த்ரீகளுக்கு ஸ்தன்யாபிவ்ருத்தியில், புத்ரவாத்ஸல்யமே நிமித்தகாரணமென்று தெரிகிறபடியினல், அந்த புத்ரவாத்ஸல்யத்தை மஹாகணபதியினிடத்தில் வைத்திருந்தும் மஹாலக்ஷ்மிக்கு ஸ்தன்யம் அபிவ்ருத்தியாகி, மஹாகணபதிக்கு ஸ்தன்யபானத்தினலும் ஸந்தோஷத்தைக் கொடுத்துக்கொண்டு வளர்த்து வந்தாள்.

அனேகமாக எங்கும் விஷ்ணுவினுடைய ஆலயத்தில் மஹாகணபதிப்ரதிஷ்டை இருப்பதற்கு இதே முக்யகாரணமாகும். இவ்விதம் மஹாலக்ஷ்மியானவள் தனது துடையில் மஹாகணபதியை உட்காரவைத்துக் கொண்டு மஹாகணபதிக்கு ஸ்தன்யபானம் செய்துவைத்துக் கொண்டிருக்கும்பொழுது வைகுண்டத்தில், ஜயவிஜயர்களென்று பாரிஷதர்களாக, அதாவது த்வாரபாலகர்களாக இருந்தவர்களில் ஸநகாதிகளுடைய சாபத்தினல் ஜயனென்றவன் ராவணனாகவும், விஜயனென்றவன் கும்பகர்ணனாகவும், ராக்ஷஸபாவத்தை அடைந்திருக்கிறார்கள் என்று புராணாந்தரங்களிலிருந்து தெரிகிறபடியினல், அடிக்கடி வைகுண்டத்தில்

மஹாகணபதிக்கு மஹாலக்ஷ்மியானவள் ஸ்தன்யபானம் செய்துவைத்துக் கொண்டிருப்பதைப் பார்த்துப் பழக்க மிருக்கும் காரணத்தைக் கொண்டே, ராவணனும் ஸீதாதேவியினிடம் ஸீதையை மஹாலக்ஷ்மீ யென்றறிந்த வனைதிறுல் அந்த தேவியினிடம் ''நான் யாரோ ராக்ஷஸ னென்று நீ நினைக்கக்கூடாது வைகுண்டத்தில் பாரிஷத னுயிருந்த ஜயனென்பவனே நான்; ஸனகாதிகளுடைய சாபத்திறுல் இவ்விதமான கதியேற்பட்டு விட்டது; உன் னுடைய உபாஸனத்திறுல் ராக்ஷஸபாவத்தினின்றும் நான் முக்தியை அடையவேண்டும். வேறுவிதமாக, அபிப்ராய பேதமே என்னிடத்தில் தங்களுக்கு ஏற்படக்கூடாது. எதோ ஒரு ஸந்தர்ப்பத்தில் மஹாவிஷ்ணுவானவர் ஏகாந்தமாக இருந்துகொண்டு ஒருவரையும் உள்ளே ப்ரவேசிக்கக்கூடாது என்று சொன்னதிலிருந்தும், ஸநகாதிகள் தரிசனத்திற்காக வந்தபொழுது, நான் அவர்களை உள்ளே போகக்கூடாது என்று மறுத்துவிட்டேன். தாங்கள் அந்த ஸமயத்தில் ஸந காதிகளுக்குத்தரிசனம் கொடுத்து, 'ஸ்வாமி ஒருவர்களையும் உள்ளேவிடாதே என்று சொன்னதும், ஸனகாதிகள் விஷயத் தில்மாத்திரம் அது இல்லை; ஆகையிறுல் உள்ளே விட்டுவிடு' என்று என்னை வற்புறுத்த, தங்களை நான் அதிக்ஷேபமாக 'உன்னுடைய வார்த்தையை நான் கேழ்க்கத்தயாராகஇல்லை; ஸ்வாமியாகிற விஷ்ணுவினுடைய வார்த்தையைத்தான் பரிபாலனம் செய்யவேண்டு'மென்று பேசினகாரணத்திறுல் ஸநகாதிகளுடைய சாபத்திற்குத் தாங்களும் அனுமதித்ததி றுல்தான் எனக்கிவ்விதமான கதி வந்துவிட்டது. இதை அறிந்து ஸர்வலோக ஜனனியான தங்களை ஆராதனம் செய்து தங்களுடைய ப்ரஸாதத்திறுல் சாபவிமோசனத்தை எதிர்பார்க்கும் பூர்வபாரிஷதனை ஜயன்தான் நான்'' என்றதை மஹாலக்ஷ்மியாகிற ஸீதையினிடம் தெரிவிக்கும் பொருட்டு அதற்கு ஸ்மாரகமாக नागनासोरू (நாகநாஸோரூ) (நாகநாஸோரூ) என்று ஸம்போதனம் செய்கிறுன். அதா வது அடிக்கடி வைகுண்டத்தில் மஹாகணபதியை துடை

யில் வைத்துக்கொண்டு ஸ்தன்யபானம் செய்துவைத்துக் கொண்டிருக்கும் மஹாலக்ஷ்மியே ஸீதை என்று அந்த ஸம் போதனத்தின் அபிப்ராயமாகும்.

அத்துடன் ப்ரியே என்றும் ஸம்போதனம் செய்கிறான், அதனால் ஒருவரும் ப்ராந்தியை அடையவேண்டாம். ப்ரிய சப்தமானது ப்ரேமைக்கு ஆஸ்பதமான வஸ்துவாகும். ப்ரேமையென்றால் அபிலாஷை. குழந்தைகளுக்கு மாதா வினிடத்தில் ப்ரேமை இயற்கையாகவே உள்ளது. அதை அனுஸரித்து ஸர்வலோகத்திற்கும் தாயாரான ஸீதா தேவியே தனக்கும் தாயாரென்று பாவித்துத் தான் குழந் தையினுடைய ஸ்தானத்திலிருந்து கொண்டு தாயே என்ற வாத்ஸல்யத்தோடு அழைப்பதே அந்த ஸம்போதனத் தின் பொருளாகும். ராவணன் ஸீதையினிடம் மாத் ருத்வ புத்தியோடு பூஜை செய்யவேண்டுமென்ற அபி ப்ராயத்துடன்தான் ஸீதையை க்ரஹித்தான் என்ற விஷ யத்தை जग्राह रावण: सीतां बुध: खे रोहिणीमिव । (ஜக்ராஹ ராவண: ஸீதாம் பு4த: கே ரோஹிணீமிவ ।) (ஜக்ராஹ ராவண: ஸீதாம் புத: கே ரோஹிணீமிவ ।) என்ற ச்லோகத்தின் வ்யாக்யான அவசரத்தில் ஆரண்ய காண்டத்தில் சொல்லி யிருக்கிறோம். அதனால் ராவணன் ஸநகாதிகளுடைய சாபத்தினின்றும் தனக்கு விமோக்ஷத்தைக்கருதி ஸர்வலோக ஜனனியாகவும் மஹாலக்ஷ்மியாயுமுள்ள ஸீதாதேவியை மாத்ருத்வ புத்தியோடு தான் பூஜை செய்வதற்காக க்ரஹித் தான் என்ற வ்யங்க்யத்தை அறிந்துகொள்ள வேண்டும். ஸீதையை அபஹரித்த கட்டத்தில் இந்த விஷயம் விவரிக்கப் பட்டிருக்கிறது. "ஹே தாயே, நானே புத்ரனுக்கு ஸமான மான ப்ருத்யனேன். புத்ரனுக்கு ஸமானமான ப்ருத் யனுடைய விஷயத்தில் பயந்தவள்போல் உன்னுடைய சரீரத்தை பார்க்கமுடியாததான நிலையில் நீ வைத்துக் கொள்கிறாயே. புத்ரனுடைய விஷயத்தில் அது உசித மாகுமா? வாஸ்தவத்திலேயே உன்னை நான் ஈச்வரியாக தான் என்ற வ்யங்க்யத்தை அறிந்துகொள்ள வேண்டும். ஸீதையை அபஹரித்த கட்டத்தில் இந்த விஷயம் விவரிக்கப் பட்டிருக்கிறது "ஹே தாயே, நானே புத்ரனுக்கு ஸமான மான ப்ருத்யனேன். புத்ரனுக்கு ஸமானமான ப்ருத் யனுடைய விஷயத்தில் பயந்தவள்போல் உன்னுடைய சரீரத்தை பார்க்கமுடியாததான நிலையில் நீ வைத்துக் கொள்கிறாயே. புத்ரனுடைய விஷயத்தில் அது உசித மாகுமா? வாஸ்தவத்திலேயே உன்னை நான் ஈச்வரியாக

இருக்க வேண்டுமென்று இச்சிக்கிறேன். स्वां कामये (ஸ்வாம் காமயே) (த்வாம் காமயே) உன்னை ஈச்வரியாக நான் இச்சிக்கிறேன். அல்லது வேறு தாயே குழந்தையான என்னை நீ தள்ளிவிட்டால் कां (காம்) (காம்) யாரைதான், உன்னை விட்டு விட்டு अये (அயே) (அயே) அடைவேன். ஆகையால் என்னை நீ ஸ்வீகரிக்க வேண்டும். ஆகையினால் என்னை உனதுடைய பக்த கோடிகளில் ஒரு பக்தனாகச் சேர்த்துக் கொண்டு வெகுமதிக்க வேண்டும். நீயோ விசாலாக்ஷி, விசாலமாய் விஸ்தாரமான பத்ம பத்ரம்போல் காதுவரையில் தீர்க்கமான ரச்மிகளோடு கூடின நேத்ரத்தோடு கூடியவள். அதனால் நீ மஹாலக்ஷ்மியென்ற நிச்சயமோ எனக்கு நேத்ரத்தின் வைபவத்திலேயே தெரிந்து விட்டது. அதனால் உன்னை நான் பூஜிக்க விரும்புகிறேன். எனக்கு உன்னுடைய பூஜையில் அதிகாரத்தைக் கொடுக்கவேண்டும். உன்னுடைய ஸ்வரூபத்தை மகாலக்ஷ்மியென்று நான் அறிந்து கொண்டவனைனதினால் உன்னுடைய ஆராதனத்தினால்தான் எனக்கு முக்தி கிடைக்க வேண்டுமென்கிற எண்ணத்துடன் பூஜிக்க விரும்புகிறேன். அந்த என்னுடைய மநோரதத்தை நீ பூர்த்தி செய்யவேண்டும்" என்று மேற்சொன்ன ச்லோகத்தின் ஸாரபூதமான தாத்பர்யமாகும். இது மஹேச்வரதீர்த்தீய வ்யாக்யானத்தின் ஸாராம்சம்.

सर्वाङ्गगुणसम्पन्ने सर्वलोकमनोहरे ।
नेह केचिन्मनुष्या वा राक्षसाः कामरूपिणः ॥
व्यपसर्पंतु ते सीते भयं मत्तः समुत्थितम् ।

ஸர்வாங்ககுணஸம்பந்நே ஸர்வலோகமநோஹரே ।
நேஹ கேசிந்மநுஷ்யா வா ராக்ஷஸாः காமரூபிணः ॥
வ்யபஸர்பது தே ஸீதே பயம் மத்தः ஸமுத்திதம் ।

ஸகலவிதமான அவயவங்களிலும், ஸௌந்தர்ய ஸம்பத்தி யோடு கூடினவளே, ஸர்வலோகங்களுடைய மனதையும் நீ அபஹரிப்பவள்; மனிதரோ, ராக்ஷஸர்களோ, தனது இச் சையை அநுஸரித்து ரூபாந்தரங்களை அடையக் கூடிய ஸமர்த்தர்களோ, இந்த அசோகவனத்தில் எவரும் வரமுடி யாது. என்னிடத்திலிருந்தும் உனக்கேற்பட்ட பயத்தை நீ விட்டுவிடு, என்னை நீ ஸ்வீகரிக்க வேண்டுமென்று இதற்கு அடுத்து மேலுள்ள ச்லோகங்களின் ப்ராதீதிகமான அர்த்தமாகும். வ்யங்க்யார்த்தமோ நீ ஸர்வேச்வரி; ஸகல ப்ராணிகளுடைய மனதை உன்னை தரிசனம் செய்த மாத்திரத்தில் அபஹரித்துக் கொண்டு மனோரதம் வாஸனை பர்யந்தமான பதவியை அந்த ப்ராணிகளுக்குக் கொடுக்கும் வல்லமையுள்ள ப்ரம்மவித்யா ஸ்வரூபிணியே நீ. அத்துடன் அனந்த கல்யாண குணஸம்பன்னையும் நீ தான். ஒவ்வொரு குணத்திற்கும் அநேக அங்கங்களுண்டு. அதாவது ஸத்யம் என்ற குணம் இருக்கின்றது. அதற்கு மனஸ், வாக்கு, செய்கை மூன்றும் அங்கங்களாக ஆகும். இதில் ஏதாவது ஒரு அங்கம் தவறினால், ஸத்யம் என்ற குண ஸம்பன்னரை ஆனாலும் அங்கம் குறைந்து விட்டபடியினால் புஷ்கலமான அங்கத்தோடு கூடிய ஸத்யத்தை உடைய வரை அந்த புருஷன் ஆகமாட்டான். அவ்விதமே தயை என்ற ஒரு குணம் இருக்கின்றது. அதற்கும் தேசம் காலம் வஸ்து மூன்றும் அங்கங்களாகும். ஓர் அங்கம் குறைந்தாலும் அந்த குணம் புஷ்களாங்கங்களோடு கூடின தாக ஆகாது. அப்படியே அஹிம்ஸையும் ஒரு குணமாகும். அதற்கும் முற்சொன்ன தேசம், காலம், ப்ரயோசனம் வஸ்து இவைகள் அங்கங்கள், அவைகளில் ஏதாவது ஒன்று இல்லா விட்டாலும் புஷ்களாங்கத்தோடு கூடியதாக அந்த குணம் ஆகாது. இதுபோல் ஒவ்வொரு குணத்தையும் அறிந்து கொள்ளவேண்டும். ஸ்ரீதேவியான ஸீதாதேவியோ புஷ்கல மான அங்கங்களோடு கூடின ஸத்யம் அஹிம்ஸை முதலிய கல்யாண குணங்களால் அலங்கரிக்கப் பட்டவள் என்றது

வெளியாகிறது. இதை सर्वाङ्गगुणसम्पन्ने (ஸர்வாங்ககுணஸம்பந்நே) என்ற ஸம்போதனத்தினால் ராவணன் ஸூசிப்பிக்கின்றான். ஓரிடத்திலும், ஒரு ப்ரகாரமாகவும் பயத்தை ஸ்ரேஷ்டியான நீ அடைய அவகாசமே இல்லை. காமரூபிகளான ராக்ஷஸர்களோ, தேவர்களோ, மனிதர்களோ, அல்லது ராக்ஷஸராஜனான நானே, ஏதாவது உன்னுடைய பாதிவ்ரத்யத்திற்கு பங்கம் ஏற்படும்படி செய்து விடுவோமோ என்ற பயசங்கையே உனக்கு வேண்டாம். நிர்ப்பயமாக நீ இருந்து வரலாம். புத்ரனுடைய ஸாமீப்யத்தினால் தாய் பயப்படுவதுண்டா? அது போல் நீயும் என் தாயாரானபடியினால் தைரியத்துடன் இருந்துகொண்டு உன் பூஜையில் எனக்கு அதிகார ஸம்பத்தைக் கொடுத்து வரவேண்டும் என்ற தாத்பர்யத்தை மேற்சொன்ன ச்லோகங்களுக்கு அறியவும்.

स्वधर्मो रक्षसां भीरु सर्वथैव न संशयः ।
गमनं वा परस्त्रीणां हरणं संप्रमथ्य वा ॥
एवं चैतत् अकामां तु न त्वां स्प्रक्ष्यामि मैथिलि ।
कामं कामः शरीरे मे यथाकामं प्रवर्तताम् ॥

ஸ்வதர்மோ ராக்ஷஸாம் பீரு ஸர்வதைவ ந ஸம்சயः ।
கமநம் வா பரஸ்த்ரீணாம் ஹரணம் ஸம்ப்ரமத்ய வா ॥
ஏவம் சைதத் அகாமாந்து ந த்வாம் ஸ்ப்ரக்ஷ்யாமி மைதிலி ।
காமம் காமः சரீரே மே யதாகாமம் ப்ரவர்த்ததாம் ॥

ஹே பரதேவதையே, நான் ராக்ஷஸனானதினால் ராக்ஷஸர்களுக்கோ, பரதார கமனமும். பரதாரங்களை பலாத்காரமாக அபஹரிப்பதும் ஸ்வதர்மம்தான், ஆகிலும் உன்னுடைய

ஸந்நிதியில் ஸ்வபாவத்தை நான் ப்ரகாசப் படுத்துவேன் என்பதை மாத்திரம் நீ கனவிலும் நினைக்க வேண்டாம். எவ்விதமான துஷ்டஸ்வபாவமுள்ள பிள்ளைகளும், தன்னுடைய காமபாரவச்யத்தை தன்னுடைய தாயாரிடம் காண்பிப்பது என்பது உலகத்தில் கிடையாது. என்னுடைய சரீரத்தைப் பார்க்கும் பொழுது சில இங்கிதங்களால் நான் காமுகன் போலவும் உன் த்ருஷ்டிக்குப் புலப்படலாம். என் சரீரத்திலேயே என்னுடைய காமதாபத்தை ப்ரகாசப்படுத்தக்கூடிய விகாரங்கள் காணப் படட்டும், ஆகிலும், என்னுடைய இஷ்டதெய்வமான உன்னிடத்தில் அவைகள் ப்ரவர்த்திக்கமாட்டா என்பதை நிச்சயமாக சொல்லுகிறேன்.

தவிரவும் நீயோ அகாமை; என்னை ப்ருத்யனாக ஸ்வீகரித்துக்கொள்வதில் இச்சை இல்லாதவளோ, அல்லது அகாரத்தின் பொருளான விஷ்ணுவினிடத்தில் காமனையோடு கூடினவளோ, அவ்விதமான அகாமையான உன் ஸமீபப்ரதேசத்தில் கூட நான் வந்து மிதிக்கமாட்டேன். உன்னுடைய ஆக்ஞாபலம் இல்லாதுபோனால் உன் பூஜையைச் செய்வதில் கூட நான் மிகவும் பயப்படுகிறேன்.

देवि नेह भयं कार्यं मयि विश्वसिहि प्रिये ।
प्रणयस्व च तत्त्वेन मैवं भूः शोकलालसा ॥
एकवेणी धरा शय्या ध्यानं मलिनमंबरम् ।
अस्थानेऽप्युपवासश्च नैतान्यौपयिकानि ते ॥
विचित्राणि च माल्यानि चन्दनान्यगरूणि च ।
विविधानि च वासांसि दिव्यान्याभरणानि च ॥
महार्हाणि च पानानि शयनान्यासनानि च ।
गीतं नृत्तं च वाद्यं च लभ मां प्राप्य मैथिलि ॥

தெவி நேஹ பயம் கார்யம் மயி விச்வஸிஹி ப்ரியே ।
ப்ரணயஸ்வ ச தத்தேவ மைவம் பூ: சோகலாலஸா ॥
ஏகவேணீ தரா சய்யா த்யாநம் மலிநமம்பரம் ।
அஸ்தாநேப்யுபவாஸச்ச நைதாந்யெளபயிகாநி தே ॥
விசித்ராணி ச மால்யாநி சந்தநாந்யகருணி ச ।
விவிதாநி ச வாஸாம்ஸி திவ்யாநி ஆபரணாநி ச ॥
மஹார்ஹாணி ச பாநாநி சயநாநி ஆஸநாநி ச ।
தீதம் ந்ருத்தம் ச வாத்யம் ச லப மாம் ப்ராப்ய மைதிலி ॥

இந்த ச்லோகங்களுக்கு ப்ராதீதிகமான அர்த்தமானது ஸ்படஷ்டமாக யாரும் அறியக்கூடும். வ்யங்க்யமோ, என்னை உன் பூஜையில் அதிகாரம் கொடுத்து ப்ருத்யனைச் சேர்த்துக் கொண்டு, திவ்யமான ஆபரணதிகளையும் புஷ்பங்களையும் சந்தனதிகளையும், பூஜை மூலமாக நீ அடையலாம்.

स्त्रीरत्नमसि मैवं भूः कुरु गात्रेषु भूषणम् ।
मां प्राप्य हि कथन्नु स्याः त्वमनर्हा सुविग्रहे ॥

ஸ்த்ரீரத்நமஸி மைவம் பூ: குரு காத்ரேஷு பூஷணம் ।
மாம் ப்ராப்ய ஹி கதந்நு ஸ்யாஃ த்வமநர்ஹா ஸுவிக்ரஹே ॥

அகண்ட ஐச்வர்ய ஸம்பன்னனான, என்னை ப்ருத்யனாக நீ ஸ்வீகரித்துக் கொண்டும் திவ்யமான ஆபரணாதிகளுக்கு பாத்ரமான தெய்வமாக இருந்து நீ அவைகளை தரித்துக் கொள்ளாமல் அனர்ஹமானவள் போல் இருந்து வருகிறாயே அது உனக்கு தகுந்ததல்ல. மோக்ஷமென்ற புருஷார்த்தத்தை இச்சிக்கின்ற மஹாநுபாவன் பரவித்யாரூபிணியான பராசக்தியை அநுபத்திநான்கு விதமான உபசாரங்களால் பூஜிக்கும் பொழுது அந்த உபாஸகனும் பூர்மாநுகூலமிருக்கும் பக்ஷத்தில் விலமதிக்க முடியாததான திவ்யமான ஆபரணங்களையும், வஸ்த்ரங்களையும், மாலைகளையும், சத்ர சாமராதிகளையும், சயன ஆஸனங்களையும் தன்னுடைய இஷ்ட தேவதைக்கு அர்ப்பணம் செய்து கண்குளிர தர்சனம் செய்கிற ஸ்வபாவமுள்ளவனுக்கத்தானே இருப்பான்? அதை அந்த தேவதையானது நிராகரிக்க முடியுமா? அல்லது தான் அவைகளுக்கு அனர்ஹை என்று சொல்லுமா? சொல்லலாமா?

स्ववैभवानुरोधेन स्वेष्टदेवार्चनम् स्मृतम् ।

ஸ்வவைபவாநுரோதேந ஸ்வேஷ்டதேவார்சனம் ஸ்ம்ருதம் ।

என்ற ஸ்ம்ருதியை அநுஸரித்து அவனவன் தன்னுடைய சக்திக்குத் தகுந்தபடி விதத்தசாட்டியமில்லாமல் அபிஷேகம், அர்ச்சனை, தர்ப்பணம், ப்ராம்மணஸந்தர்ப்பணம், ஹோமம் முதலிய அங்கங்களினால் தனக்கு இஷ்டமான தெய்வத்தை ஆராதிக்கத்தானே ஆராதிப்பான். அதை கட்டாயம் நீ ஸ்வீகரிக்க வேண்டும்.

इदं ते चारु सञ्जातम् यौवनं ह्यतिवर्तते ।
यदतीतं पुनर्नैति स्रोतः शीघ्रमपामिव ॥

இதம் தே சாரு ஸஞ்ஜாதம் யௌவநம் ஹ்யதிவர்த்ததே ।
யததீதம் புநர்நைதி ஸ்ரோதஃ சீக்ரமபாமிவ ॥

என்ற ச்லோகத்திற்கும், உன்னுடைய யௌவனமானது நாளுக்குநாள் காலாதிக்ரமத்தை அடைகிறது. போன யௌவனம் திரும்பி வராது. அதற்குள் நீ போக்யபோகாதிகளை அனுபவிக்க வேண்டாமா என்ற வாச்யார்த்தமானது ஸ்பஷ்டமாகத் தெரியும். வ்யங்க்யார்த்தமோ, மேற்சொன்ன ச்லோகத்தில், यौवनं (யௌவநம்) (யௌவநம்) என்ற பதத்துடன் ते (தே) (தே) என்ற பதத்தைச் சேர்த்தால் உன்னுடைய யௌவனம் என்று அர்த்தம் ஏற்படுகிறது. அதை க்ரஹித்துக் கொள்ளாமல், உன்னுடைய ஆராதனத்திற்கு யோக்யமான என்னுடைய யௌவனம் என்ற அர்த்தத்தை ஸ்வீகரித்துக்கொள்ளவேண்டும்.

कौमारे आचरेत् प्राज्ञः धर्मान् भागवतानिह ।

கௌமாரே ஆசரேத் ப்ராக்ஞ: தர்மாந் பாகவதாநிஹ ।

என்ற நியாயத்தை அனுஸரித்து பகவத்ப்ராப்திக்கு ஸாதனபூதமான தர்மங்களை வார்த்தக்யம் வருவதற்கு முந்தியே அனுஷ்டிக்க வேண்டுமென்று தெரிகிறபடியினால் உன்னுடைய ஆராதனத்திற்கு யோக்யமான என்னுடைய யௌவனமானது நதியின் ப்ரவாகம் போல் போய்க்கொண்டே இருக்கிறது. போனயௌவனமோ எனக்குத் திரும்பி வராது. வார்த்தக்ய அவஸ்தை வந்து அசக்தி ஏற்படுவதற்கு முந்தி உன்னை நான் பூர்ண அங்கங்களோடு பூஜித்து முக்தியை ஸம்பாதித்துக் கொள்ளாத போனால்,

आत्मानं मानुषं प्राप्य प्राप्य तत्रापि पौरुषम् ।
इतः को न्वस्ति मूढात्मा यस्तु स्वार्थे प्रमाद्यति ॥

ஆத்மாநம் மாநுஷம் ப்ராப்ய ப்ராப்ய தத்ராபி பௌருஷம் ।
இத: கோந்வஸ்தி மூடாத்மா யஸ்து ஸ்வார்தே ப்ரமாத்யதி ॥

என்ற சாஸ்திரப்படி மனிதனுகப் பிறந்தும் அதிலும் பெளருஷத்தை ஸம்பாதித்துக்கொண்டும், ஸ்வார்த்தமாகிற பரம புருஷார்த்தத்தினின்றும் ப்ரஷ்டனுக ஆகிவிட்டால் அவனைப்போல் மூடன் வேறொருவனுமில்லை என்ற நிச்சயத்தைக் கல்லவா நான் பாத்ரனுக ஆகிவிடுவேன். ஆகையினுல் உன்னுடைய பூஜைக்கு அர்ஹமான வயதை நான் இப்பொழுது அடைந்திருக்கிறேன். புஷ்பங்களையோ தீர்த்தங்களையோ அன்னியர்கள் மூலமாகக்கொண்டு வந்து ஆகவேண்டுமென்ற துர்தசை எனக்கு வரவில்லை. திவ்ய சந்தனத்தையும் ஸ்வயமாகவே அரைத்து ஸமர்ப்பிக்க சக்தியுள்ளவனுக இருக்கிறேன். அன்னியர்களுடைய தயவை எதிர் பார்த்து நான் பூஜாத்ரவ்யங்களை ஸம்பாதிக்கும் வயது வருவதற்கு முன் உன்னுடைய ப்ருத்யனுக என்னை நீ ஸ்வீகரித்துக்கொண்டு உன் பூஜையில் என்னை அதிகாரியாக செய்ய வேண்டும்.

त्वां कृत्वोपरतो मन्ये रूपकर्ता स विश्वसृट् ।
न हि रूपोपमात्वन्या तवास्ति शुभदर्शने ॥
त्वां समासाद्य वैदेहि रूपयौवनशालिनीम् ।
कः पुमानतिवर्तेत साक्षादपि पितामहः ॥

க்வாம்க்ருத்வோபரதோ மன்யே ரூபகர்த்தா ஸ விச்வஸ்ருட் ।
ந ஹி ரூபோபமாத்வன்யா தவாஸ்தி சுபதர்சனே ॥
த்வாம் ஸமாஸாத்ய வைதேஹி ரூபயௌவனசாலினீம் ।
கः புமானதிவர்த்தேத ஸாக்ஷாதபி பிதாமஹः ॥

க்வாம்க்ருத்வோபரதோ மன்யே ரூபகர்த்தா ஸ விச்வஸ்ருட் ।
ந ஹி ரூபோபமாத்வன்யா தவாஸ்தி சுபதர்சனே ॥
த்வாம் ஸமாஸாத்ய வைதேஹி ரூபயௌவனசாலினீம் ।
கः புமானதிவர்த்தேத ஸாக்ஷாதபி பிதாமஹः ॥

நாமரூபப்ரபஞ்சத்தை ஸ்ருஷ்டிக்கின்றப்ரும்மாவானவர் உன்னை ஸ்ருஷ்டித்துவிட்டு உன்னுடைய சரீரத்திலேயே ஸகல விதமான ரூபலாவண்ய ஸம்பத்தியையும் பூர்த்தி செய்துவிட்டு இதற்கு மேலான ரூபவதியான மற்றொரு ஸ்த்ரீயை ஸ்ருஷ்டிக்க முடியாமல் உபரதியை அடைந்து விட்டாரோ என்று நான் நினைக்கின்றேன். உனக்கு ஸமான மாக அழகில் மற்றொரு ஸ்த்ரீ சதுர்த்தசபுவனத்திலும் இல்லவே இல்லை. ஸௌந்தர்யத்திலும், யௌவனத்திலும் முதன்மையான உன்னைப் பார்த்த எந்த புருஷன்தான் மனக் கலக்கத்தை அடையாமலிருப்பான்? ப்ரும்மாவானாலும். கொஞ்சம் கலங்கி மயங்கித்தான் திண்டாடுவார் என்றே மேற்சொன்ன ச்லோகங்களுக்கு வாக்யார்த்தமாக ஆகும். வாஸ்தவமான வ்யங்க்யார்த்தம்.

"सीता लक्ष्मीः भवान्विष्णुः (ஸீதா லக்ஷ்மீ: பவான் விஷ்ணு:) என்ற சாஸ்த்ரப்படி மஹாலக்ஷ்மீ யான உன்னை பூஜார்த்தமாக ஸ்ரீசக்ரத்தில் ஸ்தாபனம் செய்துவிட்டு ஸாக்ஷாத் ப்ரும்மாவானாலும் உன்னை ஆராதிக்கவேண்டாமென்று உபரதியை அடைய முடியாது. உன்னுடைய ஆராதனத்தினால் ஸர்வ ஸௌத்திற்கும் நஷ்டம் வந்தாலும், அனர்த்த பரம்பரை மேன்மேலும் வ்ருத்தியானாலும், உன்னுடைய ஆராதனத்தை முமுக்ஷுக்களான மகான்கள் விடவே மாட்டார்கள். அப்படி இருக்கும் பொழுது, ஸாதாரணமான ஒரு மனிதனை ராக்ஷஸனை உன் கடாக்ஷத்திற்கு பாத்ரபூதனாக ஆகவிட்டு அவனுடைய மனதில் உன்னைப் பூஜை செய்ய வேண்டுமென்று எப்படித் தோன்றுமல் இருக்கக்கூடும்? பூஜை செய்யவேண்டுமென்றுதான் தோன்றும்.

यदि वा पश्चिमं जन्म यदि वा शङ्करः स्वयम् ।
तेनैव लभ्यते विद्या श्रीमत्पञ्चदशाक्षरी ॥

யதி வா வஸ்தினம் ஜஹ்ரு யதி வா பாம்கராः ஸ்வயம் ।
தைதைரவ முஹ்யதே வீர்யா ஸ்ரீரகுவம்ஸநந்தநே ॥

யதி வா பச்சிமம் ஜம்ம யதி வா சக்கராः ஸ்வயம் ।
தேனைவ லப்யதே வித்யா ஸ்ரீமத்பஞ்சதசாக்ஷரீ ॥

என்ற சாஸ்த்ரப்ரகாரம், ப்ராப்த சரீரபதனத்திற்குப் பிறகு வேறு சரீரத்தை ஆரம்பிக்கக்கூடிய கர்மாவாவது இல்லாமலிருக்க வேண்டும். அல்லது பரமேச்வரனுடைய அவதாரமாகவாவது இருக்கவேண்டும். அப்படியானால் அவ்விதம் தபோ மஹிமையோடு கூடின மஹான்கள் உன்னை உபாஸிக்காமல் இருக்க நியாயமே இல்லை. கட்டாயம் உபாஸித்தே தீருவார்கள்.

यद्यत् पश्यामि ते गात्रं शीतांशुसदृशानने ।
तस्मिन् तस्मिन् पृथुश्रोणि चक्षुर्मम निबध्यते ॥
भव मैथिलि भार्या मे मोहमेनं विसर्जय ।
बह्वीनां उत्तमस्त्रीणामाहृतानामितस्ततः ॥
सर्वासामेव भद्रन्ते ममाग्रमहिषी भव ।

யத்யத் பஸ்யாமி தே காத்ரம் சீதாம்சுஸத்ருசாநநே ।
தஸ்மிந் தஸ்மிந் ப்ருதுச்ரோணி சக்ஷுர்மம நிபத்யதே ॥
பவ மைதிலி பார்யா மே மோஹமேநம் விஸர்ஜய
பஹ்வீநாம் உத்தமஸ்த்ரீணாம் ஆஹ்ருதாநாம் இதஸ்ததः ॥
ஸர்வாஸாமேவ பத்ரம்தே மமாக்ரமஹிஷீ பவ ।

யத்யத் பச்யாமி தே காத்ரம் சீதாம்சுஸத்ருசாநநே ।
தஸ்மிந் தஸ்மிந் ப்ருதுச்ரோணி சக்ஷுர்மம நிபத்யதே ॥
பவ மைதிலி பார்யா மே மோஹமேநம் விஸர்ஜய
பஹ்வீநாம் உத்தமஸ்த்ரீணாம் ஆஹ்ருதாநாம் இதஸ்ததः ॥
ஸர்வாஸாமேவ பத்ரம்தே மமாக்ரமஹிஷீ பவ ।

ஹே பரதேவதையே உன்னுடைய அங்கங்களுக்குள் எந்தெந்த அவயவ விசேஷங்களை நான் பார்க்கிறேனே அந்தந்த அவயவ விசேஷத்திலேயே என்னுடைய சக்ஷுரிந்த்ரியமானது க்ஷீணமாக ஆகிவிடுகிறது. இந்த்ரியங்களுடைய உபலம்ஹாரத்தையே, மோக்ஷமென்று வேதாந்திகள் கூறுவர். அந்த இந்த்ரியங்களுக்குள் சக்ஷுரிந்த்ரியம் ப்ரதானமானதினால், உன்னுடைய ஒவ்வொரு அவயவங்களும் முக்திக்கு ஸாதனமானதினாலேயும், எந்த எந்த அவயவ விசேஷங்களை நான் பார்க்கிறேனே, அங்காங்கு என்னுடைய இந்த்ரியமானது உபலம்ஹாரத்தை அடைந்து என்னை முக்தனாகச் செய்துவிடுகிறது. உன்னுடைய தேஹமோ ப்ராக்ருதமான ஜீவனுடைய தேஹம் போல் கர்ம பரதந்த்ரமல்ல.

न भूतसङ्घ संस्थानः देहोस्य परमात्मनः ।

ந பூதஸங்க ஸம்ஸ்தாநः தேஹோஸ்ய பரமாத்மநः ।

ந பூதஸங்க ஸம்ஸ்தாநः தேஹோஸ்ய பரமாத்மநः ।

न तस्य प्राकृता मूर्तिः (ந தஸ்ய ப்ராக்ருதா மூர்த்திः) என்ற சாஸ்த்ர வசனங்களினால் அப்ராக்ருதமான தேஹமே உன் விக்ரஹமாக ஆகும். அதாவது மந்த்ர வர்ணத்மிகையே நீ. உன்னுடைய தேஹம் மந்த்ரவர்ண ஸ்வரூபமானபடியினால் ஒவ்வொரு அவயவ விசேஷங்களிலும் श्रीं ह्रीं क्लीं ऐम् सौः (ஸ்ரீம் ஹ்ரீம் க்லீம் வாக்3 வைளः) (ஸ்ரீம் ஹ்ரீம் க்லீம் ஐம் ஸௌ:) என்று ப்ரணவ ஸ்வரூபங்களாக விளங்கி வருகிறபடியினாலும் ஒவ்வொன்றும் முக்தி ஸாதனமான பீஜாக்ஷரமானதினால் ஒவ்வொன்றையும் தான் கவனித்து யோஜிக்கும் பொழுது என்னுடைய திவ்ய சக்ஷுஸ்ஸானது அந்த பீஜாக்ஷரத்தில் லீனமாக ஆகி உன்னுடைய ஸாயுஜ்யத்தை அடையஸித்தமாக ஆகிவிடுகிறது. ஹே மைதிலி! உன்னுடைய காந்தியினால் ஆர்யையாகவும் ச்ரேஷ்டையாகவும் என் விஷ

யத்தில் நீ விளங்குகிறாய் भव मैथिलि भार्या मे (ஹவ மைதிலி பார்யா மே) என்ற இடத்தில் இந்த விசேஷ அர்த்தத்தை க்ரஹித்துக்கொள்ளவேண்டும். भया कान्त्या आर्या पूज्या (ஹயா காந்த்யா ஆர்யா பூஜ்யா) என்ற பொருளை க்ரஹித்துக் கொண்டு பார்யா என்ற சப்தத்தை உபயோகப் படுத்திக் கொள்ளவேண்டும்.

என்னிடத்தில் சத்ருத்வசங்கையை எல்லாவிதத்திலும் விட்டுவிடு. தவிரவும் அநேகஸ்த்ரீகளையும் அங்காங்கு நான்கு திக்குகளிலிருந்தும் நான் பத்னியாக அடைந்திருக்கிறேன். அத்தன ஸ்த்ரீகளுக்கும் அக்ரமஹிஷியான மண்டோதரிக்கும் நீ ஈச்வரியாக இருந்து வரவேண்டும்.

என்று தன்னையும் தன்னைச்சேர்ந்த வஸ்துக்களையும் இஷ்டதேவதைக்கு அர்ப்பணம் செய்து தன்ன தேவதை யிடையை ஆராதனத்தில் அர்ஹனென்று ஒப்புக்கொள்ளும் படி ராவணன் பிரார்த்திக்கிறான்.

लोकेभ्यो यानि रत्नानि संप्रमथ्याहृतानि वै ।
तानि मे भीरु सर्वाणि राज्यञ्चैतत् अहं च ते ॥

லொகெப்யோ யாநி ரத்நாநி ஸம்ப்ரமத்யாஹ்ருதாநி வை ।
தாநி மே பீரு ஸர்வாணி ராஜ்யஞ்சைதத் அஹம் ச தே ॥

லோகேப்யோ யாநி ரத்நாநி ஸம்ப்ரமத்யாஹ்ருதாநி வை ।
தாநி மே பீரு ஸர்வாணி ராஜ்யஞ்சைதத் அஹம் ச தே ॥

என்ற ச்லோகத்திலும் தான் ஸம்பாதித்த ரத்ன விசேஷங்களையும், தன்னுடைய ராஜ்யத்தையும் பரதேவதையான மகாலக்ஷ்மிக்கு அர்ப்பணம் செய்தான். अहं (அஹம்) (அஹம்) என்ற பதத்தினால் ஆத்ம ஸமர்ப்பணமும், रत्नानि (ரத்நாநி) (ரத்நாநி) என்பதினால் ஆத்மீய ஸமர்ப்பணமும் செய்ததாக ஏற்படுகிறது.

विजित्य पृथिवीं सर्वां नानानगरमालिनीम् ।
जनकाय प्रदास्यामि तव हेतोर्विलासिनि ॥
नेह पश्यामि लोकेऽन्यं यो मे प्रतिबलो भवेत् ।
पश्य मे सुमहद्वीर्यम् अप्रतिद्वन्द्वमाहवे ॥
असकृत्संयुगे भग्नाः मया विमृदितध्वजाः ।
अशक्ताः प्रत्यनीकेषु स्थातुम् मम सुरासुराः ॥
इच्छया क्रियतामद्य प्रतिकर्म तवोत्तमम् ।
सप्रभाण्यवसज्यन्ताम् तवाङ्गे भूषणानि च ॥
साधु पश्यामि ते रूपम् संयुक्तम् प्रतिकर्मणा ।
प्रदिकर्माभिसंयुक्ता दाक्षिण्येन वरानने ॥
भुङ्क्ष्व भोगान् यथाकामं पिब भीरु रमस्व च ।

ஜிஜ்ஞ்ய வ்ருத்வீம் ஸர்வாம் நாநாநகரமாலிநீம் ।
ஜநகாய ப்ரதாஸ்யாமி தவ ஹேதோர்விலாஸிநி ॥
நேஹ பஶ்யாமி லோகேऽந்யம் யோ மே ப்ரதிபலோ பவேத் ।
பஶ்ய மே ஸுமஹத்வீர்யம் அப்ரதித்வந்த்வமாஹவே ॥
அஸக்ருத்ஸம்யுகே பக்நாஃ மயா விம்ருதிதத்வஜாஃ ।
அஶக்தாஃ ப்ரத்யநீகேஷு ஸ்தாதும் மம ஸுராஸுராஃ ॥
இச்சயா க்ரியதாமத்ய ப்ரதிகர்ம தவோத்தமம் ।
ஸப்ரபாண்யவஸஜ்யந்தாம் தவாங்கே பூஷணாநி ச ॥
ஸாது பஶ்யாமி தே ரூபம் ஸம்யுக்தம் ப்ரதிகர்மணா ।
ப்ரதிகர்மாபிஸம்யுக்தா தாக்ஷிண்யேந வராநநே ॥
புங்க்ஷ்வ போகாந் யதாகாமம் பிப பீரு ரமஸ்வ ச ।

விஜித்ய ப்ருதிவீம் ஸர்வாம் தாதாதகர மாலிகீம் ।
ஜாதகாய ப்ரதாஸ்யாமி தவ ஹேதோர்விலாவிநீ ॥
நேஹ பச்யாமி லோகேந்யம் யோ மே ப்ரதிபலோ பவேத் ।
பச்ய மே ஸுமஹத்வீர்யம் அப்ரதித்வந்த்வமாஹவே ॥
அஸக்ருத்ஸம்யுகே பக்நா: மயா விம்ருதிதத்வஜா: ।
அசக்தா: ப்ரத்யதீகேஷு ஸ்தாதும் மம ஸுராஸுரா: ॥
இச்சயா க்ரியதாமத்ய ப்ரதிகர்ம தவோத்தமம் ।
ஸப்ரபாண்யவஸஜ்யந்தாம் தவாங்கே பூஷணானி ச ॥
ஸாது பச்யாமி தே ரூபம் ஸம்யுக்தம் ப்ரதிகர்மணா ।
ப்ரதிகர்மாபிஸம்யுக்தா தாத்ருஷீயேத வராங்கனே ॥
புங்க்ஷ்வ போகான் யதாகாமம் பிப பீரு ரமஸ்வ ச ।

மஹாமந்திரத்தை உபதேசிக்கின்றவனே அந்த மஹா மந்த்ரத்தை ஸித்திசெய்து அதனுடைய வைபவத்தையனுபவித்தவனே அந்த மஹாமந்த்ரத்தினால் பூஜிக்கவேண்டிய மூர்த்தியை தனக்கு த்ருஷ்டிக்கு கோசரமாக செய்துகொள்ளும்படி ஸ்தாபித்த புண்யவானே இவர்களுக்கு ஸத்புருஷனுயிருந்தால் ராஜ்யத்தையே ஸம்மானமாகச்செய்து அவர்களுடைய அனுக்ரஹத்தை அடையவேண்டும் என்று

मन्त्रोपदेष्टा द्रष्टा च मूर्तिदाता महेश्वरः ।
तस्मै राज्यं प्रदत्वा तु तस्यानुग्रहमाप्नुयात् ॥

உபதேஷ்டா த்ரஷ்டா ச மூர்த்திதாதா மஹேச்வர: ।
தஸ்மை ராஜ்யம் ப்ரதத்வா து தஸ்யாநுக்ரஹ மாப்நுயாத் ॥

இந்த சாஸ்திரத்தின்படி தெரிகிறபடியினால் ப்ரம்மவித்யாதிதேவதையான மஹாலக்ஷ்மியினுடைய ஸ்வரூபத்தைத் தன்னைப்போன்ற மாமரர்களும் சுலபமாகப்பார்க்கும்படி இந்த பூலோகத்தில் அவதரிக்கச்செய்த புண்யவானான ஜனகராஜனுக்கு மேற்கண்ட சாஸ்திரத்தை அறிந்தவனான ராவணன் தனது ஸகல ஐச்வர்யத்தையும் ராஜ்யத்தையும்

ஸம்மானம் செய்யவேண்டுமென்ற தீர்மானத்தைச் செய்து கொண்டு "ஹே பரதேவனதேயே, உன்னுடைய நிமித்தமாக ஜனகமகாராஜனுக்கு என்னுடைய ராஜ்யத்தையே நான் கொடுத்து விடுகிறேன், எனக்கு சத்ருக்களே உலகத்திலொரு வருமில்லை. யுத்தத்தில் எல்லோரையும் நான் ஜயித்தவன் அகண்டமான ராஜ்யபூமியை ஜனக மகாராஜனுக்குப் பாரி தோஷிகமாகக் கொடுத்து நான் தன்யனாக ஆகிறேன். உன் பூஜையில் மாத்திரம் எனக்கு நீ அதிகாரபதவியைக் கொடுக்க வேண்டும் அறுபத்திநான்கு விதமான உபசாரங்களுக்கு வேண்டிய ஆபரணதிகள், நூதனமாக நிர்மாணம் செய்து அன்யர்களால் தரிக்கப்படாமலும், இதோ விளங்கி வருகின்றன. அவைகளை எடுத்து நீ அலங்கரித்துக்கொண்டு விலாஸினியாக விளங்கவேண்டுமென்று தாயே, உன்னை நான் பிரார்த்திக்கிறேன். உன்னுடைய ப்ரஸாதம் எனக்கவசியம் ஏற்படவேண்டும்.

यया तदक्षरमधिगम्यते सा परा विद्या । (யயா தத³க்ஷரமதி⁴க³ம்யதே ஸா பரா வித்³யா ।) (யயா தத³க்ஷரமதி⁴க³ம்யதே ஸா பரா வித்யா ।) என்று முண்டகோபநிஷத்தில் கூறியபடி அக்ஷர வஸ்துவைக்காட்டிக் கொடுக்கிற பரவித்தையே நீ. உன்னுடைய ப்ரஸாதம் ஏற்பட்டுவிட்டால் தாரகப்ரும்மமாகிய ராமனென்ற அக்ஷர வஸ்துவை நான் ஸாக்ஷாத்காரித்துக்கொண்டு ராக்ஷஸ பாவத்தினின்று முக்தனாக ஆகிவிடுவேன். உன்னுடைய ப்ரஸாதத்தினால் நான் மாத்திரம் தன்யனாக ஆவேன் என்பது இல்லை. என்னைச் சேர்ந்தவர்களும் முக்தர்களாகிவிடுவார்கள். எனக்கும் ஆனந்தாவாப்தி உண்டு. என்னைச் சேர்ந்த பந்துக்களுக்கும் ஆத்மரதியினால் ஏற்படக் கூடிய ஸௌக்கியம் கிடைக்கும். ஆகையினால் அவ்விதம் நீ எனக்கு அனுக்ரஹம் செய்ய வேண்டுமென்று உன்னை நான் வேண்டிக்கொள்ளுகிறேன்.

मद्धिं मनानुपश्य त्वं श्रियं भद्रे यशश्च मे ।
किं करिष्यसि रामेण सुभगे चीरवाससा ॥

निक्षिप्तविजयो रामः गतश्रीः वनगोचरः ।
व्रती स्थण्डिलशायी च शङ्के जीवति वा न वा ॥
न हि वैदेहि रामस्त्वां द्रष्टुं वाप्युपलप्स्यते ।
पुरो बलाकैः असितैः मेघैः ज्योत्स्नामिवावृताम् ॥
न चापि सम हस्तात्त्वां मोक्तुमर्हति राघवः ।

ஜிஷ்ணும் ஸஹாநுவர்ய க்ஷம் ஸ்ரியம் ஹைஷ்ய யஸஸ்வி நம் ।
கிம் கரிஷ்யஸி ராகவேண வைஹமே ஸீரவாஸவ ॥
நிக்ருதிப்ரவிஜயோ ராஜஃ மதபுத்ரீ வநேசரஃ ।
வ்ரதீ ஸ்தண்டிலசாயீ ச ஜீவதி வா ந வா ॥
ந ஹி வைதேஹி ராமஸ்த்வாம் த்ரஷ்டும் வாப்யுபலப்ஸ்யதே ।
புரோ பலாகைஃ அஸிதைஃ மேகைஃ ஜ்யோத்ஸ்நாமிவாவ்ருதாம் ॥
ந சாபி மம ஹஸ்தாத்த்வாம் ப்ராப்தும ர்ஹதி ராகவஃ ।

நித்திம் மமாநுபச்ய த்வம் ச்ரியம் பத்ரே யசக்ச மே ।
கிம் கரிஷ்யஸி ராமேண ஸுபகே சீரவாஸஸா ॥
நிக்ருதிப்ரவிஜயோ ராமஃ கதஸ்ரீஃ வநகோசரஃ ।
வ்ரதீ ஸ்தண்டிலசாயீ ச ஜீவதி வா ந வா ॥
ந ஹி வைதேஹி ராமஸ்த்வாம் த்ரஷ்டும் வாப்யுபலப்ஸ்யதே ।
புரோ பலாகைஃ அஸிதைஃ மேகைஃ ஜ்யோத்ஸ்நாமிவாவ்ருதாம் ॥
ந சாபி மம ஹஸ்தாத்த்வாம் ப்ராப்துமர்ஹதி ராகவஃ ।

இந்த ச்லோகங்களால் ராவணன் சொல்லுவதாவது: "என்னுடைய ஸௌந்தர்யமான ஐச்வர்யத்திற்கும் நீ நாயகியாக இருப்பதோடு கூட என்னுடைய ஸ்த்ரீகளுக்கும் அக்ரமஹிஷியாக நீ இருந்துகொண்டு இந்த ராஜ்ய லக்ஷ்மியை உன் வசமாக்கிக் கொள்ளலாம் இவ்வளவு ஸௌகர்யங்கள் உனக்கேற்படக்கூடுமானதிலுல் என்னுடைய மனோரதத்தை நீ ஏன் பூர்த்தி செய்யக்கூடாது?" என்று சொன்ன ராவணனுடைய அபிப்ராயத்தின் ஸாராம்சத்திற்கு மேல் ஸீதை ஆக்ஷேபித்ததாக சங்கை செய்து

கொள்ளவேண்டும். அதாவது "ராவணு, ராமனை விட்டு என்னை நீ பிரித்தது மிகவும் பிசகான காரியம்தான். ராமனோடு என்னை நீ சேர்த்து வைத்துவிட்டால் உனக்கு அகண்டமான ஐம்பத்தையும் கொடுக்க சித்தமாக இருக்கிறேன். ஆகையினால் ராமனோடு சேர்த்து வைத்து என்னை நீ பூஜிக்கவேண்டும்" என்றுதான் அந்த சங்கையின் ஸாராம்சமாகும். ராவணன் அதற்கு பதில் சொல்லுவது :

"ஹே ஜகதீச்வரீ, நான் ஐம்பத்தை எதிர்பார்த்து உன்னை ஆராதிக்கவில்லை. கேவலம் மோக்ஷத்தையே நான் எதிர்பார்த்தவன், மோக்ஷத்தை எனக்கு நீ கொடுக்கும் வரையில் உன்னுடைய சரணாரவிந்தத்தை நான் விடமாட்டேன். சாஸ்திரத்தில் ப்ரக்ருதி உபாஸனம், புருஷ உபாஸனம், ப்ரக்ருதி புருஷ உபாஸனம் என்று உபாஸனங்கள் விதிக்கப்பட்டிருக்கின்றன. ப்ரக்ருதி புருஷர்களைச் சேர்த்து வைத்து உபாஸனம் செய்தால் ஐச்வர்ய ஐம்ருத்தியும் புருஷனை மாத்திரம் உபாஸித்தால் க்ரம முக்தியும், ப்ரக்ருதியினுடைய உபாஸனத்தினால் உடனே முக்தியும் ஏற்படுகிறதென்று பலமும் பிரிக்கப்பட்டிருக்கிறது. நான் ஐச்வர்யத்தை எதிர்பார்த்தவனல்ல; என்னிடத்திலிருக்கும் ஐச்வர்யத்தையும் யசஸ்ஸையும் நீயே நன்றாக எண்ணிப் பார்த்து அதற்கு மேலாக ராவணனுக்குக் கொடுக்கக்கூடிய ஐச்வர்யம் இருக்கிறதா என்று ஆலோசிக்கலாம். இந்த பூமண்டலத்தில் ஸார்வ பௌம ஆனந்தத்திற்கு மேலானதுவான ஐச்வர்யம் எவ்வளவு உண்டோ அவ்வளவையும் நான் அடைந்துவிட்டேன். எனக்கு இனிமேல் அடையவேண்டிய புருஷார்த்தமோ ராக்ஷஸ பாவத்தினின்றும் விடுக்தனை ஆகி பவ பந்தமாகிய மகாரோகத்தினின்றும் விடுபட்டவனாக ஆகவேண்டும். அதுதான் என்னுடைய முக்யமான கோரிக்கை. நிஷ்ப அமுதமஸ்து (விஷ்யா ஸுஜ்ஜதலஹூகே) (வித்யயா அம்ருதமச்னுதே) என்ற சாஸ்திரத்தை அனுஸரித்து வித்யாதத்வரூபிணியாயும் மூல ப்ரக்ருதி ஸ்வரூபமாயும் உள்ள உன்னுடைய ஆராதனத்

தைத் தவிர நான் மோக்ஷத்தை அடைவதற்கு வேறு ஓரு உபாயத்தையும் ஸாதனமாக நான் காணவில்லை ராமரோடு சேர்த்து வைத்து உன்னை நான் உபாஸித் தால் நீ எனக்கு என்ன செய்யப்போகிறாய்? ஐச்வர் யத்தைத்தானே கொடுக்க முடியும். அது என்னிடம் ஸம்பூர்ணமாக இருந்து வருகிறதே. ராமனும் மோக்ஷத்தை கொடுக்கும்படியான சக்தி வித்யாதத்வ ரூபிணியான உன்னுடைய ஆராதனத்தில் எனக்கு அதிகார ஸம்பத் தியை அனுக்ரஹம் செய்திருக்கிறார். என்னிடத்தில் இந்த ராக்ஷஸ சரீரம் உள்ள வரையிலும் என்னை நீ முக்தனாகச்செய்கிற வரையிலும், ராமரை உன்னை அடையமாட்டார். அது நிச்சயம்தான். பகவானை ராமரை ஸத்ய ஸங்கல்பனை நினைத்தால் என்னுடைய மோக்ஷார்த்தம் அபராஜிதமான வைகுண்டத்திலிருந்து பூலோகத்தில் அவதாரம் செய்துவிட்டு என்னுடைய மோக்ஷ மும் உன்னிடத்திலிருந்து உன்னுடைய அதினமாக ஏற்பட வேண்டுமென்று உன்னுடைய ஆராதனத்தில் எனக்கதிகார ஸம்பத்தியையும் கொடுத்திருக்கும் போழுது என்னை நீ உதா ஸீனமாகத் தள்ளிவிடுவது நியாயமில்லை. ஆகையினால் பர வித்யாஸ்வரூபிணியான நீ எனக்கு முக்தியைக் கொடுக்கும் வரையிலும் உன்னுடைய பாதாரவிந்தத்தை நான் விடமாட் டேன். ராமனுடைய ஸ்வபாவமோ ஔதாஸீந்யமான நிலை யில் இருந்து வரும் ஸ்வபாவமாகும்.

सुभगे चीरवाससा (ஸுபகே சீரவா ஸஸா) என்ற இடத்தில் अचीरवाससा (அசீரவாஸஸா) (அசீரவாஸஸா) என்று பதச்சேதம் செய்துகொள்ள வேண்டும். अचीरं (அசீரம்) (அசீரம்) என்றால் பீதாம்பரம் என்று அர்த்தமானதினால் பீதாம்பரதாரியான மகா விஷ்ணுவே ஸ்ரீராமன். "உதாஸீனமான ஸ்வபாவத் தோடு கூடிய ராமனைக்கொண்டு எனக்கு நீ என்ன தான் செய்யப்போகிறாய். நான் எதிர்பார்க்கும் மோக்ஷம்

உன்னுடைய அதீனமல்லவா; தவிரவும் ராமனே நிஷித விஜய: (நிக்ஷித்த விஜய:) நிஷிக்தம் (நிக்ஷிப்தம்) (நிக்ஷிப்தம்) என்றால் ஸ்வதஸ்ஸித்தம் என்ற அர்த்தம் ஏற்படுகிறது. அதாவது ராமன் ஸ்வதஸ்ஸித்தமான விஜயத்தோடு கூடினவன் என்று வெளியாகிறது. தனுஷா யுதி சாலவான் (யதா-ஷா யுதி ப்ரதூவாந்) (தநுஷா யுதி சாத்ரவாந்) என்ற நியாயத்தை யநுஸரித்து எங்கும் ஸ்வயமாகவே தன்னிடத்தில் இருந்துவரும் ஜயபூர்வயோடு கூடின ஸ்ரீராமனிடம் யாரால் எதிர்த்து நின்று போரில் யுத்தம் செய்யமுடியும் மேலும் என்னுடைய மோக்ஷ இச்சையானது ராமனோடு எதிர்த்து யுத்தம் செய்து ஜயித்து உன்னை ஸ்வீகரிக்கவேண்டு மென்ற பௌருஷத்திற்கு ப்ரதிபந்தகமல்லவா. என்னுடைய பௌருஷம்தான் ராமனிடம் பலிக்குமா?

வஸிஷ்டபகவானிடம் ஸர்வரத்னத்திற்கும் நிதியாக ஒரு காமதேனு இருந்தது. விச்வாமித்ரர் அரசனாக இருக்கும்பொழுது அந்த காமதேனுவைத் தான் அடைய வேண்டுமென்று எண்ணினதும் தெரிந்த விஷயம். வஸிஷ்டரிடத்தில் கேட்டார். அவர் அதைக்கொடுக்கவில்லை. எதோ தன்னுடைய பலத்தினால் காமதேனுவை அபஹரிக்க யத்னம் செய்தார். வஸிஷ்டருக்கு எதிரில் அந்த காமதேனுவை அபஹரிக்க அவர் யத்னம் செய்ததினால் விச்வாமித்ரருடைய மனோரதம் பூர்த்தியாகாமல் முடிந்தது. விச்வாமித்ரருக்கோ வஸிஷ்டரை எப்படியும் ஜயித்துவிடலாமென்ற ஆக்ரஹம் மட்டும் இருந்தது. அது பலிக்கவில்லை. அந்த வ்ருத்தாந்தத்தை நான் அறிந்தவன்தான். மோக்ஷத்தில் விருப்பமுள்ள நான் பராசக்திரூபமான உன்னைத்தனியாக ஸஹாயாகாங்க்ஷா-ராஹ்யா (ஸஹாயாமகாங்க்ஷாயா) (ஸஹாயாகக்ரமாராத்யா) என்ற சாஸ்திரத்தை அநுஸரித்துப் பூஜிக்கவேண்டுமென்று தீர்மானித்தேன். ந ஜீவேயं க்ஷணமபி விநா தாம் அலிதேக்ஷணாம் । (ந ஜீவெயம் க்ஷணமபி விநா தாம் அலிதேக்ஷணாம் ।) (ந ஜீவேயம் க்ஷணமபி விநா தாம் அலிதேக்ஷணாம்) என்று ஒரு க்ஷணம்

கூட ஸீதையை விட்டுப் பிரிந்து நான் ஜீவிக்கமாட்டே
னென்று சொன்ன ராமனிடம் நான் உன்னைப் பூஜிக்க
யாசித்தால் அவர் ஸம்மதிப்பாரா? விச்வாமித்ரரைப்போல்
பௌருஷத்தை அவலம்பித்து பலாத்காரம் செய்யலாமோ
என்றூலும ராமனை ஸ்வதஸ்ஸித்த விஜயனென்று நான்
வைகுண்டத்தில் பாரிஷதனாக இருந்து வரும் காலத்தி
லிருந்தே எனக்கனுபவமானதினால், அந்த பௌருஷவ்யாபா
ரத்திலும் ப்ரவ்ருத்திக்கவில்லை. மோக்ஷ இச்சையோ எனக்கு
த்ருடதரமாக ஏற்பட்டு விட்டது. அதற்கு ஸாதனம்
பர வித்யா ரூபிணியான உன்னுடைய ஆராதனம்தான்.
உன்னுடைய கடாக்ஷ வீக்ஷணம் எப்படியாவது லங்காநக
ரத்திலுள்ள ராக்ஷஸர்களுக்கேற்பட்டு அவர்களும், நானும்,
என்னைச் சேர்ந்த பந்துக்களும் நித்யஸூரிகளாக ஆகி, அந்தப்
பதவி ஸித்திக்க வேணுமென்ற எண்ணத்துடன் ராமனுக்
குத்தெரியாமல் திவ்யரதத்தில் உன்னை எழுந்தருளச்செய்து
உன்னை மாத்ருத்வ புத்தியோடு அழைத்து வந்தேன். அப்படி
அழைத்து வந்ததிற்கோ ராமனிடம் என்னால் எதிர்க்கமுடி
யாது. ராமன் ஸ்வதஸ்ஸித்த விஜயன் என்பதேதான் காரண
மாகும். மோக்ஷத்திலுள்ள ஆஸை என்னை இவ்வித
மான அபராதம் செய்யும்படி செய்துவிட்டது. புத்ர னு
டைய அபராதத்தை மாதாக்கள் பொறுத்துக்கொள்வது
போல் என்னுடைய அபராதத்தைப் பொறுத்துக்கொண்டு
எனக்கு நீ அனுக்ரஹிக்கவேண்டும்.

ராமனை வனகோசரன் என்று நான் நன்றாய் அறிந்
திருக்கிறேன். वनं जलं गोचरं स्थानं निवासस्थानं यस्य सः (வநம் ஜலம்
மொஹரம் ஸ்தாநம் நிவாஸஸ்தாநம் யஸ்ய ஸः) (வனம் ஜலம்
கோசரம் ஸ்தானம் நிவாஸஸ்தானம் யஸ்ய ஸ:) என்ற ஸமா
ஸத்தினால் ஜலசாயியான நாராயணனென்றே தீர்மா
னித்திருக்கிறேன். एको ह वै नारायणः आसीत् (ஏகோ ஹ வை நாரா
யணः ஆஸீத்)(ஏகோ ஹ வை நாராயண: ஆஸீத்) என்ற ச்ருதி
யினால், அந்த மஹாத்மாவன் ஒருவன்தான் ஸர்வஜகத்தி

னுடைய உத்பத்திக்கும் முதலிலிருப்பவன் ஆனதினால் ஸர்வஜகத்திற்கும் மூலகாரணமான வஸ்து என்றும் எனக்கு நன்றாய்த் தெரியும். அக்காரணத்தைக் கொண்டுதான் க்ஷீராப்தியிலுதித்த மகாலக்ஷ்மியான நீயும் அந்த மஹா புருஷனை பர்த்தாவாக அடைய இச்சித்தாய், பக்த பரிபாலனத்தில் தன்னுடைய திருமேனியின் ஸுகத்தையும் எதிர் பார்க்காமல் பித்ருவாக்ய பரிபாலனம் என்ற தர்மத்தை வ்யாஜமாக வைத்துக்கொண்டு பூமியில்கூட சயனம் செய்து கொள்ளுகிறார். அந்த ப்ரபுவானவர் எனக்கு இந்த ராக்ஷஸ ஜன்மா இருக்கும் வரையிலும் உன்னைத் தான் அடைய யத்னம் செய்யவாட்டார் என்றும் நினைக்கிறேன். என்னுடைய விமோசனத்திற்காக தன்னுடைய அவதாரம் ஏற்பட்டிருக்கும்பொழுதும், அது உன்னுடைய வசமாக ஏற்பட வேண்டியதாக இருக்க அந்தக்கார்யம் ஸித்திப்பதற்கு முன்பு உன்னை அடைய ராமனுலும் முடியாது என்று நான் எண்ணுகிறேன். ஆகையினால் எவ்விதமான அபராதங்கள் என்னிடம் தென்பட்டாலும் நீ க்ஷமித்துக்கொண்டு இந்த ராக்ஷஸ பாவத்தினின்றும் என்னை விமோசனம் செய்துவைக்க வேண்டுமாக ப்ரார்த்திக்கிறேன். நான் ஐச்வர்யாதிகளை அபேக்ஷித்து உன்னை உபாஸிக்க வரவில்லை. என்னிடத்திலிருக்கும் ஐச்வர்யாதிகளைக் காட்டிலும் நான் உன்னிடமிருந்து இச்சிக்க வேண்டிய அதிகமான அம்சம் ஒன்றும் இல்லையென்று தீர்மானித்துவிட்டேன். ஆகையினால் கேவலமான மோக்ஷத்தை யுத்தேசித்து ப்ரஹ்மசக்தியினுடைய ஆராதனம்தான் முக்யமென்று ச்ருதிகள் மூலம் தெரிகிறபடியினால் நான் முமுக்ஷுவாக ஏற்பட்ட காரணத்தைக் கொண்டு रहस्तर्पणतर्पिता (ரஹஸ்தர்பணதர்பிதா) (ரஹஸ்தர்பணதர்பிதா) என்ற நியாயத்தை அனுஸரித்து ராமனை விட்டுப் பிரித்து உன்னை நான் பூஜிக்கின்றேனே தவிர வேறு விதமாக என்னிடம் யாதொரு விதமான சிங்கைக்கோ, ஸங்கோசத்திற்கோ அவகாசத்தை நீ அடையக்கூடாது.

மேலும் யாராவது மஹா புருஷர்கள் கேவலம் ப்ரக்ருதி உபாஸனம் மோக்ஷத்திற்குப் போதாது; ப்ரக்ருதி புருஷன் இருவர்களையும் உபாஸித்தால் ஆகவேண்டு மென்று ப்ரமாணத்துடன் நிரூபித்தால் நான் அதற்குக் கட்டுப்பட்டு அவ்விதமே ஆதரிக்கவும் ஸித்தமாக இருந்துவருகிறேன். நீயோ ப்ரக்ருதி புருஷன் இருவர்களையும் உபாஸித்தாக வேண்டு மென்று சொல்லுகிறாய். ஸம்பத்துகளை எதிர்பார்க் கிறவனுக்கு அதுதான் ஸாதன மென்று நான் ஒப்புக்கொள்ளு கிறேன். நாமோ கேவல மோக்ஷார்த்தி; அதனால் பரமசக்த னாகத்தான் இருக்கவேண்டும் विद्या ततियते (வித்யா தததி மம்ருதம்) (வித்யயா தததிகம்ருதம்) என்ற சாஸ்த்ரமே அதில் ப்ரமாணம். இப்பொழுது நாமிருவர்களும் வாதி ப்ரதிவாதிகளாக ஆகிவிட்டபடியினால் ப்ரக்ருததத் வத்தை நிர்த்தாரணம் செய்வதில் யாராவது ஒரு மஹா புருஷன்தான் மத்யஸ்தனாக இருந்துகொண்டு நம் இருவர் களுடைய விவாதத்தை ஸமாப்தி செய்யவேண்டும் நாமிருவர் களும் பேசிக்கொள்வதில் ப்ரயோஜனமில்லை" என்று ராவணன் சொன்னான்.

நான் ஜீவிக்கும் பொழுது ராமன் உன்னை பார்க்கக்கூட முடியாது என்று சொல்லுகிற ராவணனுடைய அபிப்ரா யம், அவனுடைய வதத்திற்குப் பிறகு ராமன் சீதையை அவச்யம் அனுடைந்து திவ்ய ஸௌபாக்யத்தை அவளுக்குக் கொடுப்பார். ஆனகயினால் அவன் கொஞ்சமேனும் கவலையை அடைய வேண்டாம் என்பதை

क्लिष्टकौशेयवसनां तन्वीमप्यनलङ्कृताम् ।
त्वां दृष्ट्वा सेषु दारेषु रतिं नोपलभाम्यहम् ॥
अन्तःपुरनिवासिन्यः स्त्रियः सर्वगुणान्विताः ।
यावत्यो मम सर्वासां ऐश्वर्यं कुरु जानकि ॥
मम ह्यसितकेशान्ते त्रैलोक्यप्रवराः स्त्रियः ।
तास्त्वां परिचरिष्यन्ति श्रियं अप्सरसो यथा ॥

க்ஷிப்ரகளபேயவஸ்தாம் தத்ரீவ்யநுஜ்ஞாதாம் ।
கமாம் உபஷ்டாபேஷ்யே உபரிஷ்டாத் ரதிம் நோபலபாம்யஹம் ॥
அந்த:புரனிவாஸிந்ய: ஸ்த்ரிய: ஸர்வகுணாந்விதா: ।
யாவத்தேயா மம ஸர்வாஸாம் ஐச்வர்யம் குரு ஜானகி ॥
மம ஹ்ருயஸிதகேசாந்தே த்ரைலோக்யப்ரவரா: ஸ்த்ரிய: ।
தாஸ்த்வாம் பரிசரிஷ்யந்தி ச்ரியம் அப்ஸரஸோ யதா ॥

என்னுடைய இஷ்டதேவதையான உன்னை நான் தரிசித்த மாத்ரத்தில், தாராதிகளில் ரதியை, அதாவது விருப்பத்தை நான் அடையவேயில்லை. இஷ்டதேவதா தரிசனமாத்ரத்தினல் ஆனந்த பரிபூர்ணனாக நான் ஆன காரணத்தைக்கொண்டு ஸகல விதமான போகபோக்யங்களி லிருந்தும் நிவ்ருத்தனாக ஆகிவிட்டேன். என்னுடைய அந்தப்புரத்தில் வஸிக்கும் ஸகல விதமான ஸ்த்ரீகளுக்கும் நீயே ஆதிபத்யத்தை வகிக்கவேண்டும். அப்ஸரஸ் ஸ்த்ரீகள் மகாலக்ஷ்மிக்குப் பரிசாரம் செய்துகொண்டு இருப்பது போல் என்னுடைய அந்தப்புர ஸ்த்ரீகளும் உனக்கு இருப்பார்கள். தபஸ்ஸிலோ, பலத்திலோ, பராக்ரமத்திலோ, தனத்திலோ, தேஜஸ்ஸிலோ, யசஸ்ஸிலோ ராமனுடைய அருகாமையில் கூட நிற்க நான் சக்தியற்றவன். தர்மம், ஞானம், வைராக்யம், யசஸ், ஸ்ரீ, காமம் என்ற ஆறுவிதமான குணங் களோடு கூடின பகவானான ஸ்ரீ ராமன், மிகவும் உத்க்ருஷ்ட மானவன் என்பதில் எனக்கு ஆக்ஷேபணையே இல்லை. அவ னுடைய ஸந்நிதியில் முன் போலவே நான் எப்பொழுதும் பரிசாரகனாக இருந்துவர வேண்டும் என்ற உத்தேசத்துடன் தான் அதற்கு ராக்ஷஸபாவம் ப்ரதிபந்தகமாக இருப்பதினல்,

அந்த ப்ரதிபந்தகத்தை நிவ்ருத்தி செய்து கொள்ளுவதற்காக நான் உன்னை உபாஸித்து வருகிறேன். நான் உன்னுடைய ப்ருத்ய வர்க்கங்களில் ஒருவனாக ஆவேன். என் விஷயத்தில் நீ யாதொருவிதமான சங்கையும் அடையவேண்டாம். ஸந்தோஷமாக இந்த உபவனங்களில் ஸஞ்சாரம் செய்துகொண்டு ஸுகமாக வாழவேண்டும்" என்று ஸீதையைப் பார்த்து ராவணன் ப்ரார்த்திப்பதாக மேற்சொன்ன ச்லோகங்களிலிருந்தும் வ்யங்க்யமாக ஸ்புரிக்கின்றது.

இவ்விதமான ராவணனுடைய வார்த்தையைக் கேட்ட ஸீதாதேவியே ராவணனுக்குப் பதில் சொல்லுகிறாள்.

तृणमन्तरतः कृत्वा प्रत्युवाच शुचिस्मिता ।
निवर्तय मनो मत्तः स्वजने क्रियतां मनः ॥

தருணமந்தரதः க்ருத்வா ப்ரத்யுவாச சுசிஸ்மிதா ।
நிவர்த்தய மநோ மத்தः ஸ்வஜநே க்ரியதாம் மநः ॥

இந்த ச்லோகத்தில் ஸீதாதேவியானவள் ராவணனுக்கு பதில் சொல்லும் அவஸரத்தில் ராவணனுடைய முகத்தைப் பார்த்து தான பதில் சொல்லக்கூடாது என்று நினைத்து ராவணனுக்கும தனக்கும் நடுவில் ஒரு த்ருணத்தை அதாவது புல்லை இடையே வைத்துக்கொண்டு அதன் மூலமாக ராவணனுக்குப் பதில் சொல்லுகிறாள். இதனால் பதிவ்ரதா ஸ்த்ரீகளுடைய ஸ்வபாவமானது வெளியாகிறது. பர புருஷனோடு கூட நேர்முகம் பார்த்துப் பதிவ்ரதா ஸ்த்ரீகள் ஸம்பாஷிக்க மாட்டார்கள் என்பதே அதன் தாத்பர்யமாகும்.

அத்துடன் ராவணனுடைய ஸித்தாந்தமோ, மோக்ஷத்திற்கு பராசக்தியினுடைய ஆராதனம் மாத்திரம் போதுமென்பதே. ஸீதையினுடைய ஸித்தாந்தமோ, ப்ரக்ருதி

புருஷன் இருவர்களையும் உபாஸிக்கவேண்டு மென்பதே. அந்த இரண்டு பக்ஷங்களுக்குள் எந்த பக்ஷமானது ஸ்வீகரிக்கத் தகுந்தது எந்த பக்ஷமானது நிராகரிக்கத் தகுந்தது என்பதை நிர்ணயிக்க ஸர்வக்ஞனான பகவான் ஒருவர்தான் சக்தராக ஆகமுடியும். அந்த பகவானே புல், பூண்டு முதலான ஸகல ஜகத்திலும் அனுவர்த்திக் கொண்டு இருக்கிறான் என்பது ஸித்தமானதே ப்ரக்ருதத்தில், ஸீதாதேவியானவள், த்ருணத்தைப் பார்த்துக்கொண்டு ராவணனுக்குப் பதில் சொல்லுகிற அவஸரமானதினால் த்ருணத்திலும் அந்தராத்மாவாக இருக்கும் பகவானை ப்ரக்ருதமான வாதத்தில் தத்வ நிர்ணயம் செய்வதற்காக ஸீதாதேவியானவள் கவனித்துப் பார்த்து அழைக்கின்றாளோ என்பதும் தொனிக்கிறது. அத்துடன் அதற்கு அந்தரட்சியாக ப்ரஹ்லாதனுடைய எங்கும் பரமாத்மா இருக்கிறான் என்ற ஸித்தாந்தத்திற்கும் எங்கும் நிறைந்தவனில்லை என்ற ஹிரண்யகசிபுவினுடைய ஸித்தாந்தத்திற்கும் மத்தியில் நிர்ணயம் செய்வதற்காக ஸ்தம்பத்திலிருந்தும் ஆவிர்ப்பவித்த பகவானை லக்ஷ்மீந்ருஸிம்மம் போல் தன் விஷயத்திலும் ஏன் பகவான் அனுகூலம் செய்யக் கூடாது என்று எண்ணித்தான் ஸீதை த்ருணத்தை கவனித்தாளோ என்று தோன்றுகிறது. சித்ரகூட பர்வதத்தில் ராமனுடன் ஸீதை சேர்ந்து வஸிக்கும் காலத்தில் ஜயந்தன் என்ற காகாஸுரன் அவள் விஷயத்தில் செய்த அபராதத்திற்கு ராமன் ப்ரும்மாஸ்த்ர மந்த்ரத்தினால் அபிமந்த்ரணம் செய்து த்ருணத்தை காகாஸுரனைச் சிக்ஷிக்க ப்ரயோகம் செய்தார் என்ற கதையும் ராமாயணத்தில் ப்ரஸித்தமானது. இதனால் பதிவ்ரதா ஸ்த்ரீகளுக்கு விரோதத்தைச் செய்கிறவர்கள் மஹா பராக்ரமசாலிகளாக ஆனாலும் த்ருணத்திற்கு ஸமானமானவர்கள்தான் அவர்கள். அவர்களை அவமானப் படுத்த த்ருணம் ஒன்றே போதும். இந்த எண்ணத்துடன் ஸீதையானவள் "ஹே த்ருணமே, உன் ஜாதியிலுள்ள ஒரு த்ருணமானது என் விஷயத்தில் அபராதித்த காகாஸுரனை விரட்டியடிக்கவில்லையா? நீயும் அதே ஜாதியில் சேர்ந்த

வஸ்துவன்றோ. என் விஷயத்தில் விரோதமாகப் பேசுகிற ராவணனை ஏன் உபேக்ஷிக்கிறாய்?" என்று ஸபிக்ஞை செய்வது போலவும் தோன்றுகிறது. அப்படித்ருணத்தை நடுவில் வைத்துக்கொண்டு ராவணனுக்கு ஸீதை பதில் சொன்னதோ "என்னைப்பூஜிக்க வேண்டுமென்று எண்ணுகிற உன் மனதை என்னிடமிருந்து திருப்பிக்கொள். என்னுடைய ஸ்வஜனமோ ராமன ஒருவனதான. உனக்கும ராமனதான ஸ்வஜனமாக ஆகக்கூடும். நானும் ராமனுடைய ஒரு சேஷபூதமான வஸ்துவே. நீயும் ராமனுடைய ஒரு சேஷபூதமான புருஷன்தான். பரமசேஷியான ராமனிடம் உனக்கு பக்தி ஏற்பட வேண்டுமன்னியில் ஒரு சேஷமான வஸ்துவிற்கு மற்றொரு சேஷ வஸ்துவினிடத்தில் பக்தி ஏற்பட நியாயமில்லை. சேஷபூதமான வஸ்துக்களுக்குள் ஒன்றுக்கொன்று ஸ்வ ஸ்வாமி பாவ ஸம்பந்தமோ சாஸ்த்ரத்தில் நிரூஷிக்கப்பட்டிருக்கின்றது. ஆகையினால் என்னை மாத்திரம் தனியாக உபாஸிப்பது என்ற வ்ரதத்தை விட்டுவிட்டு ராமபஜனத்தில் நீ ஈடுபடவேண்டும். ராமனோடு என்னை சீக்ரத்தில் சேர்த்தும் வைக்கவேண்டும் சாஸ்த்ரத்திற்கு விருத்தமான ஆசாரத்தை அனுஷ்டிக்கிறவர்களே பகவானுக்கு ப்ரதிகூலமாக ஆகிறார்கள். அவ்விதம் நீ பகவானுக்கு ப்ரதிகூலமாக ஆகாமல் அனுகூலமாக இருந்தால் உன்னுடைய மநோரதம் பூர்த்தியாகும்".

मित्रं औपयिकं कर्तुं रामः स्थानं परीप्सता ।
वधञ्चानिच्छता घोरं त्वयाऽसौ पुरुषर्षभः ॥
विदितः स हि धर्मज्ञः शरणागतवत्सलः ।
तेन मैत्री भवतु ते यदि जीवितुमिच्छसि ॥
प्रसादयस्व त्वं चैनं शरणागतवत्सलम् ।
मां चास्मै प्रयतो भूत्वा निर्यातयितुमर्हसि ॥
एवं हि ते भवेत्स्वस्ति संप्रदाय रघूत्तमे ।

மித்ரம் ஔபயிகம் கர்த்தும் ராமஃஸ்தாகம் பரீப்ஸதா ।
வதஞ்சாசிச்சதா கோரம் த்வயாஸ்ய புருஷர்ஷப: ॥
விதித: ஸ ஹி தர்மக்ஞ: சரணாகதவத்ஸல: ।
தேந மைத்ரீ பவது தே யதி ஜீவிதுமிச்சஸி ॥
ப்ரஸாதயஸ்வ த்வம் சைநம் சரணாகதவத்ஸலம் ।
மாம் சாஸ்மை ப்ரயதோ பூத்வா நிர்யாதயிதும் அர்ஹஸி ॥
ஏவம் ஹி தே பவேத்ஸ்வஸ்தி ஸம்ப்ராதாய ரகூத்தமே ।

ஸீதாதேவியானவள் ராவணனுக்கு அதிஸாரபூதமான சாஸ்த்ரார்த்தத்தை உபதேசிக்கின்றாள். சகல சாஸ்த்ரங்களுக்கும் பரம தாத்பர்ய விஷயீபூதமான அர்த்தமோ சரணாகதியென்ற தர்மம்தான். அந்த சரணாகதியைத்தான் ராவணனுக்கு ஸீதை மாத்ருஸ்தானத்தில் தான் இருந்துகொண்டு போதிக்கிறாள். ராவணன் அஹங்காரியானதினால் ராமனைச் சரணமடை என்று சொன்னால் அவன் அதை ஸஹிக்கமாட்டான் என்று எண்ணி அவனுடைய புத்தியை அனுசரித்தே ராமனைச்சரணமடைய வேண்டுமென்று கடைசியில் பர்யவஸானம் ஏற்படக்கூடிய சப்தத்தினால் உபதேசிக்கிறாள். அதாவது ராமனை நீ உனக்கு சுவற்றுத்தாகச்செய்து கொள்வது உசிதமாகும் என்று சொல்லுகிறாள். அதிலிருந்தும் ராமனைச் சரணமடை என்ற அர்த்தம் கிடைக்கிறது. ஏனெனில்: ஸ்ரீ ராமனவர், யார் தன்னைச் சரணமடைகிறானே அவனைத்தனக்குக் கீழாக நினைப்பதில்லை. தர்மக்ஞான ஜ்வர்யாதிகளில் தனக்கு ஸமான வைபவமுள்ளவனை

கவே, சரணம் என்று சொன்ன மாத்திரத்திலல் அந்த பக்த னைச்செய்து விடுகிறார். ஸமமான இருவர்களுக்குத்தானே மைத்ரம் என்பதும் ஏற்படும். ராமசந்த்ரமூர்த்திக்கோ न तत्समश्चाभ्यधिकश्च विद्यते (न तத்ஸமஶ்சாப்யதிகஶ்ச வித்யதே) என்ற ச்ருதியிலல் தனக்கு ஸம மான புருஷனில்லாததிலல் 'மைத்ரீ' என்ற கல்யாணகுணத் னைத்தான் அடைய சிரமப்படும். அதற்காக சரணமென்று சொன்னவனை தனக்கு ஸர்வவிதத்திலும் ஸமமாகச்செய்து கொண்டு மைத்ரியைத்தான் அனுஷ்டிக்கிறார். ராமன் மித்ர னாக ஆகவேண்டுமாலல் ராமனுக்கு ஸமானமாக ஆகவேண் டும். ராமனுக்கு ஸமானமாக ஆவதற்கோ, சரணாகதி தான் பரமோபாயமாக ஆகும். சரணாகதியிலுடைய பல மாகிய மைத்ரியை ராவணனுக்கு ஸீதை உபதேசம் செய்வ திலிருந்தும் ராமனைச்சரணமடை என்று சொல்லுவதாகவே ஆகின்றது. ராவணனுடைய புத்தியை அனுஸரித்தும் ஏற் பட்ட உபதேசமாக ஸித்திக்கின்றது. "உனக்கு ஓரிடத்தில் நிலை ஸ்திரமாக ஸித்திக்க வேண்டுமாலல் ராமனை ஸ்னேகித னாகச்செய்து கொள்ளவேண்டும். மார்க்கத்தில் சௌர்யத் தைக்கொண்டு ஜீவிக்கிறவனும் பூமியில் அடிவைத்துக் கொண்டுதான் சௌர்யத்தையுட செய்யவேண்டும். அது போல் உனக்கு ஒரு ஸ்தானம ஏற்பட வேண்டுமென்று இஷ்டம் இருந்தால் ராமனையே நீ அவச்யம் சரணமடைந்து தான் ஆகவேண்டும். சரணாகதி செய்கிறதைக் காட்டி லும் ராமன் உன்னை வதித்தாரேயாலல் அந்த மரணமே உனக்கு மேலானது என்று உனக்குத் தோன்றும் பக்ஷத்தில் அதுவும் ஸரியல்ல; மனிதனுக்கு ஏற்படுகிற மரணமும் ஸன் மரணமாக ஏற்படவேண்டாமா; துர்மரணம் சாஸ்த்ரத் தில் நிஷித்தமல்லவா? ராமனே உன்னை கோரமாக வதிப் பார். உன்னை ஜீவிக்கச்செய்து விட்டு உன்னுடைய எதிரில் உன்னுடைய புத்ரர்களான இந்த்ரஜித் முதலானவர்களைக் கொன்றுவிட்டு அதனால் உனக்கு மகத்தான துக்கத்தையும் உண்டுபண்ணிப் பிறகு உன்னை சித்ரவதம் செய்வார். அதா

வது உன்கையிலேயே பாணங்களால் உன்னை நீயே ஹிம்ஸை செய்து கொள்ளும்படி செய்வார். அதைப்போலுள்ள கஷ்டம் வேறு மனிதனுக்கு உண்டா? அந்த ஸந்தர்ப்பம் உனக்கு வாய்க்காமலிருப்பதற்காகவாவது அவச்யம் நீ ராமனைச் சரணமடைந்தே ஆகவேண்டும். ராமனை நான் சரணமடைந்தால் என்னை கட்டாயம் ரக்ஷிப்பார் என்பதில் என்ன ப்ரமாணம் என்று நீ கேட்கக்கூடாது. ப்ரத்யக்ஷமே ப்ரமாணமாகும்'' என்று சொல்லிக் கொண்டிருக்கும் பொழுது ஸீதைக்கு நிரந்தரமான த்யான மஹிமையினால் ஸ்ரீ ராம சந்த்ரமூர்த்தியானவர் ப்ரத்யக்ஷமாகவே புலப்பட்டார். அதைத்தான் 'असौ (அஸௌ) (அஸௌ)' என்ற பதத்தினால் ஸீதை நிர்த்தேசம் செய்கிறாள். ராவணனுக்கும் மாயாம்ருகத்தை அனுஸரித்துப் போகும் ஸமயத்தில் ராமனுடைய உருவத்தைப்பார்த்த மாத்திரத்தில் அந்த பயத்தினால் ஒவ்வொரு வ்ருக்ஷங்களிலும், த்ருணகுல்மங்களிலும் ராமனைப் போலவே ராவணனுடைய கண்களில் பகவான் தென்படுகிற படியினால் ராவணனுடைய விஷயத்திலும் असौ (அஸௌ) (அஸௌ) என்ற ப்ரத்யக்ஷவாசகமான சப்தத்தை ஸீதாதேவியானவள் உபயோகப்படுத்தி ராமன் சரணாகதவத்ஸலன் என்பதில் ப்ரத்யக்ஷமே ப்ரமாணம் அவனுக்கு அது அனுபவ கோசரமானது என்பதைக் காட்டுகிறாள். ''என்ன அபராதம் நீ செய்திருந்தாலும் ராமனுக்கு நீ அனுகூலன் என்பதை அல்பமான காரியத்தில் நீ காட்டிவிட்டாலே ஸர்வ அபராதங்களையும் மறந்துவிட்டு உன்னை அவர் ரக்ஷிப்பார் என்பதில் ஸந்தேகமேயில்லை. ஆகையினால் ராமனை நீ ஸந்தோஷப்படுத்தவேண்டும். நானும் ராமனைக்கொண்டு உனக்கனுக்ரஹம் செய்யும்படி சிபார்சு செய்கிறேன். ஆகையினால் ராமனுடைய விஷயத்தில் நீ ப்ரதிகூல ஆசரணத்தைவிட்டுவிடு. என்னையும் ராமனிடத்தில் சீக்கிரத்தில் சேர்த்து வைத்துவிட்டால் உனக்குப் பரமக்ஷேமம் உண்டாகும். ஆகையினால் இவ்விதமான விபரீதபுத்திகளை விட்டுவிட்டு ராமனுக்கனுகூலமான காரியத்தில் நீ ப்ரவ்ருத்திக்கவேண்டும். ராம

லக்ஷ்மணர்களால் சூன்யமாக ஆச்ரமத்தைச் செய்துவிட்டு நீ என்னை அபஹரித்துக் கொண்டு வந்த விஷயமோ, மிகவும் தப்பான விஷயமாகும். ராமனுடைய எதிரில் என்னை அபஹரிக்க நீ யத்னம் செய்திருந்தால் உன்னுடைய கதி எப்படி ஆயிருக்குமோ! நீ செய்த பிசகான காரியத்திற்கு எங்கு போனலும் ராமனிடத்திலிருந்து விமோசனத்தை நீ அடைய முடியாது. அவச்யம் ராமனை நீ சரணம் அடைந்தால்தான் ஜீவிக்கமுடியும்" என்று சீதையானவள் ராவணனுக்கு நன்மையைப் போதித்தாலும் ராவணன் துர்மரணியாக இருந்த காரணத்தினல் சீதையைப்பார்த்து கடோரமான வார்த்தை களையே பேசினன்.

द्वौ मासौ रक्षितव्यौ मे योऽवधिस्ते मया कृतः ।
ततश्शयनमारोह मम त्वं वरवर्णिनि ॥
ऊर्ध्वं द्वाभ्यां तु मासाभ्यां भर्तारं मां अनिच्छतीम् ।
मम त्वां प्रातराशार्थं आलभन्ते महानसे ॥

த்வௌ மாஸௌ ரக்ஷிதவ்யௌ மே யோவதிஸ்தே மயா க்ருத: ।
ததச்சயனமாரோஹ மம த்வம் வரவர்ணினி ॥
ஊர்த்வம் த்வாப்யாம் து மாஸாப்யாம் பர்த்தாரம் மாம் அனிச்சதீம் ।
மம த்வாம் ப்ராதராசார்த்தம் ஆலபந்தே மஹாநஸே ॥

என்று சொல்லுகிறன். இந்த ச்லோகத்தின் பொருளு மான அர்த்தமோ ப்ரஸித்தமானதுதான். இதனல் ஏற் படும் வ்யங்க்யார்த்தம் மாத்திரம் ப்ரகாசப் படுத்தப்படும்.

ராமனை விட்டுப்பிரிந்த காரணத்தினால் பரம துக்கத்தை அனுபவித்துக்கொண்டு ஆகாரம் நித்திரை முதலானவைகளை அடையாமல் கஷ்டப்பட்டுக் கொண்டு வரும் ஸீதையைப் பார்த்து ராவணன் கெஞ்சிக்கேட்டு ஸம்வாதானம் செய்கிறான்.

மேற்கண்ட ச்லோகத்தில் த்வௌ மாஸௌ ரக்ஷிதவ்யௌ மே (த்வள மாஸௌ ரக்ஷிதவ்யௌள மே) (த்வௌள மாஸௌள ரக்ஷிதவ்யௌள மே) என்ற வாக்யத்தில் மே (மே) (மே) என்ற பதமானது ஸம்போதன ப்ரதமையாக ஏற்பட்டது. ஹே மே! ஹே லக்ஷ்மியே என்றே அதன் பொருளாகும். "ஹே ஸீதையே நான் உன்னை ஒரு ஸம்வத்ஸரம் ஆராதிக்க அதாவது பன்னிரண்டு மாத காலமாவது பூஜிக்க ஸங்கல்பம் செய்து வ்ரதானுஷ்டானம் செய்துகொண்டு வருகிறேன். அவ்விதமே நான் உன்னைப் பிரார்த்தித்துக் கேட்டுக் கொண்டதிலும் பாக்கி இரண்டு மாதங்கள்தான் இருக்கின்றன. நீ ப்ரதீக்ஷிக்கவேண்டியதும் அவ்வளவு காலம்தான். அந்த இரண்டு மாதம் முடிந்தவுடன் உன்னுடைய பர்த்தாவான ராமனையும், என்னிடத்திலிருக்க இஷ்டமில்லாத ராஜ்யலக்ஷ்மியையும் நீயே அடையப்போகிறாய் என்பதையும் நான் ப்ரார்த்தித்துக் கொண்டு தெரிவிக்கிறேன். அதாவது இரண்டு மாதகாலத்திற்குள் என்னுடைய உபாஸனம் முடிந்து விடுமானதினால் ராக்ஷஸபாவத்திலிருந்து என்னை ராமன் விமுக்தனாகச் செய்து விடுவார். பிறகு உன்னையும் ராமன் அடைந்து விடுவார். லங்காராஜ்ய பூர்க்கு நாதனில்லாததினால் அதையும் ராமனே அடைந்து விடுவார் இரண்டு மாதத்திற்குப் பிறகு பர்த்தாவையும் நீ அடையலாம், லங்காராஜ்யஸ்ரீயையும் நீ அடையலாம். பரிசுத்தமான பாகசாலையில் பரிசுத்தமான பக்ஷணங்களை பரிசாரகர்கள் பக்வம் செய்கிறார்கள். அதையும் நீ கொஞ்சமேனும் சங்கையில்லாமல் பக்ஷிக்கவேண்டும்." சாக்தர்களுடைய உபாஸனா ப்ரகாரத்தில் மது மாம்ஸாதிகளும் தேவிக்கு உபஹார த்ரவ்யமானதினால் அவைகளையும் ராவணன் பராசக்தியினிடம் அர்ப்பணம் செய்கிறான். அந்த உபஹார த்ரவ்யங்களைப்

பெற்றுக்கொண்டு அவன் ஜன்மாவை ஸீதை ஸபலமாகச் செய்யவேண்டும் என்பதைப் பிரார்த்தித்துக்கொள்ளுகிறான். இதுதான் மேற்கண்ட ச்லோகத்தின் வ்யாக்யானமாகும். மஹேச்வர தீர்த்தீய வ்யாக்யானத்தில் ஸ்பஷ்டமாகப் பார்த்து வித்வான்கள் அறிந்து கொள்ளலாம்.

மேற்கண்ட ச்லோகத்திலுல் ப்ராதீதிகமாக "ஒரு வருஷத்திற்குள் நீயாக என்னைப் பார்த்தாவாக ஸ்வீகரிப்பாயென்று நினைத்தேன். அந்த அவதியில் பத்துமாதகாலம் ஆகிவிட்டது இரண்டுமாதங்கள்தான் பாக்கி இருக்கின்றன. அதற்குள்ளாவது என்னை நீ பார்த்தாவாக ஸ்வீகரிக்க வேண்டும். அதற்கு மேல் போய்விட்டால் காலையில் நான் செய்து கொள்ள வேண்டிய ஆகாரத்திற்கு உன்னுடைய சரீரத்தைக் கண்டம் கண்டமாகச் சேதித்து மஹாநஸ சாலையில் பரிசாரகர்கள் பாகம் செய்வார்கள்" என்றதையே ப்ரதானமாக வைத்துக் கொண்டு லோகத்தில் ப்ரசுரிக்கின்றார்கள். எந்த தாத்பர்யம் தேவிக்கு ஸம்மதமானதோ! பகவானுடைய ஸங்கல்ப ப்ரகாரம் இதுவும் நடக்கக் கூடும்.

ராமாயணம் என்ற உத்தம காவ்யத்தினுடைய ரீதியையும், காந்தா ஸம்ஹிதைக்கு அர்த்தம் சொல்லவேண்டிய க்ரமத்தையும் வ்யாக்யாதாக்கள் போகும் மார்க்கத்தையும் அனுஸரித்துக்கொண்டு மாத்ஸர்யம், அஸூயை முதலிய தோஷங்களுக்கு அவகாசம் கொடுக்காமல் ஸீதையினுடைய பாதிவ்ரத்யத்திற்கும் குறைவில்லாமல் ஸ்ரீ ராமனுடைய அபாரமான மஹிமைக்கும் தாழ்வு ஏற்படாமல் தாத்பர்யத்தை கவனித்துப் பார்க்கும் ஸூக்ஷ்ம புத்தியோடு கூடினவர்களுக்கு வ்யங்க்யார்த்தம் ப்ரதானமாக பாஸிக்கு மன்றியில் ப்ராதீதிகமான அர்த்தம் அவ்வளவு மேலாகத் தோன்றாது என்பது நிச்சயம். அவரவர்களுடைய அனுபவத்திற்கும் தேவியினிடத்திலுள்ள பக்திக்கும் தக்கவாறு தத்வமானது ப்ரகாசிக்கும்.

இவ்விதம் ராவணன் சொன்னவுடன் தேவகந்தர்வ கன்னிகைகள் ஸீதாதேவியை ஆச்வாஸம் செய்து ஸமாதானம் செய்தார்கள். ஸீதாதேவியும் ராவணனைப்பார்த்து

असन्देशात्तु रामस्य तपसश्चानुपालनात् ।
न त्वां कुर्मि दशग्रीव भस्म भस्मार्हतेजसा ॥

அஸந்தேசாத்து ராமஸ்ய தபஸச்சாநுபாலநாத் ।
ந த்வாம் குர்மி தசக்ரீவ பஸ்ம பஸ்மார்ஹதேஜஸா ॥

என்று சொல்லுகிறாள். "ஹே ராவண என்னுடைய எதிரில் க்யாய விரோதமாகப் பேசுகிற உன்னை என்னுடைய பாதிவ்ரத்ய மஹிமையினால் சாம்பலாகச் செய்துவிடுவேன். சாம்பலாகச் செய்வதற்கு நீ அருகன்தான். அப்படி நான் உன்னை செய்யாமலிருப்பதற்கு காரணமோ அவ்விதம் ராமனுடைய ஆக்ஞை இல்லாமலிருப்பதேதான் ஆகும். மாயாம்ருகத்தை அனுஸரித்துப் போகும் காலத்தில் ராமன் 'ஹே ஸீதே யாராவது உனக்கு விரோதத்தை ஆசரித்தால் அவர்களை நீ உன் பாதிவ்ரத்யத்தினால் பஸ்மமாகச் செய்துவிடலாம்' என்று என்னை ஆக்ஞாபித்து இருந்தாரேயானால் உன்னை இவ்வளவு காலம் நான் வைத்திருக்கமாட்டேன். அப்படி பகவானுடைய ஆக்ஞை எனக்கில்லாமல் இருப்பதால்தான் நீ ஜீவித்திருக்கிறாய். ஆனால் सर्वतो आत्मानं रक्षयेत् (ஸர்வதோ ஆத்மாநம் ரக்ஷயேத்) என்ற ச்ருதியினால் ஆபத்காலத்தில் பதிவ்ரதா ஸ்த்ரீகளும் தன்னை ரக்ஷித்துக்கொள்கிற விஷயத்தில் பர்த்தாவினுடைய அனுக்ஞையை எதிர்பார்க்க வேண்டாமென்று ஏற்பட்டாலும் என்னுடைய பாதிவ்ரத்ய மென்ற தபஸ்ஸை பரிபாலனம் செய்துகொள்ள வேண்டுமென்று ஆவல் உள்ளவளாக இருப்பதினால் உன்னைச் சபித்து விட்டால் தபஸ்ஸிற்கு குறைவு வந்துவிடுமோ என்ற எண்ணத்தினாலும் உன்னை நான் பஸ்மாகச் செய்யவில்லை. மேலும் (ஸர்வதோ ஆத்மாநம் ரக்ஷயேத்) என்ற ச்ருதியினால் ஆபத்காலத்தில் பதிவ்ரதா ஸ்த்ரீகளும் தன்னை ரக்ஷித்துக்கொள்கிற விஷயத்தில் பர்த்தாவினுடைய அனுக்ஞையை எதிர்பார்க்க வேண்டாமென்று ஏற்பட்டாலும் என்னுடைய பாதிவ்ரத்ய மென்ற தபஸ்ஸை பரிபாலனம் செய்துகொள்ள வேண்டுமென்று ஆவல் உள்ளவளாக இருப்பதினால் உன்னைச் சபித்து விட்டால் தபஸ்ஸிற்கு குறைவு வந்துவிடுமோ என்ற எண்ணத்தினாலும் உன்னை நான் பஸ்மாகச் செய்யவில்லை. மேலும்

ராமனே நேரில் வந்து உன்னை வதித்து என்னை துக்கஸாக ரத்திலிருந்து கரையேற்றி விடுவதுதான் அவருடைய ப்ர தாபத்திற்கு அழகு".

மேற்கண்ட ச்லோகத்திற்கு இதுவும் ப்ராதிகமான அர்த்தம்தான்.

असन्देशात्तु रामस्य तपसश्चानुपालनात् ।
न त्वां कुर्मि दशग्रीव भस्म भस्मार्हतेजसा ॥

ஸந்தேஸாத்து ராமஸ்ய தபஸச்சானுபாலனாத் ।
ந த்வாம் குர்மி தசக்ரீவ பஸ்ம பஸ்மார்ஹதேஜஸா ॥

ராவணன் ஸீதாதேவியை மஹாலக்ஷ்மியென்ற எண் ணத்துடன் பூஜித்து மோக்ஷத்தை அடைய வேண்டுமென்ற விருப்பமுள்ளவனுனன். ஸீதாதேவியானவள் மேற்கண்ட ச்லோகத்தினல் உன்னை நான் என் பாதிவ்ரத்யத்தினல் எரித்துவிடுவேன் என்று சொல்லுவது நியாயமாகுமா? தனக்கு பூஜை செய்கிறவனுக்கு பரிபூர்ணமான அனுக்ர ஹத்தைச் செய்வதல்லவா தேவதையினுடைய ஸ்வபாவ மாகும்? அவ்விதமிருக்க இந்த ச்லோகமானது எவ்விதம் ஒத்துவரும் என்று சந்தேகிக்கலாம். வ்யங்க்ய மர்யாதையை அனுஸரித்து இந்த ச்லோகத்தின் தாத்பர்யத்தை அறியவும்.

அதாவது பதிவ்ரதா ஸ்த்ரீகளுடைய மஹாத்ம்யமானது இந்த ச்லோகத்தினல் வெளியிடப்படுகிறது.

'ராவணு, ராக்ஷஸ ஜன்மத்தை ஸனகாதிகளுடைய சாபத் தினல் அடைந்துவிட்டோமே என்று நீ மிகவும் வருந்துகிறுய். முன்போலவே பகவானுடைய பாரிஷதனுக நாம் ஆவோமோ, ஆகமாட்டோமோ என்று பயந்துகொண்டு என்னை உபாஸிக்க விரும்புகிறுய். உபாஸனம் என்ற கஷ்டமான ஒரு ஸாதனத்தை நீ அனுஷ்டிக்கும்படியான ச்ரமமில்லா

மலே என் பாதிவ்ரத்ய மஹிமையைக்கொண்டு உன்னுடைய ராக்ஷஸ ஜன்மத்தை பஸ்மமாகச் செய்துவிடுவேன். அந்த சக்தி எனக்கு உண்டு, என்னைப்போன்ற பதிவ்ரதா ஸ்த்ரீகளுக்கும் உண்டு.

पतिव्रतायाः नार्यास्तु पापदुष्टोऽपि भूतले ।
नरश्शुद्धिं समाप्नोति विष्णुलोके महीयते ॥
यद्यदिच्छति सा नारी तत्तत्कर्तुं विचक्षणा ।
पतिव्रतायाः समतां न याति भगवानपि ॥

வதிவ்ரதாயாஃ நாயஸ்தூ வாவதூஷ்டோஉபி பூதலே ।
நரஸ்தூத்திம் ஸமாப்நோதி விஷ்ணுலோகே மஹீயதே ॥
யத்யதிச்சதி ஸா நாரீ தத்தத்கர்தும் விசக்ஷணா ।
பதிவ்ரதாயாஃ ஸமதாம் ந யாதி பகவாநபி ॥

பதிவ்ரதாயாஃ நார்யாஸ்து பாபதுஷ்டோபி பூதலே ।
நரச்சுத்திம் ஸமாப்நோதி விஷ்ணுலோகே மஹீயதே ॥
யத்யதிச்சதி ஸா நாரீ தத்தத்கர்தும் விசக்ஷணா ।
பதிவ்ரதாயாஃ ஸமதாம் ந யாதி பகவாநபி ॥

என்ற ஸ்ம்ருதிவசனத்தினுல் பாதிவ்ரத்யம் உள்ள ஸ்த்ரீகளுடைய வாக்கினுல் மஹாபாபியும் அனுக்ரகம் பண்ணப்படும் பக்ஷத்தில் சுத்தனாக ஆகிவிடுவான். ஈச்வரனுக்குக்கூட அந்த சக்தி கிடையாது. பதிவ்ரதாஸ்த்ரீகளுக்கு மாத்திரம் அபூர்வமான அந்த சக்தி உண்டு. அனஸூயை என்ற அத்ரி மஹர்ஷியினுடைய தர்மபத்னியானவள் தன் பாதிவ்ரத்ய மஹிமையினுல் தன் ஸகியான ஒரு ரிஷி பத்னிக்கு ஏற்பட்ட வைதவ்ய துக்கத்தையும் நிவ்ருத்தி செய்துவைத்திருக்கிறுள். ராத்ரி காலத்தையும் தீர்க்கமாகச் செய்தவளல்லவா. அனுவ்ருஷ்டியினுல் ஏற்பட்ட துர்பிக்ஷ காலத்தில் தன் பாதிவ்ரத்ய மஹிமையைக் கொண்டு ஸுபிக்ஷமாகச் செய்தாள். எதை எதை அந்த பதிவ்ரதா ஸ்த்ரீகள் இச்சிக்கிறூர்களோ அதையெல்லாம் செய்ய சக்தியுள்ளவர்களாக ஆகிறூர்கள். ஆகையினுல் உன்னை நான் நினைத்தமாத்ரத்தில் ராக்ஷஸ பாவத்தி

னின்றும் விமோசனம் செய்துவைத்து இப்போதே அபராஜிதமான வைகுண்டத்திற்கு அனுப்பிவிட வேண்டுமென்று நினைத்தால் அனுப்பிவிடுவேன். ஈச்வரன் எப்படி ஸத்ய காமனோ, ஸத்ய ஸங்கல்பனோ அதுபோல்தான் பதிவ்ரதா ஸ்த்ரீகளும் ஸத்ய காமர்கள், ஸத்ய ஸங்கல்பத்தோடு கூடினவர்கள்".

कुतो निर्गुणतां याति परं ब्रह्मापि भो गुरो ।
साधारण्याद्गुणानान्तु पातिव्रत्येन योषितः ॥

கூதோ நிர்குணதாம் யாதி பரம் ப்ரம்ஹாபி போ குரோ ।
ஸாதாரண்யாத்குணானந்து பாதிவ்ரத்யேந யோஷிதः ॥

என்று வாஸிஷ்ட மஹா ராமாயணத்தில் வால்மீகி மஹர்ஷியைப் பார்த்து அரிஷ்டநேமி என்ற அரசன் ப்ரச்னம் பண்ணுகிற ஸமயத்தில், 'லோகத்தில் ப்ராணிகள் குணவானாக இருப்பதற்குத்தானே இச்சையுள்ளவர்களாக இருக்கிறார்கள். அவ்விதம் இருக்கும்பொழுது பரப்ரும்மமானது நிர்க்குணமாக இருக்கக் காரணம் யாது?' என்று ராஜன் கேட்டார். மஹர்ஷியோ 'அரசனே, நீ கேழ்ப்பது உசிதமானதே; ப்ரும்மத்திற்கோ இதர ஜன ஸாதாரணமான குணத்தோடு தான் இருப்பதில் இச்சை கிடையாது. அதனால் தனக்கு ஒரு பெருமையும் ஸித்திக்காது. எவ்விதமான குணங்களையும் வேதாந்தங்கள் தன்னிடத்தில் அபூர்வகுணமாக ஸமர்ப்பணம் செய்யவந்தாலும் அந்த குணத்தையும் இந்தப் புண்ய பூமியில் பாரத வர்ஷத்தில் ஜனித்த ஒரு ஸ்த்ரீகூட தன் பாதிவ்ரத்யத்தினால் ஸம்பாதித்துக் கொண்டுவிடுகிறாள். இதனால் பதிவ்ரதா ஸ்த்ரீகளுக்கும், பரப்ரும்மத்திற்கும் குணத்தினால் ஸாம்யமே ஸித்தித்துவிட்டது.

न तत्समश्चाभ्यधिकः कुतोऽन्यः (ந தத்ஸமஶ்சாப்யதிகः குதோऽந்யः) (ந தத்ஸமச்சாப்யதிகः குதோந்யः) என்ற ச்ருதி பொய்யாய்விடும். அதற்காக ப்ரும்மமானது நமக்கு ஒரு குணமும் வேணடாம், நிர்குணமாகவே இருந்து வருவோம் என்று நினைத்து அவ்விதமே இருந்து வருகிறது' என்று கூறினர். இப்படி நிர்க்குண ப்ரம்மத்திற்கே ஸம மான பெருமையை பதிவ்ரதா ஸ்த்ரீகள் அடைகின்றார்கள் என்றால் அந்த பதிவ்ரதைகளுக்கு எக்கார்யத்தை தான் நினைத்தமாத்ரத்தில் செய்யமுடியாது, ப்ரக்ருதத்தில் இந்த ஸ்ரீமத் ராமயணத்திலேயே

अप्रमेयं हि तत्तेजः यस्य सा जनकात्मजा ।

அப்ரமேயம் ஹி தத்தேஜः யஸ்ய ஸா ஜநகாத்மஜா ।

அப்ரமேயம் ஹி தத்தேஜः யஸ்ய ஸா ஜநகாத்மஜா ।

என்ற ச்லோகத்தினால் ஸீதையினுடைய ஸந்நிதியில் ராமனு டைய தேஜஸ்ஸானது அளவிடமுடியாததான வைபவத் தோடு கூடியது என்று தெரிகிறதிலிருந்தே ஸீதையினுடைய அபார பாதிவ்ரத்ய மஹிமை வெளியாகவில்லையா? ஆகையி னால், பதிவ்ரதா ஸ்த்ரீகளுக்கு இந்த லோகத்தில் ஸாத்ய மில்லாத காரியமே ஒன்றுமில்லை.

"உன்னை நான் ராக்ஷஸ சரீரத்தினின்றும் விடுவித்து அந்த சரீரத்தைப் பஸ்மமாகச் செய்துவிட்டு வைகுண்ட பதவிக் கர்ஹமான திவ்யமான தேஜோமங்கள விக்ரஹம் உனக்கேற்படும்படி செய்துவிடுவேன். பர்த்தாவான ராம னுடைய ஆக்ஞை அவ்விதமிருந்தால் என்னுடைய உபா ஸனத்தில் உனக்குச் சிரமத்தை கொடுக்காமலே அப்படியே செய்திருக்கக்கூடும், அவ்விதம் எனக்கு பர்த்தாவான ஸ்ரீ ராமருடைய அனுக்ஞை கிடைக்கவில்லை. அதனால் தான் நான் அவ்விதம் உன்னைச் செய்யவில்லை. பர்த்தாவி னுடைய அனுக்ஞையில்லாமலே நான் ஸ்வதந்த்ரையாக ஒரு பக்தனுக்கு அனுக்ரஹம் செய்வதிலோ அபக்தனை நிக்ரஹம்

செய்வதிலோ ப்ரவ்ருத்தித்தால் ஸ்வாதந்த்ரியத்தைக் கொண்டாடுகிறவளாக ஆகிவிடுவேன். அதனால் பாதிவ்ரத்யத்திற்கு கொஞ்சம் லோபம் வந்துவிடுமோ என்ற பயமும் எனக்கு இருக்கிறது. ஆகிலும் ஸ்ரீ ராமன் பூலோகத்தில் அவதாரம் செய்ததே

स हि देवैरुदीर्णस्य रावणस्य वधार्थिभिः ।
अर्थितो मानुषे लोके जज्ञे विष्णुः सनातनः ॥

ஸ ஹி தெவைருதீர்ணஸ்ய ராவணஸ்ய வதார்திபிः ।
அர்த்திதः மாநுஷே லோகே ஜக்ஞே விஷ்ணுः ஸநாதநः ॥

என்ற ச்லோகத்தை அனுஸரித்து ராவண வதத்திற்காகவே மஹாவிஷ்ணு ராமாவதாரம் செய்திருக்கும் பொழுது அந்த பகவானுடைய மனதில் ராவணவதம் அபிமதமானதினால் பர்த்தாவினுடைய அனுமதமான கார்யத்தை, பர்த்தாவினுடைய அனுக்ஞையை எதிர்பார்க்காமலே செய்யும் ஸ்த்ரீகளுக்கு பாதிவ்ரத்யம் ஓங்கிவளரும் அன்னியில் அதற்குக் குறைவு எப்படி வந்தடும் என்று நீ நினைக்கக்கூடும். அது உண்மையே. ஆகிலும், அவ்விதம்தான் உன்னை அனுக்ரஹம் செய்வதினால் என்னுடைய பாதிவ்ரத்யத்திற்கு ஒரு குறைவை எதற்காக ஸம்பாதித்துக்கொள்ளவேண்டும் என்று என்னுடைய எண்ணம். பகவானே உன்னை வதிப்பதற்காகவே ப்ரத்யக்ஷமாக ஆவிர்ப்பவித்திருக்கிறார். அவர் மூலமாக நிச்சயமாக உனக்கு ராக்ஷஸ பாவத்தினின்று விமோசனமோ ஏற்படப்போகின்றது. அது ஸித்தமாக இருக்கும்பொழுது எதற்காக பாதிவ்ரத்யம் என்ற பரமதர்மத்திற்கு கொஞ்சம் லோபத்தை ஸம்பாதித்துக் கொள்ளவேண்டும், என்றுதான் என்னுடைய அபிப்ராயமாகும்." என்பதையும் तपसश्चानुपालनात् (தபஸஶ்சாநுபாலநாத்) என்ற வாக்யத்தினால் ஸீதையானவள் தெரிவித்துக்கொள்கிறாள்.

"அத்துடன் ராமன் மூலமாகவே உனக்கு ராக்ஷஸ சரீரத்தினின்றும் விமோசனம் கிடைத்தால்தான் ராமனுக்கு ஒரு அபூர்வமான உத்கர்ஷம் ஏற்படும். என் பாதிவ்ரத்யத்தினால் உன்னை துக்கத்தினின்றும் நிவ்ருத்தி செய்துவிட்டால் ராமனுக்கேற்படுகிற உத்கர்ஷத்தை நான் குறைத்தவளாக அல்லவா ஆகிவிடுவேன். அந்த பயத்தினாலும் உன்னை ராக்ஷஸ பாவத்தினின்றும் விமோசனம் செய்துவைக்க நான் முயற்சிக்கவில்லை." என்ற ரீதியாக மேற்சொன்ன ச்லோகத்தின் அர்த்தத்தை அடிக்குறிப்புகள் கவனித்தாலேயானால், ஸீதாதேவியைப் பூஜித்துத் தான் க்ருதார்த்தனாக ஆகவேண்டுமென்ற எண்ணத்துடன் ராவணன் இருந்தால் ஸீதாதேவியானவள் மேற்கண்ட ச்லோகப்ரகாரம் ராவணனைப் பரோக்ஷமாகப் பேசலாமா என்ற கேள்விக்கு அவகாசமேயிராது.

தவிரவும், "நீ என்னை சௌர்யப்ரகாரத்தை அனுஸரித்து அபஹாரம் செய்ததே ராமன் மூலமாக உனக்கு ராக்ஷஸ பாவத்தினின்று விமோசனத்தை விதித்திருக்கிற தெய்வத்தின் செயல்தான். அன்றியில் ராமனை வஞ்சித்துவிட்டு என்னை அபஹரிக்க உன்னுடைய புத்தியில் அபிப்ராயம் ஏற்பட்ட காலத்திலே நீ எரிந்துபோயிருக்கலாம். அது தெய்வத்தினுடைய செயலானதினால் யாராலும் அதை தடுக்கமுடியவில்லை दैवं हि परमा गतिः (தைவம் ஹி பரமா கதிः)என்ற ந்யாயத்தை அனுஸரித்து யாரும் தெய்வத்திற்கு உட்பட்டுத்தான் ஆகவேண்டும். அவ்விதம் ராமன் மூலமாக உனக்கு வதத்தை தெய்வமானது கல்பித்திருக்கும்பொழுது என் பாதிவ்ரத்யத்தினால் நான்தான் உன்னை என்ன செய்யமுடியும்? அக்காரணத்தையும் கொண்டுதான் உன்னை நான் பஸ்மமாகச் செய்யவில்லை. இல்லாதுபோனால் அதாவது விதியானது இவ்விதம் கல்பிக்காமலிருந்தால் ராமனுடைய ஸங்நிதியை விட்டு நீ இங்கு அபஹரித்தும் வரமுடியாது."

नापहर्तुं अहं शक्या त्वया रामस्य धीमतः ।
विधिस्तव वधार्थाय विहितो नात्र संशयः ॥

நாபஹர்த்தும் அஹம் சக்யா த்வயா ராமஸ்ய தீமத: ।
விதிஸ்த்வ வதார்த்தாய விஹிதோ நாத்ர ஸம்சய: ॥

என்ற ச்லோகமே மேற்சொன்ன அர்த்தத்தில் ப்ரமாண மாகும்.

இவ்விதம் ஸீதையினுடைய வார்த்தையைக் கேட்டுக்கொண்டிருந்த ராவணனே, உண்மையை அறியாமல் மஹாத்தானகோபத்தை அடைந்து ஸீதையைப் பார்த்துப் பருஷமாகப் பேசுகிறான்.

अनयेनाभिसंपन्नं अर्थहीनमनुव्रते ।
नाशयाम्यहमद्य त्वां सूर्यः सन्ध्यामिवोजसा ॥

அநயேநாபிஸம்பந்நம் அர்த்தஹீநமநுவ்ரதே ।
நாசயாம்யஹமத்ய த்வாம் ஸூர்ய: ஸந்த்யாமிவோஜஸா ॥

இந்த ச்லோகத்தின் ப்ராதிகமான அர்த்தமோ "அநீதியோடு கூடினவனையும், பயனற்ற வ்ரதத்தை அனுஷ்டிக்கிறவனையும் உள்ள ராமனையே நீ அனுஸரித்துவருகிறாய். நான் எவ்வளவு பிரார்த்தித்தாலும் என்னிடத்தில் உனக்குக் கொஞ்சமேனும் மான்யதா புத்தியானது ஏற்படவில்லை. ஆகையினால் ஸூர்யன் தான் உதித்தவுடன் ஸந்த்யா தேவியை நாசம் செய்வதுபோல் உனனை நான் இப்பொழுதே நாசம் செய்து விடுகிறேன்" என்பதேதான் ஆகும்.

இதனுடைய தத்வார்த்தத்தை பின்வருமாறு அறியவும். அனயே என்று பிரித்துக்கொள்ளவும். न विद्यते नयः न्यायः यस्याः अन्यत्र सा अनया । तस्याः संबुद्धिः अनये । (ந வித்யதே நய:

நயாயः யஸ்யாः ஸநயஸ்தே வா ஸநயா! தஸ்யாः வைதேஹ்யாः ஸநயே) (ந வித்யதே நயः ந்யாயः யஸ்யாः அந்யத்ர வா அநயா! தஸ்யாः ஸம்புத்திः அநயே). "ஹே ஸீதே, நியாயம் என்பது உன்னிடத்தில் குடியிருக்கிறது. கேவலம் சக்தியினுடைய உபாஸனத்தினல் மோக்ஷம் என்பதை நான் வாதாடினேன். சக்தியைத் தனியாக வைத்துப் பூஜிக்கக்கூடாது. ராமனோடு என்னை நீ சேர்த்துப் பூஜிக்கவேண்டும். ராமன் மூலமாகத்தான் உனக்கு மோக்ஷம் ஏற்படவேண்டுமென்று நீ ப்ரதிவாதம் செய்தாய். அது மிகவும் நீதிக்கு ஒத்துத்தான் இருக்கிறது என்பது இப்பொழுதுதான் எனக்குப் புலப்படுகிறது. மௌட்டியத்தினல் ஸாஹஸவாதத்தை அவலம்பித்து நான் ப்ரஸங்கம் செய்ததை மன்னித்துக்கொண்டு நீ என்னை ரக்ஷிக்கவேண்டும். நானே அபிஸம்பன்னன். உனக்கபிமுகமாக உன்னை ப்ரபத்தி செய்தவன். அர்த்தஹீனன். வைகுண்டத்திலனுபவித்து வந்த பரம புருஷார்த்தத்தை இழந்தவன். நீயோ அனுவ்ரதை; अनुसृतानां आश्रितानां प्रपन्नानां संरक्षणमेव व्रतं यस्याः सा अनुव्रता (ஸ்ருதாநாம் ஸ்ம்ருதாநாம் ப்ரவஹாநாம் ஸம்ரக்ஷணமேவ வ்ரதம் யஸ்யாः ஸா அநுவ்ரதா) (அநுஸ்ருதாநாம் ஆச்ரிதாநாம் ப்ரபந்நாநாம் ஸம்ரக்ஷணமேவ வ்ரதம் யஸ்யாः ஸா அநுவ்ரதா) ஆச்ரித ஸம்ரக்ஷண வ்ரதத்தோடு கூடினவள். அப்போர்பட்ட நீ தீனனை என்னை, ஸந்த்யாதேவியை ஸௌர்ய பகவான் ஸ்வீகரிப்பதுபோல் உன்னுடைய பாதிவ்ரத்ய மஹிமையினல் உன் பக்தகோடியில் न अङ्गीकरोषि चेत् (ந ஸ்வீகரோஷி சேத்) (ந அங்கீகரோஷி சேத்) அங்கீகாரம் செய்யாத பக்ஷத்தில் நான் உன்னை நிமித்தமாக வைத்து என்னுடைய ஆத்மாவை நாசம் செய்து கொண்டுவிடுவேன். சௌர்யமார்க்கத்தையவலம்பித்து உன்னை நான் அபஹரித்து வந்த தோஷங்களையும் உன்னுடைய ப்ரதாபாதிசயத்தினல் ஸௌர்யபகவான் தன்னுடைய ப்ரதாபாதிசயத்தினல் ஸந்த்யாதேவியுடைய ராகத்தை சிவப்பு நிறத்தைப் போக்கடித்துத் தன் கோஷ்டியில் சேர்த்துக்கொண்டதுபோல் என் தோஷத்தை

யும் நிவர்த்தி செய்துவைத்து உன்னுடைய பக்தகோடியில் என்னையும் ஒரு பக்தனாகச் சேர்த்துக் கொள்ளவேண்டு மென்று ப்ரார்த்திக்கிறேன்" என்பதே மேற்சொன்ன ச்லோகத்தின் தத்வார்த்தமாகும்.

இவ்விதம் ராவணன் ஸீதையைப்பார்த்துச் சொல்லி விட்டு அனேக விதமான ராக்ஷஸ ஸ்த்ரீகளை ஸீதையைத் தன் வசமாக்கும்படி உபாயங்களை அனுஷ்டிக்கும்படி ஆக்ஞாபித்துவிட்டு, தன்னுடைய திருமாளிகைக்குத் திரும்பிச் சென்றான். ராக்ஷஸ ஸ்த்ரீகள் ஸீதையினிடம் கொடூரமான வார்த்தைகளைப் பேசி ஸீதைக்கு துக்கத்தை உண்டுபண்ணின விஷயத்தையோ, ஸூக்ஷ்மதர்சிகள் ப்ரபந்தகதமான வ்யங்க்ய மர்யாதையை அனுஸரித்து அடியிற்கண்டபடி அறிந்து கொள்ளவும்.

தத்துவ விளக்கம்

அதாவது ஸீதை என்ற சப்தத்தினல் பகவானுடைய பாரதந்த்ரியத்தை வகித்துவரும் அனுதியான ஜீவன் என்ற அர்த்தத்தை க்ரஹித்துக்கொள்ளவும். ராமனே தாரகப்ரும்மமே; அவ்விதம் தாரகப்ரும்மமான ராமனிடத்தில் ஒரு க்ஷணகாலம் கூட விட்டுப் பிரியாமல் இருந்துவந்த அந்தரங்கமான ஸீதையென்ற ஜீவனுக்கோ ராமனை விட்டுப் பிரியும் படியான கஷ்டகாலம் நேர்ந்ததற்கு மாரீசன், மான் வேஷம் போட்டுக்கொண்டு ஸீதைக்கு எதிரில் வந்து துள்ளிக்குதித்து அந்த ஸீதைக்குத் தன்னிடத்தில் பற்றுதல் ஏற்படும்படி செய்து அதனல் ஸீதைக்கும் மாய ம்ருகத்தினிடத்தில் ஏற்பட்ட வாத்ஸல்யமேதான் காரணமாக ஆகும். விஷயாதிகளில், ஆஸக்தியை வைத்த ஜீவன் ப்ரும்மத்திற்கு வெகு தூரத்தில் உள்ளவனாக ஆகிவிடுவான் என்பது இதனல் வெளியாகிறது. அப்படி ப்ரும்மத்தை விட்டுப் பிரிந்த ஜீவனும், ஸீதை ராவணனுடைய வசத்தில் அகப்பட்டாள் என்ற கதையினல் रावयति असत्प्रलापान् कारयतीति रावणः अविवेकः(ராவயதி அஸத் ப்ரலாபான் காரயதீதி ராவணஃ அவிவேகஃ)

(ராவயதி அஸத்ப்ரலாபாந் காரயதீதி ராவணः அவிவேக:) என்ற ஸமாஸத்தினால் மஹா மோகம் என்ற அவிவேகத்தினால் பாரவச்யத்தை அந்த ஜீவன் அடைந்து கஷ்டப்படுவான் என்பதும் வெளியாகிறது. ராவணன் ஸீதையை அபஹரித்துக்கொண்டு போய் தன் வசத்தில் வைத்துக்கொண்ட ஸாஹஸத்தை அடக்கி 'ஜடாயுஸ்' என்ற க்ருத்ராஜன் ப்ராணன் போகிற வரையிலும் ராவணனுடன் மன்றாடியும் அவனால் ஸாத்யப்படவில்லை என்ற அம்சத்தினால் அவிவேகத்தினுடைய வசத்தில் அகப்பட்டுக்கொண்ட ஜீவன் அவிவேகம் என்ற மூலாக்ஞானத்தை நிவ்ருத்தி செய்துகொண்டு தாரகப்ரும்மமாகிய ஸ்ரீ ராமனோடு முன்போலவே சேர்ந்து பரம ஸௌக்யத்தையனுபவிக்க கர்மாக்களால் ஸாத்யமில்லை. அக்நிஹோத்ரம் முதலிய கர்மங்கள் மோக்ஷத்திற்கு ஸாதனமாகவே ஆகாது என்பதும் வெளியாகிறது.

ராவணன் ஸீதையை கடலின் நடுவிலிருள்ள லங்கையில் அசோகவனத்தில் ஸ்தாபித்தான் என்றதினால் அவிவேகியான ஜீவன் ஸம்ஸார ஸாகரத்தில் நடுவேயுள்ள பாஞ்சபௌதிகமான சரீரம் என்ற லங்காநகரத்தில் ஹ்ருதயமாகிற அசோக வனத்தில் பரிச்சின்ன பாவத்தோடு கூடினவன்போல் இருந்து வருவான் என்பதும் ப்ரகாசிக்கிறது. அவிவேகமானது இந்த ஜீவனை ப்ரும்மத்தோடு சேராமல் செய்து தன் வசத்திலேயே வெகு ஜன்மங்களாக இருக்கும்படி கஷ்டப்படுத்தும் என்ற தத்வமும் ராவணன் ஸீதையைப் பார்த்துச் சொன்ன வார்த்தைகளால் தெரிகிறது. ஸீதை ராவணனுக்கு உட்படாமல் இருந்த நிலையானது ஸத்ஸங்கத்தினால் மிகவும் சுத்தமான ஜீவன் அவிவேகத்தினுடைய பாரவச்யத்தை அடைந்திருந்தாலும் அவிவேகத்தோடு மன்றாடி வேதாந்த விசாராதிகளால் அவிவேகத்தையும் நாசம் செய்துகொண்டு ராமனுகிற தாரகப்ரும்மத்தோடேயே மறுபடியும் சேருவதில் விடாமுயற்சியாக இருப்பான் என்பதைக் காண்பிக்கின்றது. ராவணனுடைய ஆக்ஞைக்குட்பட்டு வெகுவிதமான ராக்ஷஸ

ஸ்த்ரீகள் ஸீதையைக் கண்டபடி வாயில் வந்தவாறு துக்கரமான வார்த்தைகளைப் பேசினர்கள் என்பதை கவனிக்க இந்த்ரிய வ்ருத்திகளால் ஜீவனுக்கு துக்காநுபவம்தான் ஏற்படுமன்றியில் ஸுகத்தை அடைய அவஸரம் கோரிடுவது மிகவும் அரிது என்பதும் வெளியாகிறது. அத்துடன் ஆத்யாத்மிகம் என்ற சரீரத்தையொட்டின தாபங்களும் ஆதிதைவிகம் என்ற மூன் ஜன்மத்தில் செய்த கர்மாவை அனுஸரித்து ஏற்படுகிற துக்கமும் ஆதிபௌதிகம் என்ற ப்ருத்வி மூதலான பூதங்கள் மூலமாக ஏற்படுகிற துக்கமும் சேர்ந்து மூன்று விதமான தாபங்களும் அவிவேகியான ஜீவனைப் பாதிக்கும் என்பதும் வெளியாகிறது. இவ்விதமான ராக்ஷஸ ஸ்த்ரீகளுடைய கூட்டங்களில் பரம பாகவதோத்தமனான விபீஷணஸ்வாமியினுடைய புத்ரியானவள் ஒரு ஸாத்வீயான விதுஷி என்று சொல்லக்கூடியவளாக இருந்துவந்தாள். அவளுக்கு 'ஸரமா' என்று பெயர். த்ரிஜடை யென்றும் சொல்லுவார்கள். ஸர்வப்ராணிகளுக்கும் மாரகமான கடலிலும் நவரத்னம் இருப்பதுபோல், ஸீதையினுடைய துக்கத்திற்குக் காரணமான க்ரூரமான ராக்ஷஸ ஸ்த்ரீகளுடைய மத்தியில் அந்த மஹானுபாவையான ஸ்த்ரீ ஒருவள் விளங்கி வந்தாள் என்ற கதா பாகத்தினுல் அவிவேகத்தினுடைய பாரவச்யத்தை அடைந்த ஜீவன் இந்த்ரிய வ்ருத்திகளாலும் தாபத்ரயத்தினுலும் பரம துக்கத்தை யனுபவித்துக்கொண்டு வருகிற ஸமயத்திலும் ஜன்மாந்தரத்தில் செய்த புண்ய விசேஷத்தினுல் தற்காலத்தில் துக்கோப சாந்திக்குக் காரணமான ஸத்ஸங்கதியேற்பட்டு கொஞ்சம் சமாதானத்தை அடையலாம் என்பதும் வெளியாகிறது அந்த விபீஷண ஸ்வாமியினுடைய புத்ரியோ ராவணனுடைய கக்ஷியில் அபஜயத்தையும் ராமனுடைய கோஷ்டிக்கு மேலான ஜயத்தையும் ஸீதாதேவிக்கு ஸௌபாக்யாதிசயத்தையும் ஸ்வப்னத்தில் கண்டு உடனே விழித்துக்கொண்டவுடன் ராக்ஷஸஸ்த்ரீகளிடத்தில் அந்த வ்ருத்தாந்தத்தைச் சொல்லி அவர் களையும் கண்டித்து ஸீதாதேவியையும் ஸமாதானப்படுத்தி

ளுள். இதனுல் மஹாபுருஷர்களுடைய ஸமாச்ரயணம் ஏற் பட்டால் அவர்களுடைய உபதேச வாக்யத்தினுல் இந்த ஜீவனானவன் எந்த அவிவேகத்தினுடைய பாரதந்த்ரியத்தை அடைந்திருக்கிறானே அதிலிருந்து விடுபடுகின்றான். அந்த அவிவேகம் என்பதுதான் மூலாக்ஞானம். அந்த அவிவேகம் என்ற மூலாக்ஞானமோ அனுதியாக, தாரகப்ரும்மமாகிய ஸ்ரீ ராமனிடத்தில் கல்பிதம், கல்பிதமான பதார்த் தங்களுக்கு அதிஷ்டான ஸாக்ஷாத்காரத்தினுல் நிவ் ருத்தி ஏற்பட்டு ஸ்வரூபம் பாதிக்கப்பட்டுவிடும் என்று அவிவேகத்தினுடைய பக்ஷத்தில் தோன்றலாம். பரம அதிஷ்டான தாரகப்ரும்மத்திற்கு எக்காலத்திலும் எக் காரணத்தைக்கொண்டும் பாதை யென்பதேயில்லை. அது காலத்ரயத்திலும் அபாத்யமான பொருள். தேசத்தாலோ, காலத்தினுலோ, வஸ்துவினுலோ பரிச்சேதமற்றது. ஸ்வய மாகவே தானும் ப்ரகாசித்துக்கொண்டு மற்றவைகளையும் ப்ரகாசிக்கச் செய்யும் தன்மையுள்ளது. பரிபூர்ணம் என்று சொல்லப்படும் நிரதிசயமான ஆனந்தமே அந்த அதிஷ்டான ஸ்வரூபமாகும், என்று தாரகப்ரும்மத்தினுடைய சக்திக்கு மேலான ஜயத்தைக்கண்டு இந்த ஜீவன் கொஞ்சம் ஸமா தானத்தை அடையக்கூடும் என்பதும் வெளியாகிறது. இவ் விதம் ஸரமையென்ற விபீஷணஸ்வாமியினுடைய புத்ரியின் கனவு வ்ருத்தாந்தத்தினுல் ஸீதைக்குக் கொஞ்சம் ஸமா தானம் ஏற்பட்டு சாந்தியேற்பட்டதினுல், ராமனைவிட்டுத் தான் பிரிந்துவிட்டோமே என்ற துக்கத்தினுல் தன்னுடைய உயிரை விட்டுவிடவேண்டு மென்ற அந்த யத்னத்தை நிறுத்திக்கொண்டாள். ப்ரும்ம ப்ராப்திக்கு விரோதமான அவிவேகத்தினுடைய பாரவச்யத்தையடைந்த ஜீவன் இவ் விதம் மஹா அவிவேகியாக நாம் ஆகிவிட்டோமே; எப்படி நாம் ப்ரும்மபாவத்தை யடைகிறது; ப்ரும்ம பாவத்தை அடையாத ஜீவனையோ,

असूर्या नाम ते लोकाः अन्धेन तमसावृताः ।
तांस्ते प्रेत्याभिगच्छन्ति एके चात्महनो जनाः ॥

ஸலூயஂ நாஉ தெ லொகாஃ ஸலெந தஉலா வ்ருதாஃ ।
தாஃஹெ தெ வ்ருகயாஹி மஉ ஹ்ருதி வனகெ வாதஉலாதெநா ஜதாஃ ॥

அஸூர்யா நாம தே லோகாஃ அந்தேந தமஸா வ்ருதாஃ ।
தாம்ஸ்தே ப்ரேத்யாபிகச்சந்தி ஏகே சாத்மஹநோ ஜநாஃ ॥

என்ற ச்ருதியானது ஆத்மஹத்தி செய்தவர்கள் என்று நிந்திக்கிறதே. அவ்விதமான ஜன்மத்தை நாம் எதற்காக வைத்துக் கொள்ளவேண்டும் என்று வருந்தி ப்ரம்ம ப்ராப்திக்கு ஸாதனமாயும், அபரோக்ஷமான அவிவேகத்திற்கு நிவர்த்தகமாயும் உள்ள அபரோக்ஷஸாக்ஷாத்காரம் இல்லாத நம் ஜன்மத்தை நெருப்பு வைத்துக்கூட பொசுக்கலாம் என்று தன் ஜன்மத்தில் வெறுப்பு ஏற்பட்டு கஷ்டப்படும்போது மஹாபுருஷர்களுடைய உபதேச வாக்யத்தினல் இனிமேல் நமக்கு நல்லகாலம் வந்துவிட்டது என்று ஸந்தோஷமடைந்து கொஞ்சம் சாந்தியை அடைவான் என்பதும் தெரிகிறது.

விபீஷணஸ்வாமியினுடைய புத்ரியான த்ரிஜடை கண்ட கனவுக்கனுகுணமாக ஸீதைக்கு மிகவும் சீக்ரத்தில் ராகவனோடு சேரும் ஸௌபாக்யம் ஏற்படப்போகிறது என்பதை சில சுபஸூசகங்கள் ஸூசிப்பித்தன. தேஹத்திலும், தேஹத்திற்கு வெளியிலும் ஸீதைக்கு சுபஸூசகங்கள் ஏற்பட்டன. அதனல் இந்த ஜீவனுக்கு அவிவேகத்தை நிவ்ருத்தி செய்துகொள்ள அந்தரங்கமான ரஹஸ்யத்தை உபதேசம் செய்வதற்கு பரமாத்மாவினுலேயே ஏவப்பட்ட ஒரு மஹா புருஷன் பரம குருவாக இந்த ஜீவனுடைய ஸமீபத்திற்கு வந்துசேர்ந்து, தாரகப்ரம்மமாகிய ஸ்ரீ ராமனிடத்தில் தத்பாவாபத்தி என்ற கைவல்யம் அதிசீக்ரத்தில் ஏற்படச் செய்வார் என்பதை ஸூசிப்பிக்க தன்னுடைய எதிரில் சில சுபமான ஸூசகங்களும் தென்படும். தனக்கே கனவிலும் சுபமான பதார்த்தங்களைப் பார்க்கக்கூடிய ஸந்தர்ப்பங்களும், ஜாக்ரத்திலும் சில சுபமான வைபவங்களும், தன்னுடைய சரீரம் ஏற்பட்ட ஜன்மலக்னத்தை அனுஸரித்து மோக்ஷஸ்தா

னத்தில் ஞானகாரகனது க்ரஹமும், அந்த ஸ்தானத்திற்கு அதி பதியும் தேவகுருவுமான ப்ருஹஸ்பதியினுடைய ஸம்பந்தமோ அவருடைய பார்வையோ சுப ஸூசகமாக ஏற்படும் என்ப தையும் அறியவும்.

ஸீதையினுடைய ஸௌபாக்யத்தைக் குறிக்கும் ச்லோ கத்தை அடியிற்கண்டவாறு அறியவும்.

पक्षी च शाखानिलयः प्रहृष्टः पुनः पुनश्चोत्तमसोन्त्ववादी ।
सुस्वागतां वाचमुदीरयानः पुनः पुनश्चोदयतीव हृष्टः ॥

வக்ஷீ ச ஸாகாநிலயஃ ப்ரஹ்ருஷ்டஃ புநஃ புநஶ்சோத்தமஸோந்த்வவாதீ ।
ஸுஸ்வாகதாம் வாசம் உதீரயாநஃ புநஃபுநஶ்சோதயதீவ ஹ்ருஷ்டஃ ॥

இந்த ச்லோகத்தின் தாத்பர்யத்தை மிகவும் ஆதரவுடன் கவனிக்கவேண்டும்.

பக்ஷி (வக்ஷீ) (பக்ஷீ) என்பதினுல் பிங்களிகா (பிங்கலிகா) என்ற பெயரால் ப்ரஸித்தமான ஒரு பக்ஷி விசேஷம்; அதாவது பஞ்சவர்ணக்கிளி என்றே அதைச் சொல்லலாம். அந்த பக்ஷி ஸீதையினுடைய எதிரிலுள்ள ஒரு மரத்தினுடைய கிளையில் உட்கார்ந்துகொண்டு தனக்கு வேண் டிய ஆஹாரங்களை சாப்பிட்டுத் த்ருப்தியாய் இருக்கும் கார ணத்தினுல் மேன் மேலும் மதுரமான ஸ்வரத்துடன் ஸீதையைப் பார்த்து ஸீதைக்கு மிகவும் பரம பந்துவான ராமனுடைய ஆகமனத்தை ஸூசிப்பதுபோல் அழகாக சப்தித்து வந்தது. இதைக் கவனித்த ஸீதையோ ராமனே நேரில் பார்த்தால் எவ்வித ஸந்தோஷத்தை அடை வாளோ அதைப்போலவே ஆனந்த ஸாகரத்தில் மூழ்கினுள். இந்த ச்லோகத்திற்கு இவ்விதமாகப் பொருள் வெளியாகிறது.

வேதாந்தாசார்யாளை, இந்த பக்ஷியை கருடனென்றே வர்ணிக்கின்றார்கள். पक्षौ अस्यस्त: इति (பக்ஷௌ அஸ்யஸ்த: இதி) என்ற ஸமாஸத்தினால் பக்ஷி (பக்ஷீ) (பக்ஷீ) என்றதினால் ஸாக்ஷாத் கருடபகவான் என்ற அர்த்தம் வெளியாகிறது. கருடபகவானே ஸீதைக்கு எதிரில் ஆகாசத்தில் தனது இரண்டு இறக்கைகளையும் விரித்துக்கொண்டு ப்ரதக்ஷிணமாக ஸஞ்சாரம் செய்துவிட்டு, புஷ்பத்தோடு கூடினதாயும் துளிர்களால் அலங்கரிக்கப்பட்ட தாயும் உள்ள ஒரு பச்சையான மரத்தினுடைய கிளையில் உட்கார்ந்துகொண்டு ஸ்திரமாக அந்தக் கிளையிலேயே வாஸம் செய்து வந்தார். கருடன் ப்ரதக்ஷிணமாக ஆகாசத்தில் பறப்பதும், ஆர்த்ரமான சாகையில் (கிளையில்) வந்து உட்காருவதும், அதிலும் அந்த சாகையிலேயே ஸ்திரமாக இருந்து வருவதும் சுபத்தை எதிர்பார்க்கிறவர்களுக்கு நல்லது என்பது சாஸ்த்ரத்தினால் தெரியவருகிறது. அத்துடன், கருடபகவானே ஸந்தோஷமாக சப்தித்துக்கொண்டிருந்தார். அந்தக் கிளையிலுள்ள பழத்தை உட்கொண்டு ஸந்துஷ்டமான ஹ்ருதயத்தோடு கூடியவராகவும் விளங்கினார். அடிக்கடி ஸீதையைப் பார்த்து மேலான ஸந்தோஷ வார்த்தையைச் சொல்லி ஸமாதானப்படுத்துவதுபோல் தன் மதுரமான சப்தத்தினால் ஸுசிப்பிக்கின்றார். அந்த சப்தத்தைக் கவனித்தால், "ஹே ஸீதே! நீ துக்கப்படாதே. அதிசீக்ரத்தில் உன்னுடைய பர்த்தா வருவார்; துக்கத்திற்கு இது ஸமயமல்ல" என்று சொல்லுவது போலவே ஸூக்ஷ்மதர்சிகளுக்கு புலப்படுகின்றது; மறுபடியும் சோபனமான வார்த்தையையே ஸீதையைப் பார்த்து அந்த கருடன் சொல்வது போலவும் தோன்றுகிறது.

तपति तनुगात्रि मदनस्त्वामनिशं मां पुनर्दहत्येव ।
ग्लपयति यथा शशाङ्कं न तथाहि कुमुद्वतीं दिवसम् ॥

தவதி தநூகாத்ரி மதநஸ்த்வாம் அநிஸம் மாம் புநர்தஹத்யேவ !
மபயதி யதா ஸஸாங்கம் ந ததாஹி குமுத்வதீம் திவஸேந ॥

தபதி தனுகாத்ரி மதன ஸ்த்வாம் அநிசம் மாம் புநர்தஹத்யேவ।
க்லபயதி யதா சசாங்கம் ந ததாஹரி குமுத்வதீம் திவஸம் ॥

என்ற ந்யாயப்படி ராமனைவிட்டுப் பிரிந்த ஸீதையினுடைய துக்கத்தைக் காட்டிலும், ஸீதையைவிட்டுப் பிரிந்திருக்கும் ராமருடைய துக்கம் அதிகமாக ஏற்படுகிறது. 'நாயகியினுடைய ஸமீபத்தில் நாயகனைவிட்டுப் பிரிந்திருப்பதில் நீ படுகிற கஷ்டம் கஷ்டமாக ஆகாது. உன்னைவிட்டுப் பிரிந்த நாயகன் படுகிற கஷ்டம்தான் அதிகமானது' என்று நாயகிக்கு சொல்லுவதே அவளுக்கு ஒரு பெரிய ஸமாதானமாகும். அவ்விதமே மேற் குறிப்பிட்ட நாடக ச்லோகத்திலும் தன் மனைவியைப் பார்த்து துஷ்யந்த மகாராஜன் 'அழகான சரீரத்தோடு கூடின ஹே ப்ரியே! என்னை விட்டுப் பிரிந்திருப்பதில் மதனன் உன்னை துடிக்கச் செய்கிறான். என்னையோ எரிக்கவே செய்து சாம்பலாக்கிவிட்டான். பகல் குமுத புஷ்பங்களுடைய விரைகளை வாடமாத்ரம் செய்யுமே தவிர நாசப்படுத்தாது. ஆனால் சந்த்ரன் கண்ணுக்குத் தென்படாமலே அடித்துவிட்டது' என்று சொல்வதிலும் மேற்கண்ட தாத்பர்யமே வெளியாகிறது. அதுபோலவே இந்த கருடபகவானும் ராமனுடைய நாயகியான ஸீதையைப் பார்த்து "ஹே ஸீதே! உன் துக்கம் துக்கமல்ல; உன்னைவிட்டுப் பிரிந்த நாயகனான ஸ்ரீராமனுடைய துக்கம்தான் அஸஹ்யமான துக்கம்" என்று சொல்லி ஸமாதானப்படுத்துவது போலவே தன் மதுரமான சப்தத்திலும் ஸூசிப்பித்துக் காட்டினார். **सुस्वागतं वाचं उदीरयान:** (ஸுஸ்வாகதாம் வாசம் உதீரயான:) என்ற வாக்யத்திலும் இதை வேதாந்தாசார்யாள் வெளிப்படுத்துகிறார்கள். நாயகனை விட்டுப் பிரிந்த நாயகியினிடத்தில் அவனுடைய ப்ரதியோகியான நாயகனுடைய ஸந்தாப அதிசயத்தைச் சொல்வதே நாயகியினிடத்தில் ஏற்பட்ட ஸுஸ்வாகத வசனமாகும்.

இவ்விதம் ஸீதையை ஸமாதானப்படுத்திக்கொண்டு ராமனுடைய ஆகமனத்தை வரவேற்க ஸீதையை துரிதப்படுத்துவதுபோல் மறுபடியும் அந்த பக்ஷி சப்தித்தது. அதை

चोदयतीव पुनः पुनः (ஆசூயதீவ வாநரः வாநரः) (சோதயதீவ புநः புநः) என்பதினால் வெளிப்படுத்துகிறார். "ஹே ஸீதே! நாயகனை ராமனுடைய ஆகமனம் நிச்சயமாகி விட்டது. ஸ்ரேஷ்ட அலங்காராதிகளை ஏன் செய்து கொள்ளாமலிருக்கிறாய்" என்று ஸீதையை துரிதப் படுத்துகிறது. அத்துடன், அந்த கருடனுடைய ஸந்தோஷத் தைச் சொல்லிமுடியாது. உன் நாயகன் உன் ஸமீபத்தில் வந்து உன்னோடு சேர்ந்திருப்பதில் எனக்குத்தான் மிகவும் ஸந்தோஷம் என்பதையும் தன்னுடைய ரோமாஞ்சங்களினால் ஸூசிப்பித்துக்கொண்டு ஸீதையை ஆச்வாஸப் படுத்தியது.

இந்த ராமாயணத்தை உத்தம காவ்யமென்று யாரும் ஒப் புக்கொள்வார்கள். உத்தமம், மத்யமம், அதமம் என்று காவ் யம் மூன்று வகைப்படும். எந்த காவ்யத்தில் வ்யங்க்யார்த்தமே இல்லையோ அது அதமமான காவ்யமாகும். அதைத் தான் கவிகள் சித்ரமென்று சொல்லுவார்கள். எந்த காவ் யத்தில் வாச்யார்த்தத்திற்கு மேல் போகாமல் வ்யங்க்யார்த் தமும் ஏற்படுகிறதோ அது மத்யமமான காவியமாகும். அந்த காவ்யத்தைக் கவிகள் குணீபூத வ்யங்க்யமென்று சொல் லுவார்கள். எந்த காவ்யத்தில் வாச்யார்த்தத்தை அதிக்ர மித்து வ்யங்க்யார்த்தம் ப்ரதானமாக பாஸிக்கின்றதோ அது உத்தமகாவ்யமாகும். அதைத்தான் த்வனியென்று கவிகள் ஒப்புக்கொள்ளுகிறார்கள். இந்த ராமாயணமோ உத்தம காவ்யமானதினால் வாச்யார்த்தத்தை அதிக்ரமித்து வ்யங் க்யார்த்தத்தை இந்த காவ்யத்தினால் அறியவேண்டியது அவச் யமாகும். வ்யங்க்யமும் பதத்தை அனுஸரித்தும், வாக்யத் தை அனுஸரித்தும், ப்ரபந்தத்தை அனுஸரித்தும், மூன்று விதமாக ஏற்படுகிறது.

இந்த ஸுந்தர காண்டம் என்ற ப்ரபந்தத்தினால், அனுதிகாலமாக பகவானுடைய ஸம்பந்தத்தை அடைந்த சேதனமாகிற ஒரு ஜீவன், விஷயாதிகளில் ப்ராவண்யத்தை

அடைந்த காரணத்தினல், பகவானிடப்பிரிந்து இருக்கும் படியான கஷ்டம் நேர்ந்து, எப்பொழுது நாம் பகவானை அடையப்போகிறோம் என்ற கவலையினல் தவிக்கும்பொழுது, அந்த துக்கமானது ஆசார்யனுடைய அதீனமாக நிவ்ருத்தி ஆகவேண்டியதாக இருப்பதினல், அந்த சேதனமான ஜீவனை உஜ்ஜீவிக்கச் செய்வதில் ஆசார்யனுடைய ப்ரவ்ருத்தியானது காரணமாகச் சொல்லப்படுகிறது. இந்த பொருளை இந்த காண்டத்தின் ஆரம்பத்தில் ततो रावणनीतायाः (ததோ ராவணநீதாயாஃ) (ததோ ராவணநீதாயா:) என்ற ச்லோக வ்யாக்யான அவஸரத்தில் நிரூபித்திருக்கிறோம். இந்த ஸ்ரீமத் ராமாயணத்தில் லங்கை என்ற பதத்தினல் சரீரத்தை க்ரஹித்துக கொள்ளவேண்டும். ஸீதையாகிற சேதனத் திற்குக் காவலாளியாக இருந்த 'ஏகாக்ஷி' முதலிய ராக்ஷஸ ஸ்த்ரீகளை இந்த்ரியங்களாக க்ரஹித்துக்கொள்ளவேண்டும். ராவணன், கும்பகர்ணன் இருவர்களையும் அஹங்கார, மமகார மாக அறியவும். விபீஷணஸ்வாமியை விவேகமாக அறியவும். இந்த்ரஜித் முதலிய மந்த்ரிகளை காமம், க்ரோதம் லோபம், மோஹம், மதம், மாத்ஸர்யம் என்ற அரிஷட்வர்க்கங் களாக அறியவும். சரீரமாகிற லங்காநகரத்தில், அந்தக் காரணம் என்ற உபாதியினல் ப்ரிச்சேதத்தை அடைந்தது போல் தோன்றுகிற ஆத்ம சைதன்யத்தை ஸீதையாக அறிய வும். அந்த ஜீவனுக்கு பகவானுடைய தத்வ ஞானத்தை உபதேசம் செய்கிற பரம ஆசார்யபுருஷனைகளே ஆஞ்ஜனேய ஸ்வாமியை அறியவும். ஸம்ஸார ஸாகரத்தினின்றும் சேதன மான ஜீவனை உஜ்ஜீவிக்கச் செய்யும் ஆசார்ய புருஷனுடைய மஹிமையானது இந்த ச்லோகத்தினல் சொல்லப்படுகிறது.

पक्षी (பக்ஷீ) (பக்ஷீ) = ஞான யோகம், கர்ம யோகம் என்ற இரண்டையும், இரண்டு இறக்கைளாக உடைய பரம ஞானி என்ற அர்த்தம் வெளியாகிறது. பக்ஷிகளுக்கு இறக்கைகள் பறக்க ஸாதனமாவதுபோல், ஞானிகளுக்கு ஞானோத்பத்திக்கு முன்பு கர்ம யோகம் கமன ஸாதன

மாகவும், ஞானமேற்பட்ட பிறகு ஞான யோகம் கமன ஸாதனமாகவும், கர்ம யோகமும், ஞான யோகமும் அங்காங்கி பாவத்தை அடைந்து கமன ஸாதனமாக ஆகிறபடியினல் பக்ஷங்களோடு கூடின பக்ஷிக்கு ஸமானமாக ஆசார்ய புருஷன் வர்ணிக்கப்படுகிறன். கர்ம யோகமும், ஞான யோகமும் பரஸ்பரம் விருத்தமான தினல் ஓரே காலத்தில் ஓரே புருஷனல் அனுஷ்டிக்க முடியாது போனலும்கூட, ஞானத்திற்கு முன்பு சித்தசுத்திக்கு ஸாதனமாக கர்மயோகத்தை அனுஷ்டானம் செய்துவிட்டுப் பிறகு அந்த புருஷன் ஞானயோகியாக ஆகக்கூடுமான தினல், க்ரமமாக கர்மயோகத்திற்கும் ஞானயோகத்திற்கும் ஸமுச்சயமான து ஸர்வசாஸ்த்ர ஸம்மதமான தினல் அதுதான் பக்ஷி (வக்ஷீ) பக்ஷீ) என்ற சப்தத்தினல் ஸ்ரீமத் ராமாயணத்தில் சொல்லப்படுகிறது.

उभाभ्यामेव पक्षाभ्यां यथा खे पक्षिणां गतिः ।
तथैव ज्ञानकर्मभ्यां नियता परमा गतिः ॥

உஹாஹ்யாமேவ வக்ஷாஹ்யாம் யதா கே பக்ஷிணாம் கதிः ।
தகைவ ஜ்ஞாநகர்மப்யாம் நியதா பரமா கதிः ॥

உபாப்யாமேவ பக்ஷாப்யாம் யதா கே பக்ஷிணாம் கதிः ।
தகைவ ஞாநகர்மப்யாம் நியதா பரமா கதிः ॥

என்ற ச்லோகத்தினல் பக்ஷிகளைப்படி ஆகாசத்தில் இரண்டு இறக்கைகளால் பறக்குமோ, அதுபோலவே வித்வாக்களும் ஆகாசமென்ற பதத்தினல் சொல்லப்படும் ப்ரம்மத்தை அடைய அங்காங்கி பாவத்தோடு கூடின கர்மயோகம், ஞான யோகம் இவைகளைக்கொண்டு பரமகதியை அனுஷ்டிக்கிறார்கள் என்ற அர்த்தம் வெளியாகிறபடியினல், ஞானத்திற்கும் கர்மாவிற்கும் ஸமகாலத்தில் ஸமுச்சயம் இல்லாதுபோனலும் கூட, கர்ம ஸமுச்சயத்தை யாராலும் ஒப்புக்கொள்ளாமல் இருக்கமுடியாது. யக்ஞ யாகங்களான கர்மாக்களுக்கோ ஞான ஸாதனத்வமென்ற தன்மையை ச்ருதியே तमेतं वेदानुवचनेन ब्राह्मणा विविदिषन्ति यज्ञेन दानेन तपसा अनाशकेन (கஜ்ஜகம் வெஜ்ஜாகே-

வஅநெந ஜ்ஞாஜ்ணா விவிஶிஷுஶ்சி யஜ்ஞேந ஓநெந தவஸா ஸநாஶகேந) (தமேவம் வேதாநுவசநேந ப்ராஹ்மணா விவிதிஷந்தி யஜ்ஞேந தாநேந தபஸா அநாசகேந) என்று போதிக்கின்றது. ஆசார்யன் ச்ரோத்ரியனையும் ப்ரம்மநிஷ்டனையும் இருக்கவேண்டுமென்று சொல்லுகிற श्रोत्रिय ब्रह्मनिष्ठ (ஶ்ரோத்ரியம் ப்ரஹ்மநிஷ்டம்) (ச்ரோத்ரியம் ப்ரஹ்மநிஷ்டம்) என்ற ச்ருதியும் இந்த அபிப்ராயத்தைதான் வெளிப்படுத்துகிறது.

आचिनोति हि शास्त्रार्थान् आचारे स्थापयत्यपि ।
स्वयं आचरते यस्मात् तस्मादाचार्य उच्यते ॥

ஆசிநோதி ஹி சாஸ்த்ரார்த்தாந் ஆசாரே ஸ்தாபயத்யபி ।
ஸ்வயம் ஆசரதே யஸ்மாத் தஸ்மாதாசார்ய உச்யதே ॥

என்ற ஸ்ம்ருதியினாலும், தான் சாஸ்த்ரங்களை விசாரித்து அறிந்து அங்கியர்களையும் ஸதாசாரத்தில் ஸ்தாபனம் செய்துகொண்டு, தானும் சாஸ்த்ரத்தில் சொல்லிய உபாயங்களை ஆதரித்து வருபவனே ஆசார்யன் என்ற சப்தத்திற்குப் பொருளாகக் கூடுமானதினால் அந்த ஆசார்ய சப்த நிர்வசனமே पक्षी (வக்ஷீ) (பக்ஷீ) என்ற சப்தத்தினால் சொல்லப்பட்டதாக அறியவும்.

शाखानिलयः (ஶாவாநிலயஃ) (சாகாநிலயஃ) என்ற பதத்தினால் சாகை என்றால் வேத சாகைகள் निलयः (நிலயஃ) (நிலயஃ) என்ற பதத்தினால் அத்யயனம் செய்த வேத சாகையிலேயே அதை மறக்காமல் எப்பொழுதும் ஸ்மரித்திக்கு வரும்படி ஆவ்ருத்திகளைச் சொல்லி அந்த வேதசாகையை ப்ரத்யக்ஷமாக விளங்கும்படி வைத்துக்கொண்டிருக்கும் தன்மையே.

அத்துடன் निलयः (நிலயஃ) (நிலயஃ) என்ற சப்தத்தினால் வேதத்தின் அர்த்தத்தை குருமுகமாக ச்ரவணம் செய்வது; பிறகு மனனம் செய்வது; பிறகு த்யானம் செய்வது என்ற

வேதார்த்தத்தின் அனுஷ்டானம் இவைகள் அத்யயனம் செய்தவர்களுக்கு அவச்யம் என்பதையும் ஸுசிப்பிக்கின்றது. அர்த்த ஞான மில்லாமலும், வேதத்தில் சொல்லியிருக்கும் கர்மகலாபங்களையோ, உபாஸனங்களையோ அனுஷ்டானம் செய்து அதன் மூலம் சித்தத்தை சுத்தமாயும் ஏகாக்ரமாகவும் செய்துகொண்டு ஞான காண்டத்தின் அர்த்தமாகிய ஆத்மஞானத்தை அடையாமல் சப்தராசிகளை மாத்திரம் அத்யயனம் செய்தவர்கள் ஆசார்ய பதவிக்கு அர்ஹர்களாக மாட்டார்கள். அத்துடன் அத்யயனம் செய்த வேதத்தை மறந்தவர்களும் ஆசார்யன் என்று சொல்ல அர்ஹதை உடையவர்களாக மாட்டார்கள்.

अधीतमपि यो वेदं विमुञ्चति नराधमः ।

ब्रूणहा सतु विज्ञेयो वियोनिमधिगच्छति ॥

ஸுயீதமபி யொ வெதம் விஸ்ருஜதி நராயமஃ ।

ப்ரூணஹா ஸ து விஜ்ஞேயோ வியோநிமதிகச்சதி ॥

அதிகமபி யோ வேதம் விமுஞ்சதி நாதமஃ ।

ப்ரூணஹா ஸ து விஜ்ஞேயோ வியோநிமதிகச்சதி ॥

என்ற சிகோ சாஸ்த்ரத்தால் அத்யயனம் செய்த வேதத்தை எவன் மறக்கின்றானோ அவன் நராதமன், ப்ரூணன் என்ற சப்தத்தினால் சொல்லப்படும் மஹாதபஸ்வியைக் கொன்ற பாபத்திற்கு ஸமானமான பாபத்தோடு கூடினவனாகி ஹத்யாயிரம் ஜன்மம் முடிந்த பிறகு அவனுக்கு திர்யக்யோனியில் தான் ஜன்மம் ஏற்படும் என்று தெரிகிறபடியினால் அத்யயனம் செய்த வேதத்தை மறக்காமல் வைத்துக்கொள்ள வேண்டும் என்று ஶாஸ்த்ரார்த்தம் (ஸாவாதீயஃ) (சாகாதிலய:) என்ற சப்தத்தினால் வெளிபாகிறது. அத்துடன் ஆசார்ய பதவியில் அமர்ந்திருக்கப்பட்ட புருஷனுக்கு வேத ஸம்பத்தி மிகவும் முக்யமானது என்பதை ஆசார்ய லக்ஷணத்தைச் சொல்லும் சாஸ்த்ரமானது தெரிவிக்கின்றது.

आचार्ये वेदसंपन्नः विष्णुभक्तो विमत्सरः ।
मन्त्रज्ञः मन्त्र भक्तश्च सदा मन्त्राश्रयः शुचिः ॥
गुरुभक्तिसमायुक्तः पुराणज्ञो विशेषतः ।
एवं लक्षणसंपन्नः गुरुरित्यभिधीयते ॥

ஆசார்யே வேதஸம்பந்நः விஷ்ணுபக்தோ விமத்ஸரः ।
மந்த்ரக்ஞः மந்த்ர பக்தச்ச ஸதா மந்த்ராச்ரயः சுசிः ॥
குருபக்திஸமாயுக்தः புராணக்ஞோ விசேஷதः ।
ஏவம் லக்ஷணஸம்பந்நः குருரித்யபி தீயதே ॥

என்ற சாஸ்த்ரத்தினல் ஆசார்யன் வேதத்யானம் செய்தவனுயும்; விஷ்ணு பக்தியோடு கூடினவனுயும்; தன்னைக்காட்டிலும் வைதுஷ்யம் அதிகமான வித்வான்களிடத்தில் மாத்ஸர்யம் இல்லாதவனுயும்; மந்த்ர ரஹஸ்யங்களை அறிந்தவனுயும்; மந்த்ர ஜபத்தில் நம்பிக்கையுள்ளவனுயும்; தான் எப்பொழுதும் அந்த மந்த்ரத்தை ஜபிக்கிறவனுயும்; தன்னுடைய குருவினிடத்தில் பக்தி உள்ளவனுயும்; பதினெட்டுப் புராணங்களையும் நன்முகப் படித்து அறிந்தவனுயும்; சிஷ்யனுடைய அக்ஞானத்தைப் போக்கும் ஞான மஹிமையோடு கூடினவனுயும் இருப்பவனே ஆசார்யனுக ஆகயோக்யதை உள்ளவன் என்று தெரிகிறபடியினல், அந்த பரிபூர்ணமான ஆசார்யனுடைய லக்ஷணமானது शाखानिलयः (ஶாவாநிலயः) (ஸாகாநிலயः) என்ற பதத்தினல் சொல்லப்படுகிறது. सहृदः (ஸுஹ்ருதஃ) (ப்ரஹ்ருஷ்டः) ஆசார்யன் எப்பொழுதும் ஸந்துஷ்டமான ஹ்ருதயத்தோடு கூடினவனுக இருக்கவேண்டும். இதனல் எப்பொழுதும் சிஷ்யர்களுக்கு ஸேவிக்கத் தகுந்தவனுக ஆகக்கூடும்.

आह्लाद शीतनेलाम्बुः पुलकीकृतगात्रवान् ।
सदा परगुणाविष्टः द्रष्टव्यः सर्वदेहिभिः ॥

ஆஹ்லாத ஶீதநேத்ராம்பு: புலகீக்ருதகாத்ரவாந் ।
ஸதா பரகுணாவிஷ்ட: த்ரஷ்டவ்ய: ஸர்வதேஹிபி: ॥

என்ற வசனத்திலுல் ஆசார்ய புருஷனுக இருப்பவர்கள் எப்பொழுதும் பரம ஆஹ்லாதத்தோடு கூடியவர்களாயும்; 'ஆனந்தாச்ரு' என்ற அம்ருதத்திலுல் பூரிக்கப்பட்ட நேத்ரத்தோடு கூடினவர்களாயும்; ரோமஞ்சத்தோடு கூடின தேஹத்தோடு கூடினவர்களாயும்; அந்நிய ஜனங்களிடத்திலுள்ள குணத்தை மாத்திரம் க்ரஹிக்கிறவர்களாயும் இருக்க வேண்டும். அப்படியாலுல்தான் ஸகலமான ப்ராணிகளாலும் தர்சிக்கத் தகுந்த மஹிமையோடு கூடினவர்களாக ஆகுவார்கள் என்ற லக்ஷணமுள்ள பரம புருஷன் என்றும் **सहृदः** (ஸஹ்ருதய:)(ப்ரஹ்ருஷ்ட:) என்ற பதத்திலுல் வெளியாகிறது.

पुनः पुनश्चोत्तमसान्त्ववादी (புந: புநஶ்சோத்தமஸாந்த்வவாதீ) (புந: புநஶ்சோத்தமஸாந்த்வவாதீ)उत्तमः உத்தம:)(உத்தம:)என்ற பதத்திலுல் उत्तमः पुरुषस्त्वन्यः परमात्मेत्युदाहृतः (உத்தம: புருஷஸ்த்வந்ய: பரமாத்மேத்யுதாஹ்ருத:) (உத்தம: புருஷஸ்த்வந்ய: பரமாத்மேத்யுதாஹ்ருத:) என்ற கீதா வாக்யத்திலுல் பரமாத்மா என்ற பொருளை அறிந்துகொள்ளவும். அந்த பரமாத்மாவைப் பற்றியுள்ள ஸாந்த்வ வசனம், அதாவது, ஸமாதான வார்த்தை, ரஹஸ்யமான உபதேசம். இதைச் சிஷ்யர்களுக்குச் சொல்லுகிறவனே உத்தமஸாந்த்வாதியாகுவான்.

त्वं मे अहं मे कुतस्तत् तदपिकुत इदं वेद मूलप्रमाणात् ।
एतच्चानादि सिद्धात् अनुभव विभवात् तर्हि साक्रोश एव ॥
काक्रोशः कस्य गीतादिषु मम विदितः कोत्र साक्षी ।
सुधी स्यात् हन्त त्वत्पक्षपाती स इति नृकलहे मृग्यमद्धयस्थवत्वम् ॥

கூம் ஒ கூஹம் ஒ கூ தவ்ஹ்

தஉவிகூ த ஜஉம் வெஉ உமுபூ உணாகூ ।

வத அஹ்ராநாஹி விஜாகூ கூ நூ ஹவ

ஷ்ஹவாகூ கஹ்ரி ஷ்ரா வ்ரோபா வவ ॥

க்ரோபாஃ கவ்ய மீதாதிஷ்டூ

உஉ விதிதஃ கோத்ர வாகூஷீ ॥

வ்ரூயீ வ்யாகூ வஜ்ஞ கூத கூஷீவாதீ

வ ஜுதி நுகுமுவெ உ ழுஉ ஸ்ரீவ்வகுழ ॥

த்வம் மே அஹம் மே குதஸ்தத் ததபிகுத இதம் வேத மூலப்ரமாணத் ।

வதச்சாநாதி விதாத் அநுபவ விபவாத் தர்ஹி ஸாக்ஷோ ஏவ ॥

க்வாக்ஷோ: கஸ்ய தீதாதிஷ்டூ மம விதிதஃ கோத்ர ஸாகூஷீ ।

ஸ்ரூதீ ஸ்யாத் ஹந்த த்வத்பகூபாதீ ஸ இதி ந்ருகலஹ்ரே ம்ருக்யமத்யஸ்த

வத்வம் ॥

பகவானுடைய விஷயத்தில் மனுஷ்யர்களுக்கு விவாதம் ஏற்படுகிறது. அதாவது, ஒரு மனிதன் பகவத் பக்தியினுடைய மஹிமையினால் தனது ஆத்மஸ்வரூபத்தை பரப்ரம்மமாகவே ஸாக்ஷாத்காரித்துக் கொண்டு தன்னையும், ஜகத்தையும் பரமாத்மாவின் ஸ்வரூபமாகவே அனுபவிக்கிறவனாக ஆகிவிட்டான். அந்த மஹாபுருஷன் ஒரு ஸமயத்தில் ப்ரார ப்த கர்மாவினுடைய ஆதினமாக ஏதோ ஒரு புண்யகேஷத்ரத்தில் பகவானுடைய ஸந்நிதியில் நின்றுவந்தான். ஆனால் அந்த மூர்த்திக்கு யாதொருவிதமான உபசாரங்களையும் செய்யவில்லை. பகவானே அவனுடைய ஞானமஹிமையை வெளிபடுத்தவேண்டு மென்ற உத்தேசத்துடன் அந்த ப்ரதிமையிலிருந்தும் ஆவிர்ப்பவித்து அந்த வித்வானைப் பார்த்துக் சொல்லுகிறார்: த்வ மே = (கூம் ஒ) (த்வம் மே) நீ என்னுடைய மனிதனல்லவா? அதாவது, நான் உனக்கு ஸ்வாமி, நீ என்னுடைய ப்ருத்யன்; அப்படி இருக்கும்பொழுது உனக்கும் நமக்கும் உள்ள ஸேவ்யஸேவகபாவத்தை ப்ரகாசப்படுத்தாமல் தண்டவத்தாக நின்றுவருகிறாயே; அது ந்யாயமாகுமா?" என்றார். இதற்கு இந்த வித்வான் அஹ மே (அஹ. ஒ) (அஹம் மே) நான் என்னுடைய அதீன

மன்னியில் மற்றவனுக்கு ப்ருத்யனாக மாட்டேன். எனக்கு வேறான மற்றவனும் இல்லை, அப்படியிருக்க யார் ஸேவ்யன்? யார் ஸேவகன்? ஸேவ்யஸேவகபாவ ஸம்பந்தத் திற்கே அவகாசமில்லை" என்றான். "நீ ஸேவ்யன் நான் ஸேவ கன் என்பதில் என்ன ப்ரமாணம்" என்ற அபிப்ராயத்துடன் कुतस्त्वत् (கூதஸ்த்வத்) (குதஸ்தத்) எங்கிருந்து அந்த பேதம் ஏற்பட்டது என்று பகவானைப் பார்த்து அந்த வித்வான் ப்ரச்னம் செய்தான். பகவானும் அந்த வித்வானைப் பார்த்து, "உனக்கும் எனக்கும் பேதமில்லை; அபேதம்தான் என்ற ஸித்தாந்தமும் எந்த ப்ரமாணத்தினால் ஏற்பட்டது? நீதான் அந்த ப்ரமாணத்தை முன்பாக நிரூபணம் செய்" என்றார். அதற்குபதிலாக வித்வானே, "वेदमूलप्रमाणात् (வேதமூலப்ரமாணாத்) (வேதமூலப்ரமாணத்) என்ற பதத்தினால் மூல ப்ரமாணமான तत्त्वमसि (தத்த்வமஸி) (தத்வமஸி) என்பது முத லான அபேத ச்ருதிகளைக்கொண்டே நீயும் நானும் ஒன்று என்ற ஐக்யத்தை நான் ஸாதிக்கின்றேன்" என்றான். ஈச் வரனும் அதைக் கேட்டவுடன் அந்த வித்வானைப் பார்த்து "நான் உபாஸ்யன், நீ உபாஸகன் என்ற உனக்கும் நமக்கும் உள்ள ஸேவ்யஸேவக பாவமும், அனுதிகால ஸித்தமான அனுபவம் என்ற ப்ரத்யக்ஷ ப்ரமாணத்தினால் ஏற்பட்டதே" என்றார். இதைக் கேட்ட இந்த வித்வானும் ஆகமத்தினால் ஐக்யம் ஸித்தமாக இருக்கும்பொழுது, ப்ரத் யக்ஷத்தினால் ஆகமத்திற்கு விரோதமாக ஜீவேச்வரபேதத்தை ஸாதிக்கிறவர்கள் துராக்ரஹத்தோடு கூடியவர்கள்தான் என்று தீர்மானிக்கவேண்டும்" என்று சொன்னான். அதற்குப் பதிலாக பகவானும் யாருக்கு எந்த விஷயத்தில் ஆக்ரோசம்? கீதை முதலிய சாஸ்த்ரங்களில் என்னுடைய ஸ்வரூபம் நித்ய ஸேவ்யம் என்றே

मन्मनो भव मद्भक्तः मद्याजी मां नमस्कुरु ।
मामेवेष्यसि सत्यं ते प्रतिजाने प्रियोसि मे ॥
ममैवांशो जीवलोके जीवभूतः सनातनः ।

ஸர்வதர்மான் பரித்யஜ்ய மாமேகம் சரணம் வ்ரஜ
அஹம் த்வா ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மா ஸுச: ।

மந்மநா பவ மத்பக்தோ மத்யாஜீ மாம் நமஸ்குரு ।
மாமேவைஷ்யஸி ஸத்யம் தே ப்ரதிஜாநே ப்ரியோஸி மே ॥

மனமவாம்சோ ஜ்ஞவலோகே ஜ்ஞவபூத: ஸநாதந: ॥

என்பது முதலான சாஸ்த்ரங்களே ஜீவேச்வரபேதத்தில் ப்ரமாணமாக ஆகாதா?" என்றார். இந்த வித்வானே "அந்த சாஸ்த்ரங்கள் லோகஸித்தமான பேதத்தை அநுவதம் செய்கிறதா, அல்லது ஜீவேச்வரபேதத்தையே தாத்பர்யத் தோடு நிரூபணம் செய்வதற்காக ஏற்பட்டதா என்பதை விசாரித்தால், அநுவாத சாஸ்த்ரமாக ஆகுமன்னியில் விதி ரூபமாக ஆகாது.

क्षेत्रज्ञं चापि मां विद्धि; सर्वधर्मान्परित्यज्य मामेकं शरणं व्रज

ஸர்வதர்மாந் பரித்யஜ்ய மாமேகம் சரணம் வ்ரஜ

என்பது முதலான சாஸ்த்ரங்களில் ஜீவேச்வர ஐக்ய மானது போதிக்கப்படுகிறபொழுது, ஐக்யத்தைப் போதிக்கிற வாக்யம் அபூர்வமான அர்த்தத்தைப் போதிக்கும் காரணத்தினால் நிரவகாசமாக ஆகி ப்ரபல சாஸ்த்ரமாக விளங்கும்பொழுது, லோகப்ரஸித்தமான ஜீவேச்வர பேதத்தைச் சொலலுகிற சாஸ்த்ரம் ஞாதமான அர்த்தத்தைச் சொல்லும் காரணத்தில் வ்யவஹாரதசையில் ஸாவகாசத்தை அடைந்து துர்ப்பல ப்ரமாணமாக ஆனதினால், ஜீவேச்வர பேதத்தை ப்ரபோதிக்கிற விஷயத்தில் தாத்பர்யம் உள்ளவை யாக ஆகாது. அந்த சாஸ்த்ரமும் ஜீவேச்வர பேதத்தில் தாத்பர்யம் உள்ளதுதான் என்பதற்கு யார் ஸாக்ஷி?" என்றான். பகவானே ஸுச: (ஸுசி) (ஸுதி) என்ற பதத் தினால் "வித்வான்களே ஸாக்ஷி" என்றார். அதற்குப் பதிலாக

இந்த வித்வானே, "கீதா சாஸ்த்ரத்திலுல் ஜீவேச்வர பேதத்தை ஸாதிக்கிற வித்வான்கள் ஏதோ உன்னிடத்தி லிருந்தும் ப்ரயோஜனத்தை எதிர்பார்த்து உன்பக்கமாகப் பேசுகிற உன் பக்ஷபாதிகள். மத்யஸ்த பதவிக்கு அவர்கள் அர்ஹதை உடையவர்கள் அல்ல. ஆகையிலுல் ஜீவேச்வர பேதத்தை நீ சொல்லுகிறபடி, நீதான் சொல்லிக்கொண்டு இருக்கவேண்டும். அபேதத்தை நான் ஸித்தாந்தித்த ப்ரகாரம் நான் ஒப்புக்கொண்டுதான் தீரவேண்டும். இதை நிஷ்பக்ஷபாதியாக இருந்துகொண்டு ஸித்தாந்தம் செய்கிற மத்யஸ்தர்களைத் தேடித்தான் பிடிக்கவேண்டும். பேத அபேத வாதிகளுடைய கலஹத்தில், மத்யஸ்த பாவத்தை வஹித்துக்கொண்டு ஸமாதானம் செய்யும் சக்தியுள்ள மஹா புருஷனே 'உத்தம ஸாந்த்வவாதி' என்று சொல்லப்படுவான். அவன் சொல்லுகிற ஸாந்த்வ வசனமோ

यमो वैवस्वतो राजा यस्तवैष हृदिस्थितः ।
तेन चेदविवादस्ते मागङ्गां मा कुरूनगम ॥

யமோ வைவஸ்வதோ ராஜா யஸ்தவைஷ ஹ்ருதிஸ்திதः ।
தேந சேதவிவாதஸ்தே மாகங்காம் மா குருந்கம ॥

என்ற வசனமே. அதாவது காலகாலகனான பரமேச்வரன் ப்ராணிகளுடைய ஹ்ருதய புண்டரீகத்தில்

ईश्वरस्सर्व भूतानां हृद्देशे अर्जुनतिष्ठति ।
भ्रामयन्सर्वभूतानि यन्त्रारूढानिमायया ॥

ஈச்வரஸ்ஸர்வபூதானாம் ஹ்ருத்தேசே அர்ஜுனதிஷ்டதி ।
ப்ராமயன்ஸர்வபூதானி யந்த்ராரூடானி மாயயா ॥

என்ற சாஸ்த்ரத்தை அனுஸரித்து வாஸம் செய்கிறார். அந்த ஈச்வரனோடு கூட இந்த ஜீவனுக்கு விவாதம் இல்லாமல் இருந்தால், அதாவது விவாதம் என்பது இருவர்களுக்குள் ஏற்பட்ட கலஹமாகும், அந்த கலஹமானது இருவர்கள் என்ற பாவம் இருக்கும் வரையில் ஓயாது. ஈச்வரனே தான், தானே ஈச்வரன் என்ற ஐக்யப்ரதிபத்தி வந்தால்தான் கலஹம் தொலையும். இதனல் ஈச்வரனோடு உனக்கு விவாதம் இல்லாமல் இருக்கும் பக்ஷத்தில் என்றதினல், ப்ரம்மத்தோடு ஜீவனுக்கு ஐக்யப்ரதிபத்தி ஏற்பட்டுவிட்டால், கங்கை, குரு க்ஷேத்ரம் முதலிய தீர்த்தாடனம் செய்யவேண்டிய அவச்யமே ஏற்படாது; அதாவது க்ருதக்ருத்யனாக ஆகி விடுகிறான். ஜன்மாந்த்ரத்திற்குக் காரணமான ஸர்வகர்மக்ஷயம் ஏற்பட்டு விடுகிறது.

भिद्यते हृदयग्रन्थिः छिद्यन्ते सर्वसंशयाः ।
क्षीयन्ते चास्य कर्माणि तस्मिन्दृष्टे परावरे ॥

ஹித்யதே ஹ்ருதயக்ரந்திः சித்யந்தே ஸர்வஸம்சயாः ।
க்ஷீயந்தே சாஸ்ய கர்மாணி தஸ்மிந்த்ருஷ்டே பராவரே ॥

என்ற சாஸ்த்ர ப்ரகாரம் ஸகலகர்ம்ய விதிலையை அடைந்துவிட்டான் என்ற உபதேசத்தை அந்தப் பரம குரு வானவன் சிஷ்யனுக்குச் செய்து ஈச்வரனுக்கும் ஜீவனுக்கும் ஏற்பட்ட கலஹத்தை நிவர்த்திசெய்து வைக்கிறான். அவ்விதமாக உபதேசிக்கும் ஸாமார்த்யமுள்ள ஆசார்யன்தான் உத்தம ஸாந்த்வவாதியாகுவான். இந்த உபதேசமானது ரஹஸ்யோபதேசமானதினல், ஒரு தடவை சொன்னல் சிஷ்யர்கள் க்ரஹித்துக்கொள்வது கஷ்டமாக இருக்கும் என்று நினைத்துத் திருப்பித் திருப்பி இந்த ரஹஸ்யத்தைச் கொஞ்சமேனும் தான் ஆயாஸத்தை அடையாமல், சிஷ்யர்களுக்கு உபதேசிக்கவேண்டும் என்ற நிர்ப்பந்தத்தையும்

पुनः पुनश्चोत्तमसान्त्ववादी (வாநः வாநப்ரோத்தமஸாந்த்வவாதீ) (புந புநச்சோத்தமஸாந்த்வவாதீ)என்ற வாக்யமானது வற்புறுத்து கின்றது. ஒரு பூமியில் க்ருஷியைச் செய்கிற கர்ஷகன் ஒரு வருஷத்தில் தான் பயிரிட யத்னம் செய்து அது பலிக்கவில்லை என்பதற்காக இந்த க்ருஷியை விட்டு விடமாட்டான். மறு வருஷமும் ப்ரயத்னம் செய்யத்தான் செய்வான். அப்படி இரண்டொரு வர்ஷங்கள் நஷ்டத்தை எதிர்பார்க்காமல் யத்னம் செய்து வந்தானேயாகில் முன் வருஷங்களில் ஏற்பட்டிருக்கும் நஷ்டங்களையும் சேர்த்துப் பரம லாபத்தை அவன் அந்த க்ருஷியிலிருந்தும் அடைந்துவிடலாம். அதுபோல் ஆசார்ய ஸ்தானத்திலுள்ள வன் தான் ஒரு தடவை உபதேசம் செய்ததை சிஷ்யன் ஸரியாக க்ரஹிக்கவில்லை என்பதற்காக அந்த சிஷ்யனை விட்டுவிடமாட்டான். பல தடவைகளில் திருப்பித் திருப்பிச் சொல்லி அந்த சிஷ்யனை க்ருதார்த்தனாகவே ஆக்கிவிடுவான். அப்படிச் செய்கிறவன்தான் ஆசார்ய பதவிக்கு அர்ஹதை உள்ளவன் என்பதும் पुनः पुनश्चोत्तमसान्त्ववादी (வாநः வாநப்ரோத்தமஸாந்த்வவாதீ) (புநः புநச்சோத்தமஸாந்த்வவாதீ) என்ற வாக்யத்தினால் வெளியாகிறது. இதனால் பகவானைக்காட்டிலும் ஆசார்யன் மேலானவன் என்பதும் ப்ரகாசமாகிறது. பகவானே, அர்ஜுனனுக்குக் கீதையை உபதேசம் செய்தார். அர்ஜுனன் அந்தக் கீதையை காலக்ரமத்தில் மறந்துவிட்டான். பிறகு அச்வமேத யாகம் நடக்கும் காலத்தில் பகவானுடைய ஸந்நிதியில் தனக்குப் பகவானால் உபதேசிக்கப்பட்ட கீதையை, தான் மறந்தது தப்பு என்று நினைத்து மறுபடியும் உபதேசம் செய்துகொள்ள வேண்டுமென்று விநயத்துடன் கேட்டான். பகவானே 'நான் மறுபடியும் சொல்லமாட்டேன்' என்று சொல்லி விட்டார். அது மாத்ரமல்ல; नूनं अश्रद्धानोसि दुर्मेधाश्चासि पाण्डव (நூநம் அச்ரத்தா துர்மேதாச்சாஸி பாண்டவ) "அர்ஜுனா கொஞ்சமேனும் ஸத்விஷயத்தில் உனக்கு ச்ரத்தையே இல்லை,

மேதையும்போதாது. அப்போர்ப்பட்ட உனக்கு நான் மறுபடியும் சொல்லி என்ன ப்ரயோஜனம்" என்று அர்ஜுனனை மிகவும் தாழ்மையாகவும் கூறிவிட்டார். இதனால் பகவான் ஒருவனுக்கு உபதேசம் செய்யவே வரமாட்டார். உபதேசித்தாலும் ஒருதடவைதான் சொல்லுவார். சிஷ்யன் தன் மேதையைக் கொண்டு ஜாக்ரதையாக க்ரஹித்துக்கொள்ள வேண்டும். திருப்பிக் கேட்டானேயானால் முடியாது என்று சொல்லிவிடுவார். ஆசார்யனே சிஷ்யனுடைய புத்தியில் பதியும்படி எவ்வளவு தடவைச் சொல்லவேண்டுமானாலும், சொல்லசித்தனாக இருப்பான். இதை அறிந்தால் பகவானைக் காட்டிலும் ஆசார்யன் மேலானவன் என்பது ஸித்தமாகவில்லையா?

கவிரவும், सुस्वागतं वाचं उदीरयान: (ஸுஸ்வாகதாம் வாசம் உதீரயாந:)(ஸுஸ்வாகதாம் வாசம் உதீரயாந:)सु (ஸு) (ஸுவ்) ஸம்ப்ரதாயத்திற்குக் கொஞ்சமேனும் எப்படி விச்சேதம் வராமலிருக்குமோ அப்படி ஆசார்ய பரம்பரையிலிருந்தும் தனக்குக் கிடைத்த அஷ்டாக்ஷரம் முதலிய மந்த்ரராஜரூபமான வாக்கை ப்ரதிப்ரயோஜனத்தை எதிர்பார்க்காமலும் பரம கருணையினால் உபதேசிக்கிறவனே ஆசார்யனென்று மேற்சொன்ன வாகயத்தினால் பொருள் வெளியாகிறது. இதனால் சிஷ்யனுக்கு ஆசார்ய பரம்பரையினுடைய ஞானமும் அவச்யம் இருக்கவேண்டும். அப்படியானால்தான் அந்த ஞானம் மோக்ஷம் என்ற பலனை அளிப்பதில் ஸாமர்த்யம் உள்ளதாக ஆகும் என்பதும் வெளியாகிறது.

पुनः पुनश्चोदयतीव (புந: புநஸ்சோதயதீவ)(புந: புநஸ்சோதயதீவ) தான் உபதேசித்த அர்த்தத்தை சிஷ்யன் ஸரியாக அறிந்துகொண்டானா என்பதைத் தெரிந்து கொள்வதற்குத் திருப்பித் திருப்பிச் சிஷ்யனைப் பார்த்து "விஷயம் புரிந்ததா? திருப்பிச் சொல்லு பார்ப்போம். இந்த தத்வம் மிகவும் கடினமானதினால் அடிக்கடி அனுஸந்தானம் செய்யவேண்டும்" என்று சிஷ்யனை சாஸிப்பான். அப்படி

சாஸிக்காமல்போனல் தான் செய்த உபதேசமும் வீணாகவே ஆகிவிடுமல்லவா! स्खालित्ये शासितारं (ஸ்காலித்யே சாஸிதாரம்) என்றும் சாஸ்த்ரமானது சிஷ்யன் சலிக்காமலிருக்க அடிக்கடி ஆசார்யன் சாஸித்துக்கொண்டு வரவேண்டும் என்று சாஸ்த்ரமானது சொல்லுகிறது. அவ்விதமான உத்தம சிஷ்யனை சாஸித்துத் தான் உபதேசித்த அர்த்தத்தை திருப்பிச் சொல்லிவிட்டானேயானால் அதனால் ஆசார்யனுக்கு ஏற்படுகிற பரம லாபமோ, பரம ஸந்தோஷம்தான் என்றதையும் हृष्टः (ஹ்ருஷ்டः) (ஹ்ருஷ்ட:) என்ற பதமானது ஸூசிப்பிக்கின்றது. அங்ஙியில் ப்ரபூதமான தனத்தைக் கொடுத்து ஆசார்யனுடைய மனதை ஸந்தோஷிக்கச் செய்யமுடியாது என்பதும் வெளியாகிறது. இவ்விதமான ஸந்தர்ப்பத்தினால் தாரக ப்ரம்மமாகிற ராமனுடைய அருகிலேயே அனுதினகாலமாக நித்யானந்தத்தை அனுபவித்து வந்த ஸீதையென்ற ஜீவதத்வத்திற்கு மாரீசன் மான்வேஷம் போட்டுக்கொண்டு வ்யாமோகப்படுத்திய காலத்தில் பொய்யான விஷயாதிகளில் ப்ராவண்யம் ஏற்பட்ட காரணத்தினால் தாரக ப்ரும்மமாகிய ராமனையும் விட்டுப் பிரியும்படியான துர்த்தசை ஏற்பட்டு அவிவேகமாகிய ராவணனுடைய பாரவச்யத்தையும் அடைந்து, ஜடாயுஸ்ஸினுடைய யுத்தம் பலிக்கவில்லை யென்ற காரணத்தினால் கர்மாக்களினால் ஜீவனுக்கு அவிவேகத்தினின்றும் முக்தி கிடையாது என்பது ஸித்தமாகி, ஸம்ஸார ஸமுத்ரத்தினுடைய நடுவில் பாஞ்ச பௌதிகமான சரீரமென்ற வங்கா நகரத்தில் புத்தி என்ற சிம்சுபா வ்ருக்ஷத்தினுடைய மூலத்தில் ஹ்ருதயமென்ற அசோகவனத்தில் இந்த்ரிய வ்ருத்தியாகிற ராக்ஷஸஸ்த்ரீகளுடைய நிர்ப்பந்தத்திற்கு உட்பட்டு ஆத்யாத்மிகம், ஆதிதைவிகம், ஆதி பௌதிகம் என்ற தாபத்ரயத்தினால் பரம துக்கத்தையும் அனுபவித்துக்கொண்டு வருகிற ஜீவனுக்கு, ஆசார்ய புருஷனுடைய அதீனமாக துக்க நிவ்ருத்தியும், ப்ரம்மானந்தாவாப்தியும், ஏற்படவேண்டுமென்கிற சாஸ்த்ரத்தையும் அனுஸரித்து இந்த ஸீதையென்ற ஜீவன்

உத்தம ஜீவனைபடியிலல் பாகவதோத்தமனைதிலும், பகவானுடைய ஆக்ஞாலுஸாரியான பரமாசார்யனே ஆஞ்சனேய ஸ்வாமி உருவமாக ஸீதையென்ற ஜீவனை மேற் சொன்ன துக்கத்திலிருந்தும் விமோசனம் செய்துவைக்க த்தேவாபதேசம் செய்யக் கருணையுடன் ஆவிர்பவித்தார் என்ற வ்யங்க்யார்த்தமானது पक्षी च शाखानिलयः प्रहृष्टः (பக்ஷீ அபாவாநிலயः ஹ்ருஷ்டः) (பக்ஷீ ச சாகாநிலயः ப்ரஹ்ருஷ்டः) என்ற ச்லோகத்திலல் ப்ரகாசிக்கின்றது.

सा राक्षसेन्द्रस्य वचो निशम्य तद्रावणस्याप्रियं अप्रियार्ता ।
सीता वितत्रास यथा वनान्ते सिंहाभिपन्ना गजराजकन्या ॥

ஸா ராக்ஷஸேந்த்ரஸ்ய வசோ நிசம்ய
தத்ராவணஸ்யாப்ரியம் அப்ரியார்த்தா ।
ஸீதா வித்த்ராஸ யதாவநாந்தே
ஸிம்ஹாபிபந்நா கஜராஜகந்யா ॥

மேற்கண்டபடி ஸீதாதேவிக்குப் பாவியான ஸௌபாக்யத்தை சுபமான நிமித்தங்கள் ஸூசிப்பித்தாலும்கூட ராக்ஷஸஸ்த்ரேஷ்டனான ராவணன் ஸீதையைப் பார்த்து முன்பு பருஷமாகப் பேசின வார்த்தைகளை நினைக்கும்பொழுது ஸீதையானவள் உலகத்திருஷ்டியை அனுஸரித்து மிகவும் துக்கத்தை அடைந்தாள். நிர்ஜனமான அரண்யத்தில் ஒரு பெண் யானையானது ஸிம்ஹத்தினல் சூழப்பட்டிருந்தால் எவ்விதம் தபிக்குமோ, அவ்விதம் ஸீதையானவள் தபித்தாள். அந்த ஸந்தர்ப்பத்தில் ஸீதைக்குத் தான் மரித்துவிட்டால் மேதவலை என்றுகூட எண்ணம் உதித்தது. அகாலத்தில் ம்ருத்யு துர்லபம் என்ற சாஸ்த்ரத்தை யனுஸரித்து மனதை ஸமாதானம் செய்துகொண்டாள். இவ்விதமான துக்கத்திற்குத்

தனக்கு அவகாசத்தைக் கொடுத்துத் தன்னை ரக்ஷிக்காமல் விளம்பம் செய்கிற ராமனை அடிக்கடி நினைத்து மிகவும் வருந்தினள்.

अनन्यदैवत्वं इयं क्षमा च
भूमौ च शय्या नियमश्च धर्मे ।
पतिव्रतात्वं विफलं ममेदं
कृतं कृतघ्नेष्विव मानुषाणाम् ॥

அநந்யதைவத்வம் இயம் க்ஷமா ச
பூமௌ ச சய்யா நியமச்ச தர்மே ।
பதிவ்ரதாத்வம் விபலம் மமேதம்
க்ருதம் க்ருதக்நேஷ்விவ மானுஷாணாம் ॥

"ராமா, உன்னைத்தவிர எனக்குப் பூஜிக்கத் தகுந்த தேவதையே வேறொன்றுமில்லை என்று நினைத்துத் தானே सहपत्न्या विशालाक्ष्या नारायणं उपागमत् (ஸஹபத்ன்யா விசாலாக்ஷ்யா நாராயணம் உபாகமத்) (ஸஹபத்ன்யா விசாலாக்ஷ்யா நாராயணம் உபாகமத்) என்று அயோத்யாகாண்டத்தில் சொல்லியபடி நீ நாராயணனைப் பூஜிக்கும்பொழுது உனக்குப் பரிசாரிணியாக நான் இருந்துவந்தேனே தவிர நான் ஸ்வயமாக ஏதாவது பூஜைகளைச் செய்தேனு? பதிவ்ரதா ஸ்த்ரீகளுக்கு பர்த்ரு சிச்ரூஷையைத் தவிர, பர்த்தாவிற்குப் பரிசர்யை செய்வதைத் தவிர தான் ஸ்வயமாக ஒரு வ்ரதாதிகளை அனுஷ்டிப்பதில் அதிகாரம் கிடையாது. அந்த சாஸ்த்ரத்தை அனுஸரித்து உன்னையே தெய்வமாகப் பாவித்துவந்த எனக்கு இவ்விதமான கதி ஏற்படலாமா? அது உனக்கு அழகா? அத்துடன் என்னுடைய பொறுமையையும் நீ கவ

னிக்க வேண்டாமா ? ராவணனை அஸத்யமான பருஷமான வார்த்தைகளைப் பேசி என்னை துக்க ஸாகரத்தில் மூழ்கச் செய்தான். ராவணனுடைய ஆக்ஞையை அனுஸரித்து ராக்ஷஸ ஸ்த்ரீகளும் பருஷமான வார்த்தைகளைப் பேசி என்னை ஹிம்ஸித்தார்கள். அவைகள் எல்லாவற்றையும் உன்னுடைய மதுரமான ஆலாபங்களைக் கேழ்க்கும்படியான பாக்யம் வருமென்ற எண்ணத்துடன் ஸஹித்துக்கொண் டிருக்கும் என் பொறுமையை நீ கவனிக்க வேண்டாமா ? அத்துடன் பூமியில் நான் சயனம் செய்துகொண்டு கஷ்டப் படுவதையும் நீ கவனிக்கவேண்டும். உன்னுடைய மடியில் நான் படுத்துக்கொண்டு ஸுகமாக நித்ரை செய்யும் காலம் ஸித்திக்காமலே ஆகிவிடுமா என்று எண்ணிக்கொண்டல் லவா பூமி சயனத்தையும் ஸஹித்துக்கொண்டு வருகிறேன். **नियमश्च धर्मे** (நியமச்ச தர்மே) தர்மத்திலுள்ள நியமத்திற்கு என்னல் பங்கம் வரக்கூடாதென்ற எண்ணத் துடனும் நான் இருந்து வருகிறேன். ராவணனை என்னு டைய பாதிவ்ரத்யத்தினல் பஸ்மமாகச் செய்துவிடுகிறது என்று நான் நினைத்தால் முடியாதா ? நீ ஸர்வ ஜனங்களுக்கும் ரக்ஷகனாக இருக்கும்பொழுது என் விஷயத்திலும் நீயே ரக்ஷ கன் என்று நான் நினைத்து உன்னிடத்திலுள்ள ரக்ஷகஸ்வ ரூபம் என்கிற பரம தர்மத்திற்குப் பங்கம் வரக்கூடாது என்று நினைத்துதான் ராவணனை நான் பஸ்மமாகச் செய்யாம லிருந்துவருகிறேன். அதற்கும் நீ என்னிடத்தில் க்ருதக்ரு தனையைப் பாராட்டவேண்டும். **पतिव्रतात्वं** (பதிவ்ரதாத்வம்) (பதிவ்ரதாத்வம்) உன்னைத் தெய்வமாக வைத்து பூஜிப்பதைத் தவிர வேறு ஒரு வ்ரதத்தை யும் நான் அனுஷ்டானம் செய்தவளல்ல ; யாரிடத்தில் நான் பேசினாலும், எனக்கு வ்ரதம் பார்த்தாவினுடைய பரி சர்யைதான் என்று நான் சொல்வதுண்டு. **एतद्व्रतं मम** (ஏதத்வ்ரதம் மம) (ஏதத்வ்ரதம் மம) என்று நான் கர் ஜிக்கவில்லையா ? அந்தப் பாதிவ்ரத்ய வ்ரதமானது விபலமாக ஆகிவிட்டதே. அவ்விதமாகலாமா ? **कृतं कृतघ्नेष्विव मानुषाणां** (க்ருதம்

கூதவ்வஷிவ ஊநஷாணாம) (க்ருதம் க்ருதக்நேஷ்விவ மாநு ஷாணம்) மனிதர்களுக்குள் ஒருவன் மற்றொருவனுக்கொரு உபகாரத்தைச் செய்தால் அதற்கு ப்ரத்யுபகாரம் செய்வது என்ற ஸ்வபாவம் மிகவும் குறைந்தது. க்ருதக்நர்கள் என்று சொல்லவேண்டுமானல் மனிதர்களைத்தான் சொல்ல வேண்டும். आत्मानं मानुषं मन्ये (கூதாநம் ஊநஷம் மந்யே) (ஆத்மாநம் மாநுஷம் மந்யே) என்று உன்னுடைய நிர்மானம் ஆனதினல் மனித ஸ்வபாவத்தை அனுஸரித்து க்ருதக்னதையை நீ பாராட்டுகிறாயோ என்று நினைக்கக்கூடியதாக இருந்து வருகிறது. இவைகளுக்கெல்லாம் காரணம் உன்னிடத்தில் யாதொரு தோஷமும் இல்லை; என்னுடைய துஷ்க்ருதம்தான் காரணமாகும். இனிமேலாவது இவ்விதம் நீ என்னை உபேக்ஷிக்காமல் துக்கத்தினின்றும் விமோசனம் செய்துவைக்க வேண்டும். நீ என்னை உபேக்ஷிப்பதினல் நான் உன்னை எப்படி நினைக்கவேண்டியதாக இருக்கின்றது என்றால்,

पितुर्निदेशं नियमेन कृत्वा वनान्निवृत्तः चरितव्रतश्च ।
स्त्रीभिस्तु मन्ये विपुलेक्षणाभिः त्वं रम्यसे वीतभयः कृतार्थः ॥

பிதுர்நிதேசம் நியமேந க்ருத்வா
வநாந்நிவ்ருத்தः சரிதவ்ரதச்ச ।
ஸ்த்ரீபிஸ்து மந்யே விபுலேக்ஷணாபிः
த்வம் ரம்ஸ்யஸே வீதபயः க்ருதார்த்தः ॥

பிதாவினுடைய ஆக்ஞையை புஷ்கலமாக நிறைவேற்றிவிட்டு வன்ய வ்ருத்தியினின்றும் நிவ்ருத்தனாக ஆகி, विपुलेक्षणाभिः (விபுலேக்ஷணாபிः) (விபுலேக்ஷணாபி:) விசாலமான நேத்ரத்துடன் கூடிய காரணத்தினல் அதிஸுந்தரி

களான ஸ்த்ரீகளோடுகூட ரமித்து வருகிறாயோ, வன வாஸ பயமும் இல்லாமல் ஸர்வ புருஷார்த்தத்தையும் அடைந்து வேறு உத்தம ஸ்த்ரீகளையும் நீ உத் வாஹம் செய்துகொண்டு ஸுகமாக ரமிக்கிறாயோ என்று தான் ஊஹிக்கக்கூடியதாக இருந்துவருகிறது. இல்லாவிடில் என்னை நீ இவ்விதம் உபேக்ஷிக்கக் காரணமேயில்லை. இதனால் ஸ்ரீராமபிராஜுக்கு ஏகபத்னீ வ்ரதபங்கம் வருமா என்று யோசிக்கவேண்டும். ஸீதை சொன்னதற்காக அவ்விதமே ஸ்ரீராமன் அன்னிய ஸ்த்ரீகளோடு க்ரீடிக்கிறார் என்ற தாத் பர்யத்தை க்ரஹித்துக்கொள்ளக்கூடாது. துக்காதிசயத்தி னால், ஸந்தாபத்தை ஸஹிக்கமுடியாமல், ப்ரேமையை முன்னிட்டு ஸீதையானவள் ராமனைப் பார்த்து சொன்ன வார்த்தையாகத்தான் இது ஆகக்கூடும். பிறகு யுத்தகாண் டத்தில் நவபாஷாணம் என்ற மஹா க்ஷேத்ரத்தில் பகவான் ஸமுத்ரராஜனுக்குப் ப்ராயோபவேசம் செய்யும் ப்ரகர ணத்தில் கிழக்குமுகமாக தர்ப்பைகளைப் பரப்பி அதன்மீது தன்னுடைய இடது புஜத்தை உபதானமாக வைத்துக் கொண்டு சயனம் செய்துகொண்டிருக்கும் ஸமயத்தில் ம்ருது வான பகவானுடைய பாஹுவில் கடினமாயும், கூர்மையா யும் உள்ள தர்ப்பங்களுடைய ஸம்பந்தத்தைக் கவனித்த ஆதி கவிக்கே துக்கம் ஸஹிக்கமுடியாமல்,

भुजैः परनारीणां परिमृष्टमनेकधा

ஹஸ்தைஜ்ஞ: வரநாரீணாம் வரிஷ்டமநேகதா

புஜை: பாஹாரீணம் பரிம்ருஷ்டமநேகதா

என்ற வாக்யத்தினால் உத்தம ஸ்த்ரீகளுடைய ம்ருதுவான புஜங்களினால் வெகு ப்ரகாரமாகப் பிடித்துவிடப்பட்ட கை கள் இப்பொழுது தர்ப்பையின்மீது அமர்ந்திருக்கின்றனவே என்று கஷ்டப்பட்டுக் கூறினார். அதனால் परमनारीणां भुजैः (வரஸ்த்ரீணாம் ஹஸ்தைஜ்ஞ:) (பரமநாரீணம் புஜை:) என்ற பதவாக்யத்தினால் ராமனுக்குப் பல ஸ்த்ரீகள் உண்டு என் பதை நாம் அர்த்தம் செய்துகொள்ளக்கூடாது. அதனால்

ஏகபத்னீ வ்ரதத்வம் என்பதற்கும் பங்கம் நேரிடாது. ஸீதை ஒருவளைத் தவிற ராமனுக்கு வேறு ஒரு ஸ்த்ரீயும் இல்லை. தர்மபத்னிகளும் இல்லை, போக பத்னிகளும் இல்லை. அப்படியானல் எவ்விதமாக இந்த பதவாக்யம் ஒத்துவருமென்று விசாரிக்கவேண்டும். स्त्रीभिः (ஸ்த்ரீபி:) என்ற பதவாக்ய ஸ்வாரஸ்யத்திலும், ராமன் மனிதனல்ல ஸாக்ஷாத் மஹாவிஷ்ணு என்ற தத்வமானது வெளியாகிறது. விஷ்ணுவிற்கோ ஸ்ரீதேவி, பூதேவி, நீலா தேவி, கங்கை, ஸரஸ்வதி, துளஸீ முதலான அநேகம் பத்னிகள் அபராஜிதமான வைகுண்டத்தில் விளங்கி வருகிறார்கள். ப்ரக்ருதத்தில் ஸீதையோ ஸ்ரீதேவியாக ஆகிவிட்டாள். தன்னுடைய மஹிமையைத்தான் ஸ்மரித்துக்கொண்டு ராமனையும் அபராஜிதமான வைகுண்டத்திற் கதிபதியான விஷ்ணுவென்றே தீர்மானித்து 'ஹே ராமா! நான் ஒருவள் தானே உனக்குப் பத்னி என்னைப்போல் எவ்வளவோ ஸுந்தரமான ஸ்த்ரீகள் உனக்கு இருக்கிறார்கள். அக்காரணத்தினால் தான் இவ்விதமாக என்னிடத்தில் உனக்கு உபேக்ஷை ஏற்பட்டிருக்கிறதோ என்று நினைக்கிறேன். அது உனக்குத் தர்மமாக ஆகாது. தர்ம விரோதியான ராவணனை வதம் செய்வதற்கே நீ அவதரித்தவன். அந்த ராவணவதத்திற்கு நிமித்தமாகவும் என்னை நீ கருதி, உன்பின்னாடு என்னை அழைத்து வந்தவன் அல்லவா. நீலாதேவி முதலிய உன்னுடைய ஸ்த்ரீகள் போகப் பிரவாஹத்தில் உன்னை மூழ்கச்செய்கிற விஷயத்தில் என்னைக் காட்டிலும் அவர்கள் ஸுந்தரிகள் ஆனாலும் தேவகார்யமாகிய ராவணவதத்தில் அவர்கள் நிமித்தமாக ஆகவில்லை; நான்தான் அதில் நிமித்தமாக ஆகின்றேன். அதைக் கவனித்தால் அவர்களைக் காட்டிலும் நான் உனக்கு முக்யமான ஸ்த்ரீ அல்லவா; அப்படியிருக்கும் பொழுது நீ என்னை உபேக்ஷிக்கலாமா? அது மிகவும் அநுசிதம்தான்" என்றுதான் ஸீதையினுடைய ஆசயமாகும். அன்னியில் ராமனுக்கு வேறு ஸ்த்ரீகள் உண்டு என்பதில் தாத்பர்யத்தை க்ரஹிக்கக்கூடாது.

अहं तु राम त्वयि जातकामा
चिरं विनाशाय निबद्धभावा ।
मोघं चरित्वाथ तपोव्रतं च
त्यक्ष्यामि धिग्जीवितमल्पभाग्या ॥

அஹம் து ராம த்வயி ஜாதகாமா
சிரம் விநாசாய நிபத்தபாவா ।
மோகம் சரித்வாத தபோவ்ரதம் ச
த்யக்ஷ்யாமி திக்ஜீவிதமல்பபாக்யா ॥

ஹே ராமா உன்னிடத்தில் எனக்கு ஆசையோ அளவு மீறி இருந்து வருகிறது. அக்காரணத்தினால்தான் என்னுடைய மனதை உன்னுடைய மங்கள விக்ரஹத்தை விட்டு ஒரு க்ஷணம்கூட அப்பால் சலிக்காமல் இருக்கும்படி செய்து வருகிறேன். அவ்விதம் நான் இருந்துவருகிறது என் கஷ்டத்திற்குத்தானே என்றுகூட நான் நினைக்கக் காரணமாக இருக்கிறது. என்னுடைய அநசன வ்ரதத்தையோ வர்ணிக்க முடியாது. அல்ப பாக்யத்தைத்தான் நான் செய்தவளாக ஆகின்றேன். உன்னைப் பார்த்தாவாக அடைந்த விஷயத்தில் மாத்திரம் என்னுடைய ஜன்மாந்தரஸுஹ்ருதம் காரணம் ஆனதே தவிர தீர்க்ககாலம் உன்னுடு நித்யானந்தத்தை அனுபவிக்கும்படியான பாக்யத்திற்கு ஜன்மாந்தர ஸுஹ்ருதம் காரணமாகவில்லை. ஆனால் இப்பொழுது உன்னை விட்டுப் பிரிந்து நான் பத்துமாதகாலமாகப் படுகிற கஷ்டங்களுக்கோ பலம் இப்பொழுது, இந்த ஜன்மத்தில் ஏற்படப் போவதில்லை. அனேகமாக வேதத்தில் சொல்லிய ஸகல தர்மங்களும் அத்ருஷ்டத்தில் தானே பலத்தைக் கொடுக்கக்

கூடியது. என்னுடைய பாதிவ்ரத்யமும், மற்றொரு ஜன்மத்தில் பலித்தால் பலிக்கலாம், இந்த ஜன்மத்தில் நிஷ்பலம்தான். அதனாலேயே நான் அல்ப பாக்யத்தைச் செய்தவளாக ஆகிவிட்டேன். இனிமேல் எனக்கு ஜீவிதத்தை வைத்துக்கொள்வதற்கு இஷ்டமேயில்லை. துர்ப்பகையான எனக்கு எதற்காக உயிர் இருக்கவேண்டும்.

सा जीवितं क्षिप्रमहं त्यजेयं
विषेण शस्त्रेण शितेन वापि ।
विषस्य दाता न हि मेऽस्ति कश्चित्
शस्त्रस्य वा वेश्मनि राक्षसस्य ।

ஸா ஜீவிதம் க்ஷிப்ரமஹம் த்யஜேயம்
விஷேண ஸஸ்த்ரேண ஸிதேந வாபி ।
விஷஸ்ய தாதா ந ஹி மேऽஸ்தி கஸ்சித்
ஸஸ்த்ரஸ்ய வா வேச்மனி ராக்ஷஸஸ்ய ॥

ஸா ஜீவிதம் க்ஷிப்ரமஹம் த்யஜேயம்
விஷேண ஸஸ்த்ரேண ஸிதேந வாபி ।
விஷஸ்ய தாதா ந ஹி மேऽஸ்தி கஸ்சித்
ஸஸ்த்ரஸ்ய வா வேச்மனி ராக்ஷஸஸ்ய ॥

விஷத்தை உட்கொண்டாவது மரணத்தை அடைவதே இந்த ஸந்தர்ப்பத்தில் எனக்கு ச்லாக்யம் என்று தோன்றுகிறது. அல்லது கூர்மையான கத்தி அகப்பட்டாலும், நானேவே தற்கொலை செய்துகொண்டு விடுவேன். இந்த க்ரூரனான ராக்ஷஸனுடைய நகரத்தில் இவ்விதமான உபகாரம் எனக்குச் செய்பவர்கள் யாரிருக்கிறார்கள்" என்று வெகுப்ரகாரம் தேவியானவள் ப்ரலாபம் செய்துவிட்டு புஷ்பங்களால் அலங்கரிக்கப்பட்ட அசோக வ்ருக்ஷத்தினுடைய ஸமீபம் சென்று,

शोकाभितप्ता बहुधा विचिन्त्य

सीताथ वेण्युद्ग्रथनं गृहीत्वा ।

उद्बध्य वेण्युद्ग्रथनेन शीघ्रं

अहं गमिष्यामि यमस्य मूलम् ॥

பொகாஹிதப்தா பஹுதா விசிந்த்ய

வீதாத வெண்யுத்க்ரதநம் க்ருஹீத்வா ।

உத்பத்ய வெண்யுத்க்ரதநேந சீக்ரம்

அஹம் கமிஷ்யாமி யமஸ்ய மூலம் ॥

சோகாபிதப்தா பஹுதா விசிந்த்ய

வீதாத வேண்யுத்க்ரதநம் க்ருஹீத்வா ।

உத்பத்ய வேண்யுத்க்ரதநேந சீக்ரம்

அஹம் கமிஷ்யாமி யமஸ்ய மூலம் ॥

என்னுடைய வேணியை அதாவது பின்னலை, கழுத்தில் சுறுக்கிட்டுக்கொண்டு சிம்சுடா வ்ருக்ஷத்தினுடைய கிளையில் த்ருட மாகக் கட்டி இந்த நிமிஷமே நான் யமலோகம் செல்கிறேன்' என்று ஸங்கல்பம் செய்துகொண்டு அவ்விதம் செய்யத் துணிந்தாள். ஆகிலும், அந்தக் கிளையைக் கையினால் பிடித் துக்கொண்டு ராமனையும் லக்ஷ்மணஸ்வாமியையும், நினைத்து "உங்கள் இருவருக்கும் இந்த காரியம் த்ருப்தியாக இருக் குமா" என்று கதறிக்கொண்டு சுறுக்குப் போட்டுக் கொள்ளும் ஸந்தர்ப்பத்தில்,

शोकानिमित्तानि तथा बहूनि

धैर्यार्जितानि प्रवराणि लोके ।

प्रादुर्निमित्तानि तथा बभूवुः

पुरापि सिद्धान्युपलक्षितानि ॥

பொகாநிமித்தாநி தயா பஹூநி
யெயாஜிதாநி பூவாணி லொகே ।
பூராநிமித்தாநி தயா பஹுமவுः
வாராவி ஸீஜாந்யுபலக்ஷிதாநி ॥

சோகாநிமித்தாநி கதா பஹூநி
தைர்யார்ஜிதாநி ப்ரவாணி லோகே ।
ப்ராதுர்நிமித்தாநி கதா பபூவுः
புராபி ஸித்தாந்யுபலக்ஷிதாநி ॥

என்ற ப்ரகாரம் ஸீதையைப் பார்த்து 'ஹே ஸீதே, இவ்விதம் நீ துக்கத்தை அடையக் கொஞ்சமேனும் இது ஸ்தானமில்லை. தைர்யத்தை அவலம்பிக்கவேண்டும். இவ்விதம் நீ செய்கிற காரியம் உன் குலத்திற்கும் அழகில்லை, உனக்கும் அழகில்லை. உன் பர்த்தாவான ராமனுக்கும் அபகீர்த்தியைக் கொடுக்கக் கூடியது' என்று ஸீதையைத் தைர்யப்படுத்துவதுபோல், சுப ஸூசக தேவதைகள் ப்ரத்யக்ஷமாக ஸீதையினுடைய எதிரில் ஆவிர்ப்பவித்து துர்மரணத்திலிருந்தும் ஸீதா தேவியை விடுதலை செய்துவைத்தார்கள். இந்த சுபங்களோ, அதற்கு முன்பு தான் ராமனைப் பரிணயம் செய்துகொண்டு அயோத்திக்கு ஸகல ஸங்காஹத்துடன் வரும்பொழுது பரசு ராமருடையை துராக்ரஹத்தினால் ஏற்பட்ட மஹா பயத்தில் மூழ்கித் தவித்த ஸீதாதேவிக்கு உனக்கு யாதொரு குறைவு மில்லை, ராமனுக்கு பரம ஜயம் ஏற்படப்போகிறது, நீ தைர்ய மாக இருக்கவேண்டும் என்று சொல்லி தைர்யப்படுத்தின சுடாதேவதைகளானதினால் அதை ஸீதாதேவி பூர்வத்தில் அனு பவித்து அவ்விதமே ஸந்தோஷத்தை அடைந்திருக்கும் காரணத்தினால் இப்பொழுதும், ஸீதாதேவிக்கெதிரில் அவைகளே தென்பட்டபடியினால், அவைகளை நம்பி ஸீதை தான் செய்த ஸங்கல்பத்தினின்றும் நிவ்ருத்தி அடைந்து ஸமாதானத்தை அடைந்தாள். அதைத்தான் கவியானவர் पुरापि सिद्धान्युपलक्षितानि (வாராவி ஸீஜாந்யுபலக்ஷிதாநி)

(புராபி ஸித்தாந்யுபலக்ஷிதாநி) என்ற வாக்யத்தினால் அழகாகத் தெரிவிக்கின்றார்.

तथागतां तां व्यथितां अनिन्दितां
व्यपेतहर्षां परिदीनमानसाम् ।
शुभां निमित्तानि शुभानि भेजिरे
नरं श्रिया जुष्टमिवोप जीविनः ॥

தயாகதாம் தாம் வ்யதிதாம் அநிந்திதாம்
வ்யபேதஹர்ஷாம் பரிதீநமாநஸாம் ।
சுபாம் நிமித்தாநி சுபாநி பேஜிரே
நரம் ச்ரியா ஜுஷ்டமிவோப ஜீவினः ॥

ததாகதாம் தாம் வ்யதிதாம் அநிந்திதாம்
வ்யபேதஹர்ஷாம் பரிதீநமாநஸாம் ।
சுபாம் நிமித்தாநி சுபாநி பேஜிரே
நரம் ச்ரியா ஜுஷ்டமிவோப ஜீவினः ॥

வால்மீகி மஹர்ஷியானவர் இந்த ஸந்தர்ப்பத்தில் ஸீதையை வர்ணிக்கும்பொழுது तथागतां तां (தயாகதாம் தாம்) (ததாகதாம் தாம்) என்று வர்ணிக்கிறார். அதாவது அந்த ஜகதீச்வரியினுடைய துக்கத்தை இவ்வளவுதான் என்று என்னால் நிர்ணயிக்க முடியாமல் இருந்து வருகிறது என்று தானும் கஷ்டப்படுகிறார். रहस्यञ्च प्रकाशञ्च यद्दृत्तं तस्य धीमतः (ரஹஸ்யஞ்ச ப்ரகாசஞ்ச யத்வ்ருத்தம் தஸ்ய தீமத:) (ரஹஸ்யஞ்ச ப்ரகாசஞ்ச யத்வ்ருத்தம் தஸ்ய தீமத:) என்றுப்ரும்மாவினுடைய அனுக்ரஹத்தினால் ராமனுடைய ரஹஸ்யமான வ்ருத்தாந்தங்களோ ப்ரகாசமான வ்ருத்தாந்தங்களோ தனக்குப் புலப்படவேண்டுமென்று விரும்பின வால்மீகி மஹர்ஷியும், இந்த ஸந்தர்ப்பத்தில் ஸீதையினுடைய துக்கத்தின் எல்லையை அறிய முடியாதவராய்க் கஷ்டப்பட்டார்.

ஸீதையினுடைய சரீரம் ஒன்றைத் தவிற மற்ற ஸௌக்யம் யாதொன்றையும் மஹர்ஷி கவனித்து, ஸமாதியில் பார்த்தும் அறியமுடியாமல் கஷ்டப்பட்டார் இவ்விதமான துக்க ஸந்தர்ப்பத்தில் எவ்விதமான ஸ்த்ரீயும் தன்னுடைய மநோ தைர்யத்தை இழந்துவிடுவாள். ஜகதீச்வரியோ கொஞ்சமேனும் ராம பக்தியினின்றும் நழுவ வேயில்லை. பர்த்தாவைவிட்டுப் பிரிந்த காலத்தில் எப்படி இருக்கவேண்டுமோ அப்படியே இருந்துவந்தாள் ஸந்தோ ஷம் மாத்திரம் ஸீதைக்கு இல்லாமல் இருந்தது. அளவற்ற ஸந்தோஷம் முன்பு இருந்து தற்காலத்தில் போய்விட்டதோ என்று தோன்றக்கூடிய நிலையில் இருந்தாள். ஸந்தோஷம் தானுக ஸீதையை ஆச்ரயிப்பதற்கு வந்தாலும் தான் அதற்கு அவகாசம் கொடுக்காமலே இருந்துவருகிறாள் இதை परिदीनमानसा (பரிதீநமாநஸா) (பரிதீனமானஸாம்) என்ற பதத்தினால் கவி வர்ணிக்கிறார். இவ்விதமான நிலையில் சுப ஸுசகதேவதைகள் தானுகவே ஸீதையினுடைய ஸமீபத் திற்கு வந்துசேர்ந்து ஸீதையினுடைய ஸௌபாக்யத்தையும் ஸுசனம் செய்து, தங்கள் தங்கள் ஆத்மலாபத்தை அடைந் தார்கள். இந்த சுபஸுசக தேவதைகளுடைய தயவு இல்லா மலேயே, ஸீதைக்கு ஸௌபாக்யம் ஏற்பட்டுவிடுமென்று அந்த தேவதைகளுக்கே தெரிந்துவிட்டது. ஸீதை கஷ்டப் பட்டாலும், சுபஸுசகங்கள் இல்லாமலே மறுபடியும் அவளுக்கு ராமன் என்ற தாரகப்ரும்மத்தினுடைய ஸமாகமம் ஏற்படவில்லையா? அதுபோல் நமக்கும் ஏன் ஏற்படக்கூடாது சுபமாவது அசுபமாவது என்று லோகத்தில் ப்ராக்ருத ஜனங் கள் தங்களுக்கு ஒரு யோக்யதையைக் கொடுக்காமல் இருந்துவிடுவார்களாம். அதற்காக அந்த தேவதைகளே ஒன்று சேர்ந்து ஸீதையை வந்து சரணமடைந்து "ஹே பர தேவதே, உங்களுக்குக்கூடக் கஷ்டகாலத்தில் சுபத்தைஸுச னம் செய்தோம் என்ற கௌரவத்தை எங்களுக்குத் தாங்கள் கொடுத்து லோகத்தில் எங்களை ஆதரிக்கும்படி செய்ய வேண்டும் என்றார்கள்" இவ்வாறு சுபஸுசக தேவதைகள்

வழுவிலே வந்து ஜகதீச்வரியைச் சரணமடைந்தார்களாம். ஸார்வபௌமனை ஒரு அரசன் தனது பரிஜனங்களை எதிர் பார்க்காமல் ஏகாங்கியாகப் போகவேண்டுமென்று புறப்பட் டாலும் பரிஜனங்களாகவே, ஓடிவந்து அரசனை சூழ்ந்துக் கொள்வதுபோல், இந்த சுபஸூசக தேவதைகளும் ஸீதை எதிர்பார்க்காது போனலும், தாங்களாக தங்கள் கௌர வத்தைக் காப்பாற்றிக்கொண்டு அவளை வந்து சரண மடைந்து ஸந்தோஷத்தைக் கொடுத்தார்கள்.

ஸீதையினுடைய இடது கண்ணும், இடது துடையும் மெள்ள மெள்ள துடிக்க ஆரம்பித்தன. ஸ்த்ரீகளுக்கு இடது பாகமானது சுபஸூசக மென்று சாஸ்த்ரங்களில் சொல்லப் பட்டிருக்கின்றது. அந்த சாஸ்த்ரத்தை ஸீதை அறிந்தவள் ஆனதினல் அந்த நிமித்தங்களைப் பார்த்து மிகவும் ஸந்தோ ஷத்தை அடைந்தாள். அந்த ஸூசகங்களால் ராமன் எதிரில் நிற்பதுபோலவே ஸீதைக்குப் புலப்பட்டது. இவ்விதம் ஏற் பட்ட ஸந்தர்ப்பத்தினல் கொஞ்சம் மனஸ்ஸமாதானத்தை அடைந்து ஸீதையானவள் காணப்பட்டாள். இந்த ஸந்தர்ப் பத்தில் ஸத்குரு ஸ்வரூபமான ஆஞ்ஜநேயஸ்வாமியும் ஸீதை யினுடைய ஸகல விருத்தாந்தங்களையும் த்ரிஜடையினுடைய ஸ்வப்ன வ்ருத்தாந்தங்களையும் அறிந்து பின்வருமாறு ஆலோசித்தார். "எந்த ராம பத்னியை ஆயிரக்கணக்கான வானரகோவ்டிகள் நான்கு திக்குகளிலும் தேடிவருகின்றார் களோ, அந்த தேவதை இந்த அசோக வனத்தில் சிம்சுபா வ்ருக்ஷத்தினுடைய மூலபாகத்தில் விளங்கிவரும் ஸ்த்ரீதான். ஏதோ என்னுடைய பாக்யவசத்தினல் ராக்ஷஸர்களுடைய த்ருஷ்டியில் அகப்பட்டுக்கொள்ளாமல் கண்டுபிடித்தேன். ராக்ஷஸ ராஜனை ராவணனுடைய நகரமும் இரவில் நன்றாய் என்னல பார்க்கப்பட்டது ராக்ஷஸர்களுடைய விசேஷமகி மையும் ராவணனுடைய விசேஷமான ப்ரபாவமும் என்னல் கூடுமானவரையிலும் அறியப்பட்டதாகவே ஆகிவிட்டது. ராம பத்னியான ஸீதாதேவியை ஸமாதானம் செய்துவிட்டு

போவதுதான் என்னுடைய கடமையாகும். ஸீதையைப் பார்த்துவிட்டு மாத்திரம், ஸமாதானம் செய்யாமல் போனேனேயானால் அது பெரிய அனர்த்தத்திற்குக் காரணமாகிவிடும். நான் ஸமாதானம் செய்தால் ஸீதை தனக்கு ரக்ஷகர் இருக்கிறார் என்ற தைர்யத்துடன் ஜீவித்தை வைத்துக்கொண்டிருப்பாள். இல்லாவிடில், ரக்ஷகர்கள் தனக்கொருவரும் இல்லையென்ற எண்ணத்துடன் உயிரையே இழந்துவிட்டாலும் இழந்துவிடக் கூடும். அவைகள் ஏற்படாமல் ஸீதையை ஸமாதனம் செய்துவிட்டுத்தான் நான் திரும்ப வேண்டும். ஸீதையுடன் பேசி அவளுடைய ஸௌபாக்யத்தை ராமனிடம் நான் போய்ச் சொல்லி ராமனையும் ஸமாதானம் செய்வதுதான் ப்ரக்ருதத்திற்கு அழகாகும். ஆகையினால் இந்த விஷயத்தில் இனிமேல் அவஸரப்பட்டு முடியாது. ஸீதையைச் சுற்றிவரும் ராக்ஷஸ ஸ்த்ரீகளுக்குத் தெரியாமலும் நான் எப்படித்தான் ஸீதையோடு பேசமுடியும். பொழுது விடிவதற்குள் ஸீதையை நான் ஆச்வாஸம் செய்யாது போனால் ஸீதை உயிரைக் கட்டாயம் விட்டுவிடுவாள். ராமனிடம் நான் திரும்பிப்போவது ப்ரயோஜனமில்லாமல் ஆகிவிடும். ஸீதை என்ன செய்கிறாள்? என்ன சொல்லி அனுப்பினாள் என்று பூரீ ராமன் என்னைக் கேட்டால் நான் என்னதான் பதில் சொல்லுகிறது? ஸீதையினுடைய ஸமாசாரத்தைச் சொல்லாமல் வ்ருதாவாக நான் ராமனுடைய ஸமீபம் சென்றால் உக்ரமான சக்ஷுஸ்ஸினால் என்னைப் பஸ்மமாகச் செய்துவிடுவார். ஆகையினால் ராக்ஷஸ ஸ்த்ரீகளுக்குத் தெரியாமல் மிகவும் ஸூக்ஷ்மமான ரூபத்துடன் கோஸல தேசத்தில் பிறந்தவர்களுக்கு மாத்திரம் அறியக் கூடியதாயும், ராக்ஷஸ ஸ்த்ரீகளுக்கு புரிந்துகொள்ளமுடியாததாயும் உள்ள மனிதர்களுக் கேற்பட்ட பாஷையோ, ஸம்ஸ்க்ருத பாஷையாகும். அந்த பாஷையில் ராமனுடைய வ்ருத்தாந்தத்தை நான் கொஞ்சம் எடுத்து உரைத்தால் ஸீதைக்குக் கொஞ்சம் ஆச்வாஸம் ஏற்பட்டு நம்மோடு பேசுவாளோ என்று ஆலோசிக்கிறார்.

ராவணன்தான் இந்த வானர உருவத்துடன் வந்திருக்க வேண்டுமென்று நினைக்காமலிருப்பாளோ? வானரத்திற்கு ஸம்ஸ்க்ருத பாஷையில் எப்படி பரிச்சயம் ஏற்பட்டது? நமது உருவத்தை ஸீதை பார்த்தாளேயானால் பேச்சையும் கேட்பாளேயானால் முன்பு ராக்ஷஸர்கள் மூலமாகப் பயத்தை அடைந்த ஸீதை மறுபடியும் அதிகமாகப் பயத்தை அடைந்துவிடுவாளே, பயந்து கூச்சலிடவும் ஆரம்பிப்பாள். ராவணன்தான் தன்னை அபஹரித்த காலத்தில் ஸந்யாஸி வேஷம் தாங்கி வந்ததுபோல் இப்பொழுது வானர உருவத்தோடு வந்திருக்கிறான் என்று எண்ணுவாள். ஸீதையினுடைய கூச்சலைக் கேட்டதும் ராக்ஷஸர்களும் நானாவிதமான ஆயுதங்களை எடுத்துக்கொண்டு நம்மை வதிக்கக் கூட்டமாக வந்துவிடுவார்கள். திரும்பி ராமனிடம் போக நமக்குச் சந்தர்ப்பம் வாய்க்காமல் நிக்ரஹமாவது செய்துவிடுவார்கள். நமது நிமித்தமாக ஸீதையை ஏதாவது ஹிம்ஸை செய்தாலும் செய்வார்கள். நமக்கு இந்த விதமான கதி வந்துவிட்டால் ராம காரியத்தில் ஸஹாயம் செய்கிறவன் வேறு யார் என்று எனக்குத் தெரியவில்லை. இதற்காக நாம் ஸீதையோடு பேசாமல் திரும்பிச் சென்றுவிட்டால், ஸீதை கட்டாயம் ப்ராணனை த்யாகம் செய்துவிடுவாள். இவ்விதமான தர்ம ஸங்கடத்தில் நாம் என்ன செய்கிறது?

भूताश्चार्थाः विनश्यन्ति देशकालविरोधिताः ।
विक्लवं दूतमासाद्य तमस्सूर्योदये यथा ॥
अर्थानर्थान्तरे बुद्धिः निश्चितापि न शोभते ।
घातयन्ति हि कार्याणि दूताः पण्डितमानिनः ॥
न विनश्येत्कथं कार्यं वैक्लव्यं न कथं भवेत् ।
लङ्घनं च समुद्रस्य कथं नु न वृथा भवेत् ॥
कथं नु खलु वाक्यं मे शृणुयात् नोद्विजेत वा ।

ஹமிதாஸ்யாயு ஃாः விநஸ்யந்தி தெஸகாலவிரோதிதா: ।
விக்லவம் தாதமாஸாத்ய தமஸ்ஸூர்யோதயே யதா ॥
அர்தாநர்தாந்தரே புத்தி: நிச்சிதாபி ந சோபதே ।
காதயந்தி ஹி கார்யாணி தூதா: பண்டிதமாநிந: ॥
ந விநச்யேத்கதம் கார்யம் லைக்லவ்யம் ந கதம் பவேத் ।
லங்கணம் ச ஸமுத்ரஸ்ய கதம் நு ந விருதா பவேத் ॥
கதம் நு கலு வாக்யம் மே ச்ருணுயாத் ஸோத்விஜேத வா ।

பூதாச்சார்தா: விநச்யந்தி தேசகாலவிரோதிதா: ।
விக்லவம் தாதமாஸாத்ய தமஸ்ஸூர்யோதயே யதா ॥
அர்தாநர்தாந்தரே புத்தி: நிச்சிதாபி ந சோபதே ।
காதயந்தி ஹி கார்யாணி தூதா: பண்டிதமாநிந: ॥
ந விநச்யேத்கதம் கார்யம் லைக்லவ்யம் ந கதம் பவேத் ।
லங்கணம் ச ஸமுத்ரஸ்ய கதம் நு ந விருதா பவேத் ॥
கதம் நு கலு வாக்யம் மே ச்ருணுயாத் ஸோத்விஜேத வா ।

தைரியமும் புத்திசக்தியும் இல்லாத தூதன் பலனை அடையும் வரையில் ஸித்தித்த காரியத்தையும் கெடுத்து விடுவான். புத்திமானுயிருந்தால் அந்தந்த தேசத்தையும் அந்தந்த காலத்தையும் ஓட்டி காரியத்தை செய்யும் ஸாமர்த்தியம் உடையவனுக ஆவான். அரசர்களால் இந்த காரியம் அவச்யம் செய்யத் தகுந்தது, இந்தக் கார்யம் செய்யத்தகாதது என்ற விஷயத்தில் த்ருடமாக நிச்சயிக்கப்பட்ட புத்தியும் தூதனுடைய கோழைத்தனத்தினல் நசித்துவிடும். அப்படி தூதனுடைய மௌட்யத்தினல் ஏற்படக்கூடிய தோஷங்களெல்லாம் ப்ரக்ருதத்தில் நம்மிடத்தில் எப்படி வராமலிருக்கும், ஸ்வாமியான ராமருடைய காரியம் ஸபலமாக எப்படி ஆகும்? நான் ஸமுத்ரத்தைத் தாண்டினதும் வீணுக ஆகாமல் எப்படி நான் நடந்துகொண்டால் முடியும்? ஸீதைதான் என்னுடைய வார்த்தையை எப்படி கேட்பாள்; எப்படி நம்பிக்கையை அடைவாள் என்று பல வாருக ஆஞ்ஜநேயஸ்வாமியானவர் ஆலோசித்துவிட்டு ஒரு வித தீர்மானத்திற்கு வந்தார்.

அதாவது ராமனே ஸீதைக்கு முக்கியமான பந்து வல்லவா, ராமனுடைய சுபமான வ்ருத்தாந்தங்களை சற்று நேரம் நான் ஸம்ஸ்க்ருத பாஷையிலெடுத்து உரைக்கிறேன். தர்மத்தை ப்ரகாசப்படுத்தக்கூடிய ராமனுடைய வ்ருத்தாந்தத்தை ஸீதை கேட்டமாத்திரத்தில் கொஞ்சம் என்னிடத்தில் நம்பிக்கையை அடையக்கூடும் என்று எண்ணி சிம்சுபா வ்ருக்ஷத்தினடைய கீழ்க்கிளை நுனியில் துளிர்களால் மறைக்கப் பட்ட சரீரத்தோடு இருந்துகொண்டு ஸீதையினுடைய காதில் கேழ்க்கும்படியான ஸ்வரத்துடனும் ராக்ஷஸ ஸ்த்ரீ களால் அறியமுடியாததான பாஷையினால் ராமனுடைய வ்ருத்தாந்தத்தைப் பேசலானார்.

" உத்தர கோஸலதேசத்தில் சதுரங்க பலஸம்பன்னனான தசரதர் என்ற பெயரால் ஒரு அரசன் விளங்கிவந்தார், அவர் மஹாயசஸ்வீ, பரமதார்மிகர், ராஜச்ரேஷ்டர்களுக்குள் கல் யாண குணங்களினால் முதன்மையில் கொண்டாடத் தகுந்த வர். தபோமஹிமையில் ரிஷிகளையும் வெல்லக்கூடியவர், இந்த்ரனென்றே அவரைச் சொல்வது வழக்கம். அஹிம்ஸை யென்ற குணமும் அவரிடத்தில்தான் குடியிருந்துவரும் நான்கு ஸமுத்தரத்திற்குட்பட்ட பூமியில் அவருடைய கீர்த்தி யானது எங்கும் பரவியது. அவ்விதமான மஹாநுபாவ னுக்கு ராமன் என்ற பெயருடன் ஒரு ஜ்யேஷ்ட புத்ரன் விளங்கிவருகிறார். ஸ்வதர்மத்தை ரக்ஷித்துக்கொண்டு வரு வதில் அந்த மஹாநுபாவனுக்கு ஸமானமான ராஜபுத்ரனை வேறு ஓரிடத்திலும் பார்க்க முடியாது. ஸ்வஜனங்களையும் ரக்ஷிக்கிறவர். ஸர்வஜனம் பரஜனம் என்ற வித்யாஸம் இல்லாமலே பொதுவாக எல்லாப் ப்ராணிகளையும் ரக்ஷிக்கும் ஸ்வபாவம் உள்ளவர். அந்த ராமனே வ்ருத்தரான தன் பிதாவினுடைய வார்த்தையினால் கட்டுப்பட்டவராய் லக்ஷ்ம ணன் என்ற தன் ப்ராதாவோடும், ஸீதையென்ற தன் தர்ம பத்னியோடும் வனத்தில் வாஸம் செய்யவும் நேர்ந்து, வஸித்து வந்தார். வனவாஸ காலத்தில் கரதூஷணன் விராதன் முதலிய

ராக்ஷஸர்கள் அந்த ராமரால் வதிக்கப்பட்டார்கள் ஜனஸ்தானத்தில் வஸித்துவந்த கரதூஷணர்களை ராமன் கொன்ற காரணத்தை முன்னிட்டு மாத்ஸர்யத்தினால் ராவணன், மாரீசனை மான் வேஷம் தரித்துக்கொள்ளும்படி செய்து அதன் மூலம் ராமனை வெகு தூரத்திற்கு அப்பால் விரட்டி விட்டு ஸீதை ஆச்ரமத்தில் தனியாக இருக்கும் காலத்தில் அபஹரித்துக்கொண்டு வந்துவிட்டான். ராமனே மாரீசனைக் கொன்றுவிட்டு லக்ஷ்மணனுடன் ஆச்ரமத்தில் வந்து ஸீதையைப் பார்க்கும்பொழுது ஸீதையைக் காணவில்லை. ஆங்காங்கு ஸீதையைத் தேடிக்கொண்டு வரும் ஸந்தர்ப்பத்தில் ரிச்யமூக பர்வதத்தில் ஸுக்ரீவன் என்ற வானராஜனோடு அக்னி ஸாக்ஷிகமாக ஸக்யம் செய்துகொண்டார். வாலியைக் கொன்று கிஷ்கிந்தா ராஜ்யத்தில் ஸுக்ரீவனுக்கு பட்டாபிஷேகம் செய்து ராஜ்யத்தை அளித்தார். ஸுக்ரீவனும் ஸீதையைத் தேட வானர ஸேனைகளை நான்கு திக்குகளிலும் அனுப்பியிருக்கிறான். தெற்கு திக்கை நோக்கி வந்த வானரர்களுக்குள், நானொருவன். எனக்கு ஹநுமான் என்று பெயர் ப்ரஸித்தமானது. ஸம்பாதியினுடைய வார்த்தையினால் இந்த லங்காநகரத்தில் அசோக வனத்தில் ஸீதை இருந்துவருகிறாள் என்பதை அறிந்து நூறு யோஜனை விஸ்தாரமுள்ள இந்த ஸமுத்ரத்தைத் தாண்டி லங்கைக்கு வந்து சேர்ந்தேன். லங்கையிலும் பல ஸ்தலங்களில் ஸீதையைத் தேடி காணமல் மிகவும் விஷாதமுள்ளவனாக ஆனேன் இப்பொழுதுதான் என்னுடைய பாக்யவசத்தினால்

यथारूपां यथावर्णां यथालक्ष्मीं च निश्चिताम्
अश्रौषं राघवस्याहं सेयमासादिता मया ॥

யதாரூபாம் யதாவர்ணாம் யதாலக்ஷ்மீம் ச நிஶ்சிதாம் ।
அஶ்ரௌஷம் ராகவஸ்யாஹம் ஸேயமாஸாதிதா மயா ॥

யதாரூபாம் யதாவர்ணம் யதாலக்ஷ்மீம் ச நிச்சிதாம் ।
அக்ரௌக்ஷம் ராகவஸ்யாஹம் ஸேயமாஸாதிதா மயா ॥

ராமன் ஸீதையைப்பற்றி எவ்விதமான சரீரத்தோடு கூடினவள் என்றும், என்ன வர்ணத்தோடு கூடினவள் என்றும், எவ்விதமான காந்தி உள்ளவள் என்றும் எனக்கு அடையாளமாகச் சொன்னாரோ அதே சரீரம், அதே நிறம், அதே காந்தியுள்ள இந்த தேவியை நான் இப்பொழுது பார்த்துவிட்டேன் என்று சொல்லிவிட்டு வானரச்ரேஷ்டனான ஆஞ்ஜநேய ஸ்வாமியானவர் உபரதியை அடைந்துவிட்டார் ஸீதாதேவியோ அந்த வார்த்தையைக் கேட்டதும், பரம ஸந்தோஷத்தை அடைந்து முகத்தை ஆகாசத்திற்கபிமுகமாக வைத்துக்கொண்டு யோஜித்துப் பார்த்தாள்.

निशम्य सीता वचनं कपेश्च दिशश्च सर्वाः प्रदिशश्च वीक्ष्य ।
स्वयं प्रहर्षं परमं जगाम सर्वात्मना राममनुस्मरन्ती ॥
सा तिर्यगूर्ध्वञ्च तथाप्यधस्थात् निरीक्षमाणा तमचिन्त्यबुद्धिम् ।
ददर्श पिङ्गाधिपतेरमात्यं वातात्मजं सूर्यमिवोदयस्थम् ॥

நிஶம்ய ஸீதா வசனம் கபேஶ்ச திஶஶ்ச ஸர்வா: ப்ரதிஶஶ்ச வீக்ஷ்ய ।
ஸ்வயம் ப்ரஹர்ஷம் பரமம் ஜகாம ஸர்வாத்மநா ராமமநுஸ்மரந்தீ ॥
ஸா திர்யகூர்த்வஞ்ச ததாப்யதஸ்தாத் நிரீக்ஷமாணா தமசிந்த்யபுத்திம் ।
ததர்ச பிங்காதிபதேரமாத்யம் வாதாத்மஜம் ஸூர்யமிவோதயஸ்தம் ॥

ஜகதீச்வரியான ஸீதையோ, ஹனுமாருடைய வார்த்தை யைக் கேட்டவுடன் தனது பார்ச்வங்களை, ஆகாயத்தையும் பூமியையும் திரும்பிப்பார்த்து, யார் ராமனுடைய, கல்யாண குணங்களை எடுத்துப் பேசுகிறார்கள் என்று ஆலோசித்துக் கொண்டு, இந்த லங்கையில், ப்ரவேசம் செய்வதே மிகவும் துர்லபமானது, ப்ரவேசித்தும் அந்தப்புரத்தினுடைய மத்யத் தில் ப்ரவேசம் செய்து ஒரு ஸ்திரீயைத் தேடுவது என்பது மிகவும் துஸ்ஸாத்யமானதல்லவா. இங்கு வந்து ராம நாமாவை தனது காதில் படும்படி கூறின புருஷரை ஸ்வர விசேஷத்தைக் கவனித்தால் வானர ஜாதியில் சேர்ந்தவ னென்று தோன்றுகிறது. அதிலும் தான் ஸ்வதந்த்ரனல்ல தன் ஜாதியிலுள்ள அரசனுடைய மந்த்ரியென்றும் அந்த ராஜனுடைய கார்யம் இவருடைய கைக்குள் இருக்கிறது என்றும் தீர்மானித்து அதிலும் ராமனுடைய ஜீவனத்திற்கு முக்ய ஹேதுவானது நமது ஜீவிகைதான்; நம்முடைய ஜீவிகையோ ஸர்வ ப்ராணிகளுடைய ஜீவனத்திற்கு ஹேது வானது அதற்கு மூலகாரணம் இந்த மஹானுபாவ னென்றே தெரிகிறது. என்று ஆலோசித்துக்கொண்டே ஆஞ்ஜநேயஸ்வாமியைப் பார்த்தாள். सूर्यमिव उदयस्थं (ஸூர்யமிவ உதயஸ்தம்) (ஸூர்யமிவ உதயஸ்தம்) என்ற த்ருஷ் டாந்தத்தினால் ஸூர்யன் உதிப்பதற்கு முன்பு அதற்கு ஸூசகமாக உதயகிரியிலுள்ள அருணனைப் பார்ப்பதுபோல் ராமனுகிற ஸூர்யன் உதிப்பதற்கு முன்பு அதற்கு ஸூசக மாக அருணனை என்று கூறும்படி விளங்கிவரும் ஆஞ்ஜநேய ஸ்வாமியை ஸீதையானவள் பார்த்தாள். அருணனுடைய உதயமானது அதிசீக்ரத்தில் ஸூர்ய பகவானுடைய ஸந்தர் ஸனத்திற்கு எப்படிக் காரணமாகுமோ அதுபோல் ஆஞ்ஜ நேயஸ்வாமியினுடைய தரிசனமும் அதிசீக்ரத்தில் தாரக ப்ரும்மமாகிய ராமனுடைய ஸாக்ஷாத்காரத்திற்குக் காரண மாகிறது என்றும் ஸூசிப்பிக்கப்படுகிறது.

ஆஞ்சநேயஸ்வாமியோ வ்ருக்ஷத்திலுடைய சாகையில் மறைந்துகொண்டு மிகவும் பயந்த ஸ்வபாவத்துடன் போல் இருந்து வந்தார். ஸீதாதேவியும் அங்குமிங்கும் த்ருஷ்டியை ப்ரஸரிக்கச் செய்துவிட்டு ப்ரியமான ராமனுடைய வார்த்தையைத் தன் காதில் படும்படி சொன்ன ஆஞ்நேயரைப் பார்த்தாள். பார்த்த உடனே ஸீதைக்கு மிகவும் மனதில் கவலையேற்பட்டுவிட்டது.

अहो भीममिदं रूपं वानरस्य दुरासतम् ।
दुर्निरीक्षमिति ज्ञात्वा पुनरेव मुमोहसा ॥

அஹோ ஹீஉமிதம் ரூபம் வாநரஸ்ய துராஸதம் ।
துர்நிரீக்ஷமிதி ஜ்ஞாத்வா புனரேவ முமோஹஸா ॥

அஹோ பீமமிதம் ரூபம் வாநரஸ்ய துராஸதம் ।
துர்நிரீக்ஷமிதி க்ஞாத்வா புனரேவ முமோஹஸா ॥

அஹோ : ஆச்சரியம், இந்த வானரத்திலுடைய சரீரத்தைப் பார்க்கும்பொழுது ப்ராக்ருதமான ஜனங்களுக்கு மிகவும் பயத்தைக் கொடுக்கக் கூடியது பார்ப்பதற்கே பயமாக விளங்கி வருகிறது என்று வெகு ப்ரகாரமாக ப்ரலாபிக்க ஆரம்பித்து விட்டாள். "ஹே ராமா, ஹே ராமா, ஹே லக்ஷ்மண" என்று உச்சைஸ்வரமாகக் கதறிக்கொண்டு தவித்தாள் ராக்ஷஸ ஸ்த்ரிகளுடைய நடுவில் அதிக சப்தம் போட்டால் கலஹம் ஏற்பட்டுவிடுமோ என்ற பயத்திலும் மற்ற ஸ்வரத்துடன் எழுந்தாள். இதென்ன ஒரு வானர ஜாதியில் பிறந்தது ராமருடைய விருத்தாந்தத்தைச் சொல்லுகிறதே, இது ஸ்வப்னமோ என்று நினைத்தாள், ஸ்வப்னமானால் 'சாகாம்ருகம்' என்ற குரங்கை ஸ்வப்னத்தில் பார்க்கக் கூடாது என்று சாஸ்தரமானது நிஷேதிக்கின்றதே, நாமோ அருணோதய காலத்தில் ஸ்வப்னத்தில் ஒரு குரங்கைப் பார்த்தோமோ ராமன் லக்ஷ்மணன் ஜனகமஹாராஜன் முதலியவர்

களுக்கு யாதொருவிதமான பீடையும் இல்லாமலிருக்க வேண்டுமே, தெய்வமே, என்னை நீ இவ்விதமான கதியில் விட்டுவிட்டாயே! பாதிவ்ரத்யம் என்ற தர்மத்தைச் சரணமடைந்த எனக்கு இவ்விதமான துக்கத்தை அனுபவித்து வருவது ஈச்வர ஸம்மதமாகுமா?" என்று இவ்வாறு பலவாருகச் சற்றுநேரம் புலம்பிவிட்டுக் கொஞ்சம் மனஸ் ஸமாதானத்தையும் அடைந்து, "நாம் ஸ்வப்னத்தில் குரங்கைப் பார்த்தோம் என்று ஸம்பவிக்க ந்யாயமே இல்லை. தூங்கிலுன்றே ஸ்வப்னம் ஏற்பட ந்யாய முண்டு, ராமனை விட்டுப்பிரிந்த எனக்குத் தூக்கமேது; ஆகையினால் ஸ்வப்னமே யில்லை, எப்பொழுதும் நான் ராமனையே நினைத்து ப்ரலாபித்துக் கொண்டு வருகிற வாஸனையினால் அது போலவே ப்ரக்ருதத்தில் மனதானது பரிணமித்து என்னைத் தஷிக்கச் செய்கிறது, அதாவது மனுராஜ்யமென்றே சொல்லலாம், மனுரதத்திற்கோ உருவம் கிடையாது. வானரமோ உருவத்துடன் இருந்து வருகிறது. ஆகையினால் மனுராஜ்யமென்று சொல்லவும் ந்யாயமில்லை. இது ஜாகரம்தான் திவ்யமான ஸ்வரூபத்துடன் வானரம் விளங்கி வருகிறது; சொல்லுகிறவார்த்தையே ஸ்பஷ்டமாக இருந்து வருகிறது, ஆகையினால் மனுராஜ்ய மென்று இதை எப்படிக் கூறமுடியும்? ஆகையினால், ஈச்வரனுடைய அனுக்ரஹத்தினால் இந்தக் கபிராஜனால் சொல்லப்பட்ட தத்வங்கள் அவ்விதமே நடைபெற வேண்டும்.

नमोऽस्तु वाचस्पतये सवज्रिणे
स्वयम्भुवे चैव हुताशनाय च ।
अनेन चोक्तं यदिदं ममाग्रतः
वनौकसा तच्च तथाऽस्तु नान्यथा ॥

நமோஸ்து வாசஸ்பதயே ஸவஜ்ரிணே
ஸ்வயம்புவே சைவ ஹுதாசநாய ச ॥
ஸுநந்த மொக்தம் யதிதம் மமாக்ரதः
வநௌகஸா தச்ச ததாஸ்து நாந்யதா ॥

நமோஸ்து வாசஸ்பதயே ஸவஜ்ரிணே
ஸ்வயம்புவே சைவ ஹரஸாதாசனாய ச ।
அநேந சோக்தம் யதிதம் மமாக்ரத:
வநௌகஸா தச்ச ததாஸ்து நாந்யதா ॥

வாசஸ்பதியான ப்ருஹஸ்பதி பகவானுக்கும் இந்த்ரனுக்கும் ப்ரும்மாவிற்கும், அக்னி பகவானுக்கும், நான் நமஸ்கரிக்கின்றேன். இந்த வானரமானது என்னுடைய எதிரில் ராமனைப்பற்றி யாதொருவிதமான வார்த்தைகளைக் கூறி என் மனதை ஸந்தோஷிக்கச் செய்ததோ அந்தப்படியே அவைகள் நடக்கவேண்டும், விபரீதமாக ஆகக்கூடாது என்று நான் ஸர்வ தேவதைகளையும் ப்ரார்த்தித்துக் கொள்கிறேன்" என்று சொல்லிவிட்டு ஸீதை மௌனமாக இருந்து விட்டாள். அவ்விதம் இருக்கும்பொழுது ஸீதையைக்காத்து வரும் ராக்ஷஸஸ்த்ரீகளெல்லோரும் கொஞ்சம் நித்ராடாவசர்களாக இருந்து வந்தார்கள். இதுதான் ஸரியான ஸமயம் என்று ஆஞ்ஜனேய ஸ்வாமியானவர் நினைத்து மிகவும் உன்னதமான சாகையில் இருந்து ஸீதைக்கு அபிமுகமாக இருக்கும் கீழ்ப்ரதேசத்தில் இறக்கமாகத் தொங்குகிற ஒரு கிளையில் இறங்கி அதில் அமர்ந்துகொண்டு முதலாக ஸீதைக்கு நமஸ்காரம் செய்தார். இரண்டு கைகளையும் சிரஸ்ஸில் வைத்துக்கொண்டு பரம வணக்கத்துடன் ஸீதையைப் பார்த்துப் பேசுகிறார்.

"தேவ பரதேவதே, நீ யாரம்மா? உன்னுடைய தேஜஸ்ஸைப் பார்த்தால் மஹாலக்ஷ்மியோ என்று நினைக்கக் கூடியதாக இருக்கிறதே, எதற்காக இந்த வ்ருக்ஷத்தினுடைய கிளையை அவலம்பித்துக்கொண்டு நீ நின்று வருகிறாய்? தாமரையின் இதழ்கள் போல் சோபிக்கின்ற உன்னுடைய இரு நேத்ரங்களினின்றும் எதற்காக கண்ணீர் ஆறுகப் பெருகி பூமியில் விழுகிறது. சுரர்களோ, அல்லது அசுரர்களோ, நாககந்தர்வ ராக்ஷஸர்களோ, யக்ஷர்களோ, கின்னரர்களோ அவர்களுக்குள் யாரைச் சேர்ந்தவள் நீ, சந்த்ரனை

விட்டு நழுவின ரோஹிணி என்ற தேவியா? உன்னைப் போல் பதிவ்ரதா சிரோமணியை உலகிலெங்கும் காண முடியாது. வஸிஷ்டருடைய தர்மபத்னியான அருந்ததியோ? உனக்கு யார் புத்ரன், பிதா யார், பர்த்தா யார், ஸ்வ ஜனங்களைப் பற்றி கொடுத்தவள் போல் புலம்புகின்றயே; உன்ன நான் பார்க்கும் பொழுது தேவ ஜாதியில் சேர்ந்த ஸ்த்ரீயாக நான் நினைக்கவில்லை, ராஜ லக்ஷணங்கள் உன்னிடத்தில் பொருந்தியிருக்கின்றது. ராஜ புத்ரியாயும், ராஜ பத்னியாகவும் தான் நீ இருக்க வேண்டும். ராவணனல் ஜனஸ்தானத்தினின்றும் அபஹரிக்கப்பட்டு வந்த ஸீதாதேவியாக நீ இருந்தால் அந்த உண்மையை எனக்குச் சொல்ல வேண்டும். உன்னுடைய தைன்ய பாவத்தையும், பூலோகத்தில் ஸாமான்ய மனித ஸ்த்ரீகளால் அனுஷ்டிக்க முடியாததான பாதிவ்ரத்ய வ்ரதானுஷ்டானத்தையும் கவனிக்கும் பொழுது, நீ ராம பத்னியான ஸீதையாகத்தான் இருக்க வேண்டு மென்று நான் நிச்சயிக்கின்றேன். அப்படியானல் அந்த உண்மையை உடனே கூற வேண்டும் என்று ஆஞ்ஜனேயஸ்வாமியானவர் வணக்கத்துடன் பல தடவை ப்ரார்த்தித்தார்.

அதைக் கேட்ட ஸீதாதேவியும் பதில் கூறுகிறாள்:

पृथिव्यां राजसिंहानां मुख्यस्य विदितात्मनः ।
स्नुषा दशरथस्याहं शत्रुसैन्यप्रमाथिनः ॥

ப்ருதிவ்யாம் ராஜஸிம்ஹாநாம் முக்யஸ்ய விதிதாத்மநः ।
ஸ்நுஷா தசரதஸ்யாஹம் சத்ருஸைன்யப்ரமாதிநः ॥

என்ற வாக்யத்தினல் தன்னுடைய பாதிவ்ரத்யத்தை ப்ரகடனம் செய்கிற அபூர்வமான சில வார்த்தைகளைத் தெரிவித்துக்கொண்டாள். ப்ராக்ருதமான ஸ்த்ரீகளுக்கோ, பர்த்ருக்ருஹத்தில் அகண்டமான ஐச்வர்ய ஸம்பத்தி ஏற்பட்

டிருந்தாலும் கூட தன்னுடைய பித்ரு க்ருஹத்தில் அபி மானத்தை வைத்துப் பேசுவார்கள். அந்த ஸ்த்ரீகளை மூடர்க ளென்றும் மஹா பாபிகளென்றும் தீர்மானிக்க வேண்டும். ஆயிரத்தில் ஒரு ஸ்த்ரீயானவள் பர்த்ரு க்ருஹத்தில் அபி மானத்தை வைத்தவளா யிருந்தாலும், தன் பர்த்தாவை உயர்ந்த குணத்தோடு கூடியவளாகப் பேசுவாளே யன்றி பர்த்தாவினுடைய பிதாவான தன்னுடைய மாமனாரைக் கௌரவத்துடன் மதித்துப் பேச மாட்டாள். ப்ரக்ருதத் தில் ஸீதையோ, தன் பர்த்தாவான ராமனைக் கூட முதலாகத் தெரியப் படுத்த வில்லை; தன்னுடைய மாமனாரை மெச்சிப் பேசுகிறாள். "இந்த பூமண்டலத்தில் எத்தனையோ ராஜ ச்ரேஷ் டர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்குள் என்னுடைய மாமனார் முதன்மையானவர், அத்துடன் என்னுடைய மாம னார் ஆத்ம தத்துவத்தை ஸாக்ஷாத்கரித்துக்கொண்ட ப்ரம்ம நிஷ்டரைக் கூட ஆவார், சத்ருக்களையும் அருகில் அண்டா மல் தவிக்கச் செய்யும் பராக்ரமத்தோடு கூடினவர். சத்ருக் கள் ஜீவித்துக் கொண்டிருக்கும்பொழுது, அவர்களை அழித்து விட்டே மறுகாரியம் பார்ப்பார். அந்த மஹானுபாவன் இப்பொழுது இருந்து வந்தாரேயானால் நான் இவ்விதமான கஷ்டத்தை அனுபவிக்கமாட்டேன். என்னு டைய பாக்ய வசத்தினால் அந்த மஹானுபாவனுக்கு நான் நாட்டுப் பெண்ணாக வந்தாலும் தெளர்ப்பாக்கியத்தினால் இப் பொழுது நான் அவரை இழந்துவிட்டேன். அதுவும் என் னுடைய கஷ்டகாலம்தான்" என்று ஸீதையானவள் தன் னுடைய மாமனாரான தசரத சக்ரவர்த்தியினுடைய மாகாத்ம் யத்தை நினைத்து நினைத்து ஆஞ்ஜனேய ஸ்வாமிக்கெதிரில் பரவசமாக அழுகிறாள். பிறகு, தான் பிறந்த இடத்தை வர்ணிக்கிறாள்.

दुहिता जनकस्याहं वैदेहस्य महात्मनः ।
सीतेति नाम नाम्नाहं भार्या रामस्य धीमतः ॥

ஊஹிதா ஜநகஸ்யாஹம் விவேஹஸ்ய மஹாத்மந: ।
ஸீதேதி நாம நாம்நாஹம் பார்யா ராமஸ்ய தீமத: ॥

ऊहिता जनकस्याहं विदेहस्य महात्मनः ।
सीतेति नाम नाम्नाहं भार्या रामस्य धीमतः ॥

कर्मणैव हि संसिद्धिं आस्थिता जनकादयः ।
कर्मणैव हि संसिद्धिं आस्थिता जनकादयः ।

என்று கீதையில் கூறியபடி தர்மப்ரதானமான விதேஹ வம்சத்தில் உதித்த ஜனகமஹாராஜனே என் பிதாவாக ஆவார் எனக்கு ஸீதையென்று காரணப் பெயர் விளங்கி வருகிறது. எதோ என்னுடைய ஜன்மாந்தரத்திலுள்ள தபோ மஹிமையினால் தீமானான ராமனை நான் பர்த்தாவாக அடைந்தேன். நான ராம பத்தினிதான். ராமனுக்கும் எனக்கும் விவாகம் நடந்த பிறகு பன்னிரண்டு வருஷகாலம் பர்த்ரு க்ருஹத்தில் ஸகலவிதமான போகோபகரண ஸம்ருத்தியோடு கூடியவளாய்கொண்டு அமானுஷமான போகங்களை நான் அனுபவித்தேன். அந்த விஷயத்திலும் என்னைப்போல் பாக்யவதி மற்றொருவள் இருக்கிறாள் என்று சொல்லமுடியாது. பதிமூன்றுவது வருஷ ஆரம்பத்தில் என் மாமனரான தசரத ராஜன் என் பர்த்தாவான ராமனுக்கு இக்ஷ்வாகு வம்ச ராஜ்ய ஸ்ரீயை பட்டாபிஷேகம் செய்வதாகத் தீர்மானித்து அபிஷேகத்திற்கு உபயோகமான ஸம்பாரங்களை ஸுமந்த்ரர் மூலமாக சேகரிக்கும்படி ஏற்பாடு செய்தார். அதைப் பார்த்து கைகேயி தேவியானவள் தசரத சக்ரவர்த்தியினிடம் என் பர்த்தாவிற்கு ராஜ்யாபிஷேகத்தைச் செய்யாமலிருக்கும்படி தடுத்தாள்.

न पिबेयं न खादेयं प्रत्यहं मम भोजनम् ।
एष मे जीवितस्यान्तः रामो यद्यभिषिच्यते ॥

ந பிபேயம் ந காதேயம் ப்ரத்யஹம் மம போஜநம் ।
ஏஷ மே ஜீவிதஸ்யாந்தः ராமோ யத்யபிஷிச்யதே ॥

न पिबेयं न खादेयं प्रत्यहं मम भोजनम् ।
एष मे जीवितस्यान्तः सामो यत्यभिषिच्यते ॥

என்று வ்ருத்தாப்பிய தசையில் தசரத சக்ரவர்த்தியை கைகேயி தேவியானவள் கொஞ்சமேனும் பர்த்தா என்ற மான்யதா புத்தியைப் பாராட்டாமல் 'நான் போஜனம் செய்யமாட்டேன்; நீர் அருந்தமாட்டேன், ராமனுக்குப் பட்டாபிஷேகம் நடந்தால் அந்த நிமிஷத்தில் என்னுடைய ப்ராணனுக்கு வியோகம் ஏற்பட்டுவிடடது என்பதை நிச்சயமாக அறிந்துகொள்ளலாம். ராமனை அரண்யம் போகும்படி செய்யவேண்டும். முன்காலத்தில் சம்பராஸுரனோடு தாங்கள் யுத்தம் செய்யும்பொழுது சம்பராஸுரன் மூலமாக தங்களுக்கு இரண்டு தடவை ஏற்பட்ட ப்ராண விபத்தை நான் ஸாரத்யம் செய்யும்பொழுது ஹஸ்தலாகவத்தினால் ரதத்தைத் திருப்பி தங்களுடைய உயிரைக் காப்பாற்றியதற்கு இரண்டு வரங்கள் எனக்கு அளித்தீர்களல்லவா? அந்த இரண்டையும் குறிப்பிட்டு இதுவரையில் தங்களிடத்திலிருந்து நான் வாங்கிக்கொள்ளவில்லை. இப்பொழுது எனக்கு அந்த இரண்டும் அவசியமாக இருக்கிறது. அதில் ஒன்று ராமனுக்கு வனவாஸம், மற்றொன்று என் புத்ரனை பரதனுக்கு ராஜ்யாபிஷேகம்' என்று நிர்ப்பந்தப் படுத்தினாள். ராஜனை தசரதரோ ஸத்ய ஸந்தனைதினால் ஸத்தியத்தினின்றும் நழுவ ஸம்மதமில்லாமல் கஷ்டப்படும்போது, ப்ரிய புத்ரனை ராமர் பரதனுக்கு ராஜ்யத்தைக் கொடுக்கும்படி யாசித்துவிட்டு ராஜ்யாபிஷேகத்தைக் காட்டிலும் அனேக மஹான்களுடைய தர்சனத்திற்கு ஹேது பூதமான வனவாஸமானது தனக்கு மேலான ப்ரியத்தைக் கொடுக்கக் கூடியதானதினால் பித்ரு வாக்ய பரிபாலனம் என்ற வ்யாஜத்தை வைத்துக்கொண்டு ஆரண்யத்திற்கு வந்தார்.

दद्यात् न प्रतिगृह्णीयात् न ब्रूयात्किञ्चिदप्रियम् ।
अपि जीवितहेतोर्वा रामस्सत्यपराक्रमः ॥

ஸுஸ்ய நாநுமதம் ராமஸ்ய ந ஸ்வயம்க்ருதிஸ்ஸுஸ்ய ।
ஸுகி ஜீவிதலோகோ(அ)யம் ராஜ்ஞஸ்தஸ்ய வஸாகுண: ॥

தத்யாத் ந ப்ரதிக்ருண்ஹீயாத் ந ப்ரூயாத் கிஞ்சிதப்ரியம் ।
அபி ஜீவிதஹேதோர்வா ராமஸ்ஸத்யபராக்ரம: ॥

என்றபடி தன்னிடம் வந்தவர்களுக்கு அபீஷ்டத்தைக் கொடுப்பதே ராமருடைய ஸ்வபாவமாகும். தான் ஒருவனிடமிருந்தும் கையை நீட்டி வாங்குகிறதில்லை. ஒருவனுக்கும் அப்ரியமான செய்கையைத் த்ரிகரணத்திலும் செய்யமாட்டார். அப்ரியமாக வாக்கிலும் வார்த்தையைக் கூறமாட்டார். தன்னுடைய ஜீவிதத்திற்கே ஹானி வரக்கூடிய தாலும் மேற்சொன்ன ஸ்வபாவத்தினின்று கொஞ்சமேலும் நழுவமாட்டார். பராக்ரமத்திலும் பரமார்த்தமான பராக்ரமத்தோடு கூடினவர். அதனல் ராஜனுடைய ஆக்ஞை ஆனவுடன் தனது உத்தரீய வஸ்த்ரத்தைக்கூட கைகேயி தேவிக்கெதிரில் எறிந்துவிட்டு ஆரண்யத்திற்கு கிளம்பிவிட்டார். என்னை மாதாவிற்குப் பரிசர்யைகள் செய்துகொண்டு கௌஸல்யா தேவியினுடைய ஸமீபத்திலிருக்கும்படி ஆக்ஞாபித்தார். ஆகிலும் ராமனைவிட்டுப் பிரிந்து ஸ்வர்க்கத்திலும் எனக்கு வாஸம் செய்வதில் த்ருப்தி இல்லாதவளானதினல், ராமனுக்கு முன்பே நான் ஆரண்யத்திற்கு கிளம்பிவிட்டேன். லக்ஷ்மண ஸ்வாமியும் எனக்கு முன்பே கிளம்பிவிட்டார்.

இவ்விதம் நாங்கள் மூன்று பேரும் ஆரண்யத்தில் வந்து தண்டகாரண்யத்தில் வாஸம் செய்தோம். ராக்ஷஸனை ராவணனை, ராமலக்ஷ்மணர்களை மாயாம்ருக மூலமாக வெகுதூரம் செல்லும்படி செய்துவிட்டு நான் தனியாக இருக்கும் பொழுது என்னை அபஹரித்துக்கொண்டு வந்துவிட்டான். அந்த ராவணன் எனக்குக் கொடுத்த அவதிகளில் பாக்கி இருக்கும் காலம் இரண்டு மாதங்கள்தான். அதற்குள் நான் அவனுக்கு வசமாகாது போனல் என்னை அவன் சின்னபின்

ணமாகச் செய்துவிடுவான். இதுதான் என்னுடைய வ்ருத்தாந்த" மென்று ஸீதை ஆஞ்ஜனேயஸ்வாமியினிடத்தில் தன்னுடைய வரலாற்றைக் கூறினாள்.

ஸீதையினுடைய வார்த்தையைக் கேட்டவுடனே ஆஞ்ஜனேயஸ்வாமியானவர், ஸீதையினிடம் ஸாந்த்வ வசனத்தைச் சொல்லுகிறார்:

अहं रामस्य संदेशात् देवि दूतस्तवागतः ।
वैदेहि कुशली रामः त्वाञ्च कौशलमब्रवीत् ॥

அஹம் ராமஸ்ய ஸந்தேசாத் தேவி தூதஸ்தவாகதः ।
வைதேஹி குசலீ ராமः த்வாஞ்ச கௌசலமப்ரவீத் ॥

"ஹே ஸீதே, நான் ராமனுடைய தூதன்; ராமனுக்குத் தூதனானதினால் உனக்கும் நான் தூதனாக ஆகிவிட்டேன், ராமருடைய ஆக்ஞையினால் உன்னிடம் நான் வந்திருக்கிறேன். ராமன் க்ஷேமமாகவே இருக்கிறார். உன்னுடைய க்ஷேமத்தையும் தெரிந்துகொண்டு வரச்சொன்னார்.

यो ब्राह्ममस्त्रं वेदांश्च वेद वेदविदां वरः ।
स त्वां दाशरथी रामः देवि कौशलमब्रवीत् ॥
लक्ष्मणश्च महातेजाः भर्तुस्ते अनुचरः प्रियः ।
कृतवान्शोकसन्तप्तः शिरसा तेऽभिवादनम् ॥

யோ ப்ராஹ்மமஸ்த்ரம் வேதாம்ச்ச வேத வேதவிதாம் வர: ।
ஸ த்வாம் தாசரதீ ராம: தேவீ கௌசலமப்ரவீத் ॥
லக்ஷ்மணச்ச மஹாதேஜா: பர்துஸ்தே அநுசர: ப்ரிய: ।
க்ருதாம்ஜலிரஸந்தப்த: சிரஸா தேபிவாதயம் ॥

வேதார்த்த ஞானத்தோடு கூடினவர்களுக்குள், எந்த ராமன் முதன்மையாகச் சொல்லக்கூடிய மஹிமையோடு கூடினவரோ, ப்ரும்மாஸ்த்ரத்தினுடைய தத்வம் எந்த ராமனுக்குத்தான் தெரியுமோ, வேதத்தில் கூறப்பட்ட ஸர்வ கர்மங்களினுடைய பாரத்தையும் எந்த மஹானுபாவன் அடைந்தானே, அந்த ராமன், உன்னிடம் க்ஷேமத்தைத் தெரிவிக்கச் சொன்னார். ராமனுக்கு மிகவும் ப்ரீதிபாத்ரமான லக்ஷ்மணனும் உன்னிடத்தில் தலைவணங்கி நமஸ்காரம் செய்து க்ஷேமத்தைத் தெரிவிக்கச்சொன்னார்"

இவ்விதம் சொன்ன ஹனுமாருடைய வார்த்தையை ஸீதை கேட்டதும் பரம ஸந்தோஷத்துடன் ஆஞ்ஜனேயரைப் பார்த்துச் சொல்லுகிறாள். "ஹனுமன்!

कल्याणी व्रत गाथेयं लौकिकी प्रतिभातिमां ।
एति जीवन्तमानन्दः नरं वर्षशतादपि ॥

கல்யாணீ வ்ரத காதேயம் லௌகிகீ ப்ரதிபாதிமாம் ।
ஏதி ஜீவந்தமாநந்த: நரம் வர்ஷசதாதபி ॥

"ஆயிரக்கணக்கான வருஷங்களாக துக்கத்தை ஒரு மனிதன் அநுபவித்து வந்தாலும், எந்த மனிதனும் பாவி காலத்தில் ஆனந்தத்தை அநுபவிப்பான் என்ற கதையானது என் விஷயத்தில் ஸத்யமாக ஆகிவிட்டது. நான் அநுபவித்த துக்கத்தைப்போல் யாரும் இனி அநுபவிக்கப் போவதில்லை. அப்போர்ப்பட்ட எனக்கு பாவி லௌபாக்ய ஸுசகமாக தங்களுடைய நல்வரவு ஏற்பட்டு ராமலக்ஷ்மணர்களு

டைய குசலவ்ருத்தாந்தத்தைக் கேட்கும்படியான பாக்
யத்தை அடைந்தேனல்லவா. இதைக் காட்டிலும் அந்த
லௌகீகமான பழமொழிக்கு வேறு உதாஹரணம் வேண
டுமா?" என்று கூறினாள்.

இப்படி சொல்லிவிட்டு ஹனுமாருடைய விஷயத்தில்
ஸீதையினுல் அத்புதமான ஒரு ஆனந்தமானது அனுபவிக்
கப்பட்டது. பரஸ்பரம் இருவர்களுக்கும் நம்பிக்கை ஏற்
பட்டு, பேச ஆரம்பித்தார்கள். ஆகிலும் ராக்ஷஸனுடைய
நகரம் ஆனதினுல் ராவணனுடைய தௌஷ்ட்யத்தையும் கவ
னிக்கும்பொழுது ஆஞ்ஜநேய ஸ்வாமியானவர் தன்னுடைய
ஸமீபத்திற்கு எவ்வளவுக்கு எவ்வளவு நெருங்கினாரோ, அவ்
வளவுக்கு அவ்வளவு பயம் ஏற்பட்டு, 'ராவணன்தான் இந்த
உருவமாக வேஷத்தைத் தரித்துக்கொண்டு நம்மை வ்யாமோ
கப்படுத்துகிறானே' என்றும் ஸீதைக்கு தோன்றியது. அத
னுல் அஹோ கஷ்டமென்று ஸீதையானவள் மிகுந்த வ்யஸ
னத்தை அடைந்து சிட்சுடாவ்ருக்ஷத்தினுடைய கிளையைப்
பிடித்துக்கொண்டிருந்தவள் அந்தக் கிளையை விட்டு விட்டுப்
பூமியில் உட்கார்ந்துகொண்டு மௌனமாக இருந்துவிட்
டாள். மறுபடி ஆஞ்ஜநேய ஸ்வாமியை கவனிக்கவே
இல்லை. ஆஞ்ஜநேய ஸ்வாமியோ ஸந்தோஷமாக
ஸீதைக்கு நமஸ்காரத்தைச் செய்து என்னிடத்தில் யாதொரு
விதமான சங்கையையும் அடையவேண்டாம் என்று தெரி
வித்துக்கொண்டார். ஸீதையோ நீ மஹா மாயாவியான
ராவணனேதான், எதற்காக என்னை மோஸம் செய்கிறாய்.
அது உனக்கு அழகல்ல, உன்னுடைய குலமே நசித்துவிடும்.
ஜனஸ்தானத்தில் உன்னுடைய நிஜமான ராக்ஷஸ உருவை
மறைத்து வைத்துக்கொண்டு தரிதண்டியான ஸந்யாஸி
போல் வேஷத்தை ஸ்வீகரித்துக்கொண்டும் என்னை நீ அப
ஹரித்த பாபியன்றோ; அந்த ராவணன்தான் நீ, உபவாஸத்தி
னுல் த்ருசமாயும், பார்த்தாலே விட்டுப் பிரிந்திருக்கத்தன்ம
ஸ்வபாவத்தோடும் கூடிய என்னை இவ்விதம் தவிர்க்கச்

செய்வது ந்யாயமாக ஆகாதே என்று வெகு ப்ரகாசமாக ஆஞ்ஜநேய ஸ்வாமியைப் பார்த்து ராவணன்தான் என்ற சங்கையை அடைந்து ஸீதா தேவியானவள் பயந்தாள்.

பிறகு ஆஞ்ஜநேய ஸ்வாமியைப் பார்த்தமாத்ரத்தில் தன்னுடைய மனதில் ஏற்பட்ட ப்ரஸன்னதை யென்ற விங்கத்திலால் ராவணன் என்ற சங்கையை உதறித் தள்ளிவிட்டு வன் ராமதூதலுகத்தான் இருக்கக் கூடாது என்ற எண்ணத்துடன் ஆஞ்ஜநேய ஸ்வாமியைப் பார்த்துச் சொல்லுகிறாள்.

" ஹே! ஆஞ்ஜநேயரே, நீர் ராமனால் அனுப்பட்ட தூதனென்பது வாஸ்தவமானால் ராமனைபற்றியுள்ள சில கேள்விகள் உம்மிடத்தில் கேட்கிறேன். ராம கதையைக் கேட்பதில் எனக்கு மிகுந்த ப்ரியமுண்டு என்னுடைய ப்ரிய னன ராமனுடைய கல்யாண குணங்களை விவரமாக எடுத்துச்சொல்லு. நதீ ப்ரவாஹமானது கரையை உடைத்துக் கொண்டு போவது போல் ராமனுடைய கல்யாண குணங் கள் என்னுடைய மனதை அபஹரிக்கின்றது. ஸ்வப்னத் திலும் ராமனை நான் கண்டால் பரமானந்தத்தை அனுபவிப் பேன். ஸ்வப்னமும் எனக்குச் சத்ருவாக ஆகிவிட்டது. நீர் வந்து ராமனுடைய கல்யாண குணத்தை என்னிடத்தில் வர்ணிப்பது ஸ்வப்னமோ எனறும் நான் நினைக்க ந்யாய மில்லை. வானர ஜாதியில் பிறந்த உம்மை ஸ்வப்னத்தில் பார்த்து நான் க்ஷேமத்தை அடைய முடியுமா? தத்காலத் திலோ என் மனதிற்கு அத்புதமான ப்ரீதி விசேஷம் ஏற்பட் டிருக்கிறது. ஸௌபாக்யத்தை ஸூசிப்பிக்க கூடிய சில சுபநிமித்தங்களையும் காண்கிறேன். ஆகையினால் நீர்வந்து பேசினதும் ஸ்வப்னமில்லை. ஒரு ஸமயம் மனதினுடைய ப்ரமமாக இருக்கலாமென்றாலோ மனதினுடைய ப்ரமமா கவோ அல்லது இல்லாத விஷயத்தை இருப்பதுபோல் பாவிக்கச் செய்கிற மனதினுடைய ஸங்கல்பமாகிற வாயுவி னுடைய கதிவிசேஷமோ, பார்த்தாலைவிட்டுப் பிரிந்ததினால் திலோ என் மனதிற்கு அத்புதமான ப்ரீதி விசேஷம் ஏற்பட் டிருக்கிறது. ஸௌபாக்யத்தை ஸூசிப்பிக்க கூடிய சில சுபநிமித்தங்களையும் காண்கிறேன். ஆகையினால் நீர்வந்து பேசினதும் ஸ்வப்னமில்லை. ஒரு ஸமயம் மனதினுடைய ப்ரமமாக இருக்கலாமென்றாலோ மனதினுடைய ப்ரமமா கவோ அல்லது இல்லாத விஷயத்தை இருப்பதுபோல் பாவிக்கச் செய்கிற மனதினுடைய ஸங்கல்பமாகிற வாயுவி னுடைய கதிவிசேஷமோ, பார்த்தாலைவிட்டுப் பிரிந்ததினால்

ஸ்த்ரீகளுக்கு ஏற்படும் ப்ராந்தியான உன்மாதமோ இப்ப டிப்பட்ட மனதினுடைய வ்ருத்தி விசேஷங்களில் ஏதாவது ஒன்றாக இருக்கும் என்று யோசித்தாலும் அவைகளும் இல்லை. அவைகளெல்லாம் ஆச்ரயமான புருஷனை வ்யாமோகப் படுத்திவிடும். எனக்கோ என்னுடைய ஸ்ம்ருதிக்கு யாதொரு விதமான குறைவும் வரவில்லை. ஆகையினால் ராவணன் காமரூபியான திரிசிரஸ் ராக்ஷஸ ராஜனை ராவணனாகத்தான் இருக்கவேண்டும் என்று தீர்மானித்துக் கூறிவிட்டு மறுபடி யும் மௌன முத்திரையையே தரித்தாள். ஆஞ்ஜநேய ஸ்வாமியோ, ஸீதையினுடைய ஸந்தேகத்தை நிவ்ருத்திச் செய்துவைக்க ச்ரோத் ரேந்த்ரியத்திற்கு இன்பமையைக் கொடுக்கக் கூடிய ராமனுடைய கல்யாண குணங்களை எடுத்து வர்ணிக்க ஆரம்பித்தார். "ஹே பரதேவதையே ராமரே ஸூர்யபகவானைப்போல் மஹாதேஜஸ்வி. சந்த்ர னைப்போல் ஸர்வ ப்ராணிகளுக்கும் ஆஹ்லாதத்தை உண்டு பண்ணக்கூடியவன். குபேரனைப்போல் ஸர்வ லோகத்திற்கும் அரசன். மஹாவிஷ்ணுவைப்போல் அபரிமிதமான பராக்ர மத்தோடு கூடினவன். மஹாயசஸ்வீ, ப்ருஹஸ்பதி பகவானைப்போல் ஸத்யவாதியும், மதுரமாகப் பேசுகிறவனும் கூட மிகவும் ஸௌந்தர்யத்தோடு கூடி விளங்குபவன் மன்மதன்தானே என்று சொல்லக்கூடிய நிலையில் பாஸிக் கிறவன். அபரிமிதமான காந்தியினால் ஜ்வலிக்கின்றவன். பரமஸௌபாக்யத்திற்கு இருப்பிடமான வஸ்து. அவச்யம் அங்கீகரிக்க வேண்டிய ஸந்தர்ப்பத்தில் கோபத்தை ஸ்வீகரிப்பான்; தண்டிக்கவேண்டியவனை தண்டிப்பான்; உலகத்திலேயே பரமச்ரேஷ்டனென்று சொல்லக் கூடியவன். இந்தப் பதினான்கு உலகங்களும் அவனுடைய கை நெடில்களுக்குள் அடங்கிவிட்டது. மாயா ம்ருகத்தினால் அவ் வித மஹிமையுள்ள ப்ரபுவை வெகுதூரத்திற்கப்பால் போகும்படி செய்துவிட்டு எந்த மஹாபாவியினால் நீ அப ஹரிக்கப்பட்டாயோ அந்த மஹாபாவிக்கு அதிசீக்ரத்தில் கிடைக்கும் பலனையும் நீ பார்க்கலாம். மஹா கோபத்தோடு

விலிலிருந்தும் தொடுத்துவிடப்பட்ட பாணங்களினுல் ராவணனை எந்த ராமன் வதிக்கப் போகின்றாரோ அந்த ராமனுல் அனுப்பப்பட்ட தூதன்தான் நான். அது ஸத்தியமே, என்னிடத்தில் வீணுக சங்கையை அடைய வேண்டாம், உன்னை விட்டுப் பிரிந்ததிலிருந்து ராமன் துக்கஸாகரத்தில் மூழ்கிக் கொண்டு வருகிறார். மஹா தேஜஸ்வியான லக்ஷ்மணனும் உனக்கபிவாதனம் செய்து குசலப்ரச்னம் செய்யச் சொன்னர். ராமருக்கு ஸகாவாயிருக்கும் வானர ராஜனை ஸுக்ரீவனும் உனக்கு க்ஷேமத்தைத் தெரிவித்துக்கொண்டார். ஸுக்ரீவனோடு தினந்தோறும் உன்னுடைய கதையைத் தான் ராமன் ஸ்மரித்துக்கொண்டு உன்னைப்பற்றியே சொல்லிக்கொண்டிருக்கிறார். அதிசீக்ர காலத்தில் ராமலக்ஷ்மணர்களை நீ பார்க்கலாம். கோடிக்கணக்கான வானர ஸேனைகளுக்கு மத்தியில் விளங்கும் ஸுக்ரீவனையும் பார்க்கலாம் நான் ஸுக்ரீவனுடைய மந்திரியாவேன். உன்னைத் தேடுவதற்காக ஸமுத்ரத்தைத் தாண்டி லங்கா நகரத்திற்குள் அனுப்ரவேசம் செய்தேன். சத்ருவான ராவணனுடைய சிரஸ்ஸில் இடது காலை வைத்துக்கொண்டு நான் லங்கைக்குள் நுழைந்தேன். அதனல் நமக்கு ஜயம்தான் ஏற்படப்போகிறது. நீ என்னை ராவணனென்று கொஞ்சமேனும் சந்தேகப்படவேண்டாம் என்னுடைய வார்த்தையில் நம்பிக்கையை வைக்கவேண்டும் என்று ப்ரார்த்தித்துக்கொண்டார்.

அதைக்கேட்ட ஸீதை ஆஞ்ஜநேய ஸ்வாமியைப் பார்த்து ராமரோடு உமக்கு ஸம்பந்தம் ஏற்படக் காரணமென்ன, எங்கே ஏற்பட்டது? குரங்குகளுக்கும் மனிதர்களுக்கும் ஸ்நேகம் ஏற்படுமா? ராமருக்கோ லக்ஷ்மணருக்கோ என்ன அடையாளங்கள். ராமருடைய அவயவ விசேஷங்கள் எவ்விதமானவை; ராமருடைய கைகள் துடைகள் முதலியவை எப்படி விளங்குகின்றன? அப்படியே லக்ஷ்மணனுடைய அஸாதாரணமான அடையாளங்களென்ன என்று கேட்டாள்?

ஆஞ்ஜநேய ஸ்வாமியும் ஸீதையினுடைய ப்ரசனத்திற்கு அநுகுணமாக ராமருடைய ஸ்வரூபத்தை எடுத்து உரைக்க ஆரம்பித்தார்.

"ஹே ஸீதே, ராமருடைய சரீர ஸம்ஸ்தான விசேஷத்தையும் லக்ஷ்மணனுடைய அடையாளங்களையும், நான் ராமதூதன்தாநு என்று பரீக்ஷிக்க நீ கேழ்க்கிறாய், உனக்கெதிரில் அவைகளையெடுத்துக் கூறும்படியான பாக்யம் எனக்கு ஏற்பட்டதிலும் ஸந்தோஷமே; ராமனுடைய அடையாளங்கள் எவைகளோ அவ்விதமே லக்ஷ்மணனுடைய அடையாளங்கள். அவைகளை எனக்குத் தெரிந்தமட்டில் நான் எடுத்து உரைக்கிறேன். அதைக்கேட்ட பிறகாவது இவன் ராமதூதன்தானு என்று நம்பிக்கையை அடைவாயோ என்று பார்க்கிறேன் என்று சொல்லிவிட்டு ராமருடைய கல்யாண குணங்களைச் சொல்ல ஆரம்பித்தார்.

रामः कमलपत्राक्षः सर्वसत्वमनोहरः ।
रूप दाक्षिण्य सम्पन्नः प्रसूतो जनकात्मजे ॥

ராமः கமலபத்ராக்ஷः ஸர்வஸத்வமநோஹரः ।
ரூபதாக்ஷிண்ய ஸம்பந்நः ப்ரஸூதோ ஜநகாத்மஜே ॥

"ராமரோ ஸர்வப்ராணிகளையும் ரமிக்கச்செய்யும் ஸர்வாங்க ஸௌந்தர்யத்தோடு கூடினவர் ராமருடைய எந்த அவயவங்களைப் பார்த்தாலும் அவைகளில் ஸௌந்தர்ய லக்ஷ்மியானவள் நடனம் செய்கின்றாள் என்பதில் ஸந்தேஹமேயில்லை அத்துடன் கமல பத்ராக்ஷன்; செந்தாமரைக் கண்ணன், நதீப்ரவாஹத்தின் நடுவிலுள்ள சுழலைப்போல் ராமருடைய தேஹ ஸம்பந்தமான காந்தியாகிற ப்ரவாகத்தில் ப்ராணிகளுடைய த்ருஷ்டியையும் மனதையும் ஆகர்

ஷித்து ப்ரவாஹத்திற்குள் மூழ்குப்படி செய்கிற சுழலைப் போல் நேத்ரங்களின் சாலையானது விளங்கி வருகின்றது. அவ்விதமான நேத்திரத்தின் லௌந்தர்யத்திற்கு ஆஸ்தான பூமியாகவே பகவான் விளங்கி வருகிறார் என்பதில் ஆக்ஷேப ணையே இல்லை. सर्वसत्त्वमनोहरः (ஸர்வஸத்வமநோஹரः) (ஸர்வஸத்வமநோஹரः) எல்லாப் பிராணிகளுடைய மனதையும் அபஹரிக்கின்றவர்; நாலு திக்யக் ஜாதியில் பிறந்தவன், வ்ருக்ஷத்தில் ஒரு கிளையினின்றும் மற்றொன்றுக்குத் தாவுகின்ற சஞ்சல ஸ்வபாவத்தோடு கூடியவன். ஸாமான்யம் விசேஷம் என்ற விபாகத்தை அறியாதவன். அப்போர்ப் பட்ட என்னுடைய சித்தத்தைக்கூட அபஹரித்துவிட்டார். ராமர் தன்னுடைய லௌந்தர்யத்தினால் என் சித்தத்தையும் அபஹரித்தக் காரணத்தினால்தான் என் சித்தம் என்னுடைய மதீனத்திலில்லாததினால் நாம் ராமருக்கு தாதனாக ஆகிவிட்டேன். தவிறவும் रूपदाक्षिण्यसम्पन्नः (ரூபதாக்ஷிண்யஸம்பந்நः) (ரூபதாக்ஷிண்யஸம்பந்நः) என்றதினால் தேஹத்திலுள்ள ஸகல ரூபங்களையும் க்ரஹித்துக் கொள்ள வேண்டும். தாக்ஷிண்யம் என்பதினால் ஆத்ம குணங்கள் யாவற்றையும் வாங்கிக்கொள்ள வேண்டும். தேஹ குணங்களாலும் ஆத்ம குணங்களாலும் நிறைந்தவன் என்ற அர்த்தமும் வெளியாகிறது, இந்த குணங்களெல்லாம், ராமன் அவதரித்த பிறகு செயற்கையினால் வந்தவையல்ல सहजः (ஸஹஜः) (ப்ரஸஹ்ய:) அதாவது ஔபத்திகம், அக்னிக்கு ஔஷ்ண்யம்போல் ஸஹஜமாகப் பிறப்பிலேயே உண்டான குணங்களாகும். ஆனால் மிகவும் மேலானவைகள ராமனை நான் வர்ணித்ததினால் அந்த ராமனுக்கு ஸமானமாக மற்றொருவன் இருக்கின்றனரா இல்லையா என்று ஸந்தேஹம் ஏற்பட்டால் அதை நிவ்ருத்தி செய்ய ராமனுக்கு ஸமானமான குணங்களோடு கூடிய மற்றொருவர் தாங்கள்தானென்று தங்களாத்தான் சொல்ல முடியும் என்ற அபிப்ராயத்தை "தேஹ ஜனகாத்மஜே" என்றதினால் தெரிவித்துக்கொண்டார்.

பகவானுடைய அவதாரத்தில் பிறப்போடுகூடவே தேஹ குணங்கள் ஆத்ம குணங்கள் இவை உண்டானது என்று சொல்வதிலிருந்தும் உத்பன்ன த்ரவ்ய க்ஷண சமூஹ திஷ்டதி (உத்பந்நம் த்ரவ்யம் க்ஷணம் அகுணம் திஷ்டதி) என்ற நையாயிக மதமானது வேத பாஹ்ய மதமானதினால், ச்ரேயஸ்ஸை விரும்புகிறவர்கள் அதை ஆதரிக்கக் கூடாது என்ற ரஹஸ்யமும் வெளியாகிறது. அத்துடன் தேஜஸ்ஸில் ஸூர்யனுக்கு ஸமானமானவன். பொறுமையில் ப்ருத்விக்கு ஸமானமானவன், புத்தியில் ப்ருஹஸ்பதியை வெல்லக் கூடியவன், யஜஸ்ஸில் தேவேந்த்ரனை ஒற்றவன், ஸகல ஜீவகோடிகளையும ரக்ஷிப்பவன், ஸஜ்ஜனங்களையும் காப்பாற்றுபவன்; ஸதாசாரத்தை ரக்ஷிக்கிறவன், தர்ம தேவதையைப் பரிபாலிக்கிறவன் தர்ம விரோதிகளான சத்ருக்களைத் தவிக்கச் செய்பவன். ப்ராஹ்மணன் க்ஷத்ரியன் வைச்யன் சூத்ரன் என்ற நான்கு வர்ணங்களையும், மந்த்ரத்வ வர்ணங்களுக்கு உசிதமான தர்மங்களையும் கொஞ்சமேனும் அதற்குக் குறைவு வராமல் ரக்ஷிப்பவன், ஸகலவிதமான சாஸ்த்ரீய வ்யவஸ்தைகளையும் உலகத்தில் ப்ரசாரம் செய்து ப்ராணிகளை அனுஷ்டிக்கச் செய்கிறவன்; ப்ரம்மவாச்சஸ்ஸோடு கூடினவன். ப்ரம்மசர்ய வ்ரதத்தைக் கைவிடாமல் அனுஷ்டிக்கிறவன்; ஸஜ்ஜனங்களுக்கு உபகாரம் செய்கிறவன் ஸத் கர்மாவை உலகத்தில் நிலைநாட்டுகிறவன். ஆன்வீக்ஷிகி, த்ரயீ, வார்த்தா தண்டம் நீதி என்ற ராஜவித்யைகளான நான்கு சாஸ்த்ரங்களையும் அப்யாஸம் செய்தவன். ப்ராம்மணர்களிடம் பரம பக்தியோடு கூடியவன் ஸகல சாஸ்தரங்களையும் அறிந்தவன். லௌகீல்யத்தோடுகூடினவன் மிகவும் அதிகமான வினயத்தைக் கைகொண்டவன் தன் வேதமான யஜுர் வேதத்திலும், மற்ற வேதங்களிலும் பாண்டித்யம் உள்ளவன் தனுர் வேதங்களிலும் பாண்டித்யம் உள்ளவன் தனுர் வேதங்களில் அபாரமான ஸாமர்த்தியத்தோடு கூடினவன் சிக்ஷா, கல்பம், வ்யாகரணம் நிருக்தம், சந்தஸ், ஜ்யோதிஷம், முதலிய வேதங்களாகிற ஆறுகளிலும்

மறறா டாண்டியத்தோடு கூடினவன் என்று ராமனுடைய ஆத்ம குணங்களை ஆஞ்ஜனேய ஸ்வாமியானவர் விஸ்தார மாக வர்ணித்தார். தேஹ குணங்களைப்பற்றி விஸ்தரிக்க ஆரம்பிக்கிறார் :

विपुलांसो महाबाहुः कम्बुग्रीवः शुभाननः ।
गूढजत्रुः सुताम्राक्षो रामो देवि जनैः श्रुतः ॥
दुन्दुभिस्वननिर्घोषः स्निग्धवर्णः प्रतापवान् ।
समः समविभक्ताङ्गः वर्णं श्यामं समाश्रितः ॥
त्रिस्थिरः त्रिप्रलम्बश्च त्रिसमः त्रिषु चोन्नतः ।
त्रिताम्रः त्रिषु च स्निग्धः गम्भीरस्त्रिषु नित्यशः ॥

விபுலாம்ஸோ மஹாபாஹு: கம்புக்ரீவ: சுபாநந: ।
கூடஜத்ரு: ஸுதாம்ராக்ஷ: ராமோ தேவி ஜனை: ச்ருத: ॥
துந்துபிஸ்வநநிர்கோஷ: ஸ்நிக்தவர்ண: ப்ரதாபவான் ।
ஸம: ஸமவிபக்தாங்க: வர்ணம் ச்யாமம் ஸமாச்ரித: ॥
த்ரிஸ்திர: த்ரிப்ரலம்பச்ச த்ரிஸம: த்ரிஷு சோந்நத: ।
த்ரிதாம்ர: த்ரிஷு ச ஸ்நிக்த: கம்பீரஸ்த்ரிஷு நித்யச: ॥

விசாலமான தோள் ப்ரதேசத்தோடும் கூடமாய் மறைபட்ட புஜங்களுடைய ஸந்திகளோடும் சங்கம்போல் வெளுப்பான கழுத்துப் பிரதேசத்தோடும் கூடினவர், நீண்ட கைகளை யுடையவர். சிவந்த கண்களை உடையவர். கம்பீரமான ஸ்வர வத்தோடும் கூடினவர். அழகான தேகத்தின் நிறத்தோடும் விளங்குபவர்; மகா பராக்ரமசாலியும்தான். வலது இடது

பாகங்களில் உள்ள அவயவங்கள் ஸமமாக இருக்கும்படி உள்ள ஸங்ஸ்தானத்தோடு கூடினவர். மார்பு மணிக்கட்டு முஷ்டி இந்த மூன்றிலும் ஸ்திரத் தன்மையோடு கூடினவர்.

उरश्च मणिबन्धश्च मुष्टिश्च नृपतेः स्थिराः ।

உரஸ்ச மணிபந்தஸ்ச முஷ்டிஸ்ச ந்ருபதேः ஸ்திராः

என்று ஸாமுத்ரிகா லக்ஷண சாஸ்திரத்தில் சொல்லியபடி மேற்சொன்ன மூன்று பாகங்களிலும் ஸ்திரத்தன்மையோடு கூடினவர். அவ்விதமே மூன்று ப்ரதேசங்களிலும் தீர்க்கமாக நீண்டு இருக்கும் பாகத்தோடும் கூடினவர்.

दीर्घभ्रूबाहुमुष्कस्तु चिरजीवी धनी नरः ।

தீர்கபுருபாஹுமுஷ்கஸ்து சிரஜீவீ தனீ நரः ।

என்ற சாஸ்த்ரப்படி புருவங்கள் கைகள் முஷ்கம் இந்த மூன்றும் எந்த மனிதனுக்கு தீர்க்கமாக இருந்து வருகின்றதோ அந்த மனிதன் சிரஞ்ஜீவியாகவும் மகா தனிகனாகவும் இருந்து வருவான் என்ற சாஸ்த்ரப்ரகாரம் தீர்க்கமான புருவம், பாஹு, முஷ்கம் இவைகளோடு கூடினவர்.

त्रयश्च यस्य विद्यन्ते प्रलम्बाः मेढ्रबाहवः ।

த்ரயஸ்ச யஸ்ய வித்யந்தே ப்ரலம்பாः மேட்ரபாஹவः ।

என்ற வசனத்தையனுஸரித்தும் மூன்று ஸ்தானங்களில் ஸாம்யத்தையும் அடைந்தவன்.

केशाग्रं वृषणं जानु समा यस्य स भूपतिः ।

கேஸாக்ரம் வ்ருஷணம் ஜாநு ஸமா யஸ்ய ஸ பூபதி: ।

கேசாக்ரம் வ்ருஷணம் ஜாநு ஸமா யஸ்ய ஸ பூபதி: ।

என்ற சாஸ்த்ரத்தை யநுஸரித்து தலைமயிரின் நுனிபாகங்கள், இரண்டு வ்ருஷணங்கள், முழங்கால் இவைகள் ஸமமாக மேற் கீழ் என்ற தாரதம்யத்தை இழந்து உத்தம புருஷர்களிடம் காணப்படும். அவ்விதம் பகவானுன ஸ்ரீராமனிடம் இருந்து வருகிறது. அதை திரிஸம: என்ற பதத்தினுல் ஸுசிப்பிக்கின்றார். தவிர त्रिषु च उन्नत: (த்ரிஷு ச உந்நத:) (த்ரிஷு ச உந்நத:) என்ற பதத்தினுல்

उन्नतकुक्षिः क्षितिपाः परिमण्डलोन्नतनाभय क्षितिपाः ।
हृदयं न वेपनं पृथु समोन्नतं मांसलं च नृपतीनाम् ॥

உந்நதகுக்ஷி: க்ஷிதிபா: பரிமண்டலோந்நதநாபய க்ஷிதிபா: ।
ஹ்ருதயம் ந வேபநம் ப்ருது ஸமோந்நதம் மாம்ஸலம் ச நிருபதீநாம் ॥

உந்நதகுக்ஷி: க்ஷிதிபா: பரிமண்டலோந்நதநாபய: க்ஷிதிபா: ।
ஹ்ருதயம் ந வேபநம் ப்ருது ஸமோந்நதம் மாம்ஸலம் சந்ருபதீநாம் ॥

என்று வராஹ மிஹிரர் சொல்லியபடி உதர பாகத்திலும் நாபிப்ரதேசத்திலும் அப்படியே ஹ்ருதய பாகத்தில் பெரிதாயும், உன்னதமாயும், ஸமமாயும், மாம்ஸப்பற்று உள்ளதாயும் ஸந்நிவேச விசேஷங்கள் ராஜாக்களிடம் காணப்படுமென்று தெரிகின்றபடியினுல் அந்த விசேஷங்களெல்லாம் ஸ்ரீராமனிடம் ப்ரத்யக்ஷமாகக் காணப்படுகிறபடியினுல் त्रिषु च उन्नतः (த்ரிஷு ச உந்நத:) (த்ரிஷு ச உந்நத:) என்ற பதத்தினுல் அதை ஆஞ்ஜனேய ஸ்வாமியானவர் தெரிவிக்கின்றார். அவ்விதமே ताम्रः (தாம்ர:) (தாம்ர:) மூன்று ப்ரதேசங்களில் சிகப்பு நிறமுடையவராயும் இருந்து வருகின்றார்.

श्लिष्टाङ्गुली रुचिरताम्रनखौ सुपार्ष्णी पादौ करावपि सुरक्तनखाङ्गुलेखौ । (ஸ்லிஷ்டாங்குலீ ருசிரதாம்ரநகௌ ஸுபார்ஷ்ணீ பாதௌ கராவபி ஸுரக்தநகாங்குலேகௌ) (ச்லிஷ்டாங்குலீ ருசிரதாம்ரநகௌ ஸுபார்ஷ்ணீ பாதௌ கராவபி ஸுரக்தநகாத்மரேகௌ) என்ற ஸாமுத்ரிகா சாஸ்த்ரத்தையனுஸரித்து சிகப்பான நகங்கள்; சிவந்த பார்ச்வங்கள், கைகள் அவ்விதமே கால்கள் இவை களோடு கூடினவர்.

स्निग्धाः भवन्ति वै तेषां पादरेखाः शिरोरुहाः ।

ஸ்நிக்தாஃ ஹவந்தி வை தேஷாம் பாதரேகாஃ சிரோருஹாஃ ।

ஸ்நிக்தாஃ பவந்தி வை தேஷாம் பாதரேகாஃ சிரோருஹா ।

என்ற வசனப்படி கால்களென்ன ரேகைகளென்ன தலைமயிர் களென்ன இவைகள் மூன்றும் ஸ்னிக்தமாக, பிசு பிசுப்பு ளதாக இருந்து வருகின்றது. தவிரவும்

स्वरे गतौ च नाभौ च गम्भीरः त्रिषु सस्यते ।

ஸ்வரே கதௌ ச நாபௌ ச கம்பீரஃ த்ரிஷு ஸஸ்யதே ।

ஸ்வரே கதௌ ச நாபௌ ச கம்பீரஃ த்ரிஷு ஸஸ்யதே ।

என்ற வசனப்ரகாரம், கண்டஸ்வரத்திலும், காம்பீர்யத் தோடு கூடினவர். ஸாமுத்ரிகா லக்ஷண சாஸ்திரத்தில் உத் தம புருஷனுடைய அவயவ ஸந்நிவேச விசேஷங்கள் எவ்வி தமாக வர்ணிக்கப்பட்டிருக்கின்றதோ அவைகள் எல்லாவற் றிற்கும் ராமனே தான் உதாஹரணமாகச் சொல்லவேண்டும்

सत्यधर्मपरः श्रीमान् संग्रहानुग्रहे रतः ।
देशकालविभागज्ञः सर्वलोकप्रियंवदः ॥

ஸத்யதர்மபராஃ ஸ்ரீமான் ஸம்க்ரஹாநுக்ரஹே ரதஃ ।
தேசகாலவிபாகக்ஞஃ ஸர்வலோகப்ரியம்வதஃ ॥

ஸத்யதர்மபராஃ ஸ்ரீமான் ஸம்க்ரஹாநுக்ரஹே ரதஃ ।
தேசகாலவிபாகக்ஞஃ ஸர்வலோகப்ரியம்வதஃ ॥

ஸத்தியத்தையும், தர்மத்தையும் கைகொண்டவர். அக்கார ணத்தினல், ஸகலவிதமான ஸம்பத்துக்களாலும் அலங்கரிக் கப்பட்டவர். ப்ரஜைகளிடமிருந்து கப்பம் வாங்குவதிலும் கொடுக்கவேண்டிய ஸந்தர்ப்பத்தில் கொடுப்பதிலும் சமர்த்தர். தேச காலத்தை யறிந்து ஸர்வப் பிராணி களுக்கும், ப்ரியமாகவே பேசிக்கொண்டு ப்ராணிகளுக்கு நன் மையைச் செய்வதிலேயே, மிகவும் ஈடுபட்டவர். அவ்விதமே, அந்த ராமனுடைய தம்பியான லக்ஷ்மண ஸ்வாமியும், ஸமஸ்தமான விக்ரஹ குணங்களாலும், ஆத்ம குணங்களா லும் அலங்கரிக்கப்பட்டவர். அந்த இருவர்களும், உன்னைப் பார்க்க வேண்டுமென்கிற உத்ஸாஹமுடையவர்களாய்க் கொண்டு, பூமி முழுவதும் தேடிக்கொண்டு யத்ருச்சையாக, ருச்யமூக பர்வதத்தினுடைய ஸமீபத்திற்கு வந்து சேர்ந்து எங்களைச் சந்தித்தார்கள். ருச்யமூக பர்வதத்திலோ வாலிக்குப் பயந்துகொண்டு வானர ராஜனான சுக்ரீவன் வஸித்து வருகின்றான். நானும் என்னைப்போன்ற சிலரும் ஸுக்ரீவனுடைய நீதியை அனுஸரித்து ஸுக்ரீவனுக்குப் பரிசர்யை செய்துகொண்டு ஸுக்ரீவன் பின்னேதானே நாங் களும் வாஸம் செய்கின்றோம். ராம லக்ஷ்மணர்களைப் பார்த்தவுடன் ஸுக்ரீவன் வாலிதான் ராஜபுத்ரர்களைப் போல் வேஷம் போட்டுக்கொண்டு தன்னை ஹிம்சிக்க வரு கின்றானே என்று பயந்து ரிச்யமூக பர்வதத்தைவிட்டு வெளி யில் ஓட ஆரம்பித்தான். நான்தான் ஸுக்ரீவனை ஸமாதானம் செய்து மதங்க மஹரிஷியினுடைய சாபத்தினல் வாலி இங்குவர ஸந்தர்ப்பமேயில்லை. யாரோ மஹா புருஷர்கள் வருகின்றார்கள். இந்த மஹான்களுடைய ஸங்கமத்தினல் நமக்கு ஏற்பட்ட துக்கமானது நிவ்ருத்தி அடையக்கூடிய காலமும் வரும்போல் தோன்றுகின்றது. ஆகையினல் இந்த மஹான்களுடைய ஸமீபம் நானே சென்று, அவர்களுடைய அபிப்ராயத்தை நன்றாய் பரீக்ஷித்து வருகின்றேன். நீ பயத்தை விட்டு விடலாம் என்று சொல்லிவிட்டு, ராம லக்ஷ்ம ணர்களுடைய ஸமீபத்திற்கு நான் சென்றேன். அஞ்சலி

பந்தத்துடன் ராம லக்ஷ்மணர்களுடைய மேன்மைபாவத்தை நான் அறிந்துகொண்டு உன்னை அவர்கள் தேடி வருகின்ற தாகவும், ராவணனை வதம் செய்து உன்னைத் திரும்பி அடைய ஸுக்ரீவனை ஸஹாயமாக எதிர்பார்த்து வருகின்றவர்களாகவும் தெரிந்துகொண்டேன். அதில் எனக்கு மிகவும் ஸந்தோஷம் ஏற்பட்டுவிட்டது. அதை நான் அறிந்துகொண்ட பிறகு ஸுக்ரீவனும் வாலியைக் கொன்று தான் கிஷ்கிந்தா ராஜ்யத்தை அடைகின்ற விஷயத்தில் தங்களைப்போன்ற மஹா புருஷர்களை ஸஹாயமாக எதிர்பார்க்கின்றான், ஆகையினால் பரஸ்பர அபேக்ஷை இருவர்க்கும் இருப்பதினால் தாங்கள் அவச்யம் ஸுக்ரீவனோடு ஸக்யம் செய்துகொண்டு பரஸ்பரம் உபகார்ய உபகாரக பாவத்தை அடைந்து பரம ஸந்தோஷத்துடன் விளங்கி வரலாமென்று சொல்லிவிட்டு ராமலக்ஷ்மணர்களை என்னுடைய முதுகில் தூக்கிக்கொண்டு நானே ஸுக்ரீவன் ஸமீபத்திற்கு வந்து சேர்ந்தேன். பரஸ்பரம் ராமனும் ஸுக்ரீவனும் தன் தன் கதைகளைச் சொல்லிக்கொண்டார்கள். நாங்கள் இந்த பர்வதத்தினுடைய சிகரத்தில் வெகு காலமாக வஸித்து வருகின்றவர்களானதினால் ராவணன் உன்னை அபஹரித்துக்கொண்டு போகும் ஸமயத்தில் நீ சில ஆபரணங்களை ஒரு வஸ்த்ரத்தில் முடிந்து இங்கு கீழே விழும்படி போட்டுவிட்டுப் போனது ஞாபகமிருக்கலாம். அதை நாங்கள் ஜாக்ரதை செய்து வைத்துக்கொண்டிருந்தோம். ராமனுக்கும் ஸுக்ரீவனுக்கும், அக்னி ஸாக்ஷிகமாக ஸ்னேஹமானவுடன், அந்த ஆபரணங்களை ராமனிடம் காண்பித்தோம். ராமனும் அவைகளைப் பார்த்து மிகவும் உன்னை நினைத்துக்கொண்டு துக்கப்பட்டார். பிறகு லக்ஷ்மண ஸ்வாமியோடு ஆலோசித்து உன்னுடைய ஆபரணங்கள் தான் என்று தீர்மானித்து உன் கவலையாகவே ராமன் இருந்து வந்தார், உன்னைக் காணுத காரணத்தினாலே, ராமன் படுகின்ற துக்கத்தை வர்ணித்து முடியாது. அதிசீக்ரத்தில் ராவணனை பந்துவர்க்கங்களோடு சேர்த்துக் கொன்று விட்டு

ராமன் உன்னை அடைவார் என்பதில் எனக்கு ஸந்தேஹமே யில்லை. ராவணனைக் கொன்று உன்னை துக்கத்தின்றும் மீட்டு வைக்கின்ற விஷயத்தில் சுக்ரீவனும், வாலியைக் கொன்று, கிஷ்கிந்தா ராஜ்யத்தை சுக்ரீவனுக்கு அளிப்பதில் ராமனும் அக்னி ஸாக்ஷிகமாக ப்ரதிக்ஞை செய்து கொண்டு வாலியைக் கொல்வதற்கு ராமனுக்குச் சக்தி இருக்கின்றதா என்ற விஷயத்திலும் சுக்ரீவனுல் வெகுவிதமாகப் பரீக்ஷிக்கப் பட்டு ராமன், வாலியைக் கொல்லும் விஷயத்தில் ஸாமர்த்தியமுள்ளவர்தான் என்ற நம்பிக்கையையும் ஸுக்ரீவன் அடையும்படியாக செய்தார். பிறகு ஸ்ரீராமனும் ஸுக்ரீவன் மூலமாக வாலியை யுத்தத்திற்கழைத்து வாலியை வதைத்து ஸுக்ரீவனை கிஷ்கிந்தா ராஜ்யத்திற் கதிபதியாகவும் செய்தார். பிறகு கொஞ்சகாலம் ஆனதும் வானர சேனைகளைத் திரட்டி ஆங்காங்கு நான்கு திசைகளிலும் உன்னைத் தேடுவதற்காக அனுப்பினர்கள். தக்ஷிண திசையில் உன்னைத் தேடுவதற்கு வந்திருக்கும் வானர்கள் மஹா பராக்ரமசாலிகள். வாலியினுடைய பிள்ளையான அங்கதன், ஜாம்பவான், நலன், நீலன், சரபன், மைந்தன், த்விதன், முதலான மஹா பராக்ரமசாலிகளால் அலங்கரிக்கப் பட்ட கோடிக் கணக்கான வானர்கள் உன்னைத் தேடிக் கொண்டு வருகின்றார்கள். அதில் நானிருவன். எனக்கு ஹநுமான் என்று பெயர். அனேக இடங்களில் தேடி உன்னுடைய இருப்பிடத்தைக் கண்டுபிடிக்க முடியாமலும், ராஜனுடைய ஆக்ஞை காலம் அதிக்ரமித்துவிட்டபடியினாலும், இனிமேல் நாம் திரும்பிச்சென்று ஸுக்ரீவனுடைய ஸமீபம் போவது உசிதமில்லையென்று தீர்மானித்து தெற்கு ஸமுத்ரக் கரையில் மஹேந்த்ர பர்வதத்தினருகில் ப்ராயோபவேசனம் செய்து ப்ராணத்யாகம் செய்வதாகத் தீர்மானித்து விட்டோம். அந்த ஸந்தர்ப்பத்தில் ஜடாயு ராமனுடைய கார்யத்தில் ப்ராணத்யாகம் செய்த விஷயத்தை நாங்கள் பேசிக் கொண்டிருக்கும்பொழுது, அந்த வார்த்தையானது, ஜடாயுவினுடைய ஸஹோதரனை ஸம்பாதியினுடைய காதில்

விழுவே, அவருடைய ஸமாகமத்தினல் இந்த லங்கா நகரத்தில் அசோக வனத்தில் உன்னுடைய இருப்பிடத் தைத் தெரிந்துகொண்டோம் ஸமுத்ரத்தைத் தாண்டுவ தில் எவ்விதமான உபாயமென்று யோசித்து ஜாம்பவா னுடைய ப்ரேரணையினல் நான் அதில் பரம உத்ஸா ஹத்தையடைந்து ஸமுத்ரத்தைத் தாண்டி இரவில் லங்கா நகரத்தில் ப்ரவேசம் செய்தேன். இலங்கையில் ஓரிடம் பாக்கியில்லாமல் உன்னை நான் தேடியும் கண்டுபிடிக்க முடியாமல் மிகவும் வருத்தத்துடன் கஷ்டப்பட்டேன். பிறகு, ஸம்பாதியினுடைய வார்த்தையை ஸ்மரித்துக் கொண்டு இந்த அசோகவனத்தில் வந்து உன்னை நான் கண் டேன். ராமகார்யத்தில் துரந்தரன், ராமதூதன் என்று நீ அறியவேண்டும்.

कुशली तव काकुत्स्थः सर्वशस्त्रभृतां वरः
गुरोराराधने युक्तः लक्ष्मणश्च सुलक्षणः ॥

கூஶலீ தவ காகுத்ஸ்தः ஸர்வஶஸ்த்ரப்ருதாம் வரः ।
குரோராராதநே யுக்தः லக்ஷ்மணஶ்ச ஸுலக்ஷணः ॥

விஸ்வாளிகளுக்குள் முந்தினவனையும், உன் பர்த்தாவாயு முள்ள ஸ்ரீராமன் பரம ஸௌக்யத்தோடு விளங்கி வருகின் றார். லக்ஷ்மணஸ்வாமியும் ராமருக்கு வேண்டிய பரிசர்யை செய்துகொண்டு உன்னுடைய விரஹத்தினல் ராமனுக்கேற் பட்ட துக்கத்தை அடிக்கடி ஏற்படாமலிருக்கும்படி ஸமா தானம் சொல்லிக்கொண்டு ராமனுடைய அருகில் இருந்து வருகின்றார். நாணுருவன் ஸுக்ரீவனுடைய வார்த்தையை சிரஸால் வஹித்துக்கொண்டு உன்னைத் தெற்கு திசை முழு வதும் தேடி ஸமுத்ரத்தைத் தாண்டி, இரவில் லங்கையில் நுழைந்து, அசோக வனத்தில் உன்னை நான் கஷ்டப்பட்டுப்

பார்த்தேன். என்னுடைய ஸமுத்ரதரண ப்ரயாஸமானது உன்னை நான் பார்த்ததினால் ஸபலமாக ஆகிவிட்டது. கோடிக் கணக்கான வானர ஸேனைகளுக்குள் காகுத்ஸனுவன்தான் ராவணனால் அபஹரிக்கப்பட்ட உன்னைக் கண்டுபிடித்தேன் என்ற யசஸ்ஸையும், பூர்வ புண்ய புஞ்சத்தினால் அடையப் போகின்றேன். மகா வீரனான பகவானும் அதி சீக்ரத்தில் உன்னை அடைவார். உன்னுடைய நிமித்தமாக லங்கா நகரமே சூன்யமாக ஆகிவிடப் போகின்றது. மால்யவான் என்ற மலை மலைகளுக்குள் உயர்ந்த மலையாக ஆகும். அதிலிருந்து கோகர்ணமென்ற பர்வதமானது தொடர்ந்து வருகிறது. அனேக தேவரிஷிகள் அங்கு தவம் செய்துகொண்டிருக்கும் வழக்கமுண்டு. அந்த மலையோ மேற்கு ஸமுத்ரத்தின் அருகில் இருந்து வருகின்றது. அதட புண்யமான ஆச்ரமத்தை சம்பஸாதனன் என்ற ஓர் அசுரன் தேவர்களுக்கும் ரிஷிகளுக்கும் அந்தப் புண்ய தீர்த்தம் உபயோகம் ஆகாமலிருக்கும்படி உபத்ரவத்தைச் செய்து வந்தான். ருக்ஷரஜா: என்ற பெயருள்ள ஒரு வானரராஜன், தேவரிஷிகளுடைய ப்ரார்த்தனைக்கிணங்கி அந்த சம்பஸாதனன் என்ற அஸுரனைக் கொன்று அந்தப் புண்யமான ஆச்ரமத்தை தேவரிஷிகளுடைய தவத்திற்கு யோக்யமாகச் செய்தான் தீர்த்தத்தையும் உபத்ரவமில்லாததாகச் செய்தான். அதனால் ருக்ஷரஜா: என்ற வானரத்திற்குப் பரிபூர்ணமாக அனுக்ரஹத்தை யளித்தார்கள். அவரைத்தான் என்னுடைய தகப்பனர் என்று சொல்வார்கள். அந்த ருக்ஷரஜஸ் என்பவருடைய களத்ரமாகிய அஞ்சனா தேவியினிடம் நான் பிறந்தவனைகயினால் ஆஞ்ஜனேயனென்று என்னை ஜனங்கள் சொல்வார்கள்.

என்னுடைய கர்மாவினாலேயே நான் உலகத்தில் பரிதபித்து அடைந்தவன். உனக்கு என்னிடத்தில் தருடமான நம்பிக்கை வருவதற்காக நான் இவ்வளவுதூரம் சொல்லவேண்டியதாயிற்று. உன் பர்த்தாவான ராமனுடைய கல்யாண குணங்களையும் நான் எடுத்துரைத்தேன். லக்ஷ்மணனுடைய

குணதிசயங்களையும் சொன்னேன் வானரங்களுக்கும் ராமனுக்கும் ஏற்பட்ட ஸங்கமத்தின் காரணத்தையும் சொன்னேன். என்னுடையபெருமையையும் கொஞ்சம் எடுத்துரைத்தேன். இதிலிருந்தாவது நீ என்னை ராமதூதன் என்று நம்புவாயென்று எண்ணுகிறேன். தேவ பரதேவதே, என்னை நீ வேறுவிதமாக நினைக்கக்கூடாது. மிகவும் சீக்கிரத்தில் ராமன் உன்னை இந்த இடத்தைதவிட்டு தன்னிடத்தில் அழைத்துக்கொள்வார்" என்று வெகுப்ரகாரமாக ஆஞ்ஜனேய ஸ்வாமியானவர் தன்னிடத்தில் நம்பிக்கை வருமபடி பேசினார்.

ஸீதைக்கு ஆஞ்ஜனேயர் சொன்ன வார்த்தையிலிருந்தே, ராமதூதன்தான் என்று நம்பி, பரம ஸந்தோஷத்தை அடைந்ததோடுகூட, ராமனைவிட்டுப் பிரிந்த காரணத்தினால் அந்த ராமனுடைய விருத்தாந்தத்தை, தான் கேட்டதிலிருந்தும் கண்ணீர் ஜலத்தைப்பெருக விட்டுக் கொண்டு கொஞ்ச நேரம் மிகவும் கஷ்டப்பட்டாள். தேவியினுடைய முகம் சற்று நேரத்திற்கப்பால் மலர்ந்து அழகாக சோபித்தது. ராகு விழுங்கவிடப்பட்ட சந்திரனைப்போல் விளங்கியது. வானுமானையும் முன்போல் வித்யாஸமாக எண்ணவில்லை. இப்படித் தன்னுடைய விஷயத்தில் ஸந்தோஷமாக ஸீதை ஆனவுடன் ஆஞ்ஜனேய ஸ்வாமியும் "தேவி தேவி, நீ ஸமாதானத்தை அடையவேண்டும், கொஞ்சமேனும் மனதில் வருத்தம் கூடாது. உன்னுடைய தூதனென்ற என்னை நீ நினைத்து தைரியத்தை அடையவேண்டும், மஹாவிக்ரமடைய ப்ரார்த்தனைகளுக்கு இணங்கி, ருக்ஷராஜஸ் என்ற வானரச்ரேஷ்டன் சம்பஸாதனன் என்ற ஓர் அஸுரனைக் கொன்றான் என்ற கதையைச் சொன்னேனே அந்த மஹாபராக்ரமசாலியான ருக்ஷராஜாவினுடைய களத்ரமாகிய அஞ்ஜனாதேவியினிடம் வாயு தேவனைதயின் மூலமாக நான் உண்டானவன். வாயுவிற்கு ஸமானமான பராக்ரமத்தோடு கூடினவன். பிறந்தவுடனே ப்ரும்மா மூலமாக அனேகவிதமான வரபலத்தையும் நான் அடைந்தவன். என்னு

டைய சக்தியைப்பற்றி நான் உனக்கு அதிகம் சொல்ல வேண்டாம். இப்பொழுது ராவணனைக் கொன்று லங்கா நகரத்தை, பஸ்மமாக்கி விடவேண்டுமென்றால் செய்து விடுகிறேன். நீ தைரியத்தை அடையவேண்டியது மாத்திரம் என்னுடைய ப்ராத்தனையாகும்" என்று அஞ்சலி பந்தத்துடன் ஆஞ்ஜனேய ஸ்வாமியானவர் மிகுந்த வணக்கத்துடன் தெரிவித்துக்கொண்டார்.

முன் சொன்னபடி ஸ்ரீ ராமனுடைய ஸந்தேச வார்த்தையினால் ஸீதாதேவிக்கு தன்னிடத்தில் நம்பிக்கையுண்டாகும்படி செய்துகொண்டு அதை த்ருடப்படுத்திக்கொள்ள ஆஞ்ஜனேய ஸ்வாமியானவர் தாரக ப்ரும்மமாகிய ராமனுடைய திருநாமத்தினால் அலங்கரிக்கப்பட்ட அங்குலீயகத்தை அதாவது மூத்திரை மோதிரத்தை பிராட்டியினுடைய கையில் அர்ப்பணம் செய்கின்றார்.

भूय एव महातेजा हनुमान्मारुतात्मजः ।
अब्रवीत् प्रश्रितं वाक्यं सीताप्रत्ययकारणात् ॥
वानरोऽहं महाभागे दूतो रामस्य धीमतः ।
रामनामाङ्कितं चेदं पश्य देव्यङ्गुलीयकम् ॥
प्रत्ययार्थं तवानीतं तेन दत्तं महात्मना ।
समाश्वसिहि भद्रं ते क्षीणदुःखफला ह्यसि ॥

ஹூய ஏவ மஹாதேஜா ஹனுமான்மாருதாத்மஜஃ ।
அப்ரவீத் ப்ரஶ்ரிதம் வாக்யம் ஸீதாப்ரத்யயகாரணாத் ॥
வானரோঽஹம் மஹாபாகே தூதோ ராமஸ்ய தீமதஃ ।
ராமநாமாங்கிதம் சேதம் பஶ்ய தேவ்யங்குலீயகம் ॥
ப்ரத்யயார்தம் தவானீதம் தேன தத்தம் மஹாத்மனா ।
ஸமாஶ்வஸிஹி பத்ரம் தே க்ஷீணதுஃகபலா ஹ்யஸி ॥

பூய ஏவ மஹாதேஜா: ஹநுமாந்மாருதாத்மஜ:
அப்ரவீத் ப்ரச்ரிதம் வாக்யம் ஸீதாப்ராப்த்யயகாரணாத் ॥
வாநரோஹம் மஹாபாகே தூதோ ராமஸ்ய தீமத:।
ராமநாமாங்கிதம் பச்ய தேவ்யங்குலீயகம் ॥
ப்ரத்யயார்தம் தவாநீதம் தேந தத்தம் மஹாத்மநா।
ஸமாச்வஸிஹி பத்ரம் தே க்ருதீணாது:கபலா த்வ்யஸி ॥

என்ற வாக்யங்களினால் ஆஞ்ஜநேய ஸ்வாமியானவர் சொல்வதாவது:

'தேவி பரதேவதே, நான் ஜாதியில் வானரன்தான், ஸகல ஜனங்களும் ஸுலபமாகக் கண்டு பிடிக்கக் கூடிய பகவானான ஸ்ரீராமனுக்கு தாதனாக ஆகும்படியான பாக்யத்தைச் செய்தவன். அக்காரணத்தினால் ராமதூதனான நான், ராமனுடைய திருநாமத்தால் அலங்கரிக்கப்பட்ட மோதிரத்தை உன்னுடைய நம்பிக்கைக்காக கொண்டுவந்திருக்கிறேன். பகவானான ஸ்ரீராமனால் நான் ராமதூதன் தான் என்று நீ உண்மையான நம்பிக்கை அடையவேண்டுமென்று அந்த மோதிரம் கொடுக்கப்பட்டது. அதிசீக்கிரத்திலேயே ஸ்ரீராமரிடத்திலேயே உனக்கு மாங்கல்ய விருத்தி ஏற்படுவதுடன் அவரைவிட்டு பிரியாமலிருக்கும்படியும் உனக்கு ஏற்படப் போகிறது.' இவ்வாறு சொல்லி அந்த முத்திரைமோதிரத்தை அர்ப்பணம் செய்வதற்கு முன்பாகவே ஆஞ்ஜநேய ஸ்வாமியினுடைய கையிலிருந்து அந்த மோதிரத்தை பிராட்டியானவள் ஸ்வயமாகவே க்ரஹித்துக்கொண்டாள்.

गृहीत्वा प्रेक्षमाणा सा भर्तु: करविभूषणम् ।
भर्तारमिव संप्राप्ता जानकी मुदिताऽभवत् ॥

ம்ருஹீத்வா ப்ரேக்ஷமாணா ஸா பர்து: காரவிபூஷணம் ।
பர்தாரமிவ ஸம்ப்ராப்தா ஜாநகீ முதிதாபவத் ॥

தேசாந்தரத்திலிருந்தும் அபூர்வமாக வந்த பந்துவை, பார்த்த மாத்திரத்தில் ஸ்வயமாகவே, பரம ப்ரீதியுடன் ஆதரித்து அழைப்பதுபோல் ஸீதா ப்ராட்டியும், ராம நாமாங்கிதமான அங்குலீயகத்தை ஸ்வயமாகவே க்ரஹித்துக்கொண்டாள். தன் கையில் வைத்துக்கொண்டு அந்த மோதிரத்தை வெகு காலம் வரையிலும், அந்த மோதிரத்திலேயதான் த்ருஷ்டியைச் செலுத்தி கவனித்து வந்தாள். தன்னை ஸ்ரீராமன் பாணிக்ரஹணம் செய்துகொள்ளும் காலத்தில் பகவானை ஸ்ரீராமனுடைய கைகளால் தொடப்பட்ட, ஸ்பர்சம் ஏற்பட்ட மோதிரம் அது ஆகையினால் மிகவும் தன்னுடைய ப்ரீதிக்கு ஆஸ்பதமான மோதிரமாக ஆகும். ப்ரணய கலஹத்தில், ஸ்த்ரீபுமான் இருவருக்கும் பரஸ்பரம் கோபம் ஏற்படுவதுபோல், ஸீதைக்கும் ராமனுக்கும் ஒரு ஸந்தர்ப்பத்தில் ப்ரணயதாரா நிமித்தமாக கோபமேற்பட்டு ராமனும் ஸீதையோடு பேசாமல் மௌனமாக இருந்துவிட்டார். ஸீதையும் அவ்விதமேராமனோடு பேசாமல் மௌனமாக இருந்தாள். இருவர்களுக்கும் மானுதிசயத்தினால் ராமன்தான் முதன் முதலில் பேசட்டுமே என்று ஸீதை இருந்துவிட்டாள். ஸீதைதான் முதலில் பேசவேண்டும் என்று ராமனும் இருந்துவிட்டார். இவ்விதமிருக்க ப்ரணய தாரையினுடைய சௌக்யத்தையனுபவிக்காமலே, காலம் அதிக்ரமித்துக்கொண்டு வந்தது ராமனை, ஸீதையைத் தானகப் பேசும்படி செய்ய என்ன வழியென்று யோசித்துத் தன் கையிலுள்ள அங்குலீயகத்தை ஸ்வயமாக நழுவச் செய்து, பூமியில் விழும்படி செய்துவிட்டார். உடனே ஸீதையும் அங்குலீயகமானது தன் விவாஹ காலத்தில் தன் பிதாவான ஜனகமகாராஜனுல், வரனுக்கு அலங்காரமாகக் கொடுக்கப்பட்டதினாலும், ஸ்த்ரீ ஜாதிக்கு, தன் பிறந்த வீட்டு மொத்தில் அபிமானம் அதிகமாக இருக்கும் ஸ்வபாவத்தினாலும், தான் முதலில் பேசுவதில்லை என்ற மானுதிசயத்தையும் விட்டு விட்டு "ப்ரபோ! மோதிரம் கீழே விழுந்துவிட்டது. வைரங்கள் தெறித்துப் போய்விட்டனவோ என்னமோ" என்று ஸம்ப்ர

மத்துடன் சொல்லிக்கொண்டு ராமனுடைய ஸமீபத்திற்குத் தாணுகவே வந்துவிட்டாள். ராமனும் உடனே ஸீதையை ஆலிங்கனஞ்செய்துகொண்டு ப்ரணய தாரையினுடைய பராகாவ்டையை அனுபவித்தார். இந்த எண்ணத்துடன் ஸீதையானவள் ஆஞ்ஜனேய ஸ்வாமியினுடைய கையிலிருந்தும் ஸ்வயமாகவே மோதிரத்தை க்ரஹித்துக்கொண்டு அதை கவனித்துப் பார்த்துக்கொண்டே "நேற அங்குலீயகமே, அயோத்யா நகரத்தில், அந்தப்புரத்தில் ராமனுக்கும் எனக்கும் ஏற்பட்ட ப்ரணய கலஹத்தில் ஒருவர்க்கொருவர் பேசாமலிருந்து வந்தபொழுது மறுபடியும் எங்கள் இருவருக்கும் ஸம்பந்தத்தை செய்து வைத்த வஸ்துவல்லவா நீ. இப்பொழுதுமாத்திரம் நாங்கள் இருவரும் பிரிந்திருக்கும் காலத்தில் எங்கள் இருவரையும் சேர்த்து வைக்காமலிருப்பதன் காரணமென்ன? எதற்காக என்னிடத்தில் உனக்கு இவ்விதம் உபேக்ஷை ஏற்பட்டுவிட்டது? நான் ஏதாவது அபராதம் செய்துவிட்டேனா? அதை நீ மன்னித்துக்கொள்ளவேண்டும்" என்று சொல்வதுபோல் அந்த மோதிரத்தைக் கவனித்துப் பார்த்தாளாம்.

அந்த மோதிரத்தை அடைந்தவுடன் தன் பர்த்தாவை அடைந்திருப்பதுபோலுள்ள ஸந்தோஷமும் ஏற்பட்டது, அந்த மோதிரத்தினுடைய தர்சனத்தினால் தன்னுடைய கணவனான ராமருடைய கை நினைவு ஸீதைக்கு ஏற்பட்டுவிட்டது. கையினுடைய நினைவினால் பாஹுவினுடைய ஸ்மரணமும் ஏற்பட்டது அந்த ஸ்மரணம் மூலமாக ராமருடைய முழு உடலையும் பாவனையின் ப்ரகர்ஷத்தினால் எதிரில் நிற்பதுபோல் நினைத்து ராமனுடைய அப்ராக்ருத மங்கள விக்ரஹத்தை ஆலிங்கனம் செய்துகொண்டாள். ஆலிங்கனாதிகளால் பரமானந்த பரிணதையாகவும் ஜானகி விளங்கினாள். சோகத்தினால் க்லேசத்தை அனுபவிப்பதற்கு அனர்ஹமான குலத்தில் பிறந்தவள் என்ற காரணத்தினால், இப்பொழுதுதான் ஜானகி என்ற பெயரை அன்வர்த்தமாக அடைந்தாள்.

அங்குலீயக தர்சனமாத்திரத்திலை பகவத் விக்ரஹ ஆலிங்கனப்ரயுக்தமான ஆனந்தத்தையுப், அனுபவித்து வந்தவள் போல் விளங்கிலை என்று வால்மீகி மஹரிஷி, இந்த ச்லோகத்திலை ஸீதாதேவியிலுடைய ஸந்தோஷாதிசயத்தை வர்ணிக்கின்றார் ஒரு ஸ்த்ரீயானவள் தன் கணவனைக் கட்டிக்கொண்டு அனுபவிக்குமானந்தத்தை மற்றொரு புருஷன் பார்க்கமுடியாததிலை வால்மீகி மஹரிஷி எவ்விதம் இதை வர்ணிக்கின்றார் என்று நினைக்கக் கூடாது ஜானகியை வால்மீகி மஹரிஷி, தன் தாய் என்ற புத்தியோடு பார்ப்பவரானதிலையும், ஸ்ரீராமனைத் தகப்பனர் என்ற புத்தியோடு பார்க்கின்றவரானதிலையும் தாய் தந்தையர் அனுபவிக்குமானந்தத்தை தாயிலுடைய ஸமீபத்திலிருந்துவரும் சிசுவானது அறிந்துதானே ஆகவேண்டும். ஆலை சிசுவிலுடைய பருவத்தில் எப்படி அறிய முடியுமென்றும் நினைக்க வேண்டாம். ஸீதா தேவியிலுடைய அருளும், ராமசந்த்ரலுடைய பரிபூர்ணமான அனுக்ரஹமும் இருக்கும் பக்ஷத்தில், யாருக்கு எந்த பருவத்தில்தான், எதைத்தான் அறிய சக்தி ஏற்படாது? ஆகையிலை ஸீதா ராமானுக்ரஹத்திலையும் ப்ரும்மாவிலுடைய வரப்ரஸாதத்திலையும், க்ரந்த கர்த்தாவான வால்மீகி மஹர்ஷிக்கு எதையும் அறிய சக்தி உண்டு.

தவிர, மேற்சொன்ன ச்லோகத்தின் வ்யாக்யார்த்தமோ பின்வருமாறு: ஆஞ்ஜனேயஸ்வாமியிலை ஸீதாபிராட்டியினிடம், மோதிரம் மாத்திரம் கொடுக்கப்படவில்லை. ஆஞ்ஜனேய ஸ்வாமியை ஆசார்ய புருஷனாக வர்ணித்தோம். पक्षिच शाखानिलय: सहज:(यक्ष्मी अ पपावा तिलय: वृक्षज:)(பக்ஷீ ச சாகாநிலய ப்ரஹ்மருஷ்ட:) என்ற ச்லோகவ்யாக்யான அவஸரத்தில் அனைத ஸ்படிஷ்டமாக அறியலாம். ஸீதாதேவியையோ, ஸம்ஸார ஸாகரத்திலுடைய மத்தியில் பாஞ்ச பௌதிகமான பரிச்சின்னமான சரீரம் என்ற லங்காநகரத்தில் அவிவேகம் என்ற ராவணலுடைய பாரதந்த்ரியத்தில் அகப்பட்டுக்

கொண்டு, ஸம்ஸாரியாக துக்கத்தையனுபவித்து வரும் ஒரு உத்தம ஜீவனென்றும் கருதவேண்டும். இந்த ஜீவனே, எப்பொழுதும், தாரக ப்ரும்மமமாகிற ராமனோடு சேர்ந்து கொண்டிருந்தே நித்யானந்தானுபவ யோக்யமான உத்க்ருஷ்ட புருஷனாக ஆவான். மாரீசனுடைய மான் வேஷத்தைப் பார்த்து விஷயாதிகளில் ப்ராவண்யம் ஏறபட்ட காரணத்தில் இவ்விதமான கஷ்டத்தை அனுபவிக்கும்படியான நிலையை அடைந்துவிட்டான். இந்த ஜீவனுடைய உத்தாரணத்திற்காகவே ஆஞ்ஜனேய ஸ்வாமியினுடைய ப்ரவ்ருத்தி என்று முன்பு சொன்னோம். ஆஞ்ஜனேய ஸ்வாமியினுடைய ப்ரவ்ருத்தியை ஆசார்ய ப்ரவ்ருத்தியாகக் கருத வேண்டும். அந்த மஹானுபாவன் மூலமாக ப்ராட்டியினிடம் கொடுக்கப்பட்ட மோதிரமோ கேவலம் அங்குலீயகமாத்திரமல்ல. அவ்டாயகாரதி மந்த்ரராஜரூபம் என்று முன்பு வர்ணித்தோம் அந்த ரீதியை அனுஸரித்து மேற்சொன்ன ச்லோகத்தின் அபிப்ராயத்தையறியவும்.

அதாவது, ஸர்: கரவிபூஷணம் (ஸ-கார விஸர்கஸஹித ர-கார) (பர்து: கரவிபூஷணம்) என்ற வாக்யத்தில், ஸர்(ஸ-கார) (பர்த்தா) என்ற பதத்தினால் ஸீதையினுடைய பர்த்தா என்ற மாத்திரம் ஸங்கோசம் செய்யாமல், ஸர்வ லோகத்தையும் தரிக்கின்ற ஸர்வலோக சரண்யனான விராட் புருஷனுடைய பகவான் என்ற அர்த்தத்தைத் தெரிந்துகொள்ள வேண்டும். அந்த மஹானுபாவனுடைய, கரங்களோடொன்று கரங்கள் அதாவது புஜங்கள், பாஹவ: (பாஹவ ராஜந்ய: க்ருத:) என்ற புருஷஸூக்த வாக்யத்தை அனுஸரித்து, விராட் புருஷனுடைய கைகளான க்ஷத்ரியர் என்ற அர்த்தத்தை ஸர்: கர(ஸ-கார கர)(பர்து: கர) என்பதினால் தெரிந்துகொள்ளவேண்டும். அந்த க்ஷத்ரியர் களுக்கு அலங்காரமாக, ஸர்வசத்ருஜயத்திற்கும் ஹேதுவாக அதாவது ஏகசக்ராதிபத்தியத்தைத் தான் விதிக்கும்படி தனக்குக் கன்மையைச் செய்யக்கூடியதாக விளங்கிவரும் மஹா

மந்த்ரத்தையே விभूषणं (வி஭ூஷணம்)(விபூஷணம்)என்ற பதத்திலுல் அறியவேண்டும்.

सावित्री तु द्विजानां हि विभूषणमितीरितम् ।
पञ्चाक्षरी ब्राह्मणानां क्षत्रियाणां तथैव च ॥
अष्टाक्षरो विशाञ्चैव भगवन्नामकीर्तनम् ।

ஸாவித்ரீ து த்விஜாநாம் ஹி விபூஷணமிதீரிதம் ।
பஞ்சாக்ஷரீ ப்ராஹ்மணாநாம் க்ஷத்ரியாணாம் ததைவ ச ॥
அஷ்டாக்ஷரீ விசாஞ்சைவ பகவந்நாம கீர்தனம் ।

என்ற மனுவசனத்தை அனுசரித்து ப்ராம்மணன், க்ஷத்ரியன் வைச்யன் என்ற எல்லா த்விஜர்களுக்குப் பொதுவாக காயத்ரீ மஹா மந்த்ரத்தை அலங்கார மென்றும் சொல்லிவிட்டு அதில் ப்ராம்மணனுக்கு விசேஷமாக பஞ்சாக்ஷரீ மஹாமந்த்ரத்தையும், க்ஷத்ரியனுக்கு அஷ்டாக்ஷரீ மஹா மந்த்ரத்தையும் வைச்யனுக்கு பகவந்நாம ஸங்கீர்த்தனத்தையும், விசேஷமான விபூஷணமாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. அதை அனுஸரித்து भर्तुः करविभूषणं (஭ர்துः கரவி஭ூஷணம்) (பர்து: கரவிபூஷணம்) என்ற வாக்யத்தில் ஸர்வஜகத் பர்த்தாவான ஸ்ரீமந் நாராயணனுக்கு கைகளுடைய ஸ்தானத்திலேற்பட்ட க்ஷத்ரியர்களுக்கு யுத்தத்தில் ஜயத்தைக் கொடுக்கும் காரணத்திலுல் விபூஷணமாக விளங்கிவரும், அஷ்டாக்ஷரீ மூதலான மந்த்ர ராஜமென்ற இந்த வாக்யத்தின் தாத்பர்யத்தை அறிந்துகொள்ள வேண்டும். அதை ஆஞ்ஜனேய ஸ்வாமியென்ற ஆச்சார்ய புருஷன் மூலமாக ப்ரக்ருதத்தில் ஸீதை என்ற ஜீவன் உபதேசம் பெற்று அந்த மந்திரத்தின் அர்த்தத்தையும், அனுஸந்தானம் செய்து அதிலேயே ஈடுபட்டவளாக ஆனவுடனே, மந்த்ர

ஜபத்திலுல் அந்த மந்த்ரப்ரதிபாத்தியமான இஷ்டதேவதை களோடு ஸல்லாபம் செய்யலாம் என்று அர்த்தபுஷ்ப ஸுத் ரத்தை அனுஸரித்து அஷ்டாக்ஷரீ மஹாமந்த்ர ப்ரதிபாத்ய மான மஹாவிஷ்ணுவாகிய தன் பர்த்தாவான ராமனை நேரில் ஸாக்ஷாத்கரித்துக் கொள்வதுபோல், ஜனக குலத்தில் பிறந்த ஸீதையானவள், பரமானந்தத்தை யனுபவித்தாள் என்ற தாத்பர்யமும் மேற்கண்ட ச்லோகத்தில் தொனிக்கின்றது. இதுதான் இந்த உத்தம காவ்யம் என்ற ராமாயணத்திலுள்ள முத்திரை மோதிரம் கொடுக்கும் ச்லோகத்திற்கு வ்யங்க் யார்த்தமாகும்.

அந்தந்த மந்த்ர ஜபத்திலுல், அந்தந்த தேவதா ப்ரஸா தத்தை ப்ரத்யக்ஷமாக அடையலாமென்று சாஸ்த்ரங்கள் கூறுகின்றன் सुस्वागतं वाचमुदीरयानः (ஸுஸ்வாகதாம் வாசமுதீரயாநः)(ஸுஸ்வாகதாம் வாசமுதீரயாந:)என்ற வாக்யத்திலே, ஆஞ்ஜனேய ஸ்வாமியான ஆசார்ய புருஷன், தனக்கு ஆசார்ய பரம்பராப்ராப்தமான, அஷ்டாக்ஷரீ முதலான மந்த்ரராஜரூபமான வார்த்தையைச் சொல்லுகிறார் என் றும் சொல்லப்பட்டிருக்கின்றது. ततो रावणनीतायाः (ததோ ராவணநீதாயாஃ) (ததோ ராவணநீதாயா:) என்ற முதல் ச்லோகத்திலோ, ஸீதை ஜீவதத்வ மென்றும் ராவ ணனை அவிவேகமென்றும், தாரக ப்ரும்மமாகிற ராமனை விட்டுப் பிரியாததான ஜீவரூபிய ஸீதைக்கு விஷய ப்ராவண் யத்திலுல் பிரிவு ஏற்பட்டதென்றும் சொல்லப்பட்டிருக்கின் றது. ராமாயணமும் உத்தம காவ்யம் வ்யங்க்யார்த்தத்தை ப்ரதானமாக க்ரஹிக்கவேண்டும். இவைகளை முன்பின் ஆலோசித்துக் கவனித்துப் பார்த்தால் மேற்சொன்னபடி गृहीत्वा प्रेक्षमाणा सा (க்ருஹீத்வா ப்ரேக்ஷமாணா ஸா) என்ற ச்லோகத்திற்கு அர்த்தத்தை க்ர ஹித்துக் கொள்வது அவச்யம்தான் என்பது ஸஹ்ருதயர்க ளுடைய புத்தியில் நிச்சயமாக உதிக்கக் கூடும், அப்பொழுது தான் இந்த காவ்யத்திற்கும் ஒரு அழகு ஏற்படும்.

தவிறவும், भर्तुः करविभूषणम्(ஹர்துஃ கரவிஹூஷணம்) (பர்துஃ கரவிபூஷணம்) என்பதிலுல், क्रं ब्रह्म खं ब्रह्म (க்ரம் ப்ரஹ்ம கம் ப்ரஹ்ம) (கம் ப்ரஹ்ம கம் ப்ரஹ்ம) என்று சாந்தோக்யோப நிஷத்தில் ஸம்வர்க்க வித்யையில் கூறியபடி क (க)(க) சப்தத் திலுல் ஆனந்தஸ்வரூபமான ப்ரப்ரும்ம மென்ற அர்த்தத்தை அறியவேண்டும். ई (ஈ) (ரம்) என்பது அக்னி பீஜமாக ஆகும். அதனல் தீப்தியை க்ரஹித்துக் கொள்ளவேண்டும். क (க)(க) சப்தத்திலுல் ஏற்படக்கூடிய விஷயானந்தத்தை வ்யாவ்ருத்தி செய்ய ई(ஈ)(ர) என்றவிசேஷணத்திலுல் ஸ்வயம் ஜ்யோதிஸ் என்ற விசேஷணத்தையும், ई (ஈ) (ரம்) என்றதிலுல் ஏற்பட்ட அக்னியாதி தீப்தியை வ்யாவ்ருத்தி செய்ய ஆனந்தத்தைக் குறிப்பிடும் क (க)(க) என்ற விசேஷணத்தையும் வைத்துக்கொண்டு करं (கரம்) என்ற பதத்திலுல் ஜ்யோதிர்மயமான பரமானந்த ஸ்வரூபியான ப்ரம்மம் என்பதை அறிந்து கொள்ளவேண்டும். அந்த ஸ்வரூபம் தான் ப்ரக்ருதத்தில் ஸீதைக்கு ப்ர்த்தாவான ராமனுடைய நிஜஸ்வரூபமாக ஆகும்.

शेषे षष्ठी (ஶேஷே ஷஷ்டீ) (சேஷே ஷஷ்டீ) என்ற ந்யாயத்தை யனுஸரித்து भर्तुः (ஹர்துஃ) (பர்துஃ) என்ற ஷஷ்டியை ஸம்பந்த ஸாமான்ய ஷஷ்டியாக வைத்துக்கொண்டு भर्तुः करं (ஹர்துஃ கரம்) (பர்துஃ கரம்) என்பதிலுல் பர்த்ரு ஸம்பந்தியான நிஜ ஸ்வரூபத்தை என்ற தாத்பர்யத்தை க்ரஹித்துக் கொள்ளவேண்டும். அந்த ராமனுடைய நிஜஸ்வரூபத்தை विशेषेण भूषयतीति विभूषणम् (விஶேஷேண பூஷயதீதி விஹூஷணம்)(விசேஷேண பூஷயதீதி விபூஷணம்)என்ற ஸமாஸத்திலுல், प्रत्यगात्मत्वेन(ப்ரத்யகாத்மத்வேந)(ப்ரத்யகாத்மத்வேந) போதித்து அலங்கரிக்கச் செய்கின்ற तत्त्वमसि (தத்த்வமஸி) (தத்வமஸி) இத்யாதி மஹா வாக்யங்களின भर्तुः करविभूषणं (ஹர்துஃ கரவிபூஷணம்) (பர்துஃ கரவிபூஷணம்) என்ற வாக்யத்திலுல் அறிந்து கொள்ளலாம். ப்ரம்மத்தை உபதேசம் செய்கின்ற மஹா புருஷனே ஆசார்யன்

என்று சொல்லப்படுவான். आत्मेति तु उपगच्छन्ति ग्राहयन्ति च (ஆத்மேதி து உபகச் சந்தி க்ராஹயந்தி ச) என்ற ஸூத்ரமே அதில் ப்ரமாணமாக ஆகும். ப்ரம்மத்தை ஆத்மாவிற்கு வேறுக பார்த்தாலோ ப்ரம் மத்தினிடத்தில் நிருபாதிகமான பக்தி என்ற ப்ரேமையும் ஏற்பட நியாயம் இராது. அவனவனுக்கு அவனவனுடைய ஆத்மாவில்தான் நிருபாதிகமான ப்ரேமை ஏற்படும். तत्प्रेमात्मा र्थमन्यत्र नैवमन्यार्थमात्मनि (தத்ப்ரேமாத்மார்தமந்யத்ர நைவமன்யார்தமாத்மநி) என்ற வித்யாரண்யருடைய வாக்யமும், न वा अरे जायायाः कामाय जाया प्रिया भवति । आत्मनस्तु कामाय जाया प्रिया भवति । न वा अरेपत्युः कामाय पतिः प्रियो भवति ।(ந வா அரே ஜாயாயாஃ காமாய ஜாயா ப்ரியொ பவதி ஆத்மநஸ்து காமாய ஜாயா ப்ரியொ பவதி । ந வா அரேபத்யுஃ காமாய பதிஃ ப்ரியொ பவதி । (ந வா அரே ஜாயாயா: காமாய ஜாயா ப்ரியோ பவதி । ஆத்மாஸ்து காமாய ஜாயா ப்ரியோ பவதி ந வா அரே பத்யு: காமாய பதி: ப்ரியோ பவதி) என்ற ச்ருதி வாக்யமும் அதில் ப்ரமாணமாக ஆகும். सा परानुरक्ति ईश्वरे (ஸா பராநுரக்திஃ ஈச்வரே) (ஸ பராநுரக்தி: ஈச்வரே) என்ற யோக ஸூத்ரமும், ஈச்வரனிடத்தில் ஏற்படும் நிருபாதிகமான ப்ரேமைதான் பக்தி சப்தார்த்தமாக ஆகும் என்று சொல்லுகிறது. இவைகளை யநுஸரித்து ப்ரும் மத்தை ஆத்மாவாக அநுஸந்தானம் செய்கின்ற அத்வைத பக்திதான் பரம பக்தியாக ஆகும். அப்படி ப்ரும்மத்தை ஆத்மாவென்று போதிக்கின்ற உபநிஷத் வாக்யங்கள் ப்ரும் மத்திற்கு அலங்கார பூதமாக ஆகின்றது. இவ்விதம், ராம னுடைய நிஜ ஸ்வரூபமாகின்ற ப்ரும்மத்தை ப்ரத்யகாத்மா என்று சொல்லி அலங்கரிக்கும் தத்வமஸி முதலான மஹா வாக்யமே என்று भर्तुः करविभूषणं (பர்துஃ கரவிபூஷணம்) (பர்து: கரவிபூஷணம்) என்ற வாக்யத்தினால் அறிந்துகொள்ள வேண்டும். அதை பரமாசார்யனை ஆஞ்ஜனேய ஸ்வாமி மூலமாக உபதேசித்துக்கொண்டு அதனுடைய அர்த்தத்தை மனனமும் செய்து, நிதித்யாஸனமும் செய்து, ஸ்வரூட

ஸாக்ஷாத்காரத்தை யடைந்து நித்ய நிரதிசயமான ஆனந்த ஸாகரத்தில் ஸீதாதேவி யென்ற ஜீவன் விளங்கி வந்தாள் என்று இந்த ச்லோகத்தினல் ஸ்பஷ்டமாக விளங்கி வருகின்றது. இதுவும் ப்ரபந்தத்தின் வ்யங்க்ய மர்யாதையை அனுஸரித்து ஏற்பட்ட அர்த்தமாகும்.

हनुमत् जानकी देव्याः संवादं श्रुतिसम्मतम् ।
श्रुत्वा मनुष्यो भूलोके सार्वभौमश्रियं लभेत् ॥

ஹனுமத் ஜானகீ தேவ்யாः ஸம்வாதம் ச்ருதி ஸம்மதம் ।
ச்ருத்வா மனுஷ்யः பூலோகே ஸார்வபௌமச்ரியம் லபேத் ॥

इति श्रीमद् वाल्मीकी रामायणे सुन्दरकाण्डे पूर्वभागः समाप्तः ।

இத்துடன்

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணத்தில்

ஸுந்தர காண்டம் பூர்வ பாகம்

முற்றிற்று.

